# அன்பிலார் எல்லாம்!

## அன்பிலார் எல்லாம்!

“அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு”

தங்கள் வீட்டின் வரவேற்பறையில் இருக்கும் கரும்பலகையில், மேலுள்ள குறளை எழுதிய கனியன், “அன்பு… குறள் எழுதிட்டேன் மாப்பிள! வந்து அர்த்தத்தை எழுதிடு!” என்றுவிட்டு, வீட்டை விட்டு நகர்ந்தான்.

“இதென்ன? நானும் ஒரு வாரமா பார்க்கிறேன்… குறளை நீ எழுதுவ… அர்த்தத்தை அவன் எழுதணுமா? என்ன நியாயம் இது? அர்த்தத்தை எழுதுடா!” என்று அதட்டினான் சுபாஷ்.

“தெரிஞ்சா எழுத மாட்டோமா என்ன? நீ… அவனை ஏத்திவிட்டுட்டுத் திரியாம… நடையைக் கட்டு! மிக்சி எடுத்தியா இல்லையா?”

“அது எடுத்துட்டேன்!”

“அப்ப வா!”

“இல்ல…எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாகணும்!”

“என்னடா உண்மை… காலங்காத்தால நாலு மணிக்கு…ஏன்டா படுத்தி எடுக்கிறே?”

“உண்மை தெரியலைன்னா வர மாட்டேன்! நீயே… எல்லாத்தையும் எடுத்திட்டுப் போ!”

“சரி…சொல்லித் தொலை! ச்சே கேட்டுத் தொலை!”

“குறளுக்கு அர்த்தம் தெரியாத நீ ஏன் குறளை எழுதுறே? அர்த்தம் எழுதுற அவனுக்குக் குறளும் தெரியும்…அர்த்தமும் தெரியும் தானே? அவனே

எழுத வேண்டியது தானே?" – எல்லாவற்றையும் அலசி ஆராயும் பாவம் கொண்ட சுபாஷ், கேள்விகளை அடுக்கவும்,

"முடியல!! அவனே குறளையும் எழுதி… அவனே அர்த்தத்தையும் எழுதினா… அது அன்பு மட்டுமே செய்ற வேலையாகிடும். எல்லா வேலையையும் எல்லாரும் செய்யணும்ன்னு தான்… இப்படி ஒரு ஏற்பாடு!" என்று விம் போட்டு விளக்கினான், கனியன். அந்த வீட்டிற்கு வந்து ஒரு வாரமே ஆனா நிலையில், சுபாஷிற்கு விளங்காத பல விஷயங்கள் விளங்கிப் போயின.

அவன் தன் மரமண்டையைத் தட்டி "ஒ…அப்படி!!" என்று உள்ளே கிரகித்துக் கொள்ளும் போதே,

"டேய்… நீங்க இன்னும் கிளம்பலையா?" என்றபடியே வந்தான் அன்பு.

"ஏதோ…!" என்று கனியன் நகரவும்,

"மணி… பொம்மன்… ராஜா… எல்லாரும் கிளம்பியாச்சு தானே? இல்ல… இங்கேயே சுத்திக்கிட்டு இருக்காங்களா?" என்று அன்பு வினவ,

"மணி…வாசல் தெளிச்சிட்டு அப்படியே போய்டுவா! பொம்மனும் ராஜாவும்… மார்க்கெட்ல இருந்து வந்துட்டாங்க… வீட்டுக்கானக் காய்கறி எல்லாம் இங்க வச்சிட்டு… அங்க கடைக்குப் போயிருப்பாங்க! நாங்களும் போறோம்! நீ… கடையில போய் பேப்பர் வாங்கிக்கிட்டு… சீக்கிரம் வந்து சேரு!" என்று பதில் கூறிய கனியன், சுபாஷின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு பறந்தான்.

கனியன் எழுதிவிட்டுச் சென்ற குறளுக்கான அர்த்தத்தை – "அன்புநெஞ்சத்தின் வழியில் இயங்குவதே உயிருள்ள உடலாகும்; இல்லையேல், அது எலும்பைத் தோல் போர்த்திய வெறும் உடலேயாகும்", எழுதிவிட்டு தானும் வீட்டைப் பூட்டிக் கொண்டு, வண்டியில் விரைந்தான் அன்பு.

முதல் தெருவிலிருந்த கடையிலிருந்து சில ஆங்கிலப் பத்திரிக்கைகளும், தமிழ் தினசரிகளும் வாங்கிக் கொண்டவன், அடுத்தப் பத்தாவது நிமிடம், பெசன்ட் நகர் கடற்கரையில் நின்றிருந்தான்.

அங்கே, கனியனும் சுபாஷுமாய் ஜூஸ் கடைக்கான அமைப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்க, மணிமேகலை மார்க்கெட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட – “அருகம்புல், பிரண்டை, முடக்கத்தான் கீரை “ எனப் பல வகை கீரைகளையும் கழுவி சுத்தம் செய்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு உதவியாய் பொம்மன் நின்றிருக்கவே, பத்திரிக்கைகளை வருவோரின் கண்ணில் படும் படி அடுக்கி வைத்தான் அன்பு.

“மாப்பிள… போலாமா?” என்று ராஜா வரவும்,

அவனும் ராஜாவுமாய் ஒரு பெரிய சாக்கை எடுத்துக் கொண்டு, பீச் மணலில் நடக்கத் தொடங்கினர் .

அங்கு போடப்பட்டிருந்த குப்பைகளை, சிறு முகச் சுளிப்பு கூட இல்லாமல் எடுத்து சாக்குப் பையில் போட்டப்படியே முன்னேறிய இருவரையும் பின்பற்றி, அங்கே வாக்கிங்… ஜாகிங் என்று சென்று கொண்டிருந்த பலரும், குப்பைகளைச் சேகரித்து, அதில் போட்டனர்.

ஒரு மணி நேரத் தொடர் வேலைக்குப் பின்னர், இரு சாக்குப் பைகளும் நிரம்பியிருக்க, “ஷ்…அப்பா…” என்று நிமிர்ந்த இருவரின் முகமும்… உடம்பும் வேர்வையில் குளித்திருந்தது!

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டவர்கள் சட்டென சிரித்தனர்.

“ரெண்டு ரவுண்டு பீச்சை சுத்தி ஓடினா கூட… இப்படி வேர்க்காது மாப்பிள! சும்மா… குத்தால அருவி மாதிரி ஊத்துது!” என்றான் ராஜா, சிரிப்புடன்.

“கனிட்ட சொல்லிப் பாரு! ஐயோ… நா ஓடவும் இல்ல… குப்பை பொருக்கவும் இல்ல… என்னைய ஆள விடுங்கடா! ரெண்டு நாளைக்கு… பாத்திரம் கூட கழுவிப் போடுறேன்… ஓட மாட்டேன்னு குப்பறப்படுத்திட்டு அழுவான்!”

“அவனுக்கு என்னவோ… இந்த பீச் மண்ணைப் பாத்தாலே அலர்ஜியா இருக்கு மாப்பிள!”

“சும்மா…வெறுமனே பயமில்லைடா! அவனுக்கு… மண்ணில இறங்கினா கால்-ல ஏதோ அலர்ஜி மாதிரி வந்துறுதுடா… அதை நம்மகிட்ட சொல்லத் தயங்கிக்கிட்டு இப்படிப் பம்முறான்!”

“அப்படியா சேதி!? என்னடா… நம்ம ஸ்ட்ரிக்ட் ஆபிசர் அன்புகிட்ட டபாய்க்கிறானேன்னு பார்த்தேன்! நீயும்… காரணமில்லாம அவன விட்டு வைக்க மாட்டியேன்னு யோசிச்சுக்கிட்டே இருந்தேன்… இப்பப் புரிஞ்சுப் போச்சு!”

அதற்குப் பதிலாய், அன்பு ஒரு புன்னகையை மட்டுமே உதிர்க்க, “சரி… வா போகலாம்! மணி… கால் மாத்தி நிக்குறா… அவளைக் கொஞ்சம் உட்காரச் சொல்வோம்!” என்று நண்பர்கள் இருவரும், அவர்கள் போட்டிருந்த ஜூஸ் கடை பக்கம் நகர்ந்தனர்.

குப்பையை அங்கிருக்கும் மாநகராட்சி குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு, கை-கால் கழுவிக் கொண்டு கடைக்கு வந்தவர்களை,

“அன்பு…டேய்! இந்த மிக்சி ஜார்ல… அருகம்புல் சிக்கிடுச்சுடா… எடேன்!” என்று நீட்டினான் சுபாஷ்.

“அதை… சின்னச் சின்னதா கட் பண்ணிப் போடச் சொன்னேன்ல… அப்படியே… முழுசா போட்டா இப்படித் தான்டா ஆகும்!”

“என்ன செய்றது மாப்பிள!? உன் அளவுக்குப் பொறுமை நமக்கில்ல… “ என்று கனியன் உதடு பிதுக்க,

“வர வர…எல்லாரும் ஹெல்த் கான்ஷியஸ் ஆகிட்டாங்க அன்பண்ணா! இன்னைக்கு மட்டும்… அம்பது அருகம்புல் ஜூஸ் வித்திருக்கு!”

“என்ன மணிக்குட்டி செய்றது? மாறிட்டே வர பழக்க வழக்கத்தில நம்ம உடம்பு கெட்டுப் போயிடுமோன்னு எல்லாருக்கும் பயம்!” என அன்பு கூறவும்,

“அப்படிப் பயப்படறவங்க… எதுக்குக் கண்டதையும் சாப்பிடணும்? ஒழுங்கா சாப்பிட வேண்டியது தானே?” என்றான் கனியன், வேகமாய்.

“உன்னை மாதிரி ஆளுங்களா இருப்பாங்களா இருக்கும்! செய்யும் போது… ஜாலியா செஞ்சுடறது… அப்புறம் குத்துதே… குடையுதேன்னு… இலையையும் தழையையும் திங்க வேண்டியது!” என்று சிரித்தான் ராஜா.

அந்தக் கூட்டத்திலேயே மிகவும் அமைதியான பொம்மனே, “எதுக்குடா வாயைக் கொடுத்து வாங்கிக்கட்டிக்கிற?” என்று கேட்க,

“மேட்டூர் அணை மாதிரி மூடியே இருக்க… உன் வாயைத் திறந்துவிடத் தான்!” என்று பதிலுக்குத் திருப்பிக் கொடுத்தான்,கனியன்.

“டேய்… அப்ப… பொம்மன் வாயைத் திறந்தா ஒரே வாட்டர்ஃபால்ஸ்ன்னு சொல்லுறே?” என்று ராஜா கண்ணடிக்க,

“ச்சே…ச்சச்சே! பொம்மு… அப்படியெல்லாம் இல்லப்பா! அந்த ப்ரியாவைப் பார்த்தா மட்டும் தான்… வாட்டர்ஃபால்ஸ்… மெட்ரோ வாட்டர்… எல்லாமே!” என்று மணி, கிண்டல் செய்ய

“டேய்… பொம்மு! இது எப்படா… எனக்குத் தெரியாம ரூட்டா? யாருடா மாப்பிள!? அந்த 47A ப்ரியாவா? மாப்பிள… கலக்குடா!” என்று கனியன், ஆர்வம் பொங்கக் கேட்கவும்

“சும்மா இருங்கடா!” என்ற பொம்மனின் கன்னங்களில் லேசாய் சிவப்பு.

“ஹூஒய்!!!!!!!!!!!” என்று நண்பர்கள் அனைவரும் கத்தி ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்தனர்.

அதை முடித்து வைக்கவென, ஒரு வாடிக்கையாளர் வரவும், வேலை வேகமாய் நடந்தேறியது.

வந்தவர்கள் பேப்பர் படித்தப்படியே, தாம் விரும்பிய ஜூசைக் குடித்துவிட்டுச் சென்றனர்.

ஒருவர், வாடிக்கையாளரின் தேவையைக் கேட்டு, அதற்கான பணத்தை வாங்க,

அடுத்தவர், அவர் கேட்ட சாறுக்குத் தேவையான கீரையை சின்னதாய் வெட்டிக் கொடுக்க,

அதற்கு அடுத்தவர், அதை மிக்ஸில் போட்டு அடிக்க,

அதன் பின்னே நின்றிருந்தவர், அதை வடிகட்டி… கிளாஸில் ஊற்றிக் கொடுக்க,

கடைசியில் நின்றிருந்தவர், க்ளாஸை கழுவி வைக்க,

மற்றவரோ, ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வது பற்றிய துண்டு பிரசுரத்தை, அனைவருக்கும் விநியோகித்தபடி இருந்தனர்.

ஒருவாராக, மணி ஏழானதும் கடையைக் காலி பண்ணிக் கொண்டு அவர்கள் நகர, சுபாஷ் தன் கேள்விகளின் பயணத்தைத் துவக்கினான்.

“அன்பு! எனக்கு ஒரு டவுட்!” என்று அவன் ஆரம்பிக்கையிலேயே,

“போச்சுடா! கேள்விக்குப் பிறந்தவன்டா… இவன்!? காலையில இருந்து… ஒரு நூறு கேள்வி கேட்டிருப்பான்! ஷப்பா… முடியல!” என்றான் கனியன்.

“என்னடா சுபாஷ்… சொல்லு?” – கனியனின் பேச்சை ஒதுக்கிவிட்டு, அன்பு நண்பனை ஆதரித்தான்.

“இல்ல… இந்த ஹெல்த்தி ஜூஸ் எல்லாம் ஒரு வகையான சர்வீஸ் தானே? இதை ஏன்டா… பணம் வாங்கிட்டுச் செய்யணும்?! இலவசமா இருந்தா….நிறைய பேர் வருவாங்க… அவேர்நெஸ் பரவும் தானே?” என்று தன் கேள்வியை அவன் முன்வைக்க,

“சுபாஷ்! நம்ம ஊர்ல எப்பவுமே… இலவசமா கொடுக்கிற எதுக்குமே மரியாதை இல்லடா! ஜஸ்ட் லைக் தட் வந்து… சும்மா தானே தராங்கன்னு ஒரு கப்பை வாங்கி… ஒரே ஒரு வாய் குடிச்சிட்டு…ச்சே நல்லாவே இல்லைன்னு அப்படியே தூக்கிப் போட்டுட்டுப் போய்டுவாங்க! இதுக்கு… இது விலைன்னு நிர்ணயம் பண்ணி வச்சா…தான்… அதோட மதிப்பு அவங்களுக்குப் புரியும்!” என்றான் அன்பு, தெளிவாக.

அனைவருமே, அவனது கருத்தை ஒரே மனதாய் ஆமோதித்தனர்!

ஆம், எப்போதும் அன்பு எடுக்கும் முடிவுகளில் இருக்கும் தெளிவு, அவர்கள் வாழ்வை விடிய வைத்திருக்கிறதே! ஆதலால், தங்களை விடவும் அன்புவின் மீது அதீத நம்பிக்கை வைத்திருந்தனர் அனைவருமே!

ஓர் நிறைவுடன் வீடு வந்து சேர்ந்தவர்கள், அதன் பின் அவசரத்தின் தத்துப் பிள்ளைகளாகினர்.

வீட்டு வேலைகள் அனைத்தையும் தமக்குள் பகிர்ந்துக் கொண்டவர்கள், சரியாக மணி ஒன்பது அடித்ததும், தத்தம் வேலைக்குக் கிளம்பிச் சென்றனர்! மணி, மட்டும் கல்லூரிக்கு!

“மணி… பார்த்துப் போ, குட்டி! சாயங்காலம்… ஸ்பெஷல் கிளாஸ் எதுவும் இல்லைன்னா… என்னோட ஆபீஸ்க்கு வந்திடு! நா கூட்டிட்டு வந்துடுறேன்!” என அவளை அனுப்பி வைத்த அன்புவை, இடுப்பில் கை வைத்து முறைத்தப்படி நின்றான் கனியன்.

அவன் நின்ற பாவனையே சிரிப்பை உண்டு பண்ண, “என்னடா?” என்றான் அன்பு, நண்பனின் தோள் தட்டி.

“அப்ப… இன்னைக்கு உன் அருமைத் தங்கச்சி வந்ததும்… என்னைய கழட்டிவிட்டுடுவே! அப்படித்தானே? ஈவினிங்… நா லொங்கு லொங்குன்னு நடந்து வரணும்!” என அவன் மேல் மூச்சு… கீழ் மூச்சு வாங்க,

“ஐயோ… உன்னோட பைக் ரிப்பேர்க்குப் போயிருக்கில்ல! வேலை முடிஞ்சதும்… நீ என்னோட ஆபீஸ்க்கு வரேன்னு சொன்னதை… மறந்தே போயிட்டேன்டா…சாரிடா மாப்பிள!”

“சூரியன் கூட… ஒரு நாள் இல்லாட்டி ஒரு நாள்… நாம கடலை விட்டு… வானத்துக்குப் போகணும்ங்கிறதை மறக்கும்! நீ… ஒரு விஷயத்தை மறப்பியாக்கும்! சும்மா… ஏதாவது பேசி… என்னைக் கொலைகாரனாக்காத! சொல்லிட்டேன்!” என்று திட்டுவது போல், அன்புவின் ஞாபகச் சக்தியை மெச்சிக்கொண்டான், கனியன்.

“டேய்… நிஜம்டா… சத்தியமா மறந்துட்டேன்!” என்று அவனது கைப்பிடித்தவன்,

“இப்ப என்ன? நீயும்… மணியும் பைக்ல வந்திடுங்க! நான்…பஸ்ல வந்துக்கிறேன்!” என்றான் தீர்வாக.

“யாரும் பஸ்ல வர வேணாம்! எனக்கு இன்னைக்கு…சைட் விசிட் இருக்கும்ன்னு நினைக்கிறேன்… சோ… அங்க கிளம்பும் போது, மணியை

அவ காலேஜ்ல போய்க் கூட்டிட்டு, வீட்டில விட்டுடுறேன். நீயும்... கனியும் வாங்க...” என்று தான் ஒரு தீர்வை, முன்னே வைத்துவிட்டு நகர்ந்தான் ராஜா.

“இப்ப... சமாதானம் ஆகிட்டீங்களா சார்? போகலாமா?” என்று இடுப்பு வரை குனிந்துக் கொண்டு, அன்பு பவ்யம் காட்டவும்

“மன்னிக்கப்பட்டீர்! வாரும்... போவோம்!” என்று முன்னே நடந்தான் கனியன்.

செல்லமாய் அவனது முதுகில் ஓர் அடி வைத்தவன், உதடுகள் உதிர்த்த புன்னகை மாறாமல், தான் வேலை பார்க்கும் வருமான வரி அலுவலகம் சென்றான்.

ஆனால், அந்தப் புன்னகை, அலுவலக வாயின் அருகே இருந்த பூக்காரியைக் கண்டதும், சட்டென மாறியது!

முகத்தில் கோபம் படர் நீரெனப் பரவ, வேக எட்டுக்கள் வைத்து, அலுவலகத்திற்குள் நுழைந்தான் அன்பு.

அவன் தன் இருக்கையில் அமர்ந்த வினாடி, “ஏய் ஏட்டன்! இங்க வா!” என்ற அதிகார அழைப்புப் பறந்து வர,

அலுவலக வாயிலில் அவன் தொலைத்தப் புன்னகை, மீண்டும் அவனது முகத்தில் குடி வந்தது!

உதட்டில் உறைந்தப் புன்னகையுடன், தன் முன்னிருந்த கணினியை உயிர்ப்பித்து அவன் வேலை பார்க்கத் தொடங்க,

“ஏய்...ஏட்டன்! இங்க வான்னு சொல்றேன்ல... அப்படி என்ன மேன்... வேலை உனக்கு?” என்று மீண்டும் ஓர் அதட்டு விழுந்தது.

அனைவருமே, யாருக்கோ வந்த அழைப்பு என்று தத்தம் வேலையில் மூழ்கியிருந்தனர்.

அடுத்தும், ஓர் “ஏய்…ஏட்டன்!” என்ற விளிப்பு காற்றைக் கிழித்துக் கொண்டு வந்தது!

யாருமே அசையவில்லை!

அக்குரலில் சொந்தக்காரி, தன் இருக்கையிலிருந்து எழுந்து ஒருமுறை அலுவலகத்தை நோட்டம் விட்டாள். அனைவரது தலையும் கணினிக்குள் புகுந்திருக்க, வேகமாய் எழுந்து, அன்புவின் இருக்கைக்கு வந்தவள், அவன் பின்னந்தலையில் ஓர் தட்டுத் தட்டி, “ஏய்… உன்னைத் தானே… கூப்பிட்டிட்டு இருக்கேன்! பெரிய ஒபாமா… சீட்டை விட்டு அசைய மாட்டாரு!” என்றாள் நக்கலாய்.

“ஹோ! என்னைத் தான் கூப்பிட்டியா? நா கூட… ஆபீஸ்க்கு வந்துட்டோம்ங்கிறத மறந்துட்டு… உங்கண்ணனை இங்க ஏலம் விட்டுட்டு இருக்கேன்னு நினைச்சேன்!” என்றான் அன்பு, சிரிப்புடன்.

அப்போதும் அவனது கவனம் கணினியிலேயே இருக்க, “உனக்கிருக்க அதுப்புக்கு!” என்று அவன் தலையில் மீண்டும் ஒரு முறை தட்டியவள்,

“எங்கண்ணனை… நா சாம்பல்… சாம்பல்ன்னு தானே கூப்பிடுவேன்! ஏன்…ஏட்டன்ன்னு கூப்பிடணும்!” என வந்தவள் மண்டையைத் தட்டி யோசிக்கவும்,

“பேரு வைக்கிற அழகைப் பாரு! சாம்பலாம்….அழகா சாம்பசிவம்ன்னு சிவனோட பேரை இப்படியா கொலை பண்றது?” என்று கடிந்து கொண்ட அன்புவின் இதழ்களில், புன்னகை மட்டும் வாடவில்லை.

“போடா போடா! எனக்கும் தான்…அழகா “உதயரேகா!”ன்னு பேரு வச்சாங்க! எவனாவது… அப்படிக் கூப்பிடுறீங்களா? உதை… உதைன்னு என்னோட பேரை என்னமா உதைக்கிறீங்க! அதில உண்டாகுற எரிச்சலை… இப்படித் தேத்திக்கிறேன்!” என்று அலுத்துக்கொண்டாள், “டேய்… ஃபூட்பால்!” என்று செல்லமாக அழைக்கப்படும் உதயரேகா!

அன்பு ஓர் சன்னச் சிரிப்புடன் நிறுத்திக் கொள்ள, “உனக்கு என்ன பெரிய புன்னகை மன்னன்ன்னு நினைப்பாக்கும்! நா கேட்டதுக்குப் பதில்

சொல்லாம...எதுக்கு இப்படிச் சிரிச்சிட்டு இருக்கே?" என்று மீண்டும் ஓர் அடி விழுந்தது, அவனுக்கு.

"என்ன கேட்டே?" என்று இரண்டே வார்த்தையோடு, அன்பு தன் பேச்சை நிறுத்திக்கொள்ளவும்,

"அடி பின்னிடுவேன்... ஏட்டன் இப்படி எங்கண்ணனோட பேராச்சுன்னு கேட்டேனா இல்லையா?"

"ஹோ அதுவா!? மலையாளத்தில... அண்ணனை சேட்டன்னு சொல்லுவாங்க. ஒருவேளை... சேட்டன்னு கூப்பிட நினைச்சு... "ச்சே" வராம ஏட்டன்... ஏட்டன்னு கூவுறியோன்னு நினைச்சேன்!" என்றான் அன்பு, அடக்கப்பட்ட சிரிப்புடன்.

உதயா இடுப்பில் கை வைத்து முறைக்க, அன்புவின் அடுத்த இருக்கைக்காரனான இளங்கோ வாய் விட்டே சிரித்தான்!

"வேணாம் கம்மு... அடிப் பிச்சிடுவேன்! ஒழுங்கா உன்னோட வேலையைப் பாரு!" என்று இளங்'கோ'வை அதட்டிவிட்டு,

"பெரிய மேதாவின்னு நினைப்பு! உன்னைத் தான் கூப்பிடுறேன்னு... உனக்கு மட்டுமில்ல...ஊருக்கே தெரியும்! இதில... என்ன அப்துல்கலாம் மூளையை அஞ்சு நிமிஷம் கடன் வாங்கிட்டு... இத்தனை யோசனை வேண்டிக் கிடக்கு!" என்றவள்,

"வாடா ஏட்டன்! ப்ளீஸ்... எனக்கு... ஒரு டவுட்!" என்று அவனது கைப்பிடித்து, இழுத்துக் கொண்டு சென்றாள் உதயா.

"ப்ச்...கையை விடு, உதயா! எல்லாரும் ஒரு மாதிரி பார்க்கிறாங்க!" என்ற அன்புவின் பார்வை, அந்த அரசு அலுவலகத்தில் அமர்ந்திருந்த நடுத்தர வயதுக்காரர்களை மேய்ந்து வந்தது.

"அதெல்லாம் நினைக்க மாட்டாங்க, வா!" என்ற உதயா, எல்லோரிடமும் இப்படி நடக்கும் பெண்ணல்ல. இந்த வம்பும் தும்பும், அன்புவிடம் மட்டுமே!

அன்பு-ரேகா-இளங்கோ – இந்த மூவரும், வருமான வரி அலுவலகத்தில் ஒன்றாய் வேலைக்குச் சேர்ந்தவர்கள். இதில் இளங்கோ

திருமணமானவன். வேலைக்குச் சேர்ந்த தினம் தொட்டு, மூவரிடமுமே ஒரு நல்ல நட்பு நிலவி வந்தது! அப்படித் தான் அன்புவும் நினைத்தான், இப்போது வரை! அதாவது, தன் கைப்பிடித்து உதயா இழுத்துக் கொண்டு செல்லும் வரை!

“இந்த டாக்ஸ் கால்குலேஷன்ல ஏதோ தப்பு பண்ணியிருக்கேன்…என்னன்னு பாருடா ஏட்டா!” என எசமானியாய் அவள் ஏவ,

“ப்ச்… அந்த ஏட்டனை விடு! என்னவோ… நாயர் கடையில் டீ ஆத்துற ஃபீல் வருது!” என்று சலித்தான், அன்பு.

“விட முடியாது! எனக்கு அது தான் பிடிச்சிருக்கு… ஏட்டன்… ஏட்டன்…ஏட்டன்!” – ஏலம் விடாத குறையாக அவள் சிரிக்க,

“இதென்ன ஏட்டன்… நல்லாவே இல்லை உதய்!”

“ஆமாடா நல்லா தான் இல்லை! எனக்கும் தான் பிடிக்கலை என்ன செய்றது!?” என்று உதயா உதடு பிதுக்கவும்,

“அப்ப ஏன் கூப்பிடுறே? விட்டுடு!” என்றான் அன்பு, சுலபமாக.

“ஹ்ம்ம்…விட்டுடலாம்! பட் ஆன் ஒன் கண்டிஷன்!”

“என்ன கண்டிஷன்?”

“நா உன்னை வேற பேரு சொல்லிக் கூப்பிடுவேன்…”

“என்ன பேரு? இந்த ஏட்டனுக்கு வேற எதுனாலும் பரவாயில்லை!”

“ரியல்லி! அப்போ… கூப்பிட்டிருவேன்! கூப்பிட்டுருவேன்!” என்று சுட்டு விரல் நீட்டி மிரட்டிய உதயா, தன் நெற்றியில் விழுந்த முடியைத் தள்ளிவிட்ட படியே, “கூப்பிடப்போறேன்… இதோ… இதோ…கூப்பிடுறேன்!” என்று பலமான முஸ்தீபுகளின் ஊடே,

“ஹே லவ்! இங்க வா!” என்றாள் கன்னத்தில் எட்டிப் பார்த்த சிறு சிவப்புடன்.

அன்புவின் கரங்கள் அப்படியே நின்று விட்டன. விழி உயர்த்திப் பார்த்தவனின் கண்களில் கேள்வி இருக்கவும், “ஹே…ஏன் இப்படி பார்க்கிறே? ஜஸ்ட்… உன்னோட பேரை இங்கிலீஷ்ல ட்ரான்ஸ்லேட் பண்ணினேன்…அவ்வளவு தான்! முன்னாடியும் அப்படித் தான்… அன்புவை அஃபெக்ஷன் (affection)னு ட்ரான்ஸ்லேட் பண்ணின்… அஃபெக்ஷன் ரொம்ப நீளமா இருந்ததால… அதை ஒரு மாதிரி (ation) சுருக்கி… ஏட்டன் ஆக்கிட்டேன்! இப்போ என்னமோ…எனக்கு அஃபெக்ஷன்னை விடவும் லவ் அப்படிங்கற பேரு தான்… உனக்குப் பொருத்தமான இருக்கும்ன்னு தோணுது!” என்றாள் உதயா, பெரும் விளக்கமும், சிறு தவிப்புமாய்.

ஒன்றும் சொல்லாமல், அன்பு அந்த இடத்தை விட்டு நகரவும், “ஹே என்ன கோபமா? ஜஸ்ட்… ஒரு செல்லப் பேரு தானே, அன்பு!” என்றாள் உதயா. ஆனால், அன்புவால் அதை வெறும் செல்லப் பெயராய் எடுத்துக் கொள்ள முடியவில்லை.

“லஞ்ச்ல பேசலாம்… இப்போ எனக்கு வேலையிருக்கு!” என்றவன், தன் இருக்கையில் போய் அமர்ந்தான்.

அவன் பின்னோடு வந்த உதயாவை, மேலதிகாரியிடமிருந்து வந்த அழைப்புத் தடுத்துவிட, அவள் அங்கே சென்றாள்! மனதே இல்லாமல்!

வேலையில் மூழ்கிப் போனப்போதும், அன்புவால் உதாயவின் அழைப்பை மறக்க முடியவில்லை.

சில நாட்களாகவே அவள் சரியில்லை! அவள் தான், உதயா!

“உனக்கு… இந்தக் கலர் ரொம்பப் பிடிக்கும்ல…” என்று ஒரு இளமஞ்சள் வண்ணச் சுடிதார் அணிந்து வந்தாள்,

“உனக்குத் தான் ஸ்பெஷல் டேஸ்ட் ஆச்சே! அதான்… எனக்கு சுத்தமா பிடிக்கலைன்னாலும், இந்தக் கத்திரிக்கா கூட்டை அம்மாவைப் பண்ணிச் சொல்லிக் கொண்டு வந்தேன்!” என்றாள் மற்றொரு நாள்.

அடுத்ததாய் “நா கூட… ப்ளைண்ட்ஸ்க்கு ஸ்க்ரைப் பண்ணலாம்ன்னு இருக்கே! நீ மட்டும்… எவ்ளோ சர்வீஸ் பண்றே… நா மட்டும் வெட்டியா

இருக்க மாதிரி இருந்துச்சு! அதான்!” எனத் தன் சமூக சேவையை எடுத்துவிட்டாள்.

‘உனக்குப் பிடிக்காதுன்னு… நான் நகம் கடிக்கிறதையே விட்டுட்டேன் தெரியுமா? ரொம்பக் கஷ்டமா இருக்கு! ப்ச்!” என்று சலித்துக் கொண்டாள்.

“என்னோட பழைய டிரஸ் எல்லாம்… வெயிட்…வெயிட்…கிழிஞ்சது இல்லை… பழசு தான்! அதை… பக்கத்தில இருக்க ஆசிரமத்தில கொண்டு போய் கொடுத்திட்டு வந்தேன்!” எனத் தன் பரந்த மனதை, எடுத்து வைத்தாள்.

ஒரு நாளோ “இந்த டிரஸ்… மணிக்காக வாங்கிட்டு வந்தேன்! அவ கலருக்கு… இந்த நவாப்பழக் கலர் சூப்பரா இருக்கும்! நான் கொடுத்தேன்னு… கொடு!” என்று ஒரு சுடிதாரை நீட்டினாள்.

நேற்று கூட, “இந்த சண்டே… எங்க வீட்டுக்கு வரியா? எங்கப்பா உன்னைப் பார்க்கணும்ன்னு சொன்னார்!” என்று கேட்டிருந்தாள்.

இவையனைத்தையும் கோர்வையாய் யோசித்துக் கொண்டே இருந்தவனுக்கு, உதயாவின் எண்ணம் போகும் போக்கை ஊகிக்க முடிந்தது!

“ம்ஹூம்! இன்னைக்கு…அவகிட்டப் பேசிடணும்…” என்ற முடிவுடன், அந்த எண்ணங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, வேலையில் முழுதாய் மூழ்கிப் போனவனை, அவனது எண்ணங்களின் நாயகியே “ஏட்டன்! வாடா… சாப்பிடலாம்!” என்று அழைத்தாள்.

பகிர்ந்துண்ணும் உணவுப் படலம் முடிந்ததும், மூவருமே ஒரு சின்ன நடை நடப்பது வழக்கம்.

அன்றைய நடையின் பாதியிலேயே, மனைவியிடம் வந்த அழைப்பின் பெயரில் இளங்கோ கழண்டு கொள்ள, “உதயா! உன்கிட்ட நா கொஞ்சம் பேசணும்!” என்று பட்டென விஷயத்துக்கு வந்து விட்டான், அன்பு.

இது தான்! இது தான், அன்புவிடம் உதயாவிற்குப் பிடித்தது! சுற்றி வளைப்பது… தயங்கி நிறுத்துவது… என்று எதுவுமே இல்லாமல், நேரடியாக விஷயத்திற்கு வந்து விடுவான்.

அப்பா-அம்மா-அண்ணன்-தம்பி என்று ஓர் அழகியக் கூட்டுக்குள் வாழ்ந்த உதாயவிற்கு, அன்புவைப் பார்த்ததும் காதல் வந்தது என்று சொல்ல முடியாது! அவனிடம் பழகப் பழக, அவனது நல்ல குணங்களும், மென்மையானப் பழக்க வழக்கங்களும் எந்த ஒரு பெண்ணையும் ஈர்த்துவிடும் என்கையில், உதயா மட்டும் விதி விலக்காகிவிடவில்லை.

அவனிடம் தோன்றிய ஈர்ப்பு, சிற்சில நாட்களிலேயே "காதல்" என்ற அளவிற்குப் போய்விட, அவனிடம் எப்படிச் சொல்வது என்று தவித்துக் கொண்டிருந்தவளுக்கு, அன்புவின் நேரடித் தாக்குதல் கூட, இனித்தது!

"ம்ம் சொல்லு…" என்றவளின் குரல் உள்ளே சென்று தந்தியடிக்க,

"இல்ல… நா கேட்கிறேனேன்னு தப்பா எடுத்துக்காதே! நீ… என்ன லவ் பண்றியா?" என்றான், அன்பு எந்தவிதமான அலங்காரமோ தயக்கமோ இல்லாமல்.

இப்படிக் கேட்கிறானே என்றிருந்தது உதயாவிற்கு.

என்ன தான் வீட்டார் "வாயாடி" என்று பட்டம் சூட்டி இருந்தாலும், இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வது என்பது சிரமமாய் இருந்தது!

சற்று தயங்கிவிட்டு "அப்படித் தான் நினைக்கிறேன்!" என்றாள் மெல்ல.

அன்பு பேச ஆரம்பிக்கும் முன்னர், "எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு, அன்பு! உன்னோட… நீட்நெஸ்… நீ வேலை பார்க்கிற நேர்த்தி… உன்னோட பொறுமை… ஒரு ஆரோக்கியமான சமூகம் உருவாகணும்ங்கிற உன்னோட சமூக எண்ணம்… உன்னோட உண்மையான ஃபிரண்ட்ஷிப்! எல்லாமே! ஐ தின்க்… யூ ஆர் மை மேன்!" என்றாள், தன் மனதைத் திறந்து.

"இது சினிமா இல்ல, உதயா!"

"நிஜத்தில நடக்கிறதைத் தான் படமா எடுக்கிறாங்க!"

"ப்ச்! உன்னோட விவாதத் திறமையை இதில காட்டாதே, உதயா! ப்ளீஸ்!"

"இது என்னோட வாழ்க்கை! இதில காட்டாம… எதில காட்டச்சொல்றே?"

"உதயா ப்ளீஸ்! உனக்கு ஏத்த மாட்ச் நானில்லை…"

“அதை நீ எப்படிச் சொல்ல முடியும்? நான் தான்... அதை டிசைட் பண்ணனும்... நீ தான் எனக்கு சரியான மேட்ச்!”

“அப்போ...வேற மாதிரி சொல்றேன்! எனக்கு ஏத்த மாட்ச் நீ இல்லை! இதை சொல்ல... எனக்கு உரிமை இருக்கில்ல!” என்றான் அன்பு, சிறு கோபம் குரலில் தெறிக்க.

அடிப்பட்டக் குழந்தையாய் அவனை நிமிர்ந்துப் பார்த்தவள், சட்டென அதை மறைத்தவளாய் “ஏன்... ஏன் நான் உனக்கேத்த மேட்ச் இல்ல? நானும்... எம்.எஸ்.சி படிச்சிருக்கேன்... உன் அளவுக்கு சம்பாதிக்கிறேன்... பார்க்க ஹீரோயின் மாதிரி இல்லைன்னாலும் நீ பார்த்த உடனே கன்னத்தில ரோஜா பூக்குற அளவுக்கு சிவப்பா தான் இருக்கேன்... வாயாடின்னாலும் நா ஒண்ணும் பஜாரியில்ல...” என்று தன் நல்ல தகுதிகளை அடுக்கிக் கொண்டே போனவள்,

“ஹோ!! ஒருவேளை... கல்யாணமானதும்... உன்னை சமூக சேவையெல்லாம் பண்ணக் கூடாதுன்னு சொல்லிடுவேன்னு நினைக்கிறியா? ச்சே...ச்சே அப்படியெல்லாம் இல்ல! உன்னோட சேர்ந்து நானும்... சர்வீஸ் பண்ணுவேனே ஒழிய, உன்னை ஸ்டாப் பண்ண மாட்டேன்! இட்ஸ் அ ப்ராமிஸ்!” என்றாள், கண்ணில் உண்மையுடன். கூடவே, குரலில் உறுதியுடன்.

“இல்ல உதயா...” என்று அன்பு ஆரம்பிக்க,

“என்ன... இல்ல உதயா!? ஹான்... ரொம்ப முக்கியமான விஷயம்... எங்க குடும்பம் பெரிய குடும்பம்... பெரியப்பா... அப்பா... அத்தை... அப்புறம் எங்க அம்மா சைடு சித்தி... மாமான்னு ஏகப்பட்ட பேர் இருக்கோம்! எல்லாருக்குமே.... நான்னா ரொம்பச் செல்லம்! எனக்கு வர மாப்பிள்ளையையும் அப்படியே தான் பார்ப்பாங்க! சோ... கல்யாணத்துக்கு அப்புறம்... உனக்கு ஒரு பெரிய ஃபாமிலி இலவசமா கிடைக்கும்! அவங்களோட அன்பும்... பாசமும் உனக்கும் கிடைக்கும்!” என்றவளின் குரலில், ஓர் துள்ளல் இருந்தது!

இந்த விஷயம், அன்புவைக் கண்டிப்பாக அசைத்துவிடும் என்று உதயா நம்பியிருக்க, அவள் கூறிய "உறவுகள்" அவனை அசைக்கவே செய்தது! ஆனால், வேறுவிதமாய்!

"அப்ப… என்ன அநாதைன்னு சொல்லிக் காட்டுறே! அப்படித் தானே!?" என்று கேட்டவனின் குரலில், கோபம் அடக்கப்படவில்லை! முழுமையாக, விரவி… பரவி… காரமாய் உதயாவைத் தாக்கிப், பேச்சிழக்க வைத்தது!

தன்னை அவனுக்குப் பிடிக்காமல் போவதற்கு, ஒரு நல்ல காரணம் கூட இல்லை என்றெண்ணியிருந்த உதயாவிற்கு, அவனது கோபம் மித மிஞ்சிய அதிர்ச்சியைக் கொடுத்தது!

"அன்பு!!" என்ற திகைத்த விளிப்பைத் தவிர, உதயாவிடமிருந்து வேறெந்த பிரதிபலிப்பும் இருக்கவில்லை.

ஆனால், உதயாவின் அதிர்ச்சியையோ அவளது உணர்வுகளின் தாக்கத்தையோ அலசி ஆராயும் மனநிலை, அன்புவிற்கு இருக்கவில்லை.

விறுவிறுவென, அவளை விட்டு நடந்தான் அன்பு.

அவனது கோபத்திலேயே அதிர்ந்துப் போயிருந்த உதயாவிற்கு, அவனது உதாசீனம் எரிச்சலைக் கொடுத்தது.

"ஏய்… ஏட்டன்! நில்லு மேன்! என்ன நீ பாட்டுக்கு போயிட்டே இருக்கே?! ஹே நில்லு!" என்று அவன் பின்னோடு ஓடி வந்தவள்,

"ஹே! நான் உன்னைக் குத்திக் காட்டணும்ன்னோ இல்ல… உன் மேல பரிதாபப் பட்டோ இப்படிப் பேசல, அன்பு!" என்று தன் பேச்சுக்கு விளக்கம் கூறியவள்,

"சின்ன வயசில இருந்து… தனியா வளர்ந்த உனக்கு, எங்க வீட்டுச் சூழல் ஒரு நல்ல மாற்றத்தைக் கொடுக்கும்ன்னு நினைச்சேன்! அதுவும் நல்ல சென்ஸ்ல தான்! நிஜம், அன்பு! உன்னைக் காயப் படுத்தணும்ன்னு நான் நினைக்கவே இல்லை! இனி… நினைக்கவும் மாட்டேன்!"

“நீ சந்தோஷப்படுவேன்னு நினைச்சுத் தான் சொன்னேன்... ஐ ப்ராமிஸ் அன்பு... எனக்கு வேறெந்த எண்ணமும் இல்லை!” என்று தன் பேச்சிற்கான விளக்கங்களை, அளவுக்கு அதிகமாகவே எடுத்து வைத்தாள், உதயா.

அப்போதும், அன்பு தன் நடையின் வேகத்தைக் குறைக்கவில்லை! விறுவிறுவென நடந்துக் கொண்டிருந்தவனின் கை பற்றி நிறுத்தியவள், “அன்பு! ஸ்டாப் திஸ்! என்னைப் பிடிக்கலைங்கிறதுக்கு...ஒரு நல்ல காரணம் சொல்லு...அன்பு! !” என்றாள் கோபத்தை அடக்கிய கெஞ்சலுடன்.

தன்னைப் பற்றியிருந்த அவளது கையை விலக்கிக் கொண்டு, அவன் நகர, “இது நாள் வரைக்கும்... இருந்த அன்புக்கும்... இப்போ நான் பார்க்கிற அன்புக்கும் நிறைய வித்தியாசம் தெரியுது! ஏன் அன்பு?” என்றபோது, அவளது குரலில் ஆயாசம் தெரிந்தது.

இவ்வளவு நேரம் பேசாமல் அவளைக் கொன்ற அன்பு, அந்த வினாடி நின்றான்.

அவளது கண்ணைத் துளைக்கும் ஓர் நேர் பார்வையை வீசியவன், “நா எப்பவுமே ஒரே மாதிரி தான்! அநாதைன்னு என்னை கேலி செய்ற யாரையுமே... நான் மதிச்சதில்லை! ஏன்னா ... அநாதை ஆனது என்னோட தப்பில்லை! என்னைப் பெத்தவங்களோட தப்பு! என்னைப் படைச்ச கடவுளோட தப்பு! யார்...யாரோ பண்ண தப்புக்கு... நா ஒரு படி கீழ இறங்கி நிக்கறதை நான் விரும்பல!” என்று ஓரோர் வார்த்தையிலும் கோபம் தெறிக்கப் பேசினான்.

விழித்துக் கொண்டு நின்ற உதயாவின் முகத்தருகே சுட்டு விரல் நீட்டியவன், “அப்புறம்... நா எப்பவுமே இப்படித் தான்! இதுநாள் வரைக்கும்... நீ இந்தப் பேச்சை எடுக்காததால... என்னோட குணம் உனக்குத் தெரியாம போச்சு! அவ்வளவு தான்! சோ... மாறினது நானில்ல... நீ தான்!” என்றுவிட்டு, அலுவலகத்திற்குள் சென்று விட்டான்.

உதயா, சற்று நேரம் அசையவே இல்லை! பொங்கி வந்த கோபம், உள்ளிருந்து அழுகையை இழுத்து வர, தன் மீதே உதயாவிற்கு எரிச்சலாய் வந்தது.

இது நாள் வரையிலும், அவள் கேட்டது கிடைத்திருக்கிறது! சின்ன பென்சில் தொட்டு, அவள் ஓட்டும் ஸ்கூட்டி வரை! சில சமயங்களில், அவள் கேட்காமலே பலதும் நடந்திருக்கிறது!

அப்படியிருக்கையில், அவள் வாய் விட்டு கேட்ட பிறகும், "ச்சீ… போ!" என்று அவன் தூக்கி எறிந்துவிட்டு நடப்பது போல், நெஞ்சம் கனத்தது!

"இல்ல… இதை இப்படியே விடக் கூடாது! அவனுக்கு… அவனை "அநாதை"ன்னு சொன்னது தானே பிரச்னை… அதை சரி பண்ணிட்டா போதும்! எல்லாம் சரியாகிடும்! டோன்ட் கிவ் அப்… உதயா! அவனை மாத்திடலாம்! மாத்த முடியும்!" என்று தனக்குத் தானே கூறிக் கொண்டு, அலுவலகம் நோக்கி விரைந்தாள், அந்த இளம் யுவதி!

அன்பு, தன் முன்னே இருந்த கணினியில் தன்னைத் தொலைத்திருக்க, அவனை ஓரக் கண்ணால் நோட்டம் விட்டவாறே, தனக்கான இருக்கையில் போய் அமர்ந்தாள், உதயரேகா!

"மவனே! இருடி… உன்னை என் வழிக்குக் கொடு வரல.. நா உதயா இல்ல!" என்று கறுவியபடியே அமர்ந்தவள்,

சற்று நேரத்திற்கெல்லாம், "ஏய்… ஏட்டன்! இங்க வா மேன்!" என்றாள் உரக்க.

கண்ணை உயர்த்தி, பார்வையால் அவளை வெட்டிவிட்டு, மீண்டும் கணினிக்குள் புதைந்துப் போனான் அன்பு.

"பெரிய… கண் வித்தை கண்ணாயிரம்! பார்வையைப் பாரு… " என்று சத்தமாகவே புலம்பியவள், அன்புவின் இருக்கைக்கு வந்து, "நீ…கால்குலேட் பண்ணின… இந்த டாக்ஸ் சீட் தப்பா இருக்கு! திருத்தி வை!" என்று அவனது தோளில் தட்டிவிட்டுச் சென்றாள்.

அடுத்தும், இது என்ன… அது என்ன என்று படை எடுத்தப்படி இருந்தவளை, ஒரு மார்க்கமாய் பார்த்தான் அன்பு.

"என்ன மேன்… லுக்கு? என்னடா இவ… ரோஷமில்லாம, நம்ம பின்னாடியே வரான்னு பார்க்கிறியா" என்று அவனது பார்வைக்கான அர்த்தத்தைத் தானே ஊகித்துக் கேட்ட உதயா, அதற்கான பதிலையும் தானே சொன்னாள்.

“உன்னை எனக்குப் பிடிச்சிருக்கு உதயான்னு… உன் வாயாலேயே சொல்ல வைக்கிறேன் பாரு! இட்ஸ் அ சாலேன்ஜ்!!” என்று அவனைப் பார்த்துக் கண்ணடித்தவளை, கொஞ்சம் கூட சட்டை செய்யவில்லை அன்பு. தன் மன உறுதியின் அளவு தெரியாமல் பேசுகிறாள் என்றதோடு, அவளது “காதல்” உளறல்களைக் கிடப்பில் போட்டான்!

மாலை ஐந்தரை மணி வரையில், வேலை… வேலை என்று சென்ற நேரம், கனியனின் அழைப்பில் சற்று வேகம் குறைந்தது.
தன்னை அழைத்த நண்பனிடம், “அதுக்குள்ளே… வந்துட்டியாடா? ஆறு மணிக்குத் தான் வருவேன்னு நினைச்சேன்…” என்றான் அன்பு.

“இன்னைக்கு… எனக்கு மேல இருக்க அலயன் லீவு டா…சோ எஸ்கேப் ஆகிட்டேன்! எனக்குப் பயங்கரமா பசிக்குது… மாப்ள! சீக்கிரம் வாடா!” என்றான் கனியன், விவரமாய்.

“அதென்னடா… அலயன்… புதுசா இருக்கு!”

“ப்ச்… நீயும் சுபாஷ் மாதிரி கேள்வி கேட்டு என்னை இம்சைப்பண்ணாத சொல்லிட்டேன்! போற வழில சொல்றேன்… வா…” என்று பல்லைக் கடித்தவனை மேலும் கோபப்படுத்தாமல், “சரி…வரேன் இரு!” என்ற அன்பு இருக்கையை விட்டு எழுந்தான்.

அவனுடன், உதயாவும் இளங்கோவும் கிளம்பிவிட, மூவருமாய் அலுவலக வாயிலைக் கடந்து, இருசக்கர வாகனம் நிற்கும் இடத்திற்குச் சென்றனர்.

அலுவலக வாயிலுக்கும்… இரு சக்கர வாகன நிறுத்தும் இடத்திற்கும் நடுவே தான், அந்தப் பூக்கடை!

எல்லா நாட்களையும் போல், இப்போதும், அவர்கள் மூவரையும் கண்டதும், அந்தப் பூக்காரக் கிழவி, பூவைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்தாள்.

“சாரு… இரண்டு முழம் மல்லி வாங்கிக்கோய்யா! பத்து ரூவா தேன்…! ஒரு பூ கூட… மலரலபாருய்யா… எல்லாம் மொட்டு!” என்று இளங்கோவிடம் வியாபாரம் செய்தாள்.

இளங்கோவுமே, எல்லா நாட்களையும் போல், பத்து ரூபாய்க்குப் பூ வாங்கினான்.

அன்று என்னவோ, உதயாவும் “எனக்கும் ரெண்டு முழம் கொடுங்க… பாட்டி!” என்று வாங்கிக் கொண்டாள்.

அவர்கள் இருவரும், வியாபாரத்தில் மூழ்கியிருக்க, சும்மா நின்றிருந்த அன்புவின் பார்வை, அந்தப் பூக்காரக் கிழவியைத் தாண்டி, அவளது கடையை மேய்ந்தது!

அங்கே, வடித்து வைத்த சிலையென, சோகமே உருவாய் அமர்ந்திருந்த பெண்ணைப் பார்த்ததும், காலையில் ஏற்பட்ட கோபத்தை விடவும் இரு மடங்கு கோபம் வந்தது.

அதே சமயம், உதாயவிற்கான இரண்டு முழப் பூவை, பிளாஸ்டிக் பையில் இட்டுக் கொடுப்பதற்காக, தன் நடுங்கும் விரல்களால் பிளாஸ்டிக் பையை எடுத்துக் கொண்டிருந்தார் பூக்காரப் பாட்டி.

அவரது நடுக்கத்தின் காரணமாகவா… இல்லை வீசிய காற்றின் காரணமாகவா, அவர் எடுத்த பிளாஸ்டிக் பை, அவரது கையை விட்டு நழுவிக் கீழே விழுந்தது.

அதை குனிந்து எடுத்தவர், “குனிய முடியல… நிமிர முடியல! இந்தப் பாழும் உடம்பு… படுத்தி எடுக்குதுய்யா!” என்றார் ஆயாசமாய்.

அவரது அந்த வார்த்தைகள், அன்புவின் நெடுநாள் கோபத்தை, இன்னமும் அதிகப்படுத்தியது.

உள்ளிருக்கும் கோபத்தை அடக்க முடியாமல், “ஏன் பாட்டி… இந்த வயசான காலத்தில, நீங்க ஏன் இப்படி கஷ்டப்படுறீங்க? உங்க பேத்தியை… இந்த வேலையெல்லாம் செய்யச் சொல்லலாம் இல்ல! நானும் பாக்கிறேன்… எப்பப் பாத்தாலும் அந்தப் பொண்ணு… சும்மா தேமே உட்காந்திருக்கு! நீங்க தான்… அங்கயும்… இங்கயுமா ஓடி வேலை செய்றீங்க! கை-கால் மொடமா இருக்கான்னு பார்த்தா… அதுவுமில்ல… அன்னைக்கு அந்தப் பொண்ணு உங்களோட நடந்து வந்ததை…நான் பார்த்தேன்! அப்புறம்…ஏன் இப்படி இருக்கு!?” என்று, தன் மன வருத்தத்தை உடைத்துவிட்டான், அன்பு.

“அய்யோ…சாரு! அந்தப் புள்ளயைத் தப்பா நினைக்காத சாரு… அது ஒரு பச்ச மண்ணு! என்னைய தவிர…அது யார்கிட்டயும் பேசவே செய்யாது!

அதுக்கு… நாந்தான் ஆயி… அப்பன்… உறவு… ஒலகம் எல்லாமே!” என்றபோது, அந்தப் பூக்காரப்பாட்டியின் கண்களில், வேதனையும் பாசமும் மாறி மாறி மின்னின.

அவர் என்ன அர்த்தத்தில் கூறினாரோ, ஆனால் அன்பு “அது ஒரு பச்ச மண்ணு!” என்ற வாக்கியத்தில், அந்தப் பெண்ணிற்கு புத்தி சுவாதீனம் இல்லை என்ற முடிவுக்கு வந்து விட்டிருந்தான்.

“ஐயோ… பாவம்!” என்ற எண்ணம் சட்டென குடி கொள்ள, அந்தப் பெண் மீதிருந்த கோபம் சட்டென வடிந்து போனது! ஆனால், அக்கோபம்… அடுத்த ஒரே வாரத்தில் பன்மடங்காய் பெருகியும் போனது!

அன்புவின் பிரதாப பார்வை (அப்போதைக்கு), அந்தப் பெண்ணின் மீது படிந்து எழ, கனியனின் அழைப்பு அவனை அதற்கு மேல் சிந்திக்க விடாமல் செய்தது.

“ஹே இளா… பைடா! கனி… வெயிட் பண்றான்… நான் கிளம்புறேன்!” என்றவாறே, அங்கிருந்து நகர்ந்தவன், சிறுது யோசித்தவனாய் “பை… உதயா!” என்றான்.

எங்கே தன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் சென்று விடுவானோ எனக் கோபத்தில் சுழன்று கொண்டிருந்த உதயாவிற்கு, அவனது கடைசி வார்த்தைகள் பெருத்த நிம்மதியைக் கொடுத்தன… கூடவே நம்பிக்கையையும்! அந்த நம்பிக்கை கொடுத்த தைரியத்தில், “பை… அன்பு! பார்த்துப் போ!” என்று வேகமாய் கையசைத்தாள் உதயா.

“ம்ம்… ம்ம்…” என்று முனங்களுடன் வெளியே சென்றவன், கனியனை அழைத்துக் கொண்டு வீடு சென்றான்.

டிராபிக் வெள்ளத்தில் நீந்தி, அவர்கள் வீடு வரும் போதே, மணி ஆறே முக்கால்!

“ஹப்பாடா…” என்று கனியன் அமர்ந்துவிட்டப் போதும், பூட்டியிருந்த வீட்டைத் திறந்த அன்புவிற்கு, மணிமேகலை வராதது சுணக்கத்தை அளித்தது!

அதைக் கவனித்துவிட்டு “என்னடா…” என்று கனியன் கேட்கக் காத்திருந்தவன் போல்,

“மணியை இன்னும் காணலையே! ராஜா… ஆபீஸ் முடிஞ்சு வரும் போது… கூட்டிட்டு வரேன்னு சொல்லியிருந்தான்! நாலரை… அஞ்சு மணிக்கே முடிஞ்சிரும்… வந்துடுவேன்னு சொன்னானே! ம்ம்ம்ம்…!” என்று அன்பு, நெற்றியைச் சுருக்கி யோசிக்க,

“வந்திருவாங்கடா… சென்னைல டிராபிக்கா பஞ்சம்… வருவாங்க விடு!” என்ற கனியன், குளித்து உடை மாற்றி வந்த பின்னரும், வாசலுக்கும் ஹாலுக்குமாய் நடை பயில்வதை அன்பு நிறுத்தவில்லை.

“ஹே! எதுக்குடா… இவ்வளவு டென்ஷன்! மணி வந்திடுவா!” என்று அவனது முதுகில் தட்டியவன்,

“வா… நைட் சமையலுக்கு என்ன காய் நறுக்கணும்ன்னு எடுத்துக் கொடு… நா கட் பண்ணி வைக்கிறேன்…” என்று அன்புவை இழுத்தான்.

இரவு உணவிற்குரிய காய்கறிகளை அவனிடம் எடுத்துக் கொடுக்கும் வரையிலும் அமைதியாய் இருந்த அன்பு, அந்த வேலை முடிந்ததும் தவிக்க ஆரம்பித்துவிட்டான்.

“ஃபோன் பண்ணிப் பாருடா…” என்று கனியன் கூற,

“அது… கூட செய்யாமலா இருக்கேன்! ஃபோன் சுவிட்ச் ஆஃப்ன்னு வருது!” – சுள்ளென விழுந்தன வார்த்தைகள்.

அன்புவிற்கு கோபம் வருவது அபூர்வம்! எந்தவொரு விஷயத்தையும்… அது நல்லதாய் இருந்தாலும் சரி கேட்டதாய் இருந்தாலும் சரி, நடந்தது நடந்து விட்டது… அதை சரி செய்ய என்ன செய்யலாம் என்று நினைப்பானே ஒழிய, “ஐயோ… நடந்து விட்டதே! நடந்து விட்டதே!” என்று அதிலேயே உழன்று, தேவையில்லாமல் கோபம் கொள்ள மாட்டான் என்பது கனியன் உட்பட அவனுடன் பழகியவர்கள் அனைவரும் அறிந்தது!

அதனாலேயே, அவனது இன்றைய கோபம் புதிதாய் தெரிந்தது கனியனுக்கு!

“ஹே… இதுக்கேன்டா… இவ்வளவு டென்ஷன் ஆகுறே? ஜஸ்ட் ரிலாக்ஸ்… ராஜா கூட்டிட்டு வரேன்னு சொல்லியிருக்கான்ல… கண்டிப்பா கூட்டிட்டு வந்திடுவான்!” என்று கனியன் சொல்லி முடிப்பதற்கும், ராஜா வருவதற்கும் சரியாக இருந்தது.

முதல் மாடியிலிருக்கும் அவர்களது வீட்டிற்கு, இரண்டு இரண்டு படிகளாக ஏறி வந்த ராஜா, வாசலேயே பார்த்துக் கொண்டிருந்த அன்புவின் பார்வை, தன்னைத் தாண்டி பின்னே செல்லவும், “என்னடா… யாரைத் தேடுறே?” என்றான் கேள்வியாக.

“யாரைத் தேடுறேனா? ஹே… மணி எங்கடா? அவளைக் கூட்டிட்டு வரேன்னு சொன்னியே!!” – ஏகத்திற்கும் பயந்து விட்டான், அன்பு.

“ஹோ… மை காட்! மறந்துட்டேன் டா… இன்னைக்கு சைட்ல சிமெண்ட்…”

ராஜா முடிக்கவில்லை. அவனது கன்னம் பழுத்திருந்தது!

ஓங்கி விழுந்த அறைக்கு சமமாய், வார்த்தைகளும் சூடாய் வெளி வந்தன.

“இடியட்! வேலை இருக்கவன்… எதுக்குடா… கூட்டிட்டு வரேன்னு கமிட் பண்றே… ச்சே!! நானாவது கூட்டிட்டு வந்திருப்பேன்… ஐயோ என்னாச்சு!!” – அன்புவின் வார்த்தைகள் தவிப்பும், கொதிப்புமாய் தந்தி அடித்தன.

அன்புவின் இந்த தாக்குதலை, ராஜாவும் சரி… கனியனும் சரி எதிர்ப்பார்க்கவே இல்லை! இது நாள் வரையிலும், அவர்களிடேயே நிலவி வந்த நட்பிற்குள், மனஸ்தாபங்களுக்கே இடமிருந்ததில்லை எனும் போது, இந்த கை நீட்டல் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது இருவருக்கும்!

கனியனுக்கு வெறுமனே அதிர்ச்சி எனில், ராஜாவிற்கு… அதிர்ச்சி… கோபம்…அவமானம் எல்லாமே!

அவனுக்கு அன்புவைப் பிடிக்கும்! ஆனால், அத்துமீறும் அன்புவை அல்ல!

“அன்பு… எதுக்குடா இப்படி ஓவர் ரியாக்ட் பண்றே! ஜஸ்ட்… ரிலாக்ஸ்… இப்போ என்ன…நான் போய் அவளைக் கூட்டிட்டு வந்துடுறேன்!”

“ஓவர் ரியாக்ட்டா! அவளைப் பத்தி… உனக்கு என்னடா தெரியும்? இடியட்! பொறுப்பில்லாத இடியட்! நீ… ஒண்ணும் அவளைக் கூட்டிட்டு வரத்

தேவையில்லை… அவளைப் பாத்துக்க எனக்குத் தெரியும்! உன் வேலையை மட்டும் நீ பாரு… இனிமேல் அவ விஷயத்தில யாரு தலையிடுறதையும் என்னால பொறுக்க முடியாது!” என்றான் அன்பு, பற்களைக் கடித்தப்படியே!

ராஜாவால், அவனது வார்த்தைகளை சகித்துக் கொள்ளவே முடியவில்லை.

முதுகு ஒடிய வேலை பார்த்ததன் விளைவாக, உடம்பையும் மனதையும் சோர்வு ஆட்டிப்படைக்க, மணியைப் பற்றிய எண்ணமே இல்லாமல், வீடு வந்து விட்டான்! தப்பு தான்! ஆனால்… அதற்காக இப்படியா?!!

எரிச்சல் மேலோங்க, “அவ உனக்குத் தங்கச்சின்னா… எனக்கு அவ காதலி! சொல்ல போனா… நாந்தான் பதறணும்! புரியுதா? சும்மா துள்ளாத! நா… அவளைப் பாத்துக்கிறேன்!” என்று ஒரு வேகத்தில் வார்த்தையை விட்டவன், தானே திகைத்து நின்றான்.

பின்னே, இதுவரை தனக்குள் மட்டுமே இருந்த காதல் எண்ணத்தை… மணியிடம் கூடப் பகிர்ந்திராத காதல் எண்ணத்தை, வெளியிட்டு விட்டானே!!

தானே அதிர்ந்து நின்றவனை, மேலும் கோபப்படுத்தவென, “இந்த எண்ணம்… எத்தனை நாளாடா இருக்கு?! எத்தனை நாளா இருந்தா என்ன… இனிமேல் இருக்கக் கூடாது! அவளை மறந்திடு!!” என்றான் அன்பு, ஆணித்தரமாய்.

ராஜாவின் கோபம் ஏறிக்கொண்டே சென்றது, “ஏய்… நீ என்னடா என்னை மறக்கச் சொல்றது? மறக்க முடியாது… முடியவே முடியாது! நா… அவளைத் தான் கல்யாணம் பண்ணிப்பேன்!” என்றான் கோபமாய்.

“வேணாம்… ராஜா! சொன்னா கேளு… மணியை விட்டுடு!”

“டேய்…என்னடா அவளை நான் ரேப் பண்ணப்………..” – ராஜாவின் வார்த்தைகள் முடியவில்லை. அன்பு அவனை சரமாரியாய் அடிக்கத் துவங்கினான்!!

“அன்பு! டேய்… என்னடா விடுடா…”

“ஏய்… விடுங்கடா… ஐயோ… ராஜா… ஏன்டா…” – சண்டைக்கோழிகளாய் சிலிர்த்துக் கொண்டு நின்ற நண்பர்களின் ஊடே புகுந்து, விலக்கி விட்டான் கனியன்! ம்ஹூம் விலக்கி விட முயன்றான்! அவ்வளவே!

ம்ஹூம்! அன்புவின் கோபமும் குறைவதாய் இல்லை! ராஜாவின் எதிர்ப்பும் மடிவதாய் இல்லை!

கனியன் போதாதென்று, அப்போது தான் வீடு வந்து சேர்ந்த சுபாஷும் இருவரையும் விலக்க, ஒருவழியாக அவர்கள் இருவரும் கோபம் ஓய்ந்து பிரிகையில் மணி வந்திருந்தாள்.

வீடிருந்த கோலமே, அங்கே பெரிதாய் ஏதோ பிரச்சனை என்பதை வலியுறுத்த, “என்னண்ணா… என்ன பிரச்சனை? ஐயோ… இதென்ன கன்னம் இப்படி கன்னிப் போயிருக்கு!!!” என்று பதறினாள் அவள், அன்புத் தங்கையாய்! அன்புவின் தங்கையாய்!

ஒன்றும் சொல்லாமல், கன்னத்தைப் பிடித்துக் கொண்டு, அன்பு அங்கிருந்து நகர முற்பட,

“ஏன்டா… ஒண்ணுமே சொல்லாம போறே? உன்னோட பாச மலர்கிட்ட சொல்றது தானே? அவளை விட்டுட்டு வந்துட்டேங்கிறேன் ஒரே காரணத்துக்காக… என்னைப் போட்டு அடிச்சேன்னு சொல்றது தானே?” என்றான் ராஜா, அடங்காக்கோபத்துடன்.

“ஐயோ… அடிச்சீங்களா? ஏண்ணா? அவரு வரலைன்னா என்ன? நா வந்திட மாட்டேனா?” என்று மணி கூறவும்,

“உனக்கு உன் மேல இருக்க நம்பிக்கை கூட… அவனுக்கு உன் மேல இல்ல…” – அன்புவுக்குப் பதிலாய் ராஜா பதில் சொன்னான்.

சட்டென ராஜாவின் புறம் திரும்பிய மணி, “என்ன பேசுறீங்க? நம்பிக்கையா? நீங்க பேசுறதைப் பார்த்தா… அண்ணன் என்னை சந்தேகப்படற மாதிரியில்ல சொல்றீங்க? இதை… என்னோட கூடப் பிறந்த

அண்ணன் சொன்னான்னு சொல்லியிருந்தாக்கூட… நா நம்பியிருப்பேன்! ஆனா.. அன்பு அண்ணே சொல்ல மாட்டாங்க!! அதனால… தயவு செஞ்சு அவங்களைக் குறை சொல்றதை விடுங்க!” என்றாள் காரமாய்.

கூடவே, “அண்ணா… எனக்கு இனிமேல் எந்தப் பிரச்னையும் வராதுண்ணா! பயப்படாதீங்க! இங்க வரைக்கும்லாம்… யாரும் வர மாட்டாங்க! அப்படியே வந்து…ஏதாவது அசம்பாவிதமா நடந்தாலும்… நீங்க என்னைக் காப்பாத்திடுவீங்க… எனக்குக் கண்டிப்பா நம்பிக்கை இருக்கு!” என்றாள் அன்புவின் கைப்பிடித்து.

அன்பு ஒன்றும் சொல்லவில்லை. பற்றிய அவள் கையை அழுத்திக் கொடுத்துவிட்டு, அறைக்குள் சென்று மறைந்தான்.

அவனையே சற்று நேரம் பார்த்திருந்தவள், கண்ணில் படிந்த நீருடன் மற்றவர் புறம் திரும்பினாள்.

அப்போதும் ராஜா முறைப்புடன் நின்றிருக்கவே, “அன்பு அண்ணனுக்காக… நான் உங்ககிட்ட மன்னிப்பு கேட்டுக்கிறேன்! எம் மேல இருக்க பாசத்தில… எனக்கு எதுவும் ஆகிடுமோங்கிற பயத்தில.. உங்களை அடிச்சுட்டாங்க! சாரி!!” என மணி மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருக்கும் போதே, முகத்தைக் கழுவிக் கொண்டு வெளியே வந்தான் அன்பு.

அவன் வந்ததைக் கவனிக்காத மணியோ, ராஜாவின் முகத்தில் கோபம் குறையாமல் இருந்ததைக் கண்டு, சட்டென அவன் காலில் விழுந்தாள்.

“அண்ணாவுக்காக நான் மன்னிப்பு கேட்கிறேன்…” என்றபடியே தன் காலை, அவள் தொடவும், அதிர்ந்து போனான், ராஜா!!

“ஹே… மணி! என்ன இது!!! எழுந்திரு!!” என்று இரண்டடி அவன் பின்னே நகர,

“நா அன்பு அண்ணனோட வாழ்க்கையில வரதுக்கு முன்னாடி இருந்தே… நீங்களும் அவங்களும் ஃபிரண்ட்ஸ். ஆனா…இப்போ என்னால உங்களுக்குள்ள ஒரு பிரச்சனைங்கிறதை என்னால சகிச்சுக்கவே முடியல!

சாரி! சாரி! சாரி!” என்றவளின் கண்களில், கண்ணீரின் ஜல ஜாலங்கள் நர்த்தனமாடின.

“ஐயோ… நீ ஏன் மணி… மன்னிப்பு கேட்கிறே?” என்று அன்புவும்,

“நானும் தான்… அளவில்லாம வார்த்தையை விட்டுட்டேன்! என் மேலயும் தான் தப்பிருக்கு! இதுக்குப் போய்… விடு மணி!” என்று ராஜாவும் ஒரே நேரத்தில் சமாதானத்தைப் பகிர,

“ஸ்ஸ்ஸ்ஸ்… ப்பா… கொஞ்ச நேரத்தில ரணகளம் பண்ணிட்டீங்களேடா! சை… நீங்க அடிச்ச அடியில, எனக்கு நெஞ்சு வலி வந்துடுச்சு!” என்று ஆசுவாசப்பெருமூச்சு விட்ட கனியன்,

“போங்கடா… போங்கடா.. போயி… புள்ள குட்டிகள படிக்க வைங்கடா…” என்றுவிட்டு, அடுப்படிப்பக்கம் நகர்ந்தான்.

அவன் பின்னோடே “டேய் கனி… என்னடா ஆச்சு? ஏன் சண்டை…” என்று கேட்டபடியே நம் கேள்வியின் நாயகன் – சுபாஷ் செல்ல,

“வாடா… கேள்விக்குப் பிறந்து… பதிலுக்கு வாக்கப்பட்டவனே! வா! உன்னோட எல்லா கேள்விக்கும்… பதில் சொல்றேன்…” என்று அவனை இழுத்துக் கொண்டு சென்றான் கனியன்.

கனியனின் பேச்சில், மனம், தன் இறுக்கத்திலிருந்து விடைப்பெற்று வந்திருந்தப் போதும், முழுதாய் சமன்படவில்லை, அன்புவுக்கு.

“மணி… நா கொஞ்ச நேரம் மாடில இருந்துட்டு வரேன்…” என்று முணுமுணுத்தவன், மாடிக்கு விரைந்தான்.

மொட்டை மாடியின் கைப்பிடிச் சுவரை பிடித்தப்படி வானத்தை வெறித்திருந்த அன்புவின் மனம், கொஞ்சம் கொஞ்சமாய் சமன்பட, அரை மணி நேரத்தில் அவனது கோபம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போனது.

“ச்சே… இன்னைக்கு நாளே சரியில்ல! காலையில இருந்தே… ஒரே பிரச்சனை… டென்ஷன்… கோபம்… கடைசில அடிதடி…”

“அந்தப் பூக்காரப் பொண்ணை பார்த்ததில ஆரம்பிச்ச எரிச்சல்… ராஜா மேல விடிஞ்சிருக்கு!”

“ச்சை… ஒரு மென்டலி ரிடார்ட் பொண்ணைப் போய் தப்பா நினைச்சப் பாவத்துக்குத் தான்… கூடவே வளர்ந்த ராஜாவோட சண்டை போடுற மாதிரி வந்துடுச்சுப் போல…”

“என்னன்னாலும்… அவனை அடிச்சது தப்பு!!”

“நெருப்புன்னு சொன்னா வாய் வெந்திடுமா என்ன? ரேப்ன்னு சொல்றதால… மணிக்கு அப்படியேதும் ஆகிடுமா என்ன? லூசு! லூசு!”

“அவளே சொல்ற மாதிரி… சென்னை வரைக்கும் அவளைத் தேடி யாருமே வரமாட்டாங்க! இத்தனை வருஷத்துக்கு… அவ முகம் கூட நியாபகம் இருக்குமோ என்ன? சும்மா… நடக்கவே இல்லாத விஷயத்துக்கு… ஏகப்பட்ட டென்ஷன் ஆகி…ப்ச்… ராஜாவை அடிச்சு…”

“ஆனா… மணியை ராஜா காதலிக்கிறது நல்லதில்லையே… அதை மட்டும் பொறுமையா எடுத்துச் சொல்லலாம்! மித்த எல்லாத்துக்கும்… மன்னிப்பு கேட்டே தான் ஆகணும்!” – தனக்குள் நடந்த சுய அலசலின் முடிவில், அவன் திரும்ப,

ராஜாவும் அங்கே நின்றிருந்தான். “என்னை மன்னிச்சுடுடா… அன்பு!!” என்ற வார்த்தையோடு!

“ஐ அம் சாரிடா, ராஜா!” என்று அன்புவும் அவன் கை பிடிக்க,

“மணி… எல்லாம் சொன்னா!” என்ற ராஜாவின் வார்த்தையில், ஸ்தம்பித்து நின்றான்.

எல்லாம் சொல்லிவிட்டாளா!!! ஐயோ… சொல்லும்போது எத்தனை கஷ்டப்பட்டாளோ!! அழுதிருப்பாளோ! கதறியிருப்பாளோ! ச்சே! தன்னால் தான்! தனது கோபத்தால் தான்…இப்படி…எல்லார் முன்னாலும், தன் கதையைச் சொல்லிவிட்டு, கூனிக் குறுகி நின்றிருப்பாளோ!! – அன்பு அண்ணனாய், தங்கையின் நிலையைச் சுற்றியே வலம் வந்த அன்புவிடம், அதிர்ச்சி மட்டுமே எஞ்சி நிற்க,

“எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியல, அன்பு! யூ ஆர்… ஜஸ்ட் கிரேட்! உன்னோட ஃபிரண்டுன்னு சொல்லிக்கவே எனக்குப் பெருமையா இருக்குடா!” என்ற ராஜா, அன்புவை இழுத்து அணைத்துக் கொண்டான்.

“இப்ப… உன்னோட பயமும்… கோபமும் எனக்குப் புரியுதுடா! ச்சே… விஷயம் தெரியாம… நானும் என்னென்னமோ பேசிட்டேன்… ச்சே… எவ்வளவு முட்டாள்தனம்! சாரிடா அன்பு!!” என்ற ராஜாவின் குரலில், ஏகப்பட்ட வருத்தம்.

அந்த வருத்தம், உள்ளுக்குள் ஓர் வலியைக் கொடுக்க, “இப்படிப்பட்ட ஒரு பொண்ணை… லவ் பண்ணோமேன்னு வருத்தப்படுறியாடா! நீன்னு இல்லைடா… எந்தவொரு ஆம்பிளையுமே இப்படித் தான்டா நினைப்பான்… அதான்… உனக்கும் மணிக்கும் ஒத்து வராதுன்னு சொன்னேன்! அந்த இடத்தில…வேற ஒருத்தன் இருந்திருந்தாலும்… இதையே தான் சொல்லியிருப்பேன்!” என்றான் அன்பு, ஓர் அண்ணனின் பாசத்தையும் கவலையையும் ஒரே கலவையாய் சேர்த்து.

“டேய்…இந்த வார்த்தை சொன்னதுக்கு உன்னை அறைஞ்சிருக்கணும்! ஆனா… ஏற்கனவே நிறைய அடி வாங்கிட்டதால விடுறேன்! சும்மா இரு!” என்று ராஜா, சுட்டு விரல் நீட்டி எச்சரிக்க,

“என்னடா?” என்றான் அன்பு குழப்பமாக.

“என்ன என்னடா?” என்று அவனை எதிர்த்த ராஜா, தன் நிலையை அன்புவிடம் விளக்க ஆரம்பித்தான்.

“மணி அளவுக்கோ… உன் அளவுக்கோ இல்லைன்னாலும், நானும் வாழ்க்கையில அடி பட்டிருக்கேன்டா! சின்ன வயசிலேயே பெத்தவங்களை இழக்கிறது… ஒரு வகை வலின்னா… அவங்க கூடவே வாழ்ந்து… வளைந்து… பதினஞ்சு-பதினாறு வயசில, இவன் எங்களுக்கு வேணாம்ன்னு பெத்தவங்களால தூக்கி எறியப்பட்ட ஒரு அநாதையா வளருறதும் ஒரு வலி தான்டா… அதை நான் அனுபவிச்சிருக்கேன்… அனுபவிக்கிறேன்…”

நண்பன் படும் வேதனையைப் பொறுக்க முடியாதவனாய், “என்ன ராஜா இது? நம்மளோட காயத்தை… நாமளே குத்தி கிளறி பெருசாக்கிக்கக்

கூடாதுன்னு அய்யா சொல்லியிருக்கார் இல்ல… விடுடா!” என்றான் அன்பு, ராஜாவின் தோள் அணைத்து.

“இல்ல மாப்பிள்ள… வருத்தப்படல! என்னோட சைடை உன்கிட்ட சொல்றேன்… தட்ஸ் இட்!” என்று தன்னை சமன் செய்துக் கொண்டவன்,

“நா ஏன் இதெல்லாம் சொல்றேன் தெரியுமா? நா ஒரு சராசரி ஆம்பிளை இல்ல… ஒருத்தரோட வலியை புரிஞ்சுக்கக் கூடிய ஜீவன் தான்ன்னு உனக்குப் புரியணும்ங்கிறதுக்காக சொல்றேன்… அந்த வலியைக் காரணம் காட்டி…அவங்களை விட்டு ஓடிப்போற ஈனப் பிறவி இல்லைன்னு சொல்றேன்!!” என்றான் ராஜா, அன்புவின் முகம் பார்த்து.

புரியாத பார்வை ஒன்றை அன்புவின் நெற்றி தாங்கி நிற்க, “மணியோட கடந்த காலம் எப்படியிருந்தாலும்… அதை என்னோட நிகழ்காலக் காதலோட நான் இணைக்க விரும்பல! மணியை நான் இப்பவும் லவ் பண்றேன்டா!” என்றான் உறுதியாய்.

“ராஜா!” என்று அன்பு அதிர்ந்து நிற்க,

“என்னடா? எதுக்கு இவ்வளவு அதிர்ச்சி?! அவளோட பாஸ்ட் தெரிஞ்ச பிறகு தான்… அவ அனுபவிச்சக் கஷ்டத்துக்கு எல்லாம் சேர்த்து… அவளை ரொம்ப நல்லா பார்த்துக்கணும்ன்னு தோணுது! அவளை… நான் நல்லா பார்த்துப்பேன்டா! என்னை நம்பு, அன்பு! அவளை எனக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுடா!” என்றான் நண்பனின் கையைப் பிடித்துக் கொண்டு.

“ராஜா… அவ… அவ… டேய்… நீ நல்லா யோசிச்சுத் தான் பேசுறியா?”

“அன்பு! ப்ளீஸ்!!” – அதன் பின், நண்பர்கள் இருவரும் எதுவுமே பேசவில்லை.

கிட்டத்தட்ட அரை மணி நேர அமைதிக்குப் பின்னர், “தேங்க்ஸ் மாப்பிள்ளை!!!” என்றான் அன்பு, ராஜாவைக் கட்டிப் பிடித்து.

“ஆக, ராஜா… நல்லவனா கெட்டவனான்னு அலசி ஆராய உனக்கு அரை மணி நேரம் தேவைப்பட்டிருக்கு!” என்று ராஜா கிண்டல் செய்யவும்,

மனம் விட்டுச் சிரித்த அன்பு, “நா உன்னைப் பத்தி யோசிக்கல… கொஞ்சம் கோபம் வருமே தவிர, உன்கிட்ட குறைன்னு எதுவுமே இல்லைடா! நா… யோசிச்சிட்டு இருந்தது மணியைப் பத்தி!” என்றான் தன் மனதைத் திறந்து.

“ம்ம்ம்…” என்ற ராஜாவிற்குமே அவளைப் பற்றிய எண்ணங்கள் தான்!

“என்ன சொல்லி…அவளைக் கல்யாணத்துக்கு ஒத்துக்க வைக்கிறதுன்னு ஒரே யோசனை! இப்பப் போய்…நீ அவளை லவ் பண்றேன்னு சொன்னா… அவ கதையைக் கேட்டுட்டு…அந்தப் பரிதாபத்தில தான் நீ லவ் பண்றதா நினைப்பா… என்ன தான் முன்னாடியே லவ் பண்ணினேன்னு சொன்னாலும் எடுபடாது! அதான் யோசனையா இருக்கு!” என்ற அன்புவின் முகம் தெளியாமலே இருக்க,

“நீ… அவகிட்ட இந்த விஷயத்தைப் பத்தி எதுவுமே பேச வேணாம்டா, அன்பு!” என்றான் ராஜா, முடிவாக.

“ஏன்?” என்றான் அன்பு, கண்ணாலேயே.

“நான் பார்த்துக்கிறேன்டா! உன்னோட இன்ஃப்ளுயசன்ஸ்ல அவ இந்தக் கல்யாணத்துக்கு சம்மதம் சொல்லக் கூடாது… அவளாவே என்னோட காதலை அக்சப்ட் பண்ணிக்கணும்! பண்ண வைக்கிறேன்!” என்றான் சவால் குரலில்.

சட்டென சிரித்த அன்பு, “ஆல் தி பெஸ்ட்!” என்று கை கொடுக்கவும், சந்தோஷமாய், அதைப் பற்றிக் குலுக்கிவிட்டு, கீழிறங்கிச் சென்றனர், நண்பர்கள் இருவரும்!

அடுத்து வந்த ஒரு வாரமும், ஒரு சீராகவே சென்றது.

வீட்டில் கனியனின் லூட்டி என்றால், அலுவலகத்தில் உதயாவின் அலட்டல் என்று வாழ்க்கை வழக்கம் போலவே செல்ல,

அதில் ஒரே ஓர் திருத்தமாய், பூக்காரப் பெண்ணின் மீதிருந்த கோபம் காணாமல் போய், மாறாய் ஓர் பரிதாபம் குடி வந்திருந்தது!

போகும் போதும், வரும் போதும் அந்தப் பெண்ணின் மீது படிந்தெழும் பார்வை, பூக்கட்டும் அவளது வேகத்திலும்… லாவகத்திலும் கொஞ்சம்

சுணங்கி நிற்கும்! ஆனால், அந்த சுணக்கமும், "புத்தி சரியில்லைன்னா... எந்த வேலையும் பாக்காம தேமேன்னா இருப்பாங்க...வரவர சினிமா பார்த்து ரொம்ப கற்பனை பண்றேடா, அன்பு! அடங்கு!" என்ற அதட்டலில், பரிதாபமாகவே மாறிப் போனது.

அதுவும் கடந்த நான்கு நாட்களாக, அவர்கள் (அன்பு-உதயா-இளங்கோ) மூவரும் அலுவலகத்தை விட்டு வெளியே வரும்போது, அந்தப் பூக்காரப் பாட்டி, பூக்கூடையைத் தூக்கிக் கொண்டு அவர்களிடம் ஓடி வரவில்லை.

இளங்கோவும் உதயாவும் கவனித்தார்களோ இல்லையோ, அன்புவுக்கு அந்த வித்தியாசம் சட்டென மனதில் பதிந்து போனது.

"ஏன்? ஏன் வரல? தினம்... வியாபாரம் பண்றவனை ஏன் கண்டுக்காம இருக்காங்க? ஒரு வேளை... அன்னைக்கு அவங்க பேத்தியைப் பத்தி தப்பா சொன்னதால... எம் மேல கோபமா இருக்காங்களோ?" என, அவர்களது நடத்தைக்கான காரணத்தை அலசி ஆராய்ந்தவன்,

அடுத்த நாள், உதயாவையும் இளங்கோவையும் முன்னே அனுப்பிவிட்டு, அலுவலகத்தினுள் இருந்து, அவர்களையும் பூக்காரப் பாட்டியையும் நோட்டம் விட்டான்.

அப்போதும், அந்தப் பாட்டி இளங்கோவை அணுகவில்லை.

"ஏன்? ஏன்? ஏன்?" என்று மண்டை குடைந்தது அன்புவிற்கு.

"அப்படியே கோபமா இருந்தாலும்... என் மேல தானே கோபமா இருக்கணும்? எதுக்கு... இளங்கோவைத் தவிர்க்கிறாங்க?" என்று அவன் மண்டையைப் பிய்த்துக் கொண்டதற்கு மாறாய்,

அடுத்த நாள் மாலை, "சாரு.... வீட்டம்மாவுக்குப் பூ வாங்கிட்டுப் போ, சாரு!" என்று அவர்களை வழி மறித்தாள், பூக்காரப்பாட்டி.

அன்புவால் தன்னை அடக்கிக் கொள்ள முடியவில்லை!

"ஏன் பாட்டி... இந்த நாலு நாளும்... நீங்க எங்களைக் கண்டுக்கவே இல்லையே? இன்னைக்கு மட்டுமென்ன... இளங்கோவை பூ வாங்கச் சொல்லிக் கேட்கிறீங்க? நாலு நாளா... ஏன் உங்க ரெகுலர் கஸ்டமரை

விட்டீங்க?” – தன்னைக் குடைந்து கொண்டிருந்த கேள்வியைக் கேட்டே விட்டான், அன்பு.

மலர்ந்து சிரித்த அந்தக் கிழவி, “அதுவா தம்பி… சாரோட வீட்டம்மா நாலு நாளா ஊரில இல்லையில்ல தம்பி…அதேன்! வரல!” என்றாள், பூவை அளந்தவாறே.

“ச்சே… இதை யோசிக்கலையே!” என்று அன்பு மானசீகமாய் தலையில் அடித்துக் கொள்ளும் போதே,

“ஆஹா! டேய் கம்… உன்னோட வைஃப் ஊருக்குப் போனது ஊருக்கே தெரிஞ்சிருக்குப் போலவேடா!” என்று உதயா வியக்க,

“ஹே! நா சொல்லலை உதை!!” என்று தானும் வியந்த இளங்கோ, “ஆனா… அவ ஊருக்குப் போனது உங்களுக்கு எப்படித் தெரியும் பாட்டி? இவங்க ரெண்டு பேரையும் தவிர…யாருக்கும் தெரியாதே?” என்று பாட்டியிடமே கேட்டான்.

“யாரும் சொல்லல சாரு! எம் பேத்தி தான் சொன்னுச்சு!” என்ற பாட்டி,

அவர்களது முகத்தில் கேள்வி படரவும்,

“நீங்க நாலு நாளா… சாப்பாட்டு டப்பி எடுத்துட்டே வரல இல்ல. அதை வச்சு தான்… உங்க வீட்டம்மா ஊருக்குப் போயிருக்காகன்னு சொன்னுச்சு… இன்னைக்கு சாப்பாட்டு டப்பியைப் பார்த்ததும் போ…ஆயான்னு என்னைய விரட்டி விட்டுச்சு!” என்றார் அந்தப் பாட்டி பெருமையாக.

“ஹே…வெரி ஸ்மார்ட்!!!” என்று உதயா சிலாகிக்க,

“ஆமா… செமயா கவனிச்சிருக்கு இல்ல…” என்று பாராட்டினான் இளங்கோ.

ஆனால், அங்கிருந்த மூவரது உணர்ச்சிக்கும் மாறாய், அன்பு கோபத்தின் பீடமாய் நின்றிருந்தான்! அதுவும், உதயாவின் “ஸ்மார்ட்!” என்ற பாராட்டு, அவனது கோப பீடத்திற்கு, அலங்கார அணிகலனாகிப் போனது!

ஆக, இவள் புத்தி பிசகிய பெண்ணல்ல! நன்றாய் யோசிக்கத் தெரிந்த, கூர்ந்து கவனிக்கும் திறமை கொண்ட பெண் தான்! சராசரிக்கும் மேலாய், சிந்திக்கும் பெண் தான்!!

ஆனால், என்ன மூளை இருந்து என்ன புண்ணியம்? வயதான காலத்தில், இந்த மூதாட்டியை வேலை செய்ய விட்டுவிட்டு, இவள் உட்கார்ந்தல்லவோ இருக்கிறாள்!?

ஏனோ, கட்டுக்கடங்காமல் மனம் கொதித்துப் போனது!

“ச்சே! என்ன பெண் இவள்?” என்று அவள் மீது ஓர் வெறுப்பும், அந்தப் பாட்டியின் மீது ஒரு பரிதாபமும் ஆக்கிரமிக்க, அந்தப் பெண்ணைப் போய் நன்றாகத் திட்ட வேண்டும் போல் நெஞ்சம் துடித்தது!

“ம்ஹூம்! வேணாம் அன்பு... வேணாம்! அப்புறம்... உன்னைய எல்லாரும் நடமாடும் வல்கனோன்னு சொல்லிடுவாங்க! சும்மா சும்மா பொங்காத!”

“அந்தப் பாட்டி பாடு... அந்தப் பேத்தி பாடு! உனக்கென்ன வந்துச்சு? ஓடியாடி வேலை செய்ற அந்தப் பாட்டியே... வருத்தப்படற மாதிரி இல்லை...நீயேன் பொங்கி எழற? விடுடா! விடுடா!!”

தலையை உலுக்கி விட்டுக் கொண்டு, அலுவலகத்தை விட்டு நகர்ந்தான், அன்பு.

பைக் நிறுத்தும் இடத்திற்கு நடக்கும் போதும் சரி, பைக்கை நகர்த்தும் போதும் சரி, அலுவலக வாயிலை விட்டு நகரும் போதும் சரி, கண்கள் அந்தப் பெண்ணையே மெய்ந்தது அன்புவின் பார்வை!

“வேணாம்டா... டேய் வேணாம்!” என்று நெஞ்சம் குரல் கொடுக்க, வண்டியை வேகப்படுத்திக் கொண்டு, வீடு வந்து சேர்ந்தான் அவன்.

அங்கே வீட்டிற்குள் நுழைந்தால், மணி வந்திருக்கும் தடயங்கள் தெரிந்தன. கூடவே, ராஜாவின் பையும் வரவேற்பறையில் கிடந்தது!

“சார்... காதல் வலை வீசுறார் போல...” என்று எண்ணிய அன்புவின் சிரிப்பு,

அறைக்குள்ளிருந்து “ஹலோ! மிஸ்டர்… உங்களைத் தான்… நீங்க ஏன் எனக்கு காலேஜ் ஃபீஸ் கட்டுனீங்க? உங்களை யாராச்சும் கேட்டாங்களா?” என ஓங்கி ஒலித்த மணியின் குரலில் வாடியது.

“உள்ள போய்… என்ன விஷயம்ன்னு கேட்போமா? வேணாமா?” என்று அவன் யோசித்துக் கொண்டிருக்கும் போதே,

“ஏன் நா கட்டினா என்ன? நல்ல காரியம் தானே செஞ்சிருக்கேன்… என்னவோ கொலை பண்ணிட்ட மாதிரி இப்படிக் குதிக்கிறே?” – அலட்சியமாய் வெளி வந்தன வார்த்தைகள்.

“இவன் ஒருத்தன்… அவளே டென்ஷன்ல இருக்கா… இதில கொஞ்சம் தணிஞ்சு பேசினா என்ன? பெரிய கொம்பேறி மூக்கன்!” என்று எரிச்சல் வந்தது அன்புவிற்கு.

கூடவே, “அவங்களுக்குள்ள பேசி ஒரு முடிவுக்கு வரட்டும்… நாம போய் மூக்கை நுழைக்க வேணாம்!” என்று முடிவும் மனதில் உதிக்க, சத்தமில்லாமல் வரவேற்பறை நாற்காலியில் அமர்ந்து, அவர்களது உரையாடலைக் கவனிக்கத் தொடங்கினான், அன்பு.

அங்கே, மணியோ குதித்துக் கொண்டிருந்தாள்! கோப அப்பமாய்!

“நல்ல காரியம் தான்… நா இல்லைன்னு சொல்லலை! ஆனா… எனக்கு நல்லது செய்ய எங்கண்ணா இருக்கும் போது… நீங்க ஏன் செய்றீங்க? என்ன பரிதாபமா?”

“பரிதாபமா? லூசா நீ? அப்போ… நீயே உன்னோட கதையைக் கேட்கிற எல்லாரும் உம் மேல பரிதாபப்படணும்ன்னு எதிர்ப்பார்க்கிறியா?” – ராஜாவின் வார்த்தைகளும் சளைக்காமல் வந்தன.

“நா எதிர்ப்பார்க்கலை… ஆனா…அது தான் இது நாள் வரை நடந்திருக்கு!”

“இது நாள் வரை நடந்திருக்கலாம். இனியும் நடக்கலாம்! ஆனா… என் விஷயத்தில… உன் மேல எனக்கு ஒரு துளி கூட பரிதாபமில்ல!”

“அப்புறம்?” எனக் கேட்ட மணியின் புருவம், எப்படி வளைந்திருக்கும் என்று நினைத்துப் பார்த்த அன்புவால் சிரிப்பை அடக்கமுடியவில்லை.

ஆனால், ராஜாவின் பதிலுக்காக அவனது சிரிப்பை மட்டுப்பட்டு நின்றது.

“இவ்வளவு கஷ்டத்தையும் மீறி… இஞ்சினியரிங் படிக்கிற அளவுக்கு தைரியமான பொண்ணா இருக்கியேன்னு… பெருமைப்படறேன்! பொறாமைப்படலை!!”

தான் மட்டுமல்ல மணியும், ராஜாவின் பேச்சில் திகைத்துப் போயிருக்கிறாள் என்பது அவளது அமைதியில் புரிந்தது, அன்புவிற்கு!

சிறு அமைதிக்குப் பின்னர் மணியும் பேசினாள். “அண்ணா மட்டுமில்லைன்னா… நான் இல்லை! பெத்த அப்பாவே, ஒரு பாட்டில் சாராயத்துக்காக என்னை நாலு பேருகிட்ட வித்ததை நினைச்சா… இந்த நிமிஷமே செத்துப் போய்டலாம் போல இருக்கு! ஆனா… அதையெல்லாம் மறந்துட்டு, சாதாரணமா இருக்கேன்னா… அதுக்கு அண்ணே தான் காரணம்!” என்று வலி மிகுந்தக் குரலில் சொல்லிக் கொண்டே வந்தவள், சட்டென உடைந்து அழுதாள்!

“எவ்வளவு தடவை சொன்னாலும்… அதையே நினைச்சிட்டு… என்ன பொண்ணு இவ?” என்று அன்பு கோபம் கொள்ளும் போதே,

“ஐயோ… என்ன மணி இது?” என்று பதறினான், ராஜா.

மணி உடைந்து அழுததும், அவளது அண்ணனுக்கு எவ்வளவு வலித்ததோ! அதே அளவிற்கு ராஜாவிற்கும் வலித்தது!

விவரம் தெரியாத வயதில், பெற்றோரின் அன்பை இழப்பது வேறு! அதே போல், விவரம் தெரிந்த வயதில், பெற்றோரை பறிகொடுப்பது வேறு! ஆனால், விவரம் தெரிந்த வயதில், பெற்றோரால் நிராகரிப்பட்டு “நீ எங்களுக்கு வேணாம்…” என்று அவர்களாலேயே குப்பை போல் வீசப்படுவது, எவ்வளவு வலி என்று அவனுக்கும் தெரியுமே!!

அவனுக்கு இன்றும் நினைவிருக்கிறது… அந்த நாள்! அவன் “அநாதை” என்ற சூட்டப்பட்ட அந்த நாள்!

“நா அவனை வச்சுக்க மாட்டேன்…” என்று தாயும், “பெத்தவ நீயே வச்சுக்காதப்போ… நா ஏன் இவனை வச்சுக்கணும்! எனக்கு… என்னோட

வாழ்க்கை தான் முக்கியம்!” என்று தந்தையும், ஒரு சேர அவனைத் தூக்கி எறிந்த நாள்!

இன்றும், அதை நினைத்தால் நெஞ்சம் புயலில் சிக்கிக் கொண்ட மலராய் பிய்ந்து போகிறதே! சை!

அதே வலியை… அதை விடவும் பல மடங்கு வலியை… இந்தச் சின்னப் பெண் தாங்குகிறாளே!! நெஞ்சம்… தனக்காய் மட்டுமல்லாமல் மணிக்காகவும் அழுதது!

“அழாத மணி! நாம அழறதால… நமக்கு நடந்த கொடுமை இல்லைன்னு ஆகப்போறதில்லை! அழாதமா!” என்றவனின் கரங்கள், மணியை ஆதரவாய் அணைத்திருந்தன.

தங்கையும் ராஜாவும் பேசட்டும் என்று ஒதுங்கியிருந்த அன்புவால், மணியின் அழுகையைக் கேட்டுக் கொண்டு, வரவேற்பறையில் அமர்ந்திருக்க முடியவில்லை.

அவள் குலுங்கி அழுவது போலவும், “என்னால… முடியல அண்ணா…” என்று கதறுவது போலவும் தோன்றிய பிம்பங்கள் அவனை இம்சிக்க, வேகமாய் எழுந்து உள்ளே சென்றவன், ராஜாவின் கையணைப்பில் நின்றிருந்த தங்கையைக் கண்டதும், சட்டென பின்னடைந்தான்.

அவர்கள் இருவருமே, அவன் வந்ததைக் கவனிக்கவில்லை!

ராஜா, தன் உயிராகிப் போனவளைத் தேற்றுவதில் முனைப்பாய் இருக்க,

மணியோ, தன் துன்பம் பகிரும் தோளாய், ராஜாவைப் பற்றியிருந்தாள்.

மன்னவனின் மனதில் காதல் இருந்தபோதும், மணியவளின் மனதில் துயரம் மட்டுமே இருந்தது! இருப்பினும், அவர்கள் நின்றிருந்த கோலம்… கலைக்கக் கூடிய ஒன்றாய் தோன்றாது போக, மெல்ல அங்கிருந்து நழுவினான் அன்பு.

அங்கே தொடங்கியது அன்புவின் துன்பம்!!

ராஜாவால் மணிக்கு ஓர் நல்ல வாழ்க்கையைக் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது! ஆகையால், தங்கை அவனுடன் ஒன்றி வாழ வேண்டும் என்று பிரார்த்தித்தான் அவன், அண்ணனாய்!

ஆனால், மணி கொஞ்சம் கொஞ்சமாய் தன் சார்பு நிலையை அன்புவிடமிருந்து... ராஜாவிடம் மாற்ற மாற்ற, அன்புவினுள் ஒரு வெறுமை குடி வர ஆரம்பித்தது!

ஆம்... தன் பாசத்தைக் கொட்டும் அட்சயப்பாத்திரமாய் இருந்தவள், மற்றவனின் காதல் கிண்ணமாய் மாறிப் போனதில், அவனது பாசம் கொட்ட இடமில்லாமல் திக்கித் தவித்தது!

மணியை சந்தித்த அந்த நாள், அவனுக்கு இன்றும் நினைவிருக்கிறது! கிட்டத்தட்ட எட்டு வருடங்களுக்கு முன்னர்!

சுனாமி தமிழ்நாட்டை சூறையாடிய சமயம் அது!

சுனாமி தாக்குதல் நடந்த அடுத்த நாள், ஓர் சுய உதவிக் குழுவின் உறுப்பினனாக, அன்பு நாகப்பட்டிணம் சென்றிருந்தான்.

ஆங்காங்கே பல பல உதவிகள் நடந்தேறிக் கொண்டிருந்த போதும், அவனிருந்தது – சுனாமி அலைகளில் சிக்கி, அதிர்ஷ்ட்ட வசமாய் உயிர் தப்பியவர்களை, அவரவர் இருப்பிடம் அறிந்து, அங்கே சேர்ப்பிக்கும் பணியில்.

அப்படித் தான், மணியின் அறிமுகம் அவனுக்குக் கிடைத்ததே!

“அன்பு... இங்க வாங்க!” என்று அழைத்த அந்த அமைப்பின் பொறுப்பாளர்,

மணியைக் கை காட்டி, “இந்தப் பொண்ணு... யாரு என்னன்னு விவரம் கேளுங்க... என்ன கேட்டாலும் பதிலே இல்லை... ரொம்ப அதிர்ந்த மாதிரி இருக்கு... ஜஸ்ட் ட்ரை!” என்று அவளை அன்புவிடம் ஒப்படைத்துவிட்டு, சென்றார்.

கண்ணை விரித்து, பரக்க... பரக்க பார்த்துக் கொண்டு, அழுக்கேறிய ஒரு பாவாடையும், ஏகப்பட்டக் கிழிசல்கள் கொண்ட சட்டையுமாய் நின்றிருந்தாள் அந்தச் சின்னப் பெண்.

மிஞ்சிமிஞ்சிப் போனால், பதினாறு… பதினேழு வயதிருக்கக் கூடும்!

கண்ணில் அப்படியொரு பீதி! சுற்றி…சுற்றி அலைந்தப் பார்வையில், ஓர் பயம்! வெறுமை! என்னவாகுமோ என்ற பதட்டம்!

மெல்ல அவள் கை தொட்டான், அன்பு!

பட்டென அவனிடமிருந்து கையை உருவிக் கொண்டவள், "தொடாதடா… பொருக்கி!" என்றாள் ஆக்ரோஷமாய்.

கூடவே, அவனை ஓங்கி ஓர் அறை வைத்தாள்.

"இன்னொரு வாட்டி… என்னைய தொட்டே… கொன்னுடுவேன்…" என்றாள் கோபமாய், அவன் முகத்துக்கு நேரே கையை நீட்டி.

அதிர்ந்துப் போனான், அன்பு!

தன் முன் நீன்றிருந்த கையை, அப்போது தான், கூர்ந்துப் பார்த்தான் அன்பு! கை… கன்னம்… தோள்… கழுத்து… என்று சிறு சிறு சிராய்ப்புகள்! உதட்டில் சிறிதாய் ரத்தம்! கன்னத்தில், அறை விழுந்த அடையாளங்கள்!

சுனாமியை விடவும், வேறேதோ ஒரு அசம்பாவிதம் நடந்திருக்கிறது என்று பகுத்தறிவு சொன்னது!

ஆனால், இந்தச் சின்னப் பெண்ணிடம் என்னவென்று கேட்பது?!

அவனை கை நீட்டி அடித்தவளோ, தனக்கே அடிப்பட்டது போல் மரணக்காயம் பட்டுப் போனாள்.

"அய்யோ… ஐயோ… ஐயோ… சாமி…சாமி… சாமி என்னைய காப்பாத்து… சாமி… வேணாம்… காப்பாத்து…" என்று அலறியவள், தன் சக்தி முழுதையும் திரட்டி, உயிர் போகும் வரை அழுதாள்.

அவளது அழுகை, அன்புவை மட்டுமல்ல… அந்த முகாமிலிருந்த அனைவரையுமே உலுக்கிப் போட்டது!

யாராலும் அவளை சமாதானம் செய்ய முடியவில்லை. ஆண்… பெண் என்ற பேதமின்றி, யாரது அணைப்பையும்…ஆறுதலையும் அந்தப் பேதை நெஞ்சம் ஏற்கவில்லை.

கடைசியில் வேறு வழியில்லாமல், மயக்க ஊசி போட்டு, அவளை அமைதிப் படுத்தும் படி ஆயிற்று!!

மணி, அந்த முகாமிற்கு வந்தபின்னர், அன்புவால் வேறெந்த நபரையும் பார்க்க முடியவில்லை! மனமும்... உடலும் அவளைச் சுற்றிச் சுற்றியே வந்தது!

கொடுத்த வேலையைச் செய்த போதும், அடிக்கொருமுறை மருத்துவ முகாமிலிருந்த அவளை வந்துப் பார்த்துக் கொண்டான்.

என்னவோ, அவனால் அவளை அப்படியே விட முடியும் என்று தோன்றவில்லை!

அவளுக்கு ஒரு நல்ல வழி காட்டாமல், இந்த முகாமை விட்டுச் செல்லக் கூடாது என்று நெஞ்சம் உறுதி எடுக்கும் அளவிற்கு, அந்தச் சிறு பெண் அன்புவைப் பாதித்திருந்தாள்!

‘தங்கை’ என்ற உறவோடு வளர்ந்திராத அவனுக்கு, அந்தப் பெண்ணைப் பார்த்ததில் இருந்து, ஓர் பிணைப்பு... ஓர் பாசம்... ஓர் அன்பு... என்னவென்று பகுத்தறிய முடியாவிட்டாலும், அவளை இந்த நிலைமையில் விட்டுச் செல்ல அவனுக்கு மனம் வரவில்லை.

அதன் விளைவாய், மருத்துவ முகாமில் அவள் படுக்கைக்கு அருகே அமர்ந்திருந்தான் அன்பு.

அவளது கண் மணிகள் லேசாய் அசைய, அவனுள் ஓர் நடுக்கம் ஓடி மறைந்தது!

விழித்தப் பின்னர், முன்னர் போல் கதறித் துடித்தால் என்ன செய்வது? திரும்பவும் ஓர் மயக்க ஊசியை இந்த உடம்பு தாங்குமா என்று நெஞ்சம் பதறியது, அவனை அறியாமலே!

ஆனால், அவள் முன் போல் அழவில்லை! கதறவில்லை! மெல்ல கண் விழித்து, அன்புவை நேராய் பார்த்தாள்.

அவன் கை தொட்டதும், பட்டென உருவிக் கொண்டாள்.

அந்த விலகலில், ஒரு முறை ஆழ மூச்செடுத்து விட்டவன், “சரி… தொடலை! ஓகேவா?!! இப்ப… சொல்லு… உன்னோட பேரு என்ன?” என்றான் ஆதுர்யமாய்.

“சொல்ல முடியாது!” – பட்டென வந்தது பதில்.

“ப்ச்… ஏன் பாப்பாக்கு பேர் இல்லையா?” என்றான் மீண்டும் அவன், கெஞ்சல் போலவே.

அன்பு அப்படிச் சொன்னதும், அந்த முகத்தில் அப்படியொரு பிரகாசம்! அப்படியொரு சந்தோசம்!

“நா பாப்பாவா? பாப்பாவா? பாப்பா தானே? நிஜமா பாப்பா தானே?” என்று கண்ணை அகல விரித்து, சந்தோஷமாய் கேட்கத் தொடங்கியவள், “ஆனா… பாப்பாவை ஏன் இப்படி செஞ்சாங்க? என்ன…என்னை… என்னை…” என்று கதறினாள்.

“ஒண்ணுமில்லைடா குட்டிம்மா…”

“இல்ல இருக்கு… எனக்கு வலி இருக்கு… நா வேணாம்…வேணாம்ன்னு சொன்னேன்… அவங்க கேட்கவே இல்லை… என்ன…என்னை…”

அன்புவுக்குப் புரிந்தது! அவளது தோற்றமும், அவளது பேச்சும், முக்கியமாய் அவள் மேனியிலிருந்த காயங்களும் அவளுக்கு நடந்த கொடுமையை எடுத்துரைக்க, “ச்சே! என்ன மனுஷங்க இவங்க…ச்சை…ச்சை…சை…” என்று உலகத்தில் வாழும் காம மிருகங்கள் மீது, ஏகப்பட்ட வெறுப்பு, ஊற்றாய் பெருகியது!

எந்தப் படுபாவியோ!!? அவன் மட்டும் கிடைக்கட்டும்! கடலுக்குள் தள்ளி… கொன்று விட்டு, சுனாமியில் செத்துவிட்டான் என்று சொல்லிவிடவேண்டும் என்று கண் மண் தெரியாத ஆத்திரம் வந்தது, அன்புவுக்கு!

அதன் விளைவாய், “உன்னை…. ………….” என்று ஆரம்பித்தவன், என்ன சொல்லி வாக்கியத்தை இட்டு நிரப்புவது என்று தெரியாமல், ஒரு நிமிடம் தயங்கி, “உன்கிட்ட வம்பு பண்ணவன் யாருன்னு… அண்ணன்கிட்ட

சொல்றியா? அண்ணன்…அவனைக் கொன்னுடுறேன்!” என்றான் ஒருவாறாக.

ஆனால், அந்தச் சிறு பெண் கூறிய பதில், உலகில் உள்ள அணைத்து ஆம்பிளைகளையும்… தன்னையும் சேர்த்து, கொன்று விடவேண்டும் போன்ற வெறியை உண்டாக்கியது.

“ஒருத்தன் இல்ல… அண்ணா! நெறைய பேரு… என்னைய மாறி… மாறி… ஐயோ… எவ்வளவு வலிச்சது தெரியுமா? வேணாம்… வேணாம் சொன்னேன் ண்ணா… ஐயோ… வலிக்குது… வலிக்குது… வலிக்குது!” – கதறத் தொடங்கிவிட்டாள், அவள்.

அதன் பின், மீண்டும் மயக்க மருந்து!

இப்போது, அவளை விடவும் அன்புவுக்கு வலித்தது!!

எத்தனையோ கொடுமைகளை எதிர்க்கொண்டிருந்தபோதும், மணிக்கு இழைக்கப்பட்ட கொடுமையை அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை.

மலரவே இல்லாத மொட்டை, இப்படி பிய்த்து எரிந்து விட்டனரே!! ச்சே! ச்சே! – இந்த அருவெறுப்பை மீறி, அவனால் எதுவுமே யோசிக்க முடியவில்லை! இவளை இப்படி சரி செய்யப் போகிறோம் என்பதைக் கூட, அவனால் யோசிக்க முடியவில்லை! இப்படியாகிவிட்டதே… இப்படியாகிவிட்டதே என்று மறுகித் தவிக்க மட்டுமே முடிந்தது!

ஆனால், எத்தனை நேரம் தான்… மறுகித் தவிப்பது? எழுந்து விட்ட மணியைப் பார்க்க வேண்டாமோ?!!

ஹ்ம்ம். மணி மயக்கத்திலிருந்து எழுந்தாள்!

அவளது இயற்பெயரான “அமலா”வை, அவளது வாயிலிருந்து வரவைக்கும் முன்னர், அன்புவுக்கு இரண்டு பாட்டில் தண்ணீரும், அவளுக்கு இரண்டு பாட்டில் குளுகோஸும் தேவைப்பட்டன.

ஒருவாறாக, அவளது பெயர்… ஊர்… பெற்றோர் என்று அனைத்தையும் விசாரித்துக் கொண்டு, அவளை அவளது கிராமத்துக்கு இட்டுச் சென்ற அன்புவிற்கு, அங்கே ஓர் மிகப் பெரிய அதிர்ச்சிக் காத்திருந்தது.

நல்லதாய் ஒரு சுடிதார் வாங்கிக் கொடுத்து, அவளை அணியச் செய்தவன், உணவே சென்றிராத அவளது உடம்புற்கு இரண்டு இட்லிகளை உபயமாய் கொடுத்து, அவளது சொந்த ஊருக்கு அழைத்துச் சென்றான்.

அமலாவுமே (மணியுமே) எந்தவிதமான எதிர்ப்புமில்லாமல் வந்தாள்.

“அந்தா… அந்தக் கடைசி வீதிண்ணே!” என்று அவனுக்கு வழி கூறி அழைத்துச் சென்றவள்,

“இந்த வீடு தாண்ணே!” என்றாள் ஓர் குடிசையைக் கை காட்டி.

அங்கே, ஐம்பது வயது மதிக்கத்தக்க ஓர் மனிதன், குடித்துவிட்டு மல்லாக்க படுத்திருந்தேன்.

அன்புவின் கண்கள், அமலாவிடம் பாய்ந்து மீள, “எங்க அப்பா அண்ணே…” என்றுவிட்டு,

“அப்பா… அப்பா… எழுந்திருப்பா… நா அமலா வந்திருக்கேன்… என்னைய இந்த அண்ணே தான் காப்பாத்திக் கூட்டியாந்துச்சு…” என்றாள் தந்தையை உலுக்கி.

அதைப் பகிர்கையில், “தான் மீண்டு விட்டோம்” என்ற சந்தோசம் அவளது குரலில் விரவி இருந்தது!

ஆனால், அந்த சந்தோசம்… அவளது தந்தை என்ற குடிகார மிருகம் எழுந்து கொண்டதும் சுக்கு சுக்காய் சிதறிப் போனது!

“ஏய்…. …………..நீ…யா… அடி ……… நாதாரி… வன்….வந்துட்டியா… யா… சனியன் தொலைஞ்சுச்சுன்னு… உன்……….னை……………….ய அவி………..ங்கட்ட வித்து தீத்துட்டேனே…. ஏன்டி சனியனே வந்தே…???” – மிதமிஞ்சிய போதையின் விளைவாகவோ… இல்லை மகளைப் பார்த்த கோபத்தின் விளைவாகவோ, உண்மையை உளறிக் கொட்டினான், அந்தப் படுபாவி!!

அன்பு அதிர்ந்து போனான் என்றால்… அமலா (மணி) செத்துப் போனாள்!!!

“அப்பா… என்ன சொல்லுறே….” என அவள் தடுமாற,

“ஆமாடி… உன்… உண்…உன்னைய… அவிங்கட்ட ஆயிர ரூவாய்க்கு வித்துட்டேன்…” என்றான் அந்த அப்பன், தெளிவாகவே.

ஊசலாடிக் கொண்டிருந்த மீதி உயிரும், அந்தப் பேச்சில் அறுந்து விழ, அமலா… அந்தக் குடிசையின் மண் தரையோடு மண்ணாய் மடிந்து அமர்ந்தாள்.
அந்த அப்பனுக்கு… அது கூடப் பொறுக்கவில்லை போலும்!

“சரி… போ…………வு…………….து ப்……………..போ!! இப்ப வந்துட்டே… இல்ல… திருப்பிக் கொண்டே விட்டா… இன்னொரு ஆ… ஆஆஆஆஆ யிரம் தருவானுங்க… ஒரு வாரத்துக்கு வரும்… வாடி…” என்று பெண்ணின் கைப்பிடித்து இழுத்தான்.

அவ்வளவு தான்! அன்புவிற்கு வெறி பிடித்துக் கொண்டது!

“ச்சீ… நீயெல்லாம் ஒரு அப்பன்!!??” என்று கத்தியவன், ஒரே உதையில் அவனை குடிசையின் ஒரு மூளைக்கு எட்டி உதைதான்.

“ஏய்… நீ… யா………………ரு…………..டா… மா…. ………………..மா…” என்று அவன் அசிங்கமாய் பேசியபடியே எழ முயன்றவன், திரும்பவும் எழ முடியாத வண்ணம், அவனை சரமாரியாய் அடிக்கத் தொடங்கினான்.

ஈவு… இரக்கமில்லாமல் விழுந்த அடிகளை விடவும், குடி எனும் பேய் அவனை ஆட்டி வைத்திருந்த படியால், சீக்கிரமே உணர்விழந்து போனான், அந்தக் குடிகார நாய்.

அவன் எழ எப்படியும் ஒரு மணி நேரமாகும் என்பதை உறுதி செய்துக் கொண்டு, அமலாவின் பக்கம் திரும்பிய அன்பு, உருகிப் போனான்.

புகைப்படத்தில் தொங்கிக் கொண்டிருந்த தன் தாயிடம், கதறிக் கொண்டிருந்தது அந்தச் சிறு பெண்மனம்!

ஆனால், அழவும் புலம்பவும் இது நேரமில்லையே!

“அமலா… இங்க இருக்க ஓரோர் நிமிஷமும் ஆபத்து தான்… உங்கப்பா எழுந்துக்கிறதுக்குள்ள நாம இங்க இருந்து போய்டணும்! அவரு

எழுந்துட்டா… ஊரைக் கூட்டி… உன்னை இங்க தங்க வச்சுடுவாரு… அப்புறம்… அவங்ககிட்ட… “ – முடிக்காமல் இழுத்தான், அன்பு.

அமலாவின் கண்களில், சிறு தயக்கம் தெரியவும், “உனக்கு என்னோட வர இஷ்டமில்லையா, அமலா? அப்படின்னா பரவாயில்லை… விடு… உன்னைக் காப்பாத்த நான் வேற ஏதாவது ஏற்பாடு பண்ணிட்டுப் போறேன்!” என்றான் அன்பு, அந்தத் தயக்கத்தை வேறுவிதமாய் படித்து.

“என்னோட வந்தா வா… இல்லைன்னா… எக்கேடு கேட்டுப் போ…” என்று முறுக்கிக் கொள்ளாமல், “உன்னைக் காப்பாற்ற வேறு வழி செய்கிறேன்…” என்று சொல்பவனை விடவும், நல்லவன் யாரும் இருக்க முடியுமா என்ன?

“இல்லண்ணே… நா அதுக்கு தயங்கல… எங்க போறது… என்ன பண்றதுன்னு ஒரே பயமா இருக்குது…பெத்த அப்பாவே இப்படி இருக்கும் போது… இந்த உலகத்தைப் பார்த்து… ரொம்பப் பயமா இருக்கேண்ணே!! ஏற்கனவே நாறினவ தானேன்னு… எல்லாரும் நாறடிக்கத் தானே பார்ப்பாங்க.. வேணாம்ண்ணே… அப்படியொரு பொழப்பு எனக்கு வேணாம்… நா… இப்படியே செத்துப் போய்டுறேண்ணே… விட்டுடுங்க…” என்று கதறினாள், அவள்.

அந்த நிமிடம், அன்பு தனக்குள் ஓர் முடிவெடுத்தான்!!

இது நாள் வரை… ஒட்டு… உறவு…சொந்தம்… பந்தம் என்று வாழ்ந்திராதவன், அந்த சந்தோஷங்கள் எனக்கு வேண்டவே வேண்டாம் என்று குடும்ப அமைப்பின் மீது வெறுப்பை வளர்த்துக் கொண்டிருதவன், அன்று தனக்கென்று ஒரு குடும்பத்தை உருவாக்கினான்.

“இப்ப சொல்றியே… அண்ணா… அண்ணான்னு…அதை உணர்ந்து தான் சொல்றியா?”

“கண்டிப்பா…” என்றாள் அமலா, விக்கலின் ஊடே வெளிப்பட்ட உறுதியுடன்.

“இதோ… இங்க இருக்க உங்கம்மா… ஹ்ம்ம்… இல்ல நம்ம அம்மா மேல சத்தியமா சொல்றேன்… உனக்கு ஒரு கஷ்டம் கூட வராம… பத்திரமா பாத்துப்பேன்! இந்த அண்ணனோட வந்திடு!! ப்ளீஸ் அமலா! என்னால…

உன்னை இங்க விட்டுட்டு… ஒரு அடி கூட நகர முடியாது!” என்றான் அவளது கையிலிருந்த புகைப்படத்தின் மீது ஒரு கையும், அவளது கைகளில் மறு கையுமாய்.

அதன் பின்னர், அமலா தயங்கவில்லை! தாயின் படத்தை மட்டும் எடுத்துக் கொண்டு, அவனுடன் கிளம்பிவிட்டாள்!

ஆனால், அவளது துன்பங்கள் அத்துடன் முடியவில்லை!!

அவர்கள் அந்த ஊரை விட்டு வெளியே வரவும், அமலாவை “காசு” கொடுத்து “வாங்கியவர்கள்” வரவும் சரியாக இருக்க,

“எலேய்… மாடனோட பொண்ணுடேய்… பிடுங்கடா…” என்று ஒருவன் கூவ,

“ஏய்… நில்லுடி… ஆயிர ரூபா கொடுத்திருக்கோம்… அதுக்குள்ளே பொருளை எடுக்காம விட மாட்டோம்… வாடி…”

“ச்சே… இந்த கடலு பொங்கிக் கெடுத்துப் புடுச்சுடா… இல்லைன்னா… இவள எங்கயாவது வித்திட்டு ஒரு இருபது… முப்பது பாத்திருக்கலாம்…” – ச்சை… காது கொடுத்துக் கேட்க முடியாத வார்த்தைகள்!!

அமலாவின் மேனி, ஒரு முறை தூக்கிப் போட்டது!

“அண்ணே… பயமா இருக்குண்ணே… அண்ணே… அண்ணே… ஐயோ… வரானுங்களே!” என்று நடுங்கிப் போனாள், அவள்!!

அன்புவுக்குமே பயம் தான்! இது ஒன்றும் சினிமா அல்லவே… நான்கைந்து பேராய் வருபவர்களை ஓராளாய் சமாளிப்பது என்பது முடியாத காரியம்!!

அய்யோ… தப்ப வேண்டும்… தப்ப வேண்டும்… என்ற தவிப்பே பிரதானமாய் இருக்க, அதை விடவும் “அமலாவை காப்பாற்றி விட வேண்டும்…” என்ற வெறி, அவனை வேகமாய் சிந்திக்க வைத்தது.

தன் பலம் முழுதையும் திரட்டி, அவளை இழுத்துக் கொண்டு ஓடியவன், அவர்களில் ஒருவன், அமலாவின் தோள் பற்றி இழுக்கவும், தன்னிலை மறந்தான்.

வேகமாய், அவளைத் தன் இடப் பக்கத்திலிருந்து வலப்பக்கம் இழுத்து, “அமலா... போய்... நாம வந்த வண்டில ஏறு... நா வந்துடுறேன்...” என்றபடியே, அவளைப் பற்றியவனின் “முக்கிய” இடத்தில் ஓங்கி ஓர் உதை விட்டான்.

சுருண்டு விழுந்தவனின் ஓலம், பின்னே வந்த மற்றவனை உசுப்பியது போலும், வேக எட்டு வைத்து வந்தவனின் கண்களில், கீழே இருந்த மண்ணைத் தூவி விட்டு, ஒரே பாய்ச்சலில் தாங்கள் வந்த வண்டியில் ஏறினான் அன்பு!

அப்படியும், அவர்கள் விடவில்லை! சுனாமி முகாம் வரை, துரத்திக் கொண்டு வந்தனர்!

அப்போது, தன் பலத்தைக் காட்டவில்லை அன்பு! தன் புத்திசாலித் தனத்தைக் காட்டி, அவர்களை போலீஸ் காவலில் வைத்தான்!

அதன் பின்னர், அமலாவை அழைத்துக் கொண்டு சென்னை வந்தான்!

அமலா அவனது வாழ்வில் வந்த பின்னர் தான், அவனது வாழ்விற்கே அர்த்தம் வந்தது போலிருந்தது அன்புவுக்கு!

“எனக்கு... ஒண்ணுமே பிடிக்கலண்ணா... நா செத்துப் போறேன்...” என்று வாழ்வின் மீது பற்றற்று இருந்தவளுக்கு,

“மணிமேகலை” என்று புது பெயரிட்டு,

“யாரோ... அஞ்சு பொறுக்கிங்க உன்னோட வாழ்க்கையைத் தீர்மானிக்கிறதா? அசிங்கமா இல்ல?” என்று அவளுக்கு வெறியூட்டி,

“இது உன்னோட வாழ்க்கை... மணிம்மா! இதை... நீ தான் வாழணும்! உன் அப்பாவோ... வேற யாரோ யூஸ் பண்ணிக்கிறதுக்கும்... வேணாம்ன்னா தூக்கிப் போடறதுக்கும் நீ ஒண்ணும் டிஸ்யூ பேப்பர் இல்லை! உன்னோட வாழ்க்கை... எப்படி இருக்கணும்ன்னு நீ தான் தீர்மானிக்கணும்!” என்று அவளுக்கு அறிவுரை கூறி,

“இங்கிலீஷ்ல ஒரு பொன்மொழி சொல்வாங்க... பெட்டெர் லேட் தான் நெவெர்ன்னு... இப்பவும் ஒண்ணும் கெட்டுப்போகல... ப்ரைவேட்டா

டென்த் எழுது... ப்ளஸ்டூ எழுது... நீ என்ன படிக்கணும்ன்னு ஆசைப்படுறியோ...அதை நான் படிக்க வைக்கிறேன்..." என்று அவளுக்கு படிப்பைப் புகட்டி,

அவள் துவண்டிருக்கும் போது, தலை கோதி,

அவள் பசித்திருக்கும் போது, உணவூட்டி,

அவள் விழித்திருக்கும் போது, தானும் விழித்திருந்து,

அவள் பயந்திருக்கும் போது, "அண்ணே... இருக்கேன்டா..." என்று தைரியம் கொடுத்து,

அவள் பாடம் கற்கையில், கூட அமர்ந்து...சொல்லிக் கொடுத்து,

அவளைப் புது மனுஷி ஆக்கியிருந்தான்!!

அவள் புது மனுஷி ஆனாள் என்பதை விடவும், "அண்ணன்" என்ற ஸ்தானத்தை
அணுஅணுவாய் அனுபவித்து, தன்னுளிருக்கும் பாசத்தை அவளிடம் கொட்டி, தானே ஓர் புது மனிதனானான் அன்பு!

நெடுநாளாய் பொழியப் பட்ட பாசம்... தற்போது கொட்ட இடமில்லாமல், தனக்குள்ளேயே தேங்கி நின்று, ஓர் இனம்புரியா வெறுமையை உண்டு பண்ணுவது போலிருந்தது அன்புவிற்கு!

ராஜாவிடம், மணி மனதால் நெருங்க வேண்டுமெனில், அவனது அன்பு அவளுக்குப் புரிய வேண்டும்! அவனது அன்பு புரிய வேண்டுமெனில், தான் சில நாட்களுக்கு ஒதுங்கி இருக்க வேண்டும்! ஒதுங்கி இருந்து... ராஜாவின் அரவணைப்பு கொடுக்கும் கதகதப்பை, மணியை உணரவிடவேண்டும்! – இதெல்லாம் புரிந்து தான் அன்பு விலகினான்! ஆனால், முடியத் தான் இல்லை!

"கடைசி வரைக்கும் அவளை... உன்னோட தங்கச்சியாவே வச்சுக்கப் போறியா என்ன? அவளுக்குன்னு ஒரு வாழ்க்கை வேணாமா? உன்னோட சுயநலத்துக்காக... அவளோட வாழ்க்கையைக் கெடுக்காத!" என மூளை

எச்சரிக்கை செய்யும் போது, சமன் படும் மனம், சற்று நேரத்திலேயே ஒருவிதத் தன்மைக்குள் செல்லத் தொடங்கியது!

அன்றும் அப்படித் தான் – தனது கல்லூரியில் டூர் கூட்டிச் செல்வதாய் கூறியிருந்தாள் மணிமேகலை.

முந்தைய தினம் இரவு, விஷயத்தைக் கூறிவிட்டு, “மூவாயிரம் ரூபாய் ஆகும்ன்னு சொல்றாங்கண்ணா. உங்களால முடிஞ்சா… கொடுங்க. இல்லன்னா வேணாம்… நா போகலை…ஃபிரண்ட்ஸ்கிட்ட ஏதாவது சொல்லி சமாளிச்சுக்கிறேன்” என்ற மணிமேகலை,

அன்பு எதுவும் சொல்லும் முன்னர், “போன வாட்டி…டூர் விஷயத்தை உங்ககிட்ட சொல்லலைன்னு நீ கோவிச்சுக்கிட்டீங்கன்னு தான் இப்போ சொல்றேன்… இல்லன்னா சொல்லியிருக்கவே மாட்டேன்!” என்றாள் இடைச் சொருகலாய்.

சட்டென சிரித்துவிட்டான், அன்பு.

அவளது கன்னம் தட்டி, “நா உன்னோட அண்ணன்… குட்டி! எனக்கு இது வேணும்ண்ணா… அதை வாங்கிக் கொடுண்ணா-ன்னு உரிமையோட கேளுன்னு எத்தனை வாட்டி சொல்லியிருக்கேன்…ஆனா…நீ தான் என்னை வேற ஆளா ஒதுக்கி வைக்கிறே! அப்படித் தானே!?” என்றவனின் குரலில் சிரிப்புடன் சேர்த்து, வருத்தமும் குடி கொள்ள,

“ச்சே… இல்லண்ணா… நா… வந்து…” – என்ன சொல்வதென்று புரியாமல், இழுத்தாள் மணிமேகலை.

“சரி…விடு பரவாயில்லை! நா நாளைக்குப் பணம் தரேன்… காலேஜ்ல கட்டிடு” என்றவன், அவள் முடி கோதிவிட்டு விலகினான்.

அடுத்த நாள், பணம் எடுத்து வந்தவன், மணியை அழைத்தான்.

“மணிம்மா… மணி…” என்றபடியே உள்ளே வந்தவன்,

“இந்தாடா… நீ கேட்ட மூவாயிரம் ரூபா… டூர் கிளம்பும் போது, மத்த செலவுக்கான பணம் தரேன்! சரியா?” என்றான், கையிலிருந்த பணத்தை எண்ணியபடியே.

மணியிடமிருந்து எந்த பதிலும் வராமல் போகவே, பணத்தை வாங்கத் தான் தயங்குகிறாள் என்ற எண்ணத்தில், “வாங்கிக்கோடா… அண்ணன்கிட்ட என்ன தயக்கம்…” என்றபடி, மணியின் கையைப் பிடித்து, பணத்தை அதில் திணிக்க முயன்றான்.

ஆனால், அவளோ… “அண்ணா… ” என்றாள் தயக்கமாய்.

அப்போதும், “மூவாயிரம் ரூபா… ஒண்ணும் அண்ணனுக்குப் பெருசில்லைடா… வாங்கிக்கோ… ஹ்ம்ம்…” என்றான் வற்புறுத்தலாய்.

“இல்லண்ணா… அது… வந்து… ராஜ்… அது வந்து… டூர்க்கான பணத்தை ராஜ் கட்டிட்டாங்க…” என்றாள் மணிமேகலை, மிகவும் உள்ளே சென்ற குரலுடன்.

அன்புவின் முகம் செத்துவிட்டது!

“ஹோ!!!!!” – இந்த ஒற்றைச் சொல்லைத் தவிர, அன்புவிடமிருந்து பதிலேதுமில்லை.

மணியின் கையில் திணித்த பணத்தை மெல்ல உருவிக் கொண்டு, அறைக்குள் நுழையத் திரும்பினான் அவன்.

அண்ணனின் முகத்தில் தென்பட்ட அதிர்ச்சியும், அதைத் தொடர்ந்த வருத்தமும், மணியைக் குத்தின.

“அண்ணா… சாரிண்ணா… நா வேணாம்ன்னு தான் சொன்னேன்… ஆனா… அவங்க தான்… யாரு கட்டினா என்ன… அண்ணன் கட்டினா என்ன… கட்டிக்கப் போற நான் கட்டினா என்னன்னு… ” – பேசிக் கொண்டே போனவளின் பேச்சு தடைப்பட்டது.

ஆனால், மணியின் தடுமாற்றத்திற்கு மாறாய் அன்புவின் முகம் பிரகாசமானது.

“ஹே… அப்போ… ராஜா சொல்லிட்டானா? நீ ஒத்துக்கிட்டியா?” என்று குதூகலித்தான், அவன் உண்மையான சந்தோஷத்துடன்.

“அது… அது வந்து… அன்னைக்கே சொல்லிட்டாருண்ணா…”

“என்னன்னு?”

“அது… அவரு என்னை விரும்புறாராம்… என் மேல பரிதாபப்பட்டு இந்தக் காதல் வரலையாம்… ஆனா… நான் உடனே பதில் சொல்ல வேணாமாம்… ஜஸ்ட் எனக்கு ஒரு இன்ஃபர்மேஷன் தான் கொடுத்தாராம்… அது கூட ஏன்னா, அவரைப் பார்க்கும் போது எனக்கு இந்த விஷயம் நியாபகம் வந்துட்டே இருந்தா, என்னோட மனசு சீக்கிரம் மாற வாய்ப்பிருக்காம்…” –

“கலக்குறானே!!!” – அன்பு வாய் விட்டே வியந்தான்.

மணியிடம் தன் காதலை ராஜா எப்படி சொல்லுவான் என்று அன்புவிற்கு மிகுந்த எதிர்ப்பார்ப்பு இருந்தது! ஆனால், காதல் சொல்லும் அத்தியாயத்தை இவ்வளவு சுலபமாய் முடித்துவிட்டானே!

“ச்சு… போங்கண்ணா… உங்களுக்கு இந்த விஷயம் ஏற்கனவே தெரியுமா?”

“ம்ம்… தெரியும்டா… உனக்கு அவன் ஒரு நல்ல ஹஸ்பண்டடா இருப்பான்னு எனக்குத் தோணுச்சு…”

“அப்ப… ஏன்ண்ணா சொல்லலை?”

“அவனே சொல்றேன்னு சொல்லிட்டான்டா… எனக்கு எந்த ரெகமன்டேஷனும் வேணாம்ன்னு சொல்லிட்டாரு சார்…”

“எனக்கு எப்பவுமே தோணும்… நீங்க எந்தவொரு விஷயத்தையும் இழுத்து… தயங்கி… யோசிச்சுன்னு வளவள… கொழகொழன்னு இழுத்தடிக்க மாட்டீங்க! அதே மாதிரி இவரும்… என்னோட பழைய வாழ்க்கையை கேட்ட அன்னைக்கே… காதலை சொல்லிட்டார்!”

“உனக்கு கோபம் வரலையா குட்டி? நீ… ரொம்ப வயலன்ட்டா ரியாக்ட் பண்ணுவேன்னு நான் எதிர்ப்பார்த்தேன்… கொஞ்சம் பயந்தேன்னு கூட சொல்லலாம்…”

“இல்லன்னா… எனக்கு கோபம் வரல… ரொம்ப ஆச்சரியமா இருந்துச்சு…”

அன்பு சிரிப்புடன் பார்த்திருக்க,

“என்னோட ஃபிரண்ட்ஸ் எல்லாம்… லவ்… பாய் ஃபிரண்ட்… கல்யாணம்… குழந்தைங்கன்னு பேசும் போது, எனக்கு அப்படியொரு வாழ்க்கையே கிடையாதுன்னு நினைச்சேன்… ஏன் தெரியுமா?” – கேட்ட மணியை விடவும் கேட்டிருந்த அன்புவின் முகத்தில் ஏகப்பட்ட வருத்தக் கோடுகள்.

“உங்களை மாதிரி… என்னை புரிஞ்சுக்கிட்டு… நான் பட்ட கஷ்டத்தை ஒதுக்கி வச்சுட்டு, என்னையும் ஒரு மனுஷியா பார்க்கிற ஒருத்தர் தான்… எனக்கு சரியா இருப்பார் அப்படிங்கிறது என்னோட எண்ணம்!”

“ஹ்ம்ம்…”

“அதோட, எப்பவுமே… பொண்ணுகளுக்கு அப்பா தான் ஹீரோ… ஆனா… எனக்கு…” என அவள் இழுக்க,

“மணிம்மா… அதையெல்லாம் மறந்திடணும்டா…”

“இல்லண்ணா… மறந்துட்டேன்! எனக்கு… யார் தெரியுமா ஹீரோ? நீங்க தான்ண்ணா ஹீரோ!” – என்றவளின் முகத்தில் அப்படியொரு பிரகாசம்!

அன்பு, அன்பு வழிய பார்த்துக் கொண்டிருக்க,

“எனக்கு… என்னோட அண்ணா மாதிரி தான் ஹஸ்பண்ட் வரணும்… அப்போ தான் வாழ்க்கை புரிதலோட போகும்ன்னு நினைச்சேன்…” என்றவள்,

“ராஜ்… உங்களை மாதிரியே இருக்கார்ண்ணா!!!” என்றாள், மெல்ல எட்டிப் பார்த்த வெட்கத்துடன்.

அன்புவிற்கு மனம் நிறைந்து போனது!

மெல்ல, அவன் தலை கோதியவனின் விரல்கள் நடுங்குவது, வருடிய அவனுக்கும் புரிந்தது, வருடப்பட்ட மணிக்கும் புரிந்தது!

“அண்ணா…” என்ற மெல்லிய அழைப்புடன், அவன் கை பற்றியவள், அவன் தோள் சாய்ந்து கொண்டாள்.

“என் மேல கோபமா அண்ணா?” என்றாள் மெல்ல.

“எதுக்குடா கோபம்? சந்தோசம் தான்டா… ரொம்ப ரொம்ப சந்தோசம்…”

“ம்ம்ம்…”

“மணிம்மா…”

“அண்ணா…”

“….”

“அண்ணா…”

“இல்லடா! சந்தோஷத்தில… எனக்கு என்ன பேசுறதுன்னே தெரியல!”

“ம்ம்… தேங்க்ஸ்ண்ணா!”

அன்பு பேசாமலே இருக்க, “ராஜ் கொடுத்த பணத்தை அவர்கிட்டத் திருப்பிக் கொடுத்திடுறேன்…” என்றாள் மெல்ல.

“ச்சே… வேணாம்டா… அவன் கொடுத்தா என்ன? நான் கொடுத்தா என்ன? இதை அவன் கொடுத்தா… அடுத்த ஏதாவது நான் செஞ்சுட்டுப் போறேன்…” என்ற அன்புவும், தன் சொற்கள் நிறைவேறும் என்றெண்ணியே கூறினான்.

ஆனால்!!

“மணி எனது உரிமை!!” என்பதை ராஜா, ஓரோர் செயலிலும் நிலைநாட்ட, அன்பு தடுமாறிப் போனான்.

அவன் மேல் பொறாமை கூட வந்து விடுமோ என்ற அச்சம் மேலோங்கியது அன்புவிற்கு!

அந்த பயம் கொடுத்த விளைவோ என்னவோ, “இந்த சண்டே…எல்லாருமா படத்துக்குப் போலாமாடா?” என்று கனியன் கேட்டதும்,

“இல்லடா… நா வரலை… ஸ்க்ரைப் (பார்வையோற்றுக்கான பரீட்சையை, அவர்கள் சொல்ல சொல்ல, இவர்கள் எழுதுவது) பண்ணப் போறேன்… நீங்க போங்க!” என்று மறுக்க வைத்தது.

“எப்பவும் சனிக்கிழமை மட்டும் தானேடா ஸ்க்ரைப்! இந்த வாரம்… என்ன புதுசா சண்டையும் போறே??” என்று கொக்கி போட்டான், சுபாஷ்.

“இவன் ஒருத்தன்!?!” என்று மனதிற்குள் வைதவன்,

“இல்லடா… இது ஸ்பெஷல் ரெகுவெஸ்ட்…” என்றதோடு நகர்ந்துவிட்டான்.

“டேய்… கனி! எப்பவும்… சண்டே நமக்கான நாள்… அதில சர்வீஸ்… ஸ்க்ரைப்… அது இதுன்னு போகக் கூடாது! ஜஸ்ட் அன்னைக்கு… நமக்கே நமக்குன்னு என்ஜாய் பண்ணனும்ன்னு இவன் தானேடா சொல்லுவான்!? இப்ப என்னடா?” என்றான் சுபாஷ், கனியனிடம்.

“டேய்… சொன்னவன் அவன்… கேட்டவன் நீ! அவன்ட்ட போய்… கேளுடா! என்னைப் போட்டு இம்சைப்பண்ணிக்கிட்டு!” என்று நகர்ந்த கனியனுக்கும், அன்புவின் நடவடிக்கை பிடிக்கவில்லை.

“குடும்பம் இல்லாத நம்மை… நாமளே நேசிக்கணும்டா… அப்ப தான் வாழ்க்கை சலிப்புத் தட்டாம இருக்கும்ன்னு வசனம் பேசிட்டு… இப்படி செய்றானே?” என்று எரிச்சலாக வந்தது.

ஆனால், என்ன கேட்டாலும், ஏன் வரவில்லை என்ற உண்மையான காரணத்தை அவனிடமிருந்து வாங்க முடியாது என்று தெரிந்தமையால், பேசாதிருந்தான் அவன்.

வெள்ளிக்கிழமை – மாலை நான்கு மணி
“டேய் ஏட்டன்! சன்டே அன்னைக்கு… எங்க வீட்டில ஒரு ஃபங்ஷன்… கண்டிப்பா வந்திடு!” என்றாள் உதயா, அன்புவின் தோள் தட்டி.

“என்ன ஃபங்ஷன்?” என்று கேட்காமலே, “நா வரல!” என்றான் அன்பு பட்டென.

“வேணாம்! என்னைய பத்திரக்காளி ஆக்காத, சொல்லிட்டேன்!” என அவள் கூறும் போதே,

“திரும்பவும் சண்டையா? என்ன உதயா?” என வந்தான் இளங்கோ.

“அதைவிடுடா கம்! சன்டே அன்னைக்கு… எங்க வீட்டில ஒரு ஃபங்ஷன்… கண்டிப்பா வந்திடு சரியா?” என்றாள், அன்புவின் புறம் கண்ணை வைத்துக் கொண்டே.

“ஹோ! சரி! என்ன விசேஷம்?” என அவன் கேட்கவும்,

அன்புவின் முகத்தைத் தன் புறம் திருப்பிய உதயா, “இதோ பார்த்தியா… வீட்டுக்கு வான்னு கூப்பிட்டதும் சரின்னு சொல்லி… என்ன விசேஷம்ன்னு கேட்கிறான்! ஆனா… நீ?” என்றாள் கோபமாய்.

“எனக்கு சன்டே வேற வேலையிருக்கு…”

“என்ன வேலை? சாயங்காலம்… ஆறு மணிக்குத் தான் பார்ட்டி! வா!”

“என்ன பார்ட்டி உதய்?” என்று இளங்கோ இடிப்புக,

“எங்கண்ணா பையனோட ஃபிரஸ்ட் பர்த்டேடா…”

“ஹோ சூப்பர்!”

“நீ…வைஃப் குழந்தை எல்லாரையும் கூப்பிட்டு வந்துடுடா…” என இளங்கோவிடம் விடை பெற்றவள்,

“ஏன்டா அன்பு… இப்படிப் பண்றே?” என்றான் ஆயாசமாய்.

“இல்ல உதயா…எனக்கு நிஜமாவே வேலை இருக்கு…”

“என்ன வேலை?”

“ஸ்க்ரைப் பண்ணப் போறேன்…”

“காலையில தானே போறே? சாயந்திரம் வா! ப்ளீஸ்!”

“இல்ல உதயா… நா வரலை…”

“ப்ளீஸ் அன்பு! நான் லவ் சொன்னதை மனசில வச்சுட்டு, இதை அவாய்ட் பண்ணாத மேன்! ஜஸ்ட் ஃபார் ஃபிரண்ட்ஷிப்!!”

“இல்ல… வேணாம்…”

“என்னை கொலகாரி ஆக்காத, அன்பு! அவ்வளவு தான் சொல்லிட்டேன்!”

“….”

“நீ மட்டும் வரலை… உனக்கும் எனக்கும் கல்யாணம்ன்னு பார்க்கிறவங்ககிட்ட எல்லாம் சொல்லிடுவேன்…” என்றாள் மிரட்டலாய்.

சொல்லப்போனால், இந்த மிரட்டலுக்கும்… உதயாவின் வாய்க்கும் பயந்து தான், அன்பு அந்த வார இறுதியில் உதயா வீட்டிற்குச் சென்றதே!!

உள்ளே நுழைந்தவனை, உதயாவின் குடும்பமே வரவேற்றது!

“அன்பு… வாங்க வாங்க! உங்களைப் பத்தி… உதயா நிறையச் சொல்லியிருக்கா!”

“நீங்க தான் அன்புவா? ரொம்ப ஸ்மார்ட் சார்… நீங்க!”

“நீங்க… பயங்கர பிரில்லியண்ட்டாமே! உதயா… எப்பவும் உங்க புராணம் தான்!” என்று மாறி மாறி ஒலித்த குரல்களின் ஊடே, ஒளிச் சித்திரமாய் நின்றிருந்தாள் உதயா.

“உதயா… போ… போய்… மா… ம்ம்… “ என்று ஆரம்பித்த அவளது தந்தையை,

“பாவா!” என்று ஒங்கி அதட்டுப் போட்டார், உதயாவின் தாய். அனைவரது கண்களும், அவர் மீது பாய்ந்து செல்ல, அன்புவும் அவரைத் தன் கூர் பார்வையால் கூறு போட்டான்.

உடனே சுதாரித்த அந்தப் பெரியவர், “அன்புவுக்கு… குடிக்க ஏதாவது கொடும்மா” என்றார்.

அவர் என்ன சமாளித்தப் போதும், அவர் சொல்ல வந்ததும்… அவர்கள் தடுத்ததும் அன்புவிற்குப் புரிந்தது!

புரியப் புரிய, கோபமும் தலைக்கேறியது!

“என்னை.. என்னன்னு நினைச்சாங்க? யாருமில்லாத அநாதை தானே… இவங்க பொண்ணு கண்ணை அசைச்சதும் அவ காலில விழுந்து குடும்பம் நடத்துவேன்னு நினைச்சாங்களா? ச்சே!!” என்று உள்ளம் கொதித்தது.

ஆனால், அவர்கள் வெளிப்படையாக சொல்லாதபோது, தேவையில்லாமல் கோபத்தை வெளிக்காட்டி… வார்த்தைகளைக் கொட்டி, “நாங்க அப்படி நினைக்கவே இல்லையே? நீங்க… எப்படி எங்களைத் தப்பா நினைக்கலாம்?” என்று சொல்லிவிட்டால்!? வாயை மூடிக் கொண்டிருந்தான், அன்பு!

அதன் பின்னர், அன்புவை தனியே விடவில்லை, உதயாவின் குடும்பம்!

சுற்றி வளைத்து, உதயாவின் குறும்புகள்… ரசனை… விருப்பம்… அவள் படிப்பு… என்று அவளைப் பற்றியே பேசத் துவங்கினர்.

ஒரு கட்டத்தில், “டேய்… ஏன்டா? ஏன்டா… கொல்றீங்க? விடுங்கடா! காதில ரத்தம் வந்திடப் போகுது!” என்று எண்ணும் அளவிற்கு, அவளைப் படுத்தி வைத்தனர்.

இதனடுவே, உதயாவின் அண்ணன் பையன் தன் பிறந்தநாள் கேக்கை இனிதே வெட்டி முடித்தான்!

எல்லாம் முடிந்து கிளம்புகையில், பெற்றோர் மற்றும் உடன் பிறந்தோருடன் உதயா அவனை வழியனுப்ப வர,

“நா… உதயாகிட்ட கொஞ்சம் தனியா பேசணும்!” என்றான் அன்பு, முகத்தில் எதையும் காட்டாமல்.

அனைவரது முகமும், பஞ்சு மிட்டாயைப் பார்த்த பச்சைப்பிள்ளையென மலர்ந்து போனது!

“ஹ்ம்ம்… பேசுங்க… பேசுங்க…” என்றவர்கள்,

“போடா… உதிக்குட்டி! பேசிட்டு வா!” என்று அனுப்பி வைத்தார், உதயாவின் அண்ணன்.

“பெரிய கார்கில் போருக்குப் போறா… கையைக் கீறி, ரத்தத்தில பொட்டு வச்சு அனுப்புறது தானே?” என்று கிண்டலாய் எண்ணிய அன்புவிற்கு, அடக்கிய சிரிப்பில் உதடு துடித்தது!

அதைக் கவனித்த உதயாவின் முகத்திலோ, தேர்தலை வென்ற வேட்பாளாரின் பிரகாசம்!

அவனை அழைத்துக் கொண்டு, வீட்டு முகப்பிலிருக்கும் அறைக்குள் சென்றவள், “சொல்லு ஏட்டன்…ஹ்ம்ம்…இல்ல… லவ்…ம்ம்…” என்றாள் மென்குரலில்.

அதற்குப் பதிலாய், உதயா என்ன எதிர்ப்பார்த்தாளோ!?

ஆனால், “கால் மீ… அன்பு, உதயா!!!” என்ற அதட்டலில், அதிர்ந்தே போனாள் அவள்!

குரல் உயரவில்லை! கீரிச்சிடவில்லை! கன்னம் சிவக்கவில்லை! கை முஷ்டி இறுகவில்லை! கண்கள் கோபத்தில் தெறித்துவிழவில்லை! காது விடைக்கவில்லை!

அடக்கப்பட்ட குரலில், வேண்டப்பட்ட ஆத்திரம் முழுதம் விரவியிருக்க, உதயாவின் உதிரம் வரை நடுங்க வைத்தான், அன்பு!!

அவளது வாய் தானாகவே, “அன்பு!!!” என்றது.

“இதோ பாரு உதயா… நீ என்ன நினைச்சு என்னை இந்த பார்ட்டிக்குக் கூப்பிட்டேன்னு தெரியல… உங்க ஃபாமிலி என்னைப் பத்தி என்ன நினைச்சிருக்காங்கன்னு தெரியல…”

“பட்! இனிமேல்… நீங்க என்னைப் பத்தி நினைக்கிறது… அது என்ன மாதிரியான நினைப்பா இருந்தாலும் சரி… எனக்குப் பிடிக்கலை! வேணாம்!” என்றான் தீர்மானமாய்.

“அன்பு!!” என்று உதயா ஏதோ சொல்ல வரவும்,,

“வெயிட்! நான் சொல்லி முடிச்சிடுறேன்! ஒருவேளை… உங்க வீட்டு ஆளுங்களைப் பார்த்தோ… அவங்க உன் மேல காட்டுற அன்பைப் பார்த்தோ… இல்ல என் மேல வச்சிருக்க பாசத்தைப் பாத்தோ… நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்குவேன்னு…”

பேசிக்கொண்டே சென்றவன், உதயாவின் கண்கள் அகலப்பட்டு, “கண்டு பிடித்து விட்டானே?” என்ற பாவத்தைத் தாங்கி நிற்கவும்,

“அப்படித் தான் போல… ஹ்ம்ம்…” என்று ஒரு முறை, தலையை உலுக்கிக் கொண்டவன்,

“நான் வாழ்க்கை மேல வச்சிருக்க பார்வை வேற…உதயா! மோர் தேன் தட்… அன்புங்கிற விஷயத்தில மேல நான் வச்சிருக்க பார்வை சுத்தமா வேற!” என்று கொக்கி போட்டவன்,

“என்னோட வைஃப்… மேல நா ஏகப்பட்ட அன்பைப் பொழிவேன். என்னோட அன்புக்குப் பாத்திரமா அவ மட்டும் தான் இருப்பா… என்னோட வாழ்க்க முழுசுக்கும்!” – என்றவனின் குரலில் ஏகப்பட்ட உறுதி!

உதயா பார்த்துக் கொண்டே இருக்க, “அதே சமயம்… என்னோட வைஃப்க்கான அன்பை நான் மட்டும் தான் பொழிவேன்! யார்கிட்டயும் அந்த அன்பு… பங்குக்குப் போறதை என்னால ஏத்துக்க முடியாது!” – மிகவும் தெளிவாய் இருந்தது அவன் குரல்.

உதயாவின் நெற்றி சுருங்கியது.

“இது உனக்குப் பைத்தியக்காரத் தனமான எண்ணமா தோணலாம்! தோணும்! ஒரு சராசரி… மனுஷனுக்கு… அதாவது அப்பா-அம்மா-குடும்பம்-பாசம்ன்னு வளந்த உனக்கு… அன்புங்கிறது பகிர்ந்துக்கிற ஒரு விஷயம் இல்லையா? இவன் என்னடா இப்படிப் பேசுறான்னு ஸ்டுபிட்டா தோணலாம். பட்…எனக்கு!?”

“நா குடும்பம்கிற அமைப்பில வளர்ந்ததை விட… தன்னந்தனியா… அன்புக்காக ஏங்கி… ஏங்கி வாழ்ந்தது தான் அதிகம்!”

“எனக்கு… அந்த அன்பு வேணும்! எனக்கு மட்டுமா வேணும்!”

“மனைவிங்கிற உறவு… கடைசி வரைக்கும் வரக்கூடிய ஒரு அழகான உறவு! புரிதல்… காதல்… கூடல்… நேசம்ன்னு பின்னிப் பினைஞ்சு இருக்கப் போற உறவு!”

“அப்படிப்பட்ட உறவை… அது அவங்க அம்மானாலும் சரி…அவங்க அப்பானாலும் சரி… குடும்பம்னாலும் சரி… என்னால பகிர்ந்து வாழ முடியாது!” – தன் மனதின் எண்ணங்களை, ஒன்று விடாமல் எடுத்து வைத்தவன்,

“சோ! எனக்கு… நீ சரியான மேட்ச்ன்னு… தோணலை!”

“உன்னோட இந்த அழகான குடும்பத்தையும்… பாசத்தையும்… புரிஞ்சுக்கிற மாதிரி… அதை அப்ப்ரிஷியேட் பண்ற மாதிரி ஒருத்தன் வருவான்! அவனைக் கல்யாணம் பண்ணிக்கோ!” என்றுவிட்டு, ஒன்றும் பேசாது அவனையே பார்த்திருந்த உதயாவை அறையிலேயே விட்டுவிட்டு, அவர்கள் வீட்டை விட்டு நகர்ந்தான்!

நெடுநாளாய், நெஞ்சை அழுத்திக் கொண்டிருந்த பாரம் அகன்றார் போல், நெஞ்சம் லேசாய் இருந்தது!!

இழுத்து ஓர் நெடு மூச்சை விட்டவன், தன் அன்பின் அட்சயப்பாத்திரத்தைத் தேடி நடையைக் கட்டினான்!!

உதயா வீட்டிற்குச் சென்ற வந்த பின்னர், அன்புவின் மனம் தெளிவடைந்து இருந்தது!

தனக்கு என்ன வேண்டும் என்பதை… தான் என்ன எதிர்ப்பார்க்கிறோம் என்பதை…வாழ்க்கையைப் பற்றிய தனது கண்ணோட்டம் என்ன என்பதை மிகத் தெளிவாகவே உணர்ந்தான் அன்பு!

பிடித்துப் போன பால் சட்டியைக் கோலப்பொடி போட்டு துலக்கியது போன்ற மினிமினிப்பு! கோலப்பொடி போட்டு துலக்கும் போது, அடி பிடித்த பால் போனாலும்… கோலப்பொடி உண்டாக்கும் சிறு சிறு கீறல்கள் பாத்திரத்தில் இருக்கவே செய்யும் அல்லவா?! அதே போல், சின்னச் சின்ன வலிகளும்… விலகல்களும் இருந்தபோதும், அன்பு தனக்குத் தேவையானதை வரையறுத்து விட்டோம் என்று சந்தோஷமாகவே இருந்தான்!

அதன் பின்னர், மணி-ராஜா உறவைக் கூட அவனால் நல்லவிதமாக பார்க்க முடிந்தது!

வாழ்க்கை முழுதும் வரப் போகும் மனைவி மீது, ராஜாவிற்கு உரிமை உணர்வு இருப்பது இயல்பே என்ற எண்ணம் அவனுள் விதைய விதைய,

ஒரு சிறு நெருடலுடனே, மணியும் ராஜாவும் பழகுவதைப் பார்த்திருந்தவன், இப்போது முற்று முழு சந்தோஷத்துடன் அவர்களது நேசத்தை நேசிக்கத் தொடங்கினான்!

முன்னர் எல்லாம், தனக்குக் கொடுக்கப்பட்ட சாக்லேட்டை ராஜா பிடுங்கிக் கொண்டது போல் ராஜா மீது ஆத்திரமாய் வரும்! ஆனால், இப்போது "எனக்கே… எனக்குன்னு ஒரு சாக்லேட் வரும்டா! அப்பப்பாரு… நா யாருன்னு!" என்று மார் தட்டிக் கொண்டு, விசுக்… விசுக் என்று நடக்க வைத்தது!

அதே சமயம், "இது… உன் சாக்லேட்… நீ என்ஜாய் பண்ணு!!" என்று அவனையும் ஊக்குவிக்கவும் முடிந்தது!

ஆனால், அன்புவின் மனம் எவ்வளவுக்கு எவ்வளவு தெளிந்ததோ, உதயாவின் மனம் அவ்வளவுக்கு அவ்வளவு சுக்கு நூறாய் நொறுங்கிப் போனது!

உப்புச் சப்பில்லாத காரணம் சொல்லித் தன்னை அலைக்கழிக்கிறான் என்றே எண்ணினாள் அவள்!

அவளால், அவனது "அன்பிற்கான" விளக்கத்தை ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை! "குடிக்காமலே உளறுகிறான், முட்டாள்!" என்ற கோபம் அவளுக்கு!

பின்னே, அன்புக்கு ஏங்கிய அன்புவின் அன்பு பாராட்டல், அன்பால் நித்தம் நித்தம் குளித்தெழும் உதயாவிற்கு எப்படிப் புரியும்?!!

அந்தக் கோபத்தின் விளைவோ, குடும்பத்தாரின் "என்னம்மா இப்படி ஆகிப் போச்சு…" என்ற பரிதாபமோ, அன்புவிடம் முறுக்கிக் கொண்டு நின்றது உதயா எனும் இளம்கன்று!

யாருக்கு வந்த விருந்தோ என்று அன்புவும், அவளது ஒதுக்கத்தை மதிக்கவே இல்லை!

சொல்லப்போனால், முன்னரை விடவும் குதூகலமாகவே இருந்தான்!

அலுவலகத்தில் "அமைதி" என்ற பேர் எடுக்கும் அளவிற்கு, யாரிடமும் சென்று பேசாதவன், இப்போதெல்லாம் எல்லாருடனும் போய் இரண்டு நிமிஷம் பேசினான்! சிரித்தான்! சந்தேகம் கேட்டான்! சந்தேகம் தீர்த்தான்! உதயாவிற்குப் பத்திக் கொண்டு வந்தது!

இளங்கோவிடம் சென்றவள், “டேய் கம்… அவனை விட்டுற சொல்லு… எனக்கு அப்படியே ஆத்திரமா வருது சொல்லிட்டேன்!” என்றாள் அவனது இருக்கைக்கு அருகே வீற்றிருக்கும் அன்புவைப் பார்த்து.

“யாரு? எதை? எதுக்கு விடணும்? புரியுற மாதிரி பேசு… உதய்!” என்றான் இளங்கோ, தலையை சொரிந்து கொண்டு.

“உனக்குப் புரியத் தேவையில்லை. புரிய வேண்டியவங்களுக்குப் புரிஞ்சா போதும்!” என்று பட்டென பதில் சொன்ன உதயா,

“யார்கிட்ட வேணும்னாலும்… பேசட்டும்! ஆனா… அந்த மாலதி… நோ வே! என்னால சகிச்சுக்கவே முடியல… அவகிட்ட இவன் இன்னொரு வாட்டி போய் பேசினான்!?!! அவ்வளவு தான்! கொன்னுடுவேன்!” என்றாள் காட்டமாய்.

அன்புவோ… கம்ப்யூட்டரே கர்மமாய் உட்கார்ந்திருந்தான்!

“யாரு உதய்? அன்புவா மாலதிகிட்டப் பேசினான்?” – இளங்கோ தன் பங்கிற்கு கேள்வி கேட்கிறேன் பேர்வழி என்று ஏற்றி விட,

உதயா புசுபுசுவென மூச்சு விட்டுக் கொண்டிருக்கவும், உரக்க வாய் விட்டுச் சிரித்த அன்பு, “ஏய் உதய்! உனக்கு என்ன பிரச்சனை? சும்மா… என் மேல கோபமா இருக்க மாதிரி… எதுக்கு நீயே சீன் கிரியேட் பண்ணிக்கிறே? எனக்கு… உன்னோட ப்ரோபோசல் பிடிக்கலை… நா வேணாம்ன்னு மறுத்துட்டேன்! தட்ஸ் இட்! அதுக்கு…ஏன் இப்படி ரியாக்ட் பண்றே? சீரியஸ்லி… ஒரு சீரியல் வில்லி மாதிரி இருக்க தெரியுமா?” என்றவன்,

உதயாவின் தோள் தொட்டு “ஜஸ்ட் ரிலாக்ஸ் உதய்! எதுக்கு இவ்வளவு டென்ஷன்?! நான் மட்டும் தான் இந்த உலகத்தில ஆம்பிளையா? உனக்குன்னு ஒரு பெட்டர் பெர்சன் வருவான்டா… அது வரைக்கும் இப்படி கேனைத்தனமா யோசிக்காம, ஜஸ்ட் பி அஸ் யூ ஆர்!” என்றான் ஓர் நண்பனாய்.

“பெரிய போதிதர்மர்! போடா!!” என்று வெடுக்கென சென்ற உதயா,

“இதுவே ஒரு சீரியலா இருந்துச்சுன்னு வை… இந்நேரம்… உதயா நடக்கும் போது… டக்…டக்…தடக்… டக் அப்படின்னு ஒரு மியூசிக் போட்டு, உதயா

முகத்தில இருந்து, தொடரும்ங்கிற எழுத்து அப்படியே பறந்து வந்து, கீழ ஸ்க்ரீன்ல மின்னியிருக்கும்!" என்ற அன்புவின் கிண்டலில், மீண்டும் அவன் பக்கம் ஓடி வந்தாள்.

"என்னைப் பார்த்தா... உனக்கு நக்கலா இருக்காடா?! வேணாம் ஏட்டன்!!" என்று எச்சரித்தப்படியே, அவனை இரண்டடி அடித்துவிட்டுச் சென்றாள்.

அதன் பின்னர், உதயாவின் கோபமும்... வருத்தமும் ஒரேடியாக மறைந்துவிடவில்லை! அன்புவிடம் முன்பு போல் பேசிய போதும், மனதின் ஓரத்தில் சிறு நெருடல் இருக்கவே செய்தது!

காலம், காலில் ஸ்கேடிங் பாட் மாட்டிக் கொண்டு வேகமாய் நகர,

ஒரு திங்கட்கிழமை மதிய நேரத்தில், அன்புவை அழைத்த கனியன், "மாப்ள, உன்னோட வண்டி வேணும்டா... சாயந்திரம்... வண்டியும் நானும் வந்து உன்னை பிக்-அப் பண்ணிப்போம்! சரியா?" என்றான் கெஞ்சுதலாய்.

"சரிடா ஃப்ரூட்டா! வா!" என்று அவனுக்கு அனுமதி கொடுத்தான் அன்பு.

"வர வர... நீ சரியில்ல சொல்லிட்டேன்! கனியன் பூங்குன்றனார் நினைவா... எனக்கு கனியன்னு பேர் வச்சா... நீ அதை இங்கிலிபீஷ்ல சொல்லி... கொலைபண்றே?! இருடி... மவனே, இரு! உனக்கு இருக்கு!" என்று பல்லைக் கடித்துக் கொண்டு ஃபோனை வைத்த கனியனை நினைத்து , அன்புவிற்கு சிரிப்பு வந்தது!

கனியனிடம் வண்டியைக் கொடுத்து விட்டமையால், அன்றைய தினம், உதயாவுடனும் இளங்கோவுடனும் கிளம்ப முடியவில்லை அன்புவால்.

"கனி வரணும்டா... நீங்க கிளம்புங்க..." என்று அவர்களை அனுப்பியவனுக்கு, அரை மணி நேரம் தாண்டியதும் போர் அடிக்கத் தொடங்கியது.

ஆறு மணிக்கு மேல், ஈ... காக்காய் கூட சீண்டாத அலுவலகத்தில் அவன் எந்த ஈயை ஓட்டுவது?!

சும்மா… அலுவலகத்தின் நீள அகலத்தை காலால் அளந்து கொண்டிருந்தவன், ஒரு நிலைக்கு மேல் பொறுக்க முடியாமல், வெளியே சென்றான்.

வண்டி இல்லாததால், வாகன நிறுத்துமிடத்தை நோக்கி நடக்கத் தொடங்கிய கால்களை வலுக்கட்டாயமாய் திருப்பி, இலக்கின்றி நடக்கத் தொடங்கினான்.
ஏதேதோ எண்ணங்களின் ஊடே நடந்து கொண்டிருந்தவன், ஓரக்கண்ணில் எதுவோ பட, சட்டென நின்றான்!

“ஹே… அந்தப் பூக்காரப் பாட்டி எங்க?” – மனதிற்குள் மின்னல் வெட்ட,

வேகமாய், அந்தப் பாட்டி கடை போட்டிருக்கும் இடத்தை மேய்ந்தது அன்புவின் பார்வை!

காணவில்லை! பாட்டியையும் காணவில்லை! பேத்தியையும் காணவில்லை! அவர்களது கடை – அது தான் ஒரு சின்ன மேசையும், அதன் மீது ஒரு அட்டைப் பெட்டி மூடியும், ஓரமாய் வைக்கப் பட்டு, தார்ப்பாய் போட்டு மூடப்பட்டிருந்தது!

நேற்று பேய்ந்த மழையில், தார்ப்பாய் முழுதும் நீர்த்திவலைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் தேங்கி நிற்க, ஏற்கனவே அதில் ஒட்டியிருந்த மண்ணுடன் சேர்ந்து, சிறு சிறு களிமண் தேக்கங்களாய் காட்சி அளித்தன!

“நாம வேலைக்கு வந்ததில இருந்து… ஒரு நாள் கூட விடாம வந்திடுவாங்களே? இப்ப எங்க? எங்க? எங்க?”

“எவ்வளவு நாளா வரலைன்னு தெரியலையே? இன்னைக்குத் தான் வரலையா? இல்ல… ரொம்ப நாளாவா?”

“அச்சோ… நாம தான் கவனிக்கலையா?”

“அவங்க இல்லாதது ரொம்ப ஆப்வியஸா தெரியுமே? இப்படி கவனிக்காம விட்டோம்?!” – ஏகப்பட்ட கேள்விகளால், மண்டை ஏகத்திற்கும் குடைய ஆரம்பித்தது.

வெறுமனே யோசிப்பதிலேயே காலத்தைக் கடத்தாமல், சட்டென இளங்கோவின் எண்ணிற்கு அழைத்தான் அன்பு.

அவன் அழைப்பை எடுக்கக் காத்திருந்தவன் போல்,

“டேய்…இளங்கோ! இன்னைக்கு பூ வாங்கினியா?” என்றான் வேகமாய்.

“என்னது?”

“ப்ச்! பூ… பூ வாங்கினியா? உன் வைஃப் தலையில வச்சுப்பாங்களே பூ… அது வாங்கினியா?”

“டேய் வேணாம்! பூன்னா எனக்கும் என்னன்னு தெரியும்?ஆனா… ஏன் கேட்கிறே?”
“பதில் சொல்லு! இன்னைக்கு… அந்தப் பாட்டிட்ட பூ வாங்கினியா?”

“எந்த பாட்டிட்ட?” – இளங்கோவிற்கு, பூ விற்கும் பலருள் அந்தப் பாட்டியும் ஒருவர். அலுவலகத்திற்கு அருகே பூ விற்றால் அங்கே வாங்குவான்… இல்லையா… போகும் வழியாவும் ஏகப்பட்ட பூக்கடைகள்… ஏகப்பட்ட பாட்டிகள்… ஏகப்பட்ட பூக்காரிகள்! அப்படியிருக்கையில், அன்புவின் கேள்வி அவனுக்குச் சுத்தமாய் புரியவில்லை!

“வந்தேன்…அடிச்சிடுவேன்!” – அன்புவிற்கு எரிச்சலாய் வந்தது.

“யாரைப் பத்திக் கேட்கிறேன்னு தெளிவா சொல்லுடா! அதை விட்டுட்டு!”

“சரியான… இவன்! நம்ம ஆபீஸ்ல வாசலில இருப்பாங்களே… ஒரு பாட்டி… அவங்ககிட்ட தினம் பூ வாங்குவே இல்ல! அவங்க தான்… இன்னைக்கு அவங்ககிட்ட தான் பூ வாங்கினியா?”

“ஹோ! அவங்களா? இன்னைக்கு ரம்யா (அவனது மனைவி) ஊருக்குக் கிளம்பிப் போய்ட்டா அன்பு! சோ… பூ வாங்கணும்ன்னே தோணலை! அதனால, அவங்களைக் கவனிக்கவும் இல்லை!” என்றான் அவன் அசட்டையாக.

“ச்சை!” என்று வந்தது அன்புவிற்கு.

ஆனால், பொங்கி வரும் எரிச்சலை இளங்கோவின் மீது காட்டி என்ன புண்ணியம்? அவரவருக்கு, அவரவர் வேலை!

“சரிடா” என்று அழைப்பை வைத்தவன், உதயாவை அழைத்தான்.

அவன் பேசுவதற்கு முன்னரே, “ஹே லவ்… ப்ச் சாரி ஏட்டன்… சொல்லு மேன்!” என்றாள் அவள் மிகுந்த சந்தோஷமாய்.

அவளது அழைப்பு மாற்றங்களை எல்லாம் கவனிக்கும் நிலையில் இருக்கவில்லை அன்பு!

“ஹே உதய்! இன்னைக்கு நம்ம ஆபீஸ் வாசலில இருக்க பூக்காரப் பாட்டியைப் பார்த்தே?” என்று நேரடியாகவே விஷயத்திற்கு வந்துவிட்டான். இளங்கோவிடம் பட்ட பாட்டை, மீண்டும் ஒரு முறை பட விரும்பவில்லை அவன்!

“ஹ்ம்ம்…யாரு? ஹோ… அவங்களா? இல்லடா ஏட்டன்! என்ன விஷயம்?” என்றாள் அவள், சோர்ந்த குரலில்.

“இதுக்குத் தான் ஃபோன் பண்ணியா? நா என்னமோன்னு நினைச்சேன்!” என்ற உணர்ச்சி, அவளது குரலில் தொக்கி நிற்க, அதை உணரும் மனநிலை அன்புவிடம் இருக்கவில்லை.

“சரி… நேத்து பார்த்தியா?” என்றான் அன்பு, ஆராயும் தொனியில்.

“ம்ஹூம்! பார்த்த மாதிரி இல்ல… ஹான் தெரியல அன்பு! நா அவ்வளவு கவனிச்சுப் பார்த்ததில்லை!” என்று உண்மையை ஒப்புக் கொண்டாள் உதயா.

ஃபோனை வைப்பதைத் தவிர, அதற்கு மேல் என்ன செய்வது!?

அழைப்பைத் துண்டித்துவிட்டு, தலையைக் கைகளால் தாங்கிக் கொண்டு, அலுவலக வாயில் படியில் அமர்ந்துவிட்டான் அன்பு!

“என்னைக்கு கடைசியா வந்தாங்க? நேத்து? முந்தின நாள்? இல்ல அதுக்கும் முன்னே? இல்ல போன வாரமா? ஐயோ… ஞாபகம் வரமாட்டேங்குதே!” என்று தவித்துக் கொண்டிருந்தவன்,

அங்கே கனியன் வரவும் “டேய்… இங்க ஒரு பாட்டி இருப்பாங்க இல்ல… அவங்களை எப்போ கடைசியா பார்த்தே?” என்றான் மிக தீவிரமாக.

கனியன், அவனை விநோதமாய் பார்க்கவும்,

“என்னடா? தேமேன்னு முழிச்சிட்டு நிக்கிறே? சொல்லு! எப்பப் பார்த்தே?” என்றான் அன்பு, மீண்டும்.

“நீ என்ன லூசா? நானே… ஒரு மாசம் கழிச்சு இன்னைக்குத் தான் உங்க ஆபீஸ் பக்கமே வரேன்… என்னைப் போய் அவங்களைப் பாத்தியா? இவங்களைப் பாத்தியான்னுட்டு! வண்டில ஏறுடா!” என்று அவனை விரட்டினான், பசியில் வாடியிருந்த கனியன்.

“ப்ச்…” என்று வண்டியில் ஏறி அமர்ந்த போதும் சரி, வீடு சென்ற போதும் சரி, அடுத்த நாள் கடற்கரைக்குச் சென்று சுத்தம் செய்த போதும் சரி, அலுவலகம் கிளம்பி வரும் போதும் சரி, அந்தப் பூக்காரப் பாட்டியும்… அவரது பேத்தியுமே அன்புவின் எண்ணங்களையும்… செயலையும் ஆக்கிரமித்து இருந்தனர்.

ஒரு சமயம், “நீ ஏன்டா இவ்வளவு கவலைப் படறே? ஏதாவது வேலையா வெளியூர் போயிருப்பாங்க! இன்னும் ரெண்டு நாளில வந்திடுவாங்க… இவன் என்னமோ சொந்தப் பேரன் மாதிரி பறக்கிறான்!” என்று அவனது மனசாட்சியே கொட்ட, அவர்களைப் பற்றி நினைக்கக் கூடாது… நினைக்கக் கூடாது என்று சொல்லிச் சொல்லியே அவர்களைப் பற்றி நினைத்தான், அன்பு!

அன்றும் அவர்கள் வரவில்லை!

அன்று மட்டுமல்ல, அடுத்து வந்த நான்கு நாட்களும் அவர்கள் வரவில்லை!

ஓரோர் நாளும், ஓரோர் வேளையும் அவர்களைக் கவனித்தான் அன்பு!

காலை வருகையில், அவர்களது கடையிருக்கும் கடையை அலசும் அவனது கண்கள்!

அடுத்து ஒரு மணி நேரத்திலேயே, ஜன்னல் வழியே ஓர் தேடல்!

பின்னர், அரை மணி நேரத்தில் டீ குடிக்க செல்வது போல், அலுவலகத்தைச் சுற்றியிருக்கும் சிறு வியாபாரிகளிடம் ஓர் விசாரிப்பு!

உணவு வேளையில் ஓர் பரிதவிப்பு!


மதியம் முழுதும், மனதின் தவிப்பு!

மாலையில், ஓர் அலசல்! சொல்லப் போனால், இரண்டு நாட்களில், அலுவலக வளாகத்தை விட்டு வரக்கூட அன்புவிற்கு மனசு வரவில்லை!

அதுவும், வெள்ளிக்கிழமை மாலை அவனால் வண்டியை அலுவலகத்தை விட்டு நகர்த்தவே முடியவில்லை! வார இறுதிகளில் அலுவலகம் வைக்காத அரசின் 'மெத்தனத்தை' எண்ணி, எரிச்சல் கூட வந்தது அவனுக்கு!

"ஐயோ… ஏன் வரல!? ஏன் வரல!?" என்று தவித்துப் போனான், அன்பு!

"ஏன் இப்படித் தவிக்கிறோம்!?" என்ற கேள்விக்குப் பதில் தெரியாத போதும், அவன் தவிப்பு மட்டும் அடங்கவே இல்லை!



"அன்பிலார் எல்லாம்!" - என்.சீதாலெட்சுமி

அந்த வார இறுதி எப்படி கழிந்தது என்றே அன்புவிற்குப் புரியவில்லை!

தவிப்பு! தவிப்பு! தவிப்பு! – இதைத் தவிர நெஞ்சை எதுவுமே ஆக்கிரமிக்கவில்லை.

"டேய், என்னாச்சுடா உனக்கு? நாலு தமிழ் படத்தை ஒண்ணா பார்த்தவன் மாதிரி இருக்கே?" என்று கனியன் கேட்கும் அளவிற்கு, அன்புவின் மனமும் முகமும் பரிதவிப்பை ஏந்தி நின்றன.

"அண்ணா… ஏதாவது பிரச்சனையா? என்கிட்டே சொல்லக் கூடாதா?" என்று மணி, தவிக்கவும் தான், அன்பு கொஞ்சம் மட்டுப்பட்டான்.

"அவங்க எங்க போனா உனக்கென்ன? சும்மா… இரேன்டா!" என்று தன்னைத் தானே அடக்கிக் கொண்ட போதும், திங்கட்கிழமை காலை எட்டு மணிக்கெல்லாம் அலுவலகம் கிளம்புவதை அவனால் தவிர்க்க முடியவில்லை.

"எப்பையில இருந்துடா… கவர்மென்ட் ஆபீஸ் எல்லாம் எட்டரை மணிக்குத் தொறக்க ஆரம்பிச்சாங்க!?" என்று சுபாஷ் கேள்வியால் கொக்கிப் போட்ட போதும், யாரையும் நிமிர்ந்து பார்க்காத முகத்துடன், அலுவலகம் நோக்கிப் பறந்தான் அன்பு.

அவனது காத்திருப்பை வீணடிக்காமல், அந்தப் பூக்கடை திறந்திருந்தது!

கடைக்கு முதலாளியாய், அந்தப் பேத்தி பெண் அமர்ந்திருந்தாள்!!

ஆனால், அந்தப் பாட்டி!

குனிந்த தலை நிமிராமல், தன் முன்னிருந்த பூவின் மீதே பார்வையைப் பதித்தபடி அமர்ந்திருந்த அந்தப் பேத்தியை காண்கையில், ஏனோ நெஞ்சைப் பிசைந்தது!

Copyrighted material. Can be read only at www.sitaramwrites.wordpress.com 

"பாட்டி... எங்கன்னு போய்க் கேட்கலாமா? வேணாமா?" என்று மனம் நடத்திய போராட்டத்திற்கான முற்றுப்புள்ளி,

"ஒண்ணும் தேவையில்லை! பாட்டி... எங்கயாவது பக்கத்தில போயிருப்பாங்க... இல்ல பூ வாங்கக் கூடப் போயிருக்கலாம்! உனக்கென்ன? பேசாம இரு!" என்ற மூளையின் கட்டளையிலிருந்து பிறந்தது.

ஆனால், பத்து நிமிடங்களுக்கு மேல், மூளையின் கட்டளைக்கு அடிபணிய -மனதால் முடியவில்லை!

அலுவலகத்திற்குள் சென்று விட்டப்போதும், ஜன்னல் வழியே அந்தப் பூக்கடையையே காவல் காத்துக் கொண்டிருந்த அன்புவிற்கு, பூக்காரப் பாட்டி வராதது பூதாகரமாய் மனதைத் தாக்கியது.

பத்து நிமிடம்... இருபது நிமிடம்... இருபத்தியைந்து... முப்பது... முப்பத்தியொன்று... முப்பத்தியிரண்டு... முப்பத்தியைந்து... ம்ஹூம்! அன்புவால் முடியவில்லை.

விருட்டென, அலுவலகத்தை விட்டு வெளியேறி, நேரே பூக்கடைக்குச் சென்றான்.

ஆனால், வேகம் கொண்டு நடந்த கால்களுக்கு மாறாய், பூக்கடையை நெருங்கியதும் நாக்கு வேலை செய்ய மறுத்தது!

"என்ன கேட்பது? எது கேட்பது?" என்று புரியாத நிலை!!

அவன் தவித்துக் கொண்டிருக்கும் போதே, அவனது அரவம் உணர்ந்தவளாய், "என்ன பூ வேணும்?" என்றாள், அந்தப் பெண் மிக மிக மெல்லிய குரலில்.

சுத்தமாக எதுவுமே விளங்கவில்லை. அவனுக்கு!

கொஞ்சமாய் காத்து மட்டும், "ம்ம்... ஹ ம்ம்ம்... ம்ம்ம்ம்ம்ம்ம்" என்று நாதம் எழுப்பியது போல் மட்டுமே இருந்தது!





குனிந்து அவளைப் பார்த்தால், அவளது பார்வையோ, குவிந்திருந்த பன்னீர் ரோஜா மலர்களின் மீதே குத்தி நின்றது!

ஒருவேளை, அவளுக்கு அந்தப் பூ தான் பிடிக்குமோ என்ற பைத்தியக்காரத் தனமான எண்ணம் எழ, "பன்னீர் ரோஸ் எவ்வளவு?" என்றான் இவன்.

அடுத்தும், "ஒரு ரூபாக்கு ரெண்டு..." என்று வந்த பதிலை, அவனால் இன்னதென்று கூட வரையறுக்க முடியவில்லை.

"என்னது? என்ன சொன்னே?" என அவன் மீண்டும் கேட்க,

அப்போதும், அவள் தலையை நிமிர்த்தவுமில்லை! அவனைப் பார்க்கவுமில்லை!

"ஒரு ரூவாய்க்கு... ரெண்டு..." என்று மெலிதாகவே வெளிப்பட்டது குரல்.

அப்போதும், அன்புவுக்கு எதுவும் விளங்கவில்லை.

"என்னது?" என்றான் மீண்டும், சத்தமாய். குரலில், சிறு எரிச்சல் கலக்கவா வேண்டாமா என்று எல மணி அடித்துக் கொண்டிருந்தது!

"ஒரு ரூவாய்க்கு... ரெண்டு...சார்!" என்றாள் அவள், கொஞ்சமே கொஞ்சம் சத்தமாய்.

இப்போதும் தெளிவாகப் புரியவில்லை, அன்புவிற்கு. ஆனால், தன் அனுமானத்தின் மூலம் "ம்ம்...ஒரு ரூபாக்கு ரெண்டு பூவா?" என்றான் கேள்வியாய்.

ஆம் என ஆடிய அவளது தலை, பூவை நோக்கியே இருந்தது.





"இப்படி வியாபாரம் பாத்தின்னா... ஒரு பூ கூட விக்க முடியாது! உங்க ஆயாவா இருந்தா... இந்நேரம் பத்து பேர்கிட்ட பூ வித்திருக்கும்!" – தன் கோபத்தை மறையாது வெளியிட்டு விட்டான், அன்பு.

அப்போதாவது, அப்பெண்ணின் தலை நிமிர வேண்டுமே?!

ம்ஹூம்! குனிந்த தலை குனிந்தபடி இருக்க, அவளது கண்ணிலிருந்து விழுந்த கண்ணீர் துளிகள், அந்தப் பன்னீர் புஷ்பங்களை, நீரமாக்கின!

அன்புவிற்கு, மனம் சங்கடப்பட்டுப் போனது!

அவளது கண்ணீரின் துளி, பல ஆயிரம் அர்த்தங்களைத் தாங்கி நிற்க, இன்னதென்று வரையறுக்க முடியாது தவித்தவன், "ஆயா எங்க?" என்றான், அதை அறிய முற்பட்டவனாய்.

சொட்டு சொட்டாய் விழுந்து கொண்டிருந்த அவளது கண்ணீர், அருவியென உருமாறி, ஆற்று வெள்ளமாய் பொங்கிப் பெருகியது! அதில், தத்தளிக்கும் படகாய் துவண்டு போனான், அன்பு!

"ஏன் இப்படி ரணப்படுகிறோம்?" என்று அவனால் பகுத்தறிய முடியாவிட்டாலும், அவளது கண்ணீர் கனத்த இரும்பாய், நெஞ்சைக் குடைந்து எடுத்தது!

"என்னாச்சு? ஆயா எங்க?" என அவன் உந்த, கண்ணீரை மட்டுமே விடையாக்கினாள் அப்பெண்.

சில நிமிடம் மௌனமாய் கழிய, அன்பு மீண்டும் உந்தினான்.

ம்ஹூம்! கண்ணீர்! கண்ணீர்! கண்ணீர்! பிறகு... விக்கல்! விம்மல்! அழுகை! அழுகை! தேம்பல்! என்று அழுகையின் வெவ்வேறு வடிவங்கள் அரங்கேறினவே ஒழிய, கொஞ்சமும் அவள் வாய் திறக்கவில்லை.





என்ன செய்வதென்று புரியாமல், அன்பு கையைப் பிசைந்த சமயம், உதயாவின் வண்டி அந்த இடத்தைக் கடந்தது!

மின்னல் வேகத்தில், அவளது ஸ்கூட்டியின் ஹேண்டில் பாரை பிடித்து நிறுத்தியவன், "உதய்... இங்க வா!" என்றான் அவசரம் காட்டி.

அவன் பிடித்து நிறுத்திய விதத்தில், ஆட்டம் கண்ட வண்டியை ஒருவாறு சமாளித்து நிறுத்தியவள், "ஹே... ஹே... லூசாடா நீ? அறிவில்லை... இப்படியா செய்வாங்க?" என்று தன் கோபம் முழுதையும் உதயா காட்டியபோதும்,

"ப்ளீஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்!!! வா!" என்றான் அன்பு, அவளது கோபத்தை புறம் தள்ளி.

அவனது வார்த்தைகளில் தென்பட்ட அழுத்தமும், அவனது முகத்தில் தென்பட்ட பரிதவிப்பும் உதயாவின் உடல் இயக்கத்தை மூட்டிவிட, வண்டியை ஓரமாய் நிறுத்திவிட்டு, அவனுடன் நடந்தாள்.

பற்றியிருந்த அவளது கையை விடாமல், பூக்கடைக்கு அழைத்துச் சென்ற அன்பு, "இந்தப் பொண்ணு... என்கிட்டே வாயைத் திறந்து எதுவும் பேச மாட்டேங்குது! நீ என்ன விஷயம்ன்னு கேட்டுச் சொல்லு!" என்றான், அந்தப் பூக்காரப் பெண்ணைப் பார்த்து.

உதயாவிற்குத் தலையும் தெரியவில்லை! வாலும் விளங்கவில்லை!

"என்னது? என்ன விஷயம்? அந்த விஷயத்தை... ஏன் அந்தப் பொண்ணு உன்கிட்ட சொல்லணும்?" என்று ஏகப்பட்ட கேள்விகளைத் தன் நாக்கிற்குப் பிள்ளைகலாக்கினாள் உதயா.

"ஷ்...ஸோ!! நீ வேற!?" என்று ஒரு வினாடி, தன்னை மீறிய எரிச்சல் வந்தது அன்புவிற்கு!

"உதயா... அந்தப் பொண்ணு... ப்ச்... அந்தப் பாட்டி இருக்காங்க இல்லையா? பூ விக்கிற பாட்டி... அவங்களைக் காணோம்! இந்தப் பொண்ணு... என்னடான்னா அழுதிட்டே இருக்கே தவிர, ஒண்ணும் பேச மாட்டேங்குது! பேசுறது என்ன? என்னை நிமிர்ந்து கூடப் பார்க்க மாட்டேங்குது! நீ என்னன்னு கேளு!" என்று விஷயத்தைச் சுருக்கமாய் சொன்ன வினாடி, பூக்காரியின் அழுகை மீண்டும் தன் நாதத்தை வெளியேற்றியது!

"ப்ச்... சும்மா அழாதே!" என்று அவளை அதட்டிய அன்பு,

"கேளு உதயா... கொஞ்சம் இதமா கேளு!" என்று உதயாவை உந்தினான்.

அன்புவின் கைப்பற்றி, கடையின் மறுபக்கம் இழுத்துச் சென்ற உதயா, "ஹே அன்பு... எதுக்குடா நமக்கு இந்த வேலை? ஜஸ்ட் லீவ் இட் மேன்! அந்தப் பொண்ணுக்கும்... நமக்கும் என்ன? வேலைக்கு வந்தோமா... வேலையைப் பார்த்தோமான்னு இல்லாம... நமக்கு எதுக்கு வீண் வம்பு!?" என்றாள் பதட்டமாய்.

"வம்பா?!!!!!!" என்று ஒரு வார்த்தையில், அவளது பதட்டத்தை பந்தாடியவன்,

"உன்னால முடியலைன்னா... விட்டுரு! நீ உன்னோட வேலையைப் பார்க்கத் தாராளமா போகலாம்... நான் வேற யாரையாவது வச்சு பார்த்துக்கிறேன்!" என்றவன், விடுவிடுவென அங்கிருந்து நகர்ந்தான்.

"ஹே...ஹே நில்லு! உனக்கெதுக்கு இவ்வளவு கோபம் வருது?! சரி... விடு! இப்ப என்ன அந்தப் பொண்ணுகிட்ட பேசணும்... அவ்வளவு தானே? வா!" என்று அவனுடன் வந்த உதயா, மெல்ல அந்தப் பெண் அருகே சென்றாள்.

விரிக்கப் பட்டிருந்த அவளது பூக்கடையின் எதிர்புறம் நின்று வியாபாரம் செய்பவர்களைப் போலலல்லாமல், தன்னருகே வரும் அந்த யுவதியின் பிம்பம், அந்தப் பெண்ணின் உடலை ஒரு முறை நடுங்கச் செய்தது!

Bhuvana's





அந்த நடுக்கம், வெளிப்படையாகவே இருக்க, நெருங்கிய உதயா மட்டுமல்ல, எதிரே நின்றிருந்த அன்புவும் நெற்றி சுருக்கினான்.

உடம்பு நடுங்கி அடங்க, முகத்திலிருந்த ரத்தம் முழுதும் வடிந்து, கண்ணில் பயம் அப்பி, கைகள் ஏகத்திற்கும் நடுங்க, அமர்ந்திருந்த நிலையிலேயே ஓரடி பின்னே நகர்ந்தாள் அப்பெண்.

"ஹே... ஜஸ்ட் ரிலாக்ஸ்மா! எதுக்கு இவ்வளவு பதட்டப்படுறே?" என்று தோள் தொட்ட உதயா அதிர்நது போனாள்! அப்பெண்ணின் உடம்பு, அனல் அடுப்பென காந்தியது!

எதிரே இருந்த அன்புவை நிமிர்ந்துப் பார்த்தவள், அவன் கண் கேட்ட கேள்விக்கு விடையாய் "அன்பு... அவளுக்கு காய்ச்சல் கொதிக்குதுடா!" என்றாள். அப்போது, உதயாவின் குரலிலும் பதட்டம் குடி வந்திருந்தது!

"ஹ்ம்ம்...சரி! நீ... அவங்க ஆயாவைப் பத்தி கேளு!" என்றான் அன்பு.

தனது மேம்போக்கான பதிலை... அதுவும் பதற்றம் சிறிதுமில்லாத பதிலை உதயா எதிர்ப்பார்க்கவில்லை என்பது அவளது முகத்திலிருந்து தெரிந்த போதும், அன்பு தன் நிலையிலிருந்து மாறவில்லை.

தன்னை புரியாமல் பார்த்துக் கொண்டிருந்தவளை, "ம்ம்..." என உந்தியவன், பூக்காரியின் பதிலுக்காய் காத்திருந்தான்!

அந்தப் பெண்ணை தோளை மெல்ல அழுத்திவிட்ட உதயா, "என்னம்மா? ஏன் இவ்வளவு காய்ச்சல் அடிக்குது? ஆயா எங்க?" என்றாள் மெதுவாய்.

இப்போதும் அழுகை! அழுகை! அழுகை! ஆனால், அன்பு கேட்கையில் வெறும் அழுகையோடு நின்று போன பதில், இப்போது மெல்ல "ஆயா... ஆயா...ஆயா... ஆய்ய்ய்யா...செத்துப் போச்சு!!!!" என்று விம்மி வெடித்தது!

Bhuvana's





எதிர்பார்த்ததே என்பதால் அன்புவிடம் பெரிதாய் பதட்டமோ அதிர்ச்சியோ இல்லை! சன்னமான வருத்தம் குடியேற, கைகளை மார்பிற்குக் குறுக்கே கட்டியபடி நின்றிருந்தான் அவன்!

ஆனால், உதயாவிற்குத் தான் அந்த சமயத்தை இப்படி எதிர்கொள்வது என்றே தெரியவில்லை!!

"ஹோ!!" என்ற ஒரு வார்த்தையும்,

"எப்படி?" என்ற மறு வார்த்தையுமாய் அவள் தடுமாற,

"உதய்... அந்தப் பொண்ணை ஹாஸ்பிடல் கூட்டிட்டுப் போகணும்! அவளை வரச் சொல்லு!" என்றான் அன்பு.

உதயாவால், அன்புவின் செய்கைகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

"ஏய்... அவங்க பாட்டி இறந்துட்டாங்கன்னு சொல்லுது...அதை என்ன ஏதுன்னு கேட்க வேணாமா? நீ பாட்டுக்கு போலாம்ங்கிற?" என்று தன் கோபத்தை மறையாது வெளியிட்டாள் உதயா.

"என்ன ஏதுன்னு கேட்கிறதால, போன அவங்களோட உயிர் திரும்ப வந்திடுமா என்ன? போனவங்களைப் பத்தி பேசிட்டு இருக்காம... இருக்கவங்களோட உடல்நிலையைப் பார்க்கலாம் இல்ல!?" என்று உதயாவின் கோபத்திற்குக் கோபம் காட்டியே பதில் சொன்னவன்,

"அந்தப் பொண்ணைக் கூட்டிட்டு வா...உதய்!" என்றான் தோழியிடம்.

"ஹே... அதான் அவங்க ஆயா விஷயம் தெரிஞ்சுப் போச்சில்ல... அப்புறம் என்ன? இதோட விடு, அன்பு! அவங்களுக்குக் காய்ச்சல் அடிக்கிறதும்... தலை வலிக்கிறதும்

Bhuvana's





அவங்க பாடு! நமக்கென்ன?" என்று உதயா கூறும்போதே, அன்புவின் கரங்கள், கைப்பேசியை எடுத்து யாருக்கோ அழைப்பு விடுத்திருந்தது.

அருகே நின்றிருந்த உதயாவை பொருட்டாய் கூட மதிக்காமல், "ஹலோ மணிம்மா! எங்க இருக்கடா?" என்றான், அந்தப் பக்கமிருந்த மணிமேகலையிடம்.

அவள் ஏதோ சொன்னதும், "இன்னைக்கு ஒரு நாள் லீவ் போட்டுட்டு, அண்ணனோட ஆபீஸ்க்கு வர முடியுமா? இங்க ஒரு சின்னப் பிரச்சனை!" எனக் கேட்டான், இரத்தின சுருக்கமாய் விஷயத்தைக் கூறி.

சில நாட்களாகவே, அண்ணனின் அகமும் புறமும் சரியில்லாமல் இருந்ததை உணர்ந்த மணியும், மறு பேச்சில்லாமல் "இன்னும் ஒரு மணி நேரத்தில அங்க இருப்பேன், அண்ணா!" என்றாள்.


"ஹ்ம்ம்... ஒரு மணி நேரமா? ஹோ...பஸ் பிடிச்சு வரியா? வேணாம்... மணிம்மா...ஆட்டோல வந்திடு!" என்றான் அன்பு, குரலில் துரிதத்தைக் காட்டி.

அரசு போக்குவரத்துக் கழகத்தின் கொள்கைப் பரப்புச் செயலாளர் பதவியில் இருப்பவன் போல், பேருந்திற்கு கொடி பிடிக்கும் அண்ணன், ஆட்டோ பிடித்து வா என்று சொன்னால், விஷயம் பெரிது தான் போல என்றெண்ணிய மணி, அடுத்த இருபத்தைந்து நிமிடத்தில் அண்ணனின் அலுவலகம் முன்னே நின்றிருந்தாள்.

போகிற வருகிற ஆட்டோவை எல்லாம், எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த அன்புவை விநோதமாய் பார்த்த உதயா, "டேய்... எனக்கென்னமோ நீ ஓவரா ரியாக்ட் பண்றேன்னு தோணுது! ஜஸ்ட் லீவ் இட்... அன்பு! வா உள்ளே!" என்றாள் அவனது கைப்பற்றி.

மெல்ல அவளது பிடியிலிருந்து தனது கையை உருவிக் கொண்டவன், தன் ஆயா இறந்த செய்தியைப் பகிர்ந்துவிட்டு, முழங்கால்களுக்கு இடையே தலையை புதைத்துக் கொண்டு, தேம்பித் தேம்பி அழுதபடி இருந்த அப்பெண்ணின் மீது பார்வையைப் பதித்தவாறே, "அன்புலேயே ஊறி வளந்த உனக்கு... அன்பிலாம வளர்ந்த எங்களோட தவிப்பு ஓவரா

Bhuvana's


“அன்பிலார் எல்லாம்!” - என்.சீதாலெட்சுமி

தான் தெரியும்! அது தப்புமில்லை... இது என்னோட ஃபீலிங்... அது உனக்குப் புரியணும்ன்னு அவசியமில்ல! நீ...போ உதய்! நீ... போய் வேலையைப் பாரு!” என்ற அன்புவின் குரலில், ஏளனமோ... இளப்பமோ... கோபமோ... ஏன் வருத்தமோ கூட தென்படவில்லை. மாறாய், ஓர் புரிதல் மட்டுமே தென்பட, அது உதயாவிற்கும் புரிந்தது!

“அன்பு! நா...” என்று உதயா இழுக்கும்போதே, “அண்ணா...” என்ற அழைப்புடன் மணி வந்த ஆட்டோ அன்புவின் அருகே நின்றிருந்தன.

“மணி...வாடா!” என்று தங்கையை வரவேற்றவன், ஆட்டோவிற்குப் பணம் கொடுத்துவிட்டு, பூக்காரியிடம் சென்றான்.

சுருக்கமாய் மணியிடம் விஷயம் கூறி, மணியை அந்தப் பெண்ணிடம் பேச அனுப்பினான்.

அந்த இடைவெளியில், மருத்துவமனை செல்ல ஒரு டாக்ஸி பிடித்தான்.

டாக்ஸியை நிறுத்திவிட்டு, “மணி... போலாமா?” என்றபடியே தங்கையிடம் வந்தவன்,

“அண்ணா... அழுதிட்டே இருக்குண்ணா... பேசவே மாட்டேங்குது!” என்ற தங்கையின் தவிப்பில்,

“சரி விடு... நா ஒரு பக்கம் பிடிக்கிறேன்... நீ ஒரு பக்கம் பிடி! டாக்ஸிக்குக் கூட்டிட்டுப் போய்டலாம்... ஹாஸ்பிடல்ல வச்சு மித்த விவரம் பேசிக்கிலாம்!” என்றான் முடிவாய்.

சொன்னது போலவே, மணியும் அன்புவும் அவளைத் தூக்க, அந்தப் பெரிய சாலையில் சென்ற அத்தனை பேரின் பார்வையும் அவர்கள் மீது பட்டதே ஒழிய, ஒருவரது சரீரமும் உதவிக்கு வரவில்லை! உதயா உட்பட!!

தன்னை யாரோ தூக்குவது கூடப் புரியாமல், அழுதே தன் ஜீவனைத் தொலைத்துக் கொண்டிருந்த அந்தப் பெண், சில அடி தூரம் நகர்ந்த பின்னர் தான் உயிர் பெற்றாள் போலும்!!

Copyrighted material. Can be read only at www.sitaramwrites.wordpress.com Page 10

“அன்பிலார் எல்லாம்!” - என்.சீதாலெட்சுமி

உடம்பை முறுக்கி, “ம்ம்... விடு...விடு...” என சன்னமாய் முண்டினாள்.

அந்த திமிறலில் லேசாய் தளரத் தொடங்கிய மணியின் பிடி, அண்ணனின் கோபக் கண்ணசைவில் இறுகியது.

மீண்டும் அந்தப் பெண் சிணுங்க, அன்பு கண்ணால் மணியிடம் ஏதோ பேசினான்.

அதன் விளைவாய், “ஷ்... சும்மா இரு! ஆஸ்பத்திரிக்குத் தான் போறோம்!” என அதட்டினாள் மணிமேகலை!

சட்டென நின்று போனது, அப்பெண்ணின் திமிறல்!!

கண்ணில் அதிசயத்தைத் தாங்கி, மணி அவனை ஏறிட, சிறு சிரிப்பும் சன்னமான தலையசைப்புமாய் தங்கையின் பார்வையைத் தாங்கி நின்றான் அண்ணன்.

இருவருமாய் அவளை வண்டியில் ஏற்றியதும், உதயாவிடம் திரும்பிய அன்பு “எனக்கு இன்னைக்கு லீவ் சொல்லிடு, உதயா! பை!” எனக் கூறி விடைப்பெற்றான்.

பின்சீட்டில் அந்தப் பெண் படுத்திருக்க, அருகே மணியும், முன் சீட்டில் அன்புவுமாய் அந்த வாடகைக் கார், தன் கண்ணை விட்டு நகரும் வரையிலும் கூட, “ஏதோ ஒரு பரிதாபத்தில செய்றான்! ஆசிரமத்தில வளந்ததால... எல்லாருக்கும் உதவணும்ங்கிற எண்ணம் அவனுக்கு! அவ்வளவு தான்!” என்றே நம்பினாள் உதயா! அன்பு வந்து “நா பூக்காரப் பாட்டியோட பேத்தியைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்!!” என்று சொல்லும் வரையிலும்!!

Copyrighted material. Can be read only at www.sitaramwrites.wordpress.com Page 11

மணியும் அன்புவும், அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு காரில் பயணித்த நேரம் யாவும், அங்கே பேச்சுக்கள் எதுவும் சஞ்சரிக்கவில்லை.

சற்று தொலைவிலிருந்த தனியார் மருத்துவமனையை அவர்கள் அடைந்தபோது, ராஜா வாசிலில் காத்திருந்தான்.

அன்புவின் பார்வை, மணியின் மீது படிந்தெழ,

“இல்லண்ணா... ஏதாவது... ஹெல்ப்...!” என்று தந்தியடித்தவள், “கார்ல வரும்போது, மெசேஜ் பண்ணினேன்...” என்றாள் உள்ளே சென்ற குரலில்.

“டேய் மச்சான்... நான் தான் என்ன... என்னன்னு அவளைப் போட்டு துளைச்சேன்! சாரிடா... உனக்குப் பிடிக்கலைன்னா நான் போய்டுறேன்!” என்று தன் காதலிக்குக் கை கொடுத்தான், ராஜா.

“பரவாயில்லைடா... நீ இரு!” என்ற அன்பு, அதன் பின்னர் அந்தப் பெண்ணிற்கான சிகிச்சையில் முனைந்தான்.

மருத்துவமனை வரவேற்பில், “ஹை டெம்பரேச்சர் இருக்கு! அட்மிட் பண்ணனும்!” என அவன் கூறவும், அவசர சிகிச்சை பிரிவிற்கு அழைத்துச் செல்லப்பட்டாள் அவள்.

அங்கே வந்த மருத்துவர், அவளைப் பரிசோதனை செய்தபடியே, “அவங்க பேர் என்ன?” என்று அருகே நின்றிருந்த அன்புவைக் கேட்கவும்,

அவன் ஒரு நிமிடம் மலைத்து நின்றான்!

மருத்துவரின் பார்வையில் வேறுபாடு தெரியவும், “சாரி டாக்டர்! எனக்கு அவங்க பேர் தெரியாது! ரோட்டில பார்த்து... எமெர்ஜென்சிக்காக கூட்டிட்டு வந்தேன்!” என்று பாதி பொய்யும், மீதி உண்மையுமாய் சொல்லி முடித்தான் அன்பு.

பொய் சொன்னால் தானே குரல் நடுங்கும்?! உடம்பு உதறும்?! நாக்கு குளறும்?! அன்பு கூறியது முழுதும் உண்மை அல்லவா?! திடமாகவே, மருத்துவரின் கண்ணைப் பார்த்தான் அவன்!

“குட் ஜாப்... மேன்! எனக்கென்னன்னு இருக்காம... அவங்களுக்குத் தேவையான கேர் எடுத்திட்டு இருக்கீங்க? ரியல்லி அப்ப்ரிஷேட்டபிள்!” என்று பாராட்டிய மருத்துவர், அவளைப் பரிசோதித்தார்!

“இன்னும் கொஞ்ச நேரம் இந்தக் காய்ச்சலைக் கவனிக்காம இருந்திருந்தா... மூளையைக் கூடப் பாதிச்சிருக்கலாம்! அந்த வகையில, இவங்களுக்கு மறு பிறவி கொடுத்திருக்கீங்க!” என்று அவன் தோள் தட்டிவிட்டுச் சென்றார்.

அவர் என்னவோ சென்றுவிட்டார்! ஆனால், அன்பு தான் அவர் வார்த்தையில் சிக்கிக் கொண்ட மீனாய், எண்ணங்களின் சுழலுக்குள் பயணப்பட்டான்!

எண்ணங்களின் பிடியில் அவனை வெகுநேரம் விட்டு வைக்க இயலாதவளாய், அந்தப் பெண் கண் விழித்தாள்!

சுற்றும் முற்றும் சுழன்ற கண்மணி குண்டுகள், அன்புவின் மீது நிலைத்ததும், அணு குண்டாய் மாறி, அவனை மட்டுமல்லாமல்

அவளையும் தகர்த்தியது! ஆம், அந்தப் பெண்ணின் உடம்பு பயத்தில் தூக்கிப் போடத் துவங்கியது!

முகத்தில் மிதமிஞ்சிய பயம் தெரிய, கட்டிலின் இரு புறங்களையும் இறுக்கப் பிடித்துக் கொண்டவள், தன்னை மெத்தையோடு இறுக்கிக் கொள்ளவும்,

“மணிம்மா... இங்க வாடா!” என்று வெளியே குரல் கொடுத்தான், அன்பு.

மின்னல் வேகத்தில் உள்ளே நுழைந்தவள், அண்ணனின் கண்ணசைவில் அப்பெண்ணிடம் விரைந்தாள்.

மணியைக் கண்டதும், அவளது முகம் பயத்தைத் துறந்த வேளையில், அன்புவின் முகத்தில் ஓர் முடிச்சு விழுந்தது.

“உனக்கு ஒண்ணுமில்லை... பயப்படாத!” என்று அப்பெண்ணின் நெற்றி வருடிய மணியை விட்டே, ஆயாவைப் பற்றிய விஷயங்களைக் கிரகித்தான் அன்பு.

போன வாரம் முழுதும், உடம்பு முடியாமல் அரசு மருத்துவமனையிலிருந்த அவளது ஆயா, சிகிச்சை பயனளிக்காமல் வெள்ளிக்கிழமை உயிரை விட்டிருக்கிறார்!

“ப்ச்... பாவம்!” என்ற வருத்தம் மேலோங்கியபோதும்,

“வெள்ளிக்கிழமை தான் இறந்திருக்காங்கன்னா... திங்கட்கிழமையே இந்தப் பொண்ணு கடையைத் திறந்துடுச்சே! எப்படி?” என்று மூளையைக் குடைந்த கேள்வியை, வாய் விட்டே கேட்டான் அன்பு.

இதுவரை கேட்ட மணியின் குரலில் தூக்கிப் போடாத அவளது மேனி, அன்புவின் குரலில் திடுக்கென தூக்கிப் போட்டது!

சட்டென, அவளது புஜத்தை அழுத்திய மணிமேகலை “அவங்க என்னோட அண்ணன்! உடம்பாலையும்... மனசாலையும் யாரையும் காயப்படுத்தத் தெரியாதவங்க! பயப்படாத! அவங்களால உனக்கு எந்தவிதமான பாதிப்பும் வராது! இது... என் மேல நானே செஞ்சுக்கிற சத்தியம்!” என்றாள் வைரத்தின் உறுதியுடன்.

அப்பெண்ணின் பார்வை, மணியின் பார்வையை ஊடுருவிச் சென்றது!

மணியும் எதிரே வந்த பார்வை ஈட்டியை, வளையா கேடயமென தாங்கி நிற்க, அங்கே பார்வைகளின் யுத்தம் நடைபெற்று, அதன் முடிவில் அன்புவிற்கு வெற்றி வாகு சூடப்பட்டது!

“சொல்லும்மா… எதுனாலும் மனசு விட்டுப் பேசிடு! கொஞ்சம் மனசு நிம்மதியாகும்!” என்று உந்தினாள், மணிமேகலை.

“இல்ல… ஆயா… ஆயா… ஆயாவ அடக்கம் பண்ண என்கிட்டே காசில்ல… இருந்த காசெல்லாம் ஆஸ்பத்திரிலேயே தீந்துப் போச்சுது!” என்றவளின் குரல், அந்த நாளின் நினைவுகளில் நிர்கதியற்று தவித்தது!

மணி ஒரு முறை அவளது கைகளை அழுத்திக் கொடுக்க, “ஆஸ்பத்திரி ஆளுங்களே… ஆயாவ… வாங்கிக்கிட்டாங்க! அநாதை பொணம்ன்னு… ஹக்… ஹக்! ஹய்யோ! ஆயா!” தன்னை மீறிக் கதறினாள் அவள்.

மணியின் கண்களிலிருந்து வழிந்த கண்ணீர், அவளது கைகளை ஈரமாக்க, சட்டென விழி விரித்துப் பார்த்தவளாய் “நீங்க அழறீங்களா… எங்க ஆயாவுக்காக அழறீங்களா?” என்றாள் அவள் ஆச்சரியமும், மெல்லிய சந்தோஷமுமாய்.

அந்தக் குரல், எங்களுக்காகவென்று அழ ஒரு ஜீவன் இருக்கிறதே என்ற நிம்மதியைத் தாங்கி நிற்க, அன்புவின் இதயம் இடமாற்றம் கேட்டது!

மணி பதில் சொல்வதற்குள், “பின்ன… ஒரு சக உயிர்! அழாம இருந்தா… நாம மனுஷனா பிறந்து என்ன பிரயோஜனம்?” என்றான் அன்பு, ஆறுதலாய்.

சட்டென மணியிடமிருந்து அன்புவிற்குப் பாய்ந்த அவளது பார்வை, அவனை நேரே சந்தித்தது!

அந்த நாளில் முதல் முறையாக, அவள் அவனை நேரே சந்தித்தாள்! பார்வையால்! பார்வையைத் தாண்டி நின்ற மனதால்!

ஆனால், அந்தப் பார்வை நிலைத்து நின்றது ஓர் வினாடி தான்!

மீண்டும் மணியின் புறம் திரும்பியவள், "நீங்க ரொம்ப நல்லவங்க அக்கா!" என்ற அவளது குரலில் நெகிழ்ச்சியில் தோய்க்கப்பட்ட உண்மை மிளிரியது!

லேசாய் புன்னகைத்த மணி, "சொந்தம்ன்னு வேற யாருமில்லையா?" என்றாள், படுத்திருந்தவளின் முடி கோதி.

"இல்லைக்கா...!!! யாருமே இல்லை!!" என்றவளின் முகத்தில், ஓர் சொல்லொண்ணா வேதனை! வலி! நிராசை! நிராகரிப்பு!

அதை மணி உணர்ந்தாளோ இல்லையோ அன்பு உணர்ந்தான்!!! அன்புக்கான அவளது தவிப்பை, அன்பு கொண்ட அந்த நெஞ்சம் சிறைப்பிடித்து வைத்துக் கொண்டது!

அந்த நிமிடம், அவனது மனம் ஓர் உறுதி எடுத்தது!!

சில நேரங்களில், வாழ்வின் மிகப் பெரிய முடிவுகள், இமைக்கும் நேரத்தில் எடுக்கப்பட்டு விடுகின்றன! அலசி ஆராய்ந்து, ஆயிரமாயிரம் யோசனைகளை செய்து, பத்து பேரிடம் அபிப்ராயம் கேட்டு, பல நாட்கள் பசியின்றி...ஆழ்ந்த உறக்கமின்றி, ஒன்றுக்குப் பலமுறை பரிசீலனை செய்து எடுக்கப்படும் முடிவுகளை விடவும், அந்த நிமிடம்... அந்த வினாடி... அந்த ஷணம் எடுக்கப்படும் முடிவுகள் தீர்க்கமாகவும், தெளிவாகவும், உறுதியாகவும் இருந்திருக்கின்றன!

அது தான், அன்புவின் வாழ்விலும் நடந்தேறியது!

ஆனால், அன்பு முடிவு எடுத்தானே ஒழிய, அதை வெளியிட வில்லை! இன்னமும், அந்தப் பெண்ணைப் பற்றிய சில விவரங்களைக் கேட்க வேண்டியிருந்ததே!

"சொந்தம் யாருமில்ல சரி... வீடு பக்கத்தில கூடவா யாரும் உதவிக்கு வரல?" என்று மெல்ல தூண்டில் போட்டான்.

அவ்வளவு தான் வெகுண்டெழுந்து விட்டாள், அவள்!

“அவங்களைப் பத்தியெல்லாம் பேசாத சார்… பொறுக்கிங்க! பன்னாடைங்க! நாதாரி… நாய்ங்க! ச்சே!!! ச்சே!! எனக்கு அவனுங்களை நினைச்சாலே… கொலவெறி வருது!!”

“ஏன்? என்னாச்சு?” – அன்பு கேட்பதற்கு முன்னர், மணியின் குழப்பக் குரல் இடைப்புகுந்தது

“அவங்களால தான்க்கா… ஆயா செத்துப் போச்சு! பாவிப் பயலுங்க…!!” – பல்லைக் கடித்தவள்,

“தோள் வெறி பிடிச்ச மிருகங்க க்கா! என்னைய அவனுங்ககிட்ட இருந்து… காப்பாத்திக் காப்பாத்தித் தான் ஆயாவுக்கு நோய் வந்து போச்சு! அவனுங்க தான்… என்னோட ஆயாவைக் கொன்னுட்டானுங்க! பாவிங்க!” என்று உடைந்து அழுதாள், அவள்.

அதே சூழலைக் கடந்து வந்த மணிக்கு, தொண்டைக்குள் எதுவோ அடைத்துக் கொண்டு விட, மெல்ல படுத்திருந்தவளின் முடி கோதி, நெற்றியில் சிறு அழுத்தம் கொடுத்து, அழுத்திவிட்டாள்.

அன்புவுக்கு, தங்கையின் நிலை புரிந்தது! அழக் காத்திருக்கும் அதரங்களுக்கு ஆதரவாய் தோள் கொடுக்க நினைத்து, அவன் நகர, ராஜா அங்கே விரைந்து வந்தான்!

ஓர் ஓரமாய் நின்று, இவர்களது சம்பாஷணையை கேட்டுக் கொண்டிருந்த ராஜா, மனையாளாகப் போகும் மணியவளின் துயர் புரிய, அதைத் துடைக்க விரைந்து வந்திருந்தான்!

மனதின் ஓர் பாதி அண்ணனின் பதவி கொண்டு, தங்கைக்காக சந்தோஷப்பட,

மறு மனமோ, “மணிக்கு ராஜா இருக்கிறான்… ஆனால் இவளுக்கு?” என்று வேதனைப்பட்டது!

அங்கே நிலவிய அமைதி நெஞ்சைக் கவ்வ, அதில் துன்பப்பட்டுக் கொண்டிருந்தவர்களை வெளிக்கொண்டு வருபவன் போல், “நடந்ததை நினைச்சிட்டே வேதனை படக் கூடாது… விடுங்க!” என்றான் ராஜா.

புதிதாய் ஓர் குரல் கேட்கவும், கட்டிலில் படுத்திருந்தவளின் கட்டிளம் மேனி, கயிறு கொண்டு அடக்க முடியா காளையென தூக்கி வாரிப் போட்டது!

ஓர் ஆணின் குரலோ... ஆணின் நெருக்கமோ... அவனது சுவாசம் கூட அவளை வலுவிழக்கச் செய்வதை அன்புவால் உணர முடிந்தது!

பத்தடி தள்ளி நிற்கும் ராஜாவைக் கண்டே பயப்படுகிறாள் என்றால், அவள் என்ன மாதிரி வேதனை அனுபவித்திருக்க வேண்டும் என்று மனம் கடிவாளம் போடாத குதிரையாக, கண்டகண்ட குப்பையையும் யோசித்து, நொந்தது!

நொந்த மனதை மேலும் நோக வைக்கவென, "நடந்து முடியல... நடந்துட்டே தான் இருக்கு... ஐயோ... என்னால முடியுது இல்லையே... ஐயோ... ஐயோ..." என்று கதறத் தொடங்கியவள், அதன் பின் தனது புலம்பலை நிறுத்தவே இல்லை.

இங்கும் அங்கும் உடம்பை முறுக்கிக் கொண்டு அவள் துடிததில், கையிலிருந்த ட்ரிப்ஸ் கழண்டு விழுந்தது!

"ஹே ஒண்ணுமில்லைம்மா... என்னாச்சு... ஐயோ ரத்தம் வருது! படும்மா... ஐயோ படு!" – மணி ஒரு புறம் கதற,

"ஷ்... என்ன இது? இனி ஒண்ணும் பயமில்ல... நாங்க இருக்கோம்! இனிமேல்... உனக்கு எந்தவிதமான கஷ்டமும் வராம நாங்க பாத்துக்கிறோம்!" என்று அன்பு மறு புறம் பதற,

ராஜா, மருத்துவரை அழைக்க ஓடினான்.

ஆனால், அவளோ அம்பு தைத்த மானாய் கதறினாள்! அழுதாள்! துடித்தாள்!! அதை விடவும், புலம்பினாள்!

"சும்மா சொல்லாதீங்க... நீங்க போய்டுவீங்க..."

"நா மட்டும் தான்... எங்க குடிசைக்குப் போவணும்... அந்தப் பாவிங்க வந்து..."

"ஐயோ... என்னைய... என்னைய..."

இந்த இடத்தில மணியின் முகம் இறுகியது! நெஞ்சம் உதற, “அண்ணா… என்னால முடியலண்ணா… வலிக்குது!” என்றாள் நெஞ்சை அழுத்திக் கொண்டு.

நொந்தவளைப் பார்ப்பதா? நொந்துக் கொண்டிருப்பவளைப் பார்ப்பதா? என்று தவித்த அன்புவின் மனம், “நிகழ்காலம்” என்ற விடையைப் பெற்றதும், அந்தப் பெண்ணிடம் திரும்பியது.

“ஒண்ணுமில்லைம்மா… அவங்க இனிமேல் வர மாட்டாங்க…”

“எப்படி? எப்படி வராம இருப்பாங்க… எல்லாம் வருவாங்க… வந்து கதவைப் போட்டு உடைப்பாங்க…”

“நா… நா… நேத்து முச்சூடும் குடிசைக்குள்ளாரவே இருந்தேன் தெரியுமா?”

“வெளிய வந்தா… கழுகு மாதிரி நிக்குரானுங்க…”

“ஐயோ…ஆயா… என்னைய தனியா விட்டுட்டுப் போயிட்டியே?!!”

“ஆயா… ஆயா… ஆயா!!! ஆயா… வேணும்! ஆயா…!!!”

அவள் புலம்பித் தவிப்பதை சகிக்க முடியாமல், “ஷ்…சும்மா இரு!! சும்மா இருன்னு சொல்றேன் இல்ல!!” என்று ஓங்கி ஓர் அதட்டுப் போட்டான், அன்பு.

சட்டென, அந்த அறையில் பெருத்த அமைதி நிலவியது!

அவள் பேந்தப் பேந்த விழித்தப்படி, கண்களில் பயமெனும் மையைப் பூசிக் கொள்ளவும், “உன் பேர் என்ன?” என்றான் அன்பு மீண்டும், அதட்டலாய்.

“வே…வேலு… வேலுமயில்!!” – சொல்லும் போதே, குரல் திக்கியது அவளுக்கு!

“ஹ்ம்ம்!” என்று அதை கிரகித்தவன்,

“இந்தா பாரு… வேலுமயில்! இனிமேல், யாரும் வந்து… உன்னைத் தொந்தரவு பண்ண மாட்டாங்க! நான் பார்த்துக்கிறேன்! உன்னை… எங்க வீட்டுக்குக் கூட்டிட்டுப் போய்டுவேன்…சரியா? அங்க மணி இருப்பா…

உனக்கு எந்தவிதமான பிரச்னையும் வராது! சரியா? உன்னோட ஆயா மேல சத்தியம்!!” என்றான் உறுதியாய்.

அவள் வார்த்தையின்றி வெறுமனே விக்கித்து விழிக்கவும்,

“உன்னோட ஆயாவை நீ நம்புறியா இல்லையா? சொல்லு!” என்று அதட்டினான் அன்பு.

“நம்புறேன்… அதை நம்பாம போனா நா பாவி… நம்புறேன்… நம்புறேன்…” என்று துடிப்பில், தன் பாசத்தை வெளியிட்டவள்,

“அப்போ… அந்த ஆயா மேல நான் பண்ற சத்தியத்தையும் நம்பு! உனக்கு எந்தக் கஷ்டமும் வராம நான் பார்த்துக்கிறேன்! ஹ்ம்ம்,.. நாங்க பார்த்துக்கிறோம்!” என்றான் தெளிவாக.

மயில் ஓர் புரியாத பார்வையை அவனிடம் வீச, மணியோ ஆச்சரியப் பார்வையை ஏந்தி நின்றாள்!

ஓர் சிறு தலையசைவுடன், தங்கையின் ஆச்சரியத்தை ஈடு கட்டியவனால், மயிலின் புரியாத பார்வைக்கு விடைக்கொடுக்க முடியவில்லை.

அதற்குள் மருத்துவர் வந்துவிட, அங்கே மீண்டும் சிறு பரிசோதனை நடைபெற்றது. அதன் முடிவில், “அவங்க கொஞ்ச நேரம் தூங்கட்டும். நீங்க வெளிய இருங்க…” என்றார் மருத்துவர்.

மருத்துவரின் தலை மறைந்ததும், “மயில்” என்று மனதளவில் பதிந்து போன “வேலுமயிலின்” அருகே சென்ற அன்பு,

சொக்கத் தொடங்கிய அவளது இமைகளை மெல்ல வருடினான்.

அவ்வளவு தான், அவ்வளவு மயக்கத்திலும், மயிலுக்கு உடம்பு உதற ஆரம்பித்தது!

சட்டென மனமும் முகமும் கூம்பிவிட, ஓர் அடி பின்னே நகர்ந்தவன், தலையை உலுக்கிக் கொண்டு மீண்டும் முன்னேறினான்.

உதறிக் கொண்டிருந்த மேனியின் தோளில் அழுத்தமாய் கை பதித்து, வலுக்கட்டாயமாக அவள் பார்வையோடு தன் பார்வையைக் கலந்து, “பயப்படாதே!!!” என்றான் அழுத்தமாய்.

அதன் பின்னர், அவளிடம் அலட்டல் இல்லை… அரட்டல் இல்லை… துடிப்பில்லை… தவிப்பில்லை… புலம்பலில்லை! நிம்மதியான உறக்கம் மட்டுமே எஞ்சி நின்றது! அது மருந்தினாலா? இல்ல மனதினாலா? என்பது அந்தப் பேதை மனம் மட்டுமே அறிந்த உண்மை!

அவளது அகன்ற விழிகள் உறக்கத்தைத் தன்னுள் குடி வரச் செய்ததை, சற்று நேரம் அமைதியாய் நின்று பார்த்த அன்பு, ஓர் நெடிய மூச்சை வெளியேற்றிவிட்டு, அறையை விட்டு வெளியேறினான்.

அங்கே, அரை வாசலில் நின்றிருந்த மணியையும் ராஜாவையும் நேராய் நோக்கி, “நான் கல்யாணம் பண்ணிக்கலாம்ன்னு முடிவெடுத்து இருக்கேன்!” என்றான் அறிவிப்புப் போல.

இந்த நேரத்தில்… இதென்ன பேச்சு? என்று இருவருமே குழம்பிப் போய் பார்த்தப்போதும், மணியின் முகத்தில் சின்னதாய் ஓர் சந்தோசம்! தன்கையல்லவோ!

ஆனால், அந்த சந்தோசம் “கல்யாணப்பொண்ணு… வேலுமயில்!” என்ற அண்ணனின் அறிவிப்பில், தொலைந்து போனது!

“அண்ணா!!” – மணியின் குரல் அதிர்ச்சியை அப்பட்டமாய் வெளியிட்டது!

ராஜாவுமே, தன் முகத்தில் அதிர்ச்சியைப் பிரதிபலித்து நிற்க, “ஏன் மணி? நான் கல்யாணம் பண்ணிக்கக் கூடாதா?” என்றான் அன்பு, கூர்மையாக.

“ச்சே…அப்படியில்லைண்ணா… ஆனா… இந்தப் பொண்ணை…”

“ஏன் இந்தப் பொண்ணுக்கு என்ன?” – அன்புவின் கேள்வி குத்தீட்டியாய் மணியைத் தாக்கியது.

“அவளுக்கு ஒண்ணுமில்லை…ஆனா… இவ்வளவு சீக்கிரம்…கல்யாணம்ங்கிற முடிவை எடுக்கிறது….” – முடிக்காமல் இழுத்தாள் மணி.

“இல்ல மணி! நா நல்லா யோசிச்சுட்டேன்…”

“நீ அவளையே கல்யாணம் பண்ணிக்கோ வேணாம்ன்னு சொல்லலை… ஆனா…ஏன் இவ்வளவு அவசரம்?” தன் கருத்தோடு உள்ளே நுழைந்தான் ராஜா.

“அவசரத்துக்கு அவசியம் வந்துடுச்சு… அதான்!”

“அண்ணா… அந்தப் பொண்ணை இரக்கப்பட்டு கல்யாணம் பண்ணிக்கப் போறீங்களா?? ஜஸ்ட்… ஒரு பரிதாபத்தால கல்யாணம் பண்ண முடிவெடுத்து இருக்கீங்கன்னா… எனக்கு இந்தக் கல்யாணத்தில சுத்தமா விருப்பமில்லை!” – தன் முடிவைத் தீர்க்கமாய் கூறினாள், மணிமேகலை. அன்புவிற்கு சந்தோஷமாய் இருந்தது!

அதை வார்த்தையிலும் அவன் வெளியிட, மணியின் முகம் குழப்பத்திற்கு கடனாளி ஆகிப் போனது!

“என்னடா புரியலையா? இவ்வளவு தூரம்… என்கிட்டே நீ உரிமை எடுத்துப் பேசுறது எனக்கு சந்தோஷமா இருக்கு! இவ்வளவு நாளும்… உன்கிட்ட ஒரு தயக்கம் இருந்துட்டே இருக்கும்… ஆனா இப்போ உரிமையா நீ பேசுறதே எனக்கு ரொம்ப சந்தோஷத்தைக் கொடுக்குதுடா!” என்றான் அன்பு, தன் பாசத்தைப் பறைசாற்றி.

“ப்ச்… அதுவா முக்கியம்? எனக்கு எப்பவுமே நீங்க முக்கியம் தான்… உங்களுக்கு அது தெரியலைன்னா நான் என்ன செய்ய முடியும்! அதை விடுங்க! இப்ப… இந்த விஷயம்… அந்தப் பொண்ணு மேல பரிதாபப்பட்டு…” – மணி வாக்கியத்தை முடிக்கும் முனனர் அன்பு தொடங்கினான்.

“இல்ல மணி! இது பரிதாபமில்லை! ஹ்ம்ம்… எப்படி சொல்றது? ஹ்ம்ம்…” என்று சில நிமிடம் பேச்சை நிறுத்தி யோசித்தான்,

“வெறுமனே பரிதாபமா இருந்தா… கைவிடப்பட்ட பெண்களுக்குன்னு எத்தனையோ ஹோம் இருக்கு… என்.ஜி.ஒ இருக்கு… அதில நல்லதா பார்த்து சேர்த்து விடலாம்!” என்று தொடங்கியவனின் குரலில் தீவிரம் இருந்தது!

சிறு இடைவேளை விட்டு, இனி வரப் போகும் கேள்விகளுக்குத் தன்னைத் தயார் படுத்திக் கொண்டு, மீண்டும் பேசத் துவங்கினான்.

தன்னையே பார்த்திருந்த மணியையும் ராஜாவையும் பார்த்து லேசாய் சிரிப்பு கூட வந்தது அவனுக்கு!

பூத்த புன்னகையை வாட விடாமல், “ஆனா… என்னோட மனசில பரிதாபமில்லைன்னு சொல்ல மாட்டேன்… ஆனா…பரிதாபம் மட்டுமே இல்லை! அதையும் தாண்டி… ஏதோ ஒண்ணு!” என்றான் தன் மனதைக் காட்டி விடும் முடிவுடன்.

“உன்னைப் பார்த்தப்போவும்… எனக்கு இப்படித் தான் இருந்துச்சு! பரிதாபம்… இரக்கம்… வேதனை இது எல்லாத்தையும் தாண்டி, ஒரு பாசம் இருந்துச்சு! உன்னை எப்படியாவது காப்பாத்திடணும்ன்னு வெறி இருந்துச்சு…”

பேசிக்கொண்டே சென்ற அன்புவை இடை மறித்தாள், மணி.

“அப்படின்னா… அவளையும் ஒரு தங்கச்சியா வீட்டுக்குக் கூட்டிட்டு வாங்கண்ணா! எதுக்கு… கல்யாணம்…அது இதுன்னு!” என தங்கை கூறவும்,

“தங்கச்சின்னா மட்டும் நடுல விட்டுட்டுப் போற உறவா, மணி?” – கூர்மையாய் விழுந்தன வார்த்தைகள்!

இலக்கை சரியாகத் தாக்கியதன் அறிகுறியாய், “ஐயோ… அப்படி இல்லைன்னா… சட்டுன்னு கல்யாணம்ங்கிறதை……அது வந்து… …” எனத் தடுமாறினாள், மணிமேகலை.

“இல்லடா… உன்னைப் பார்க்கும் போது, இவ என்னோட சின்னக் குழந்தை… இவளை நாம அப்பா-அம்மா மாதிரி பார்த்துக்கணும்ன்னு தோணுச்சு! ஆனா… இந்தப் பொண்ணு… அதான் மயிலைப் பாக்கும் போது… என் மனசு ஒரு தங்கச்சியா அவளைப் பாக்க மறுக்குது, மணி!”

“சரி… தங்கச்சியா வேணாம்! ஒரு ஃபிரண்டா வரட்டும்ண்ணா!” – மணிக்கு, அவசரமாய் எடுத்த முடிவில் அண்ணனின் வாழ்க்கை அந்தரத்தில் தொங்கி விடக் கூடாதே என்ற படபடப்பு!

“இல்ல மணி… சரியா வராதுடா! கல்யாணம்ன்னு முடிவெடுத்த என்னோட மனசு… அலை பாஞ்சுட்டே இருக்கும்! தேவையில்லாத மன சங்கடம் தான் மிஞ்சும்!” – தன் முடிவில் தீர்க்கமாய், தெளிவாய் இருந்தான் அன்பு.

“இல்லைண்ணா… நா ஏன் சொல்றேன்னா… கொஞ்ச நாள் அவளோட பழகிப் பாருங்க… அப்புறம் முடிவு பண்ணலாமே! ஜஸ்ட் ஒரு மாசம்!” – கிட்டதட்ட கெஞ்சினாள் மணிமேகலை.

“ஹே மணி… நீ பயப்படற அளவுக்கு என்னோட வாழ்க்கை அந்தரத்தில தொங்காது! கவலைப்படாதே!” எனக் கூறித் தங்கையைத் தோளோடு அணைத்தவன்,

“இந்த உலகத்தில… மனுஷங்கள்ல எவ்வளவு ரகம் இருக்கோ! அதே அளவு… காதலையும் ரகம் இருக்கு! வித்தியாசம் இருக்கு! ஒரொருத்தங்க மனசும் வேற… மணி!” என்று பொதுவாய் கூறிவிட்டு,

“எனக்கு அவளைப் பார்த்ததுமே பிடிச்சது மணி… எனக்கு அவ தான் கரெக்ட்டான மேட்ச்ன்னு நான் நினைக்கிறேன்!” எனத் தன் பக்கத்து நியாயத்தை, வலியுறுத்தினான்.

மணியின் முகம் அப்போதும் மலராமலே இருக்க, ராஜா இடைப்புகுந்தான்.

“மணி… எனக்குக் கூட உன்னைப் பார்த்ததுமே பிடிச்சது…ஆனா எப்படி சொல்றது… என்ன சொல்றதுன்னு தெரியாம ரொம்ப நாளா தவிச்சிட்டு இருந்தேன்! கிட்டதட்ட ஆறு மாசத்துக்கு அப்புறம், அன்புவோட சப்போர்ட் கிடைச்சதும், உடனே உடைச்சு சொல்லிட்டேன்! எனக்கு அன்பு தேவைப்பட்ட மாதிரி, அவனுக்கு யாரும் தேவைப்படலை போல! அவனே முடிவெடுத்து, அதில உறுதியா இருக்கும் போது, நாம ஏன் அவனை வீணா குழப்பணும்?! விடு, மணி!” என்று ராஜாவின் நீண்ட உரை முடியவும், மணியுமே தெளிந்தாள்!

“ஆனா… அண்ணா மட்டும் முடிவெடுத்து என்ன புண்ணியம்? அந்தப் பொண்ணு ஒத்துக்கணுமே!?” என்று தன் அடுத்தக் கவலையை மணி எடுத்து வைக்க,

“ஆமா…எனக்குமே அவ என்ன சொல்வாளோன்னு இருக்கு!” என்று தன் மனதின் படபடப்பை, மறையாது வெளியிட்டான், அன்பு.

உடனேயே “என்னன்னாலும் ஃபேஸ் பண்ணித் தானே ஆகணும்! பார்ப்போம்!” என்றான்.

அனைவருமே, ஒரு விதப் படபடப்புடன் வேலுமயிலின் அறையையே பார்த்திருக்க, இரண்டு மணி நேரம் சென்று, அவள் கண் விழிப்பதாய் செவிலியர் பெண் வந்து சொன்னாள்.

அன்புவின் உடம்பிற்குள், உதிரம் நூறு மீட்டர் ஓட்டப்பந்தய வீராங்கனையாய் ஓடி, அவனைப் பதறச் செய்தது!

“ஏன் இப்படி பயப்படுகிறோம்?” என்று அவனுக்குப் புரியவில்லை.

உதயாவிடம் தலை நிமிர்த்தி “முடியாது!” என்று சொன்ன மனது, “முடியும்!” என்று சொல்ல அச்சப்பட்டது!

ஒன்றாம் வகுப்புப் படிக்கும் மாணவன் போல், பரீட்சை அறைக்குள் போக அஞ்சியவனாய், தனது கல்யாணத் தேர்வை நோக்கிச் சென்றான் அன்பு.

மணியும் ராஜாவும் பின்தொடர, தடதடத்த மனதுடன் உள்ளே சென்றவனைப் பார்த்ததும், மயிலின் உடம்பு உதற ஆரம்பித்தது!

கண்ணில் பயம் அப்பிக் கொள்ள, கைகள் கட்டிலின் சட்டத்தை இறுகப் பிடிக்க, உடம்பை கட்டிலோடு ஒட்டிக் கொண்டாள் அவள்.

அன்புவின் நெற்றி, கொண்டை ஊசி வளைவாய் சுருங்கி, மீண்டும் நேரானது!

அவள் இப்படிப் பயப்படுவது ஒன்றும் புதிதில்லை தான்! எந்தவொரு ஆணைப் பார்த்தாலும், அவள் உடம்பு உதறுவதை உணர்ந்தே இருந்த அன்புவிற்கு, இப்போது குழப்பத்தை உண்டு பண்ணிய விஷயமே வேறு! இரண்டு மணி நேரம் முன்னே, அன்பு போட்ட அதட்டலுக்குக் கட்டுப்பட்டு, தன் பயத்தை விட்டவள், இப்போது மீண்டும் பயப்படுகிறாளே என்ற குழப்பம் அவனுக்கு!

ஆனால், குழப்பத்தைத் தீர்த்து வைக்க ஆளில்லாத காரணத்தினால், “எப்பவும்… யாராவது அதட்டினா பயம் வரும்பாங்க… இவளுக்குப் போகுது போல! நா அதட்டினா உடனே, உள்ள போன பயம்… உள்ளேயே இருக்குமா என்ன? தூங்கி எழுந்ததும்… அவளோட இயல்புப்படி, மேல வந்துடுச்சு! கொஞ்சம் கொஞ்சமா போக வைப்போம்!” என அன்புவே அக்குழப்பத்தை நேராக்கிக் கொண்டான்! நேராக்கிக் கொள்ள முயற்சித்தான்!

“வினோதமான பிறவி தான்!” என அவன் எண்ணியதை, கவர்மெண்ட் சீல் குத்தி, “அப்பட்டமான உண்மை” என்று நிரூபிப்பது போல், அடுத்து அவள் பேசினாள்!
மணியோ… ராஜாவோ… ஏன் அன்புவோ பயந்தது போல், அன்பு “கல்யாண” விஷயத்தைக் கூறியதும், மயில் எந்தவிதமான ஆர்ப்பாட்டமும் செய்யவில்லை.

“உனக்கு ஒரு பாதுகாப்பான இடத்தைக் கொடுக்கணும்ன்னா… உன்னை நான் கல்யாணம் பண்ணிக்கிட்டா தான் முடியும் போல! நீ என்ன சொல்றே? என்னைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதமா?” என்று எந்தவிதமான முன்னுரையோ, அலங்காரமோ, தயக்கமோ, குழப்பமோ இல்லாமல் அன்பு நேரடியாய் சொல்லிவிட,

மணியும் ராஜாவும் திகைத்துப் போயினர்!

“இப்படியா நேரடியா சொல்றது? இந்த அண்ணனுக்குக் கொஞ்சம் கூட அறிவே இல்ல! அதுவே… பயந்துப் போயிருக்கு! இப்ப எழுந்திருச்சு ஓடிடப் போகுது!” என்று மணியும்,

“இவன் என்ன லூசா? என்னமோ கத்திரிக்கா வாழைக்கா வியாபாரம் பண்ற மாதிரி… இவனுக்கு இது சிம்பிளா போச்சு போல… எட்டிக்கிட்டு அறையப் போகுது, அந்தப் பொண்ணு!” என்று ராஜாவும் பல்லைக் கடிக்க,

மயிலோ “கல்யாணமா?” என்று ஒற்றை அதிர்ச்சி சொல்லை மட்டும் உதிர்த்தாள்.

அன்பு “ஆமா!” என்று அழுத்தமாய் சொல்லிவிட்டு, “என்னடா இவன்… பார்த்து ஒரு நாள் கூட முழுசா முடியல…அதுக்குள்ளே கல்யாணம்

வரைக்கும் போயி………” என ஆரம்பித்த அன்புவை, அவள் பேசவே விடவில்லை.

“நீங்க வேலை பார்க்கிறீங்களா?” என்றாள் சுருங்கிய முகத்துடன்.

இதென்ன இந்த சமயத்தில் இப்படியொரு கேள்வி என்று மனம் யோசித்தப்போதும் “ஆமா…” என்று வாய் ஆமோதித்தது!

“ஹோ! எங்க?” – அடுத்தக் கேள்வி.

“நீயும் ஆயாவும் பூ விப்பீங்க இல்ல…அதுக்குப் பக்கத்தில இருக்க ஆபீஸ்ல…”

“ஹோ…சர்க்கார் உத்தியோகமா?”

“ஆமா! ஸ்டேட் கவர்மென்ட் கூட இல்ல…சென்ட்ரல்…”

“சென்ட்ரல்ன்னா என்ன?”

“சென்ட்ரல்ன்னா… ஹ்ம்ம்… மத்திய அரசுன்னு அர்த்தம்! டெல்லில இருக்கிறது!”

“ஹோ! சரி… எவ்வளவு சம்பளம் வாங்குறீங்க?” – இந்தக் கேள்வியில் மணியும் ராஜாவும் கொதித்தே போயினர். ஆனால், பதில் கூறிய அன்பு அப்படியொன்றும் கொதித்ததாய்…ஏன் அதிர்ந்ததாய் கூடத் தெரியவில்லை.

கர்ம சிரத்தையாய் பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

“ஒரு இருபது வாங்குவேன்…”

“இருபது ரூவாவா? ராத்திரிக்கு சாப்பிடக் கூட ஆவாதே…” – மயிலின் புருவம் ஏளனமாய் சுருங்கியது.

மணியின் கோபம் சுள்ளென ஏற, அன்புவோ “இருபதுன்னா இருபது ரூபா இல்ல. இருபதாயிரம்!”

“ஹப்பா! அடேங்கப்பா… எம்புட்டு பணமில்ல… இருபது நூறு ரூபா நோட்டு இல்ல…” – ஏகப்பட்ட வியப்பு, மயிலுக்கு! முகத்தில் வேறு ஏகப்பட்ட

சந்தோசம்! முகத்தில் இடமில்லாமல் குரலிலும் அது வழிய, மணியின் பொறுமை பறந்தது!

ஆனால், அவளைப் பேச விட்டால் அல்லவோ!

அன்பு தொடர்ந்து பேசினான் – “இல்ல… இரநூறு நூறு ரூபா நோட்டு…”

“அடேங்கப்பா… நெறைய ரூவா இல்ல…” – அவளது முகத்தை விட்டு விலக மனமில்லாமல் புன்னகை உறைந்து போனது!

அன்பு பார்வையை விலக்காமல் பார்த்துக் கொண்டே இருக்க, அவள் அடுத்த ஆயுதத்தை வீசினாள்!

“அப்ப… குழந்தை பிறந்தா ஆஸ்பத்திரி செலவு பாக்க முடியுமா?”

“ஹ்ம்ம் முடியும்!”

“எல்லாவனும் காசு கேட்பானுங்க… காசு காசுன்னு ஆளா பரப்பாங்க…எல்லாருக்கும் காசு கொடுக்கணும்!! உன்கிட்ட இருக்குமா சார்?” – சிறு பிள்ளையாய் விரிந்து, புது விவரம் சொல்லின அவள் கண்கள்.

“ஹ்ம்ம் இருக்கும்!”

“அங்கேயே எல்லாத்தையும் கொடுத்திட்டா… பிறந்த குழந்தைக்குப் பால் டப்பி வாங்கக் காசு வேணுமே?! இருக்குமா?”

“ஹ்ம்ம். இருக்கும்! பால் பவுடர்… டிரஸ்… படுக்கை… எல்லாம் வாங்கலாம்!”

“ஹோ சரி! அப்புறம்… புள்ளையை நல்ல பெரிய படிப்பா படிக்க வைக்கணும். சரியா?”

“சரி… டாக்டர்க்குப் படிக்க வைக்கலாம்!”

“டாக்டரா… ரொம்ப ரூபா ஆகுமே…”

“பரவாயில்ல… என்கிட்டே இருக்கு!”

“ஹ்ம்ம் சரி… ஒரு பிள்ளை சரி… ரெண்டாவது பிள்ள…அடுத்தது…அதுக்கு அப்புறம் பொறக்கிறது?!” – நீண்டு கொண்டே சென்றது அவளது கேள்வி.

“நாடிருக்க நிலைமைக்கு… ஒரு குழந்தை போதும்! மிஞ்சிப் போனா ரெண்டு! மூணு…நாலெல்லாம் வேணாம்!”

“ஹோ வேணாமா? அப்போ ரெண்டாவது புள்ள… அதுக்கும் எல்லாம் செய்வியா?”

“ஹ்ம்ம் கண்டிப்பா… முதல் பிள்ளைக்கு என்ன செஞ்சேனோ அதே மாதிரி ரெண்டாவது குழந்தையும் பார்த்துப்பேன்…”

“சத்தியமா?”

“சத்தியம்!”

“உன்னை எப்படி நம்புறது?”

“ஹ்ம்ம்… எப்படி நம்புறது? ஹ்ம்ம்… என்னோட பேங்க் கணக்கில இருக்கிற பணத்தையெல்லாம் உன்கிட்ட கொடுத்துடுறேன்… நீயே வச்சுக்கோ! அப்போ நம்பிவியா?”

“எல்லாத்தையுமா?” – வாய் பிளந்தாள் மயில்.

“ஆமா…எல்லாத்தையும்!”

“எம்புட்டு வச்சிருக்கே?”

“ஹ்ம்ம்… ரெண்டு லட்சம்…”

“அப்பாஆஆஆஆஆஆஆ………………………………………” என்று அதிர்ந்த மயில், “எனக்கே தந்துடுவியா?” என்றாள் ஆசையாய்.

பதில் சொல்லாமல், தலையசைத்த அன்பு புன்னகை பூக்க, “அப்போ… நா உன்னை கல்யாணம் பண்ணிக்கிறேன்!!” – என்றாளே பார்க்கலாம்! மணி கொதித்துப்போனாள்.

மணிக்கு வந்த கோபத்திற்கு, மயிலை இழுத்து இரண்டு அறை சாத்தியிருப்பாள்!

ஆனால், ஓர் அந்நியப்பெண்ணை எப்படி அறைவது?

இந்த எண்ணம் வந்ததுமே, இந்த அந்நியப்பெண்ணை அல்லவா அண்ணன் திருமணம் செய்து கொள்ள எண்ணித் துடிக்கிறானே! அவளது அதிகப்பிரசங்கித் தனமான கேள்விகளுக்கு, பதில் சொல்லிக் கொண்டு நிற்கிறானே! இவனைச் சொல்ல வேண்டும்!! – கோபம் முழுதும் அன்புவின் புறம் திரும்பியது, மணிக்கு!

பெரிய புத்தன் மாதிரி, சாந்தமே உருவாய், புன்னகை மாறாமல் நின்றிருந்த அன்புவின் கரம் பற்றி இழுதவள், “அண்ணா… இங்கவாங்க!” என்று அவனை இழுத்துக் கொண்டு வெளியே சென்றாள் மணிமேகலை.

அவனோ, “மயிலு… இதோ வந்துடுறேன்! படுத்துக்கோ!” என்று வேலுமயிலிடம் விடைபெற்றுக்கொண்டே வர, மணியின் கோபம் தலைக்கேறியது.

அறையை விட்டு வெளியேறிய நிமிடமில்லாமல், “உங்களுக்கென்ன பைத்தியமா? அவ என்னமோ… பணம் தான் குறி மாதிரி…மாதிரி என்ன மாதிரி… பணம் தான் கல்யாணத்துக்கு அடித்தளம்ன்னு பேசுறா?! நீங்களும்.. சின்னக் குழந்தைக்குப் பதில் சொல்றமாதிரி, பதில் சொல்லிக்கிட்டு இருக்கீங்க?!” என்று படபடவென பொரிந்து தள்ளிவிட்டாள்.

அன்பு மனம் விட்டுச் சிரித்தான்!

“அண்ணா…வேணாம்! எனக்கு ஏற்கனவே கோபம் தலைக்கேறி இருக்கு… டென்ஷன் பண்ணாதீங்க!”

“எதுக்குடா டென்ஷன்?”

“அண்ணா… ப்ளீஸ்! சும்மா நடிக்காதீங்க… அந்தப் பொண்ணு பேசுறது கொஞ்சம் கூட நல்லா இல்லண்ணா! ஒரு கல்யாணத்துக்கு… பணமா ஆதாரம்?!”

“மணி! நீ முதல சொன்ன மாதிரி… அவ ஒரு குழந்தைடா!”

“ப்ச்… குழந்தையைத் தாலாட்டலாம்! கல்யாணம் பண்ணிக்க முடியாது!”

“என்னால பண்ணிக்க முடியுமே!”

“அண்ணா…ப்ளீஸ்! சும்மா… அவசரப்பட்டு…”

“இல்ல மணி! எனக்கு அவளைப் பிடிச்சிருக்கு! முதல கூட… நீ சொன்ன மாதிரி கொஞ்சம் பரிதாபம் இருந்திருக்கலாம்! ஆனா…இப்போ…எனக்கு அவ மேல பரிதாபம் இல்ல… இவ்வளவு வெகுளித்தனமா இருக்காளேன்னு ஒரு சின்ன ஆசை தான் வருது! சின்னக் குழந்தைங்களைப் பாக்கும் போது, அப்படியே அணைச்சுக்கணும் போல இருக்குமே…அப்படி தான் இருக்கு!”

“அண்ணா… நீங்க ரெண்டு பேரும் புருஷன்-பொண்டாட்டி ஆகுறதைப் பத்திப் பேசுறோம்…நீங்க என்னடான்னா குழந்தை… அம்மா…ன்னுட்டு!” – எரிச்சலாய் வந்தது மணிக்கு!

“தாய்க்குப் பின் தாரம்ன்னு சொல்வாங்க! அது பொண்டாட்டிக்கு மட்டுமே உரிய விஷயமா என்ன? புருஷன் எனக்கும் அப்ளிகபிள் தானே?! அவளுக்கு… நான் தாயா இருந்திட்டுப் போறேன்!” – அன்பு முடிவு செய்துவிட்டான்! யார் என்ன சொன்னாலும், அவன் மயிலை மணக்கப் போவது மாறப்போவதில்லை! ஆதலால், எல்லா கேள்விக்கும் அவனிடம் பதில் இருந்தது!

மணிக்கு ஆயாசமாய் வந்தது!

கண்ணைத் திறந்து கொண்டே படுகுழியில் விழுவேன் என்று அடம் பிடிக்கிறானே என்ற ஆதங்கம் அவளுக்கு!

அவள் “உச்சு…” கொட்டும் போதே, ராஜா வந்துவிட்டான்.

“அன்பு இவ்வளவு உறுதியா இருக்கும் போது, நீ ஏன் கவலைப்படுறே?! அவனால, இந்த வாழ்க்கையை ஹேண்டில் பண்ண முடியும்ன்னு அவன் தீர்க்கமா நம்புறதால தானே… கல்யாணத்தை இன்சிஸ்ட் பண்றான்! அவன் மேல எனக்கு நம்பிக்கை இருக்கு… மணி! விடு!” என்றான் மணியின் கையைப் பிடித்து.

“நீங்களுமா?” என ஆரம்பித்து, மணி ஏதோ சொல்லப் போகவும்,

“நீ முதல என்னோட வா…” என அவளை இழுத்துக் கொண்டு மருத்துவமனைக்கு வெளியே சென்றுவிட்டான், அன்புவின் மனம் புரிந்த நண்பன்.

அன்பு அவர்களையே பார்த்துக் கொண்டு நிற்க, “நீ போ மச்சான்… போய் தங்கச்சிகிட்ட பேசிட்டு இரு!” என அவனை வேலுமயிலிடம் அனுப்பியும் வைத்தான்.

சிறு புன்னகையுடன் நகர்ந்த அன்புவை, வேலுமயிலின் தெளிந்த முகம் வரவேற்றது!

முகமே பிரகாசமாய் இருக்க, மேலே சுழலும் காத்தாடியை பார்த்திருந்த அவளது விழிகள், கதவு மூடும் சத்தத்தில், அறை வாயிலைப் பார்த்தன.

சட்டென கருவிழிகள் பய வளையத்திற்குள் சிக்கிக் கொண்டன!

கை கட்டிலை இறுகப் பற்றியது!

உடம்பு உதறியது!

முகம் வெளிறியது!

ஆனால், உதடோ லேசாய் புன்னகை செய்தது!

அன்புவுக்கு எதுவும் புரியவில்லை! ஆனாலும், அவனும் லேசாய் புன்னகைக்க, அவளது புன்னகை சிரிப்பாய் உருமாற்றம் பெற்றது!

ஆனால், கண்கள் பயத்தை மட்டும் கவ்விக் கொண்டே நின்றன!

“என்னம்மா? என்ன பயம்!?” என்றபடியே, கட்டிலைப் பற்றியிருந்த கைகளை அன்பு பிரித்துவிட முயற்சிக்க,

சட்டென அவன் பிடியிலிருந்து கையை உருவிக்கொண்டவளின் கை சில்லிட்டு இருந்தது!

“என்ன மயிலு! ஏன் இவ்வளவு பயம்? நம்ம ரெண்டு பேருக்கும் கல்யாணம் நடக்கப் போகுது… இந்த நேரத்தில இப்படி பயப்படலாமா?”

“ஹோ! கல்யாணம்ன்னா பயப்படக் கூடாதா?”

“ம்ஹூம்! கூடாது!”

“ஏன் கூடாது?”

“இனிமேல் நீயும் நானும் ஒண்ணா… ஒரே வீட்டில இருக்கப் போறோம் இல்லையா? அப்போ… நீ என்னை நிறைய வாட்டிப் பார்க்க வேண்டி வரும்… பேச வேண்டி வரும்… அப்படியிருக்கும் போது, நீ பயந்தா எப்படி?”

“ஹோ… கல்யாணம் ஆனா ஒண்ணா இருக்கணுமா? ஒரே வீடா?”

அன்பு சிரித்துவிட்டான்! இவளுக்குக் கல்யாணம் என்றால் என்னவென்றே புரியவில்லை போலவே! குழந்தை அல்ல… பச்சைக் குழந்தை!

அவனது சிரிப்பில் முகம் சுருக்கியவள், “ஏன் சிரிச்சீங்க??” என்ற கேட்ட கையோடு,

“அச்சோ… தெரியாம கேட்டுட்டேன்! கல்யாணமான ஒண்ணா தான் இருக்கணும்! அப்போ தான்… பாப்பா வரும்! ஆயா சொல்லியிருக்கு!” என்றாள் எதையோ கண்டுபிடித்தவளாய்.

அதன் தொடர்ச்சியாய், அவள் தலையில் அடித்துக் கொள்ளவும், “இதுக்கெல்லாம் போய் தலையில அடிச்சுப்பாங்களா? விடு!” என்றான் கையை விலக்கி விட்டு, மிகவும் மென்மையாய்.

ரொம்பவும் குழந்தையில்லை போலும்! ஒன்றாக இருந்தால் தான் குழந்தை பிறக்கும் என்ற அளவிற்கு விவரம் தெரிந்திருக்கிறதே!

மீண்டும், அவனிடமிருந்து கையை உருவிக் கொண்டாள் மயில். இப்போதும் வேகமாய்.

“என்னடா இது? இப்போ தானே சொன்னேன்… என்னைப் பார்த்துப் பயப்படக் கூடாதுன்னு!”

“ஆனா…பயமா இருக்குதே!”

“ஏன்மா?”

“தெரியல… அதுவுவாவே வருது… எனக்கு…எனக்கு…எனக்குத் தெரியல…”

“சரி பரவாயில்ல, விடு! போகப் போக சரியாகிடும்!”

“எப்படி சரியாகும்?”

“ஹ்ம்ம் எப்படி சரியாகும்?” – என வாய்விட்டே யோசித்தவன், அவளது கையை எடுத்துத் தன் கைக்குள் வைத்துக் கொண்டான்.

அதை இழுக்க முற்பட்ட அவளைத் தடுத்து, தன் பலத்தால் அவளது கையைத் தன்னுடன் பிணைத்துக் கொண்டான்.

“நா கையைப் பிடிக்கும் போது, நீ என்ன தெரியுமா செய்யணும்?” என அவளைக் கேட்டான்.

அவளோ, பயத்தில் கண் விரியப் படுத்திருந்தாள்!

முகத்திலிருந்த ரத்தமெல்லாம், உலக வங்கியில் வாங்கிய கடனுக்கான வட்டியாய் ஓடிவிட, வெள்ளரிப்பழமாய் வெளிறியிருந்தது முகம்!

“ஹ்ம்ம் கேளு… என்ன செய்யணும்னு கேளு…மயிலு! ஹ்ம்ம்!” என உந்தினான், அன்பு.

ம்ஹூம்! வேலுமயிலிடமிருந்து ஒரு வார்த்தை கூட வரவில்லை!

வாயைத் திறந்தால், காற்று கூட வரவில்லை!

அவளது நிலை புரிய, “சரி… நானே சொல்லிடுறேன்! உனக்கு பயம் வந்துச்சுன்னா…
பயப்படக்கூடாது… பயப்படக்கூடாதுன்னு சொல்லிட்டே இரு… பயம் தானா போய்டும்!” என்றான் தன் கைக்குள்ளிருந்த அவளது கையைத் தட்டி.

அப்போதும் மயிலின் நடுக்கம் குறையவில்லை!

முகத்திலிருந்த பய உணர்வு, உடம்பு முழுதுக்கும் வியாபிக்க, உடம்பு அவளையும் மீறி நடுங்க ஆரம்பித்தது!

அன்புவிற்கு அவளது நிலை புரிந்தது!

சட்டென, அவளது கையை விட்டுவிட்டு, விலகி நின்றவன், “கொஞ்ச நாள் போகட்டும்… அப்புறம் பார்க்கலாம்!” என்றான் சிறு முறுவலுடன்.

அவன் விலகியதுமே, அவளது சுவாசம் நேராவதும்… உடம்பு உதறலை உதறுவதும், முகத்தில் ரத்தம் குழுமுவதும், கண்கள் இயல்பாவதும் அன்புவின் கண்களில் பட்டு, கருத்தில் கலந்தன!

அவள் இயல்பு நிலைக்கு மீண்டதும், “மயிலு! நாம எப்ப கல்யாணம் பண்ணிக்கலாம்?” என்றான் சிறு எதிர்ப்பார்ப்புடன்.

ஆனால் அவளோ, “இன்னைக்கே பண்ணிக்கலாமா?” என்றாளே பார்க்கலாம்! அன்புவால் சிரிப்பை அடக்கவே முடியல!

அதற்குள் மயிலுக்குக் கோபம் வந்துவிட்டது!

“ஏன் நா என்ன சொன்னாலும் சிரிக்கிறீங்க? எனக்கு உங்களைப் பிடிக்கலை!” என்று அறிக்கை விட்டாள்.

“ஓகே…ஓகே சாரி!” என உடனே தன் சிரிப்பை நிறுத்திய அன்பு,

“இன்னைக்கே முடியாது, மயில்! நாளைக்கு… இல்லைன்னா ரெண்டு நாள் ஆகட்டும்!”

“ஹோ… ஏன் இன்னைக்கு முடியாது?”

“நீ ஆஸ்பத்திரில இல்ல இருக்கே? இங்க எப்படி கல்யாணம் பண்ணிக்க முடியும்?”

“ஸ்ஸ்ஸ்…ஆமா! ஆஸ்பத்திரில கல்யாணம் பண்ணக் கூடாது… கோவில தான் பண்ணனும்!” என்றவள்,

“எங்க வீட்டுக்குப் பக்கமா… ஒரு முருகன் கோவில் இருக்குது! அங்க பண்ணிக்கலாம்!” என்றாள் ஆசையும், யோசனையுமாய்.

“ஹ்ம்ம் சரி… அங்க பண்ணிக்கலாம்!”

“உனக்கு… அந்தக் கோவில் எங்க இருக்குன்னு தெரியுமா?”

“தெரியாதே!”

“அப்புறம் பண்ணிக்கலாம்ன்னு சொல்றே?” என்று அதட்டிவிட்டு, “எனக்குத் தெரியும்! நான் கூட்டிட்டுப் போறேன்…சரியா?” என்றாள் எல்லாம் தெரிந்த மேதாவி குரலில்.

“சரி!” – “ஆமாம்” சாமி போல் “சரி” சாமி ஆகிப் போனான் அன்பு.

“அப்ப சரி… இன்னைக்குப் போயிட்டு நாளைக்கு வா!” என்று அவனை வழி அனுப்பி வைத்துவிட்டாள், வேலுமயில்!

அன்புவுக்கு ஏனோ கோபம் வரவில்லை! மாறாய், அவள் மீது ஓர் பாசமே உருவானது! பாசம் தானே காதலின் அடித்தளம்! போடட்டும்… போடட்டும்…பேஸ்மென்ட்டை ஸ்ட்ராங்காக போடட்டும்… அப்போ தான் கட்டிடம் நல்லா வரும்!

தன் சொல் கேட்டு, அன்பு அங்கிருந்து நகராமல் நிற்கவே, “ஏன் நிக்கிறே?” என்றாள் அவள்.

“இல்ல… நீ தனியா இருப்பே இல்ல… அதான்!”

அன்பு என்னவோ தணிவாகத் தான் கூறினான். ஆனால், மயில் வெகுண்டு விட்டாள்!

“தனியாவா? தனியாவா?” என்று குரல் உயர்த்திக் கேட்டவள்,

அன்பு முழிக்கவும், “ரெண்டு நாளா தனியா தானே கிடந்தேன்… கண்டவன் எல்லாம் வந்து, கதவைத் தட்டினானே! நீயா துணைக்கு இருந்தே?” என்றாள் ஆவேசமாய்.

அன்புவின் மனம் கண்ணீர் விட்டது!

கண்ணீர் மட்டுமே இதற்குத் தீர்வாகாதே!? தன்னை சமன் செய்து கொண்டவன், “யாரும் வந்து கதவு தட்டினா… அவங்களை அடிக்கிறதுக்கு தான்… நா இங்க இருக்கேன்னு சொல்றேன்!” என்றான் கொஞ்சம் அழுத்தம் பெற்ற குரலில்.

மயிலின் மான் விழிகள் மீனென துள்ளி விழித்தன!

“ஆமா இல்ல… நீ இருந்தா யாரும் வர மாட்டாங்க இல்ல… அப்போ நீ இரு!” என்றுவிட்டு, திரும்பிக் கொண்டாள்.

உடனேயே “எனக்குத் தூக்கமா வருது! நா தூங்கவா? நீ பத்திரமா பாத்துக்கிறியா?” என்றாள் அன்புவிடம்.

“ம்ம். பார்த்துக்கிறேன்!” என்றான் அவனும், புன்னகையுடன்.

நிம்மதியாய் உறங்கிப் போனது, அக்குழந்தை!

தன்னை ஓர் காவலாளியாய் எண்ணி, அவள் உறங்குவது அவனுக்கு ஓர் நிம்மதி உணர்வையே கொடுத்தது எனலாம்!

ஆனால், ஆண்களைக் கண்டாலே நடுங்குபவள், எப்படி தன்னை நம்புகிறாள் என்றும் புரியாமல் குழப்பியது!

திருமணம் என்ற பந்தத்திற்கும் முழுதாய் அர்த்தம் புரிந்தது போல் தெரியவில்லை. அப்படியிருக்கையில், கணவனாய் தன்னை எண்ணி அவள் நிம்மதி கொள்வதும் இயலாத காரியம் என்று மனம் அடித்துச் சொன்னது!

குழம்பிய மனதை மேலுமேலும் குழப்பிக் கொள்ளாமல், அவளது நிம்மதியைத் தானும் தழுவி, சற்று நேரம் அவளருகே அமர்ந்திருந்தான்.

அரை மணி நேரத்திற்குள், அடுத்து நடக்க வேண்டிய காரியங்களை அவனது மனம் திட்டமிட, அதில் உடனே செயல்படுத்த வேண்டிய காரியங்களுக்கு, மணி தேவைபட்டாள்.

மெல்ல எழுந்து, மயிலின் முகம் பார்த்தவன், ஆழ்ந்த உறக்கமும்... மெல்லிய குறட்டையுமாய் அவளைக் கண்டதும், ஓசைபடாமல் கதவைத் திறந்து கொண்டு, வெளியே வந்தான்.

மருத்துவமனைக்கு வெளியே சென்றிருந்த மணியும், ராஜாவும் வந்திருக்கவில்லை.

கண்களை நாலா பக்கமும் சுழல விட்டபடியே சென்றவன், அங்கே பல வண்ணங்களில் கோப அரிதாரம் பூசிய மணியையும், அவளை எப்படி சமாதானம் செய்யலாம் என்ற யோசனை ரேகையுடன் ராஜாவும் நிற்கக் கண்டான்.

“என்ன மணி மேடம்! இன்னும் கோபம் போகலை போல...” என்றபடியே வந்தவன்,

மணியின் முகத் திருப்பலில், “மணி... உன்னோட மனசு எனக்குப் புரியுதுடா! பட்... என்னால இந்த கல்யாண முடிவை மாத்திக்க முடியாது...

அதுவும் இப்ப அவகிட்ட பேசிட்டு வந்த பிறகு, சத்தியமா முடியாது!” என்றான் விளக்கம் போல்.

“இப்ப என்ன சொன்னா அவ? உனக்கு சொந்தமா வீடிருக்கா? வீட்டு மேல கடனிருக்கான்னு கேட்டாளா?” என்று பட்டென வந்த மணியின் வார்த்தைகள்!

“மணி!” என ராஜா அதட்ட,

“இல்ல மணி! பணத்து மேல ஆசைப்பட்டு…அவ அப்படி கேட்ட மாதிரி எனக்குத் தோணலை! அதுவும் பாரேன்… அவ அவளுக்குன்னு எதுவுமே கேட்கலை! குழந்தைக்கு… குழந்தை படிப்புக்குன்னு தான் கேட்கிறா! அவ மனசில ஏதோ ஒரு காயமிருக்கு மணி… அதான் இப்படி கேட்க வைக்குது!” என்றான், தன்னை…இல்லை மயிலை விளக்கிவிடும் வேகத்துடன்.

“ஹ்ம்ம். ஓகேண்ணா! உங்களுக்குப் பிடிச்சிருந்தா சரி…” என்று மணி அரைமனதாய் ஒத்துக்கொள்ள,

“அப்ப கல்யாண வேலையைப் பாக்கலாம் இல்லையா?” என்றான் அன்பு, அவளிடம்.

“ஹ்ம்ம். பாருங்க!” என மணி பட்டும்படாமல் சொல்லவும்,

“என்னடா இவ்வளவு விட்டேறியா பேசுறே?! கல்யாணம்ன்னா…அதுவும் உன்னோட கல்யாணம்ன்னா துள்ளிக் குதிச்சிருக்க வேணாமா?” என்றான் அன்பு, உதட்டில் அடக்கிய சிரிப்புடன்.

“என்னது?” என மணி அதிர,

“டேய் மச்சான்? என்னடா சொன்னே? உன்னோட கல்யாணமா? ச்சே ச்சே…மணியோட கல்யாணமா? டேய்!” என இன்ப ஊற்றாய் உள்ளம் துள்ளினான் ராஜா.

“பின்னே… தங்கச்சிக்குக் கல்யாணம் பண்ணி வைக்காம, நா எப்படி கல்யாணம் பண்ணிக்கிறது?!” என அன்புவின் கேள்வியிலேயே பதில் கிடைத்துவிட, ராஜா மனம் துள்ளினான் என்றே சொல்ல வேண்டும்.

“என்ன அண்ணா விளையாடுறீங்களா? எனக்கு இன்னும் படிப்பே முடியல…”

“சும்மா ஏதாவது சொல்லணுமேன்னு சொல்லக் கூடாது! லாஸ்ட் செமஸ்டர் ப்ராஜெக்ட் முடிஞ்சிடுச்சு இல்ல… இன்னும் வைவா மட்டும் தானே? அப்புறம் என்ன?” என்ற அன்பு,

“இன்னும் ரெண்டு மாசத்தில எப்படியும் கல்யாணம் வச்சிடணும்ன்னு இருந்தேன்… ஆனா…இப்போ அதுக்கான அவசியம் வந்துடுச்சு!” என்றான், தன் முடிவை முன்னிறுத்தி.

“அது…வந்து…உடனேவா…” என இழுத்த மணி,

“என்ன மணி? என்னோட முடிவை உன் மேல திணிக்கிறேன்னு நினைக்கிறியா?” என்ற அன்புவின் வருத்தம் படிந்த குரலில்,

“ச்சே…அப்படியில்லண்ணா…”

“அப்புறம் என்ன? இவன் என்னடா நம்ம வாழ்க்கையைத் தீர்மானிக்கிறதுன்னு நினைக்கிறியா?” என்றான் அன்பு மீண்டும்.

அவனது குரல் காட்டிய குற்ற உணர்வைப் பொறுக்க முடியாமல், கையெடுத்து அவனைக் கும்பிட்டவள், “அய்யா சாமி! சும்மா மனசைப் போட்டு குழப்பிக்காம…கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணுங்க! எனக்கு சம்மதம்!” என்றாள் தீர்மானமாய்.

ராஜாவின் முகத்தில் அப்படியொரு பளபளப்பு! ஆயிரம் பல்புகளை, கழுத்தில் கட்டித் தொங்க விட்டது போல் அப்படியொரு பிரகாசம்!

அவனது மிதமிஞ்சிய சந்தோஷத்தைக் கண்ட அன்பு, “இந்த கல்யாணம் முடிவானதில, மயில் சந்தோஷப்படுறாளோ இல்லையோ… இல்ல மணி சந்தோஷப்படுறாளோ தெரியாது! என்னோட மச்சானுக்குத் தான் ஏக சந்தோஷமா இருக்கு!” என்றான் விரிந்த சிரிப்புடன்.

“ஹிஹிஹி” என ராஜா அசடு வழிய,

“டேய் மச்சான்! உனக்கு மாப்பிள்ளை களை வந்திருச்சுடா!” என்றான் அன்பு, அவன் தோள் தட்டி.

“அப்படியாடா?!” என்று அதற்கும் ஒரு முறை ராஜா வெட்கம் கொள்ளவும்,

“டேய்…டேய்…மணி தாண்டா கல்யாணப் பொண்ணு! அவ தான் வெட்கப்படணும்! நீ கெத்தா நிக்கணும்! இப்படி…நாணிக் கோணிகிட்ட நிக்கிறே?!” என்றான் அடக்க முடியா ஆனந்தத்துடன்.

ராஜாவும் தன் வெட்கத்தைக் கை விட்டு, அன்புவை அணைத்து “தேங்க்ஸ்டா மச்சான்!” என்றான், முழு மனதாய்.

அந்த அணைப்பே, அவனது உள் மனதை ஒளியிட்டுக் காட்டிவிட, “இந்த தேங்க்ஸ்க்கு சொந்தக்காரி… உன்னோட தங்கச்சி! அவள மட்டும் நான் இன்னைக்குப் பாக்கலை… உனக்கு இப்போதைக்குக் கல்யாணம் இல்ல!” என்றான் அன்பு, பெருந்தன்மை மகா பிரபுவென!

ஆண்கள் இருவரும் மலர்ந்து சிரித்த போதும், மணியின் முகம் அவ்வளவாய் தெளிவடையவில்லை! பெண் அன்றோ, வரப் போகும் பிரச்சனையை நினைத்து, இப்போதே கவலை கொண்டது, அவள் மனம்!!

இந்தப் பெண் மனம் கவலை கொண்டிருக்க, அலுவலகத்திலிருந்த பெண்ணின் மனமோ கோபத்தின் கிடங்காகிப் போனது!

“என்னது… அந்தப் பூக்காரியை கல்யாணம் பண்ணிக்கப் போறியா? நீ என்ன லூசா? என்னைப் பழி வாங்குறதுக்காக… இப்படிப் பண்றியா?” என்று ஏகத்திற்கும் பொரிந்து தள்ளியது!

ஆனால், அது அனைத்தையும் “உன்னை நான் ஏன் பழி வாங்கணும்?! நீ என்னோட ஃபிரண்ட்… உன்னைப் போய் நான் ஏன் பழி வாங்கணும்?!” என்ற கேள்வியில் அதட்டித் தகர்த்தியவன்,

“என்னோட வார்த்தையைக் கவனிச்சியா? ஃபிரண்ட்… ஃபிரண்ட் மட்டும் தான்! புரிஞ்சதா? அன்னைக்கே… நான் விளக்கமா சொல்லிட்டேன்… இதுக்கு மேலேயும் ஏதாவது லூசுத்தனமா கற்பனை பண்ணிட்டு, காளியாட்டம் ஆடிட்டு இருந்தின்னா இரு! ஐ டோன்ட் கேர்!” என்றான் தெளிவாய்!

கூடவே “புதன் கிழமை அன்னைக்கு, சைதாப்பேட்டையில இருக்க சுப்பிரமணியர் கோவில கல்யாணம்! முதல மணி-ராஜாவோட

கல்யாணம்! அடுத்து எங்கது! இஷ்டமிருந்தா வா!” என்று விட்டு நகர்ந்தே விட்டான்!

கல்யாண வேலை மளமளவென நடந்தது!

விஷயம் கேள்விப்பட்ட கனியன்...சுபாஷ்...பொம்மன் மூவருமே, மூன்று வெவ்வேறு மனநிலையில் இருந்தனர்!

கனியன், அன்புவை ஆதரித்தான்! நண்பனின் முடிவு தப்பாகாது என உறுதியாய் நம்பினான்!

பொம்மனுக்கு இந்தக் கல்யாணத்தை ஏற்றுக் கொள்ள முடியவில்லை! பெற்றோரைத் தான் அறியாத வயதில் பிரிந்து விட்டோம்! வாழ்க்கைத் துணையாவது இறுதி வரை வர வேண்டும் என்ற எண்ணம் கொண்ட அவனுக்கு, ஒருத்தரோடு பேசி...பழகி...காதல் பகிராமல் கல்யாணம் செய்வது, வாழ்க்கையை அந்தரத்தில் தொங்கவிட்டு விடும் என்ற நம்பிக்கை! அதனாலேயே, அன்புவின் கல்யாணத்தை அவனால் ஜீரணிக்க முடியவில்லை!

சுபாஷிற்கோ, கேள்விகள்! கேள்விகள் கேள்விகள் மட்டுமே!

ஆனால், அன்பு யாரது மனநிலையையும் சீர் செய்யும் நிலைமையில் இருக்கவில்லை. ஏகப்பட்ட வேலைகள் அணிவகுத்து நின்றன!

அதனடுவே, மயிலின் கேள்விகளுக்கு வேறு பதில் சொல்ல வேண்டியிருந்தது!

மணிக்கோ, அவளிடம் பேசவே இஷ்டமிருக்கவில்லை எனும்போது, அன்பு தான் அவளைப் பார்த்தாக வேண்டியிருந்தது!

மணியின் மனதை மாற்ற அன்புவும் அவ்வளவாய் முயற்சிக்க வில்லை! தங்கையும் கெட்டவள் இல்லை; மயிலும் கெட்டவள் இல்லை எனும் போது, மணியின் மனது சீக்கிரம் மாறும் என்று மனதார நம்பினான் அன்பு.

அந்த நம்பிக்கைக்கு நீர் ஊற்றுவது போல், செவ்வாய்க்கிழமை மாலை மயிலை மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு அழைத்து வந்த போது, அவளை நன்றாகவே கவனித்துக் கொண்டாள்.

மயிலும், அந்த வீட்டின் ஒரே பெண்ணான மணியிடம் ஒட்டிக்கொண்டாள்!

“மணிக்கா…மணிக்கா…” என அவள் அழைப்பதே, சின்னஞ்சிறு கன்றின் கழுத்தில் கட்டிய கிண்கினியாய் நாதம் எழுப்பியது!

அன்றைய இரவு, மணியுடனே மயில் உறங்கிவிட, நான்கு மணிக்கெல்லாம் அவர்களது அறைக்கதவைத் தட்டினான் அன்பு.

அவன் என்னவோ மெதுவாகத் தான் தட்டினான்! ஆனால், அந்த விடியற்காலையும், வாகனங்களின் இரைச்சல் இல்லாத நிசப்தமும், “தட்… தட்… தட்…” என வேக ஒலிக்கற்றைகளை உண்டாக்கியது!

அந்த நேரத்துத் துயல் களைப்பிற்கு பழகிய மணிக்கும்… ஏன் அன்புவுக்கும் அந்த ஒலி, சாதாரணமாய் பட, மணி “இதோ வரேண்ணா!” என்றபடியே பாயிலிருந்து, எழுந்தாள்.

எழுந்தவள், அப்படியே உறைந்து நின்றுவிட்டாள்!

அந்த அறையில் வைக்கப்பட்டிருந்த இரு பீரோக்களின் இடைவெளியில், கால்களை மடக்கியபடி, கைகளைச் சுருட்டி கால் முட்டிகளை இறுக அணைத்தப்படி, கண்ணில் அளவு மீறிய பயமும், அடக்கி வைத்த அழுகையுமாய் அமர்ந்திருந்தாள் மயில்.

“என்ன மயில்…என்னாச்சு?” என மணி பதற,

“க…க…கத….வ்….வு…த…தட்டு…றா….ங்க…” – மயிலின் குரல் ஏகத்திற்கும் நடுங்கியது.

“அண்ணன் தான் மயிலு! ஏன் பயப்படுறே!?” என்ற மணி, அவளை அந்த இடத்திலிருந்து வெளியே இழுத்து வர முயற்சி செய்தாள்.

ம்ஹூம்! மயில் ஒரு அடி கூட நகரவில்லை!

“வேணாம்… நா …. வ…ர… மாட்டேன்!” – அவளது வார்த்தையில் “மாட்டேன்” மட்டும் ஆணித்தரமாய் ஒலித்தது! எவ்வளவு ஆணித்தரம் என்றால், வெளியே நின்ற அன்புவே “என்னாச்சு மணிம்மா? என்ன பிரச்சனை?” என்று பதறும் அளவிற்கு!

ஏற்கனவே ஒடுங்கிப் போயிருந்த மயில், அன்புவின் குரல் கேட்டதும், அப்படியே சமைந்தாள்!

“மணிக்கா…மணிக்கா…அவன் பேசுறான்… வெளிய வான்னு சொல்றான்… போவாத மணிக்கா! அவன் பிடிச்சுப்பான்! அவன்… கழுகன்!” என்று அந்த அதிகாலையிலும், மயிலுக்கு வேர்த்து வடிந்தது!

“இல்லடா… அது அன்பு அண்ணா டா! அன்புடா… உன்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறவங்க…” – மணி புரிய வைக்க முயற்சி செய்ய,

“ஐயோ…இல்லக்கா! நீ நம்பாத… அவனுங்க நல்லவங்க இல்ல… வெளிய போனா அசிங்கமா பேசி…கையைப் பிடிச்சு இழுப்பாங்க! ஐயோ வேணாம் போவாத! இங்க வா… நா தள்ளி உட்கார்ந்துக்கிறேன்,… நீயும் உட்காந்துக்கோ! வா! வா!” என்று மணியையும், தன் பக்கம் இழுத்தாள்!

அதற்குள், அன்பு அங்கே பதறிவிட்டான்!

“மணி…என்ன பண்றே? கதவைத் திறம்மா! மணி! மணி!” என அவன் அபாய மணி எழுப்ப,

மயிலோ, அவனது ஓரோர் அழைப்பிற்கும், சுவற்றுக்கும் தனக்குமான இடைவெளியை குறைத்துக் கொண்டே வந்தாள்! கொஞ்சம் விட்டால், சுவற்றைப் பேற்றுக்கொண்டு, உள்ளேயே அடக்கமாகிவிடும் நிலையிலிருந்தாள் வேலுமயில்.

மணிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை!

ஒரு பக்கம் “மணி…கதவைத் திற! கதவைத் திற!” என்று அன்பு அலறிக் கொண்டிருந்தான்.

மறு பக்கம் “போவாத மணிக்கா! ஐயோ… போவாதேஎன்! வெளிய நிக்கிறவங்க எல்லாம் நாய்ங்க… போவாத கடிச்சிடுவாங்க!” என்று மயில் துடித்துக் கொண்டிருந்தாள்.

ஒரு நிலைக்கு மேல் பொறுக்க முடியாமல், அன்பு கதவை வேகமாய் தட்டத் தொடங்க,

அவன் அடித்த ஓரோர் அடிக்கும், மயிலின் உடம்பு இரண்டு முறை தூக்கிப் போட்டது!

முகத்தில் அப்படியொரு பயம்! பயம் என்பதை விடவும், உயிரைக் காத்துக்கொள்ளும் பரிதாபம்! மணி உருகிப் போனாள்!

சட்டென முடிவெடுத்தவளாய், “அண்ணா…கொஞ்ச நேரம் சும்மா இருங்க! நாங்க வரோம்!” என்று அன்புவை அடக்கியவள், “மயிலும்மா… ஒண்ணுமில்லைடா! நான் பார்த்துக்கிறேன்… மணிக்கா பார்த்துக்கிறேன் சரியா? நம்மளை யாரும் எதுவும் பண்ண மாட்டாங்க!” என்றாள் மயிலின் அருகே சென்று அமர்ந்தபடி.

“இல்ல… இல்ல… செய்வாங்க…” – மயிலின் முகம் பீதியை விட பயந்தது!

“இல்லடா! இங்க பாரேன்… அக்காவைப் பாரேன்…” என அவள் தாடை தொட்டு நிமிர்த்தியவள்,

“உங்க ஆயா இருக்கும் போது, யாராவது உன்னைய நெருங்குனாங்களா?” எனக் கேட்டு, தானே “இல்லையில்ல!?” என்றும் இணைத்துக் கொண்டாள்.

வருத்தத்தை ஏந்திய மயிலின் முகம், ஆமோதிப்பைக் காட்டியது!

“இப்ப… ஆயாவுக்குப் பதிலா இந்த மணிக்கா இருக்கேன்! நான் பாத்துப்பேன்! பயப்படாத! சரியா!?” என்றாள் குழந்தைக்கு சொல்வது போல்.

“நிசமாவா?” – தலை சாய்த்து, சந்தேகமாய் கேட்டாள் மயில்.

அதில் தன்னைத் தொலைத்தவளாய், “நிஜமா!” என்றாள் மணி, அவளது முடி கோதி.

“இப்ப பாரேன்… நா போய் கதவைத் திறப்பேனாம்… அங்க அன்பு … அதான் உன்னைக் கல்யாணம் கட்டிப் போறார் இல்ல அவர் நிப்பாராம்! ஆனா… உன்னைய எதுவுமே செய்ய மாட்டாராம்! சரியா? பாப்போமா?” என்றாள் மெதுமெதுவாய்.

“ம்ஹூம்! ம்ஹூம்! போவாத!” என்று முரண்டு பிடித்தவளை, ஒரு வழியாக மணி சமாதானம் செய்து முடித்தப்போது, அரை மணி நேரம் ஆகியிருந்தது!

மெல்ல அவளை அழைத்துக் கொண்டு, கதவைத் திறந்தாள்.

மணியின் கரங்கள், தாழ்ப்பாளின் கொக்கிக்குச் செல்ல, மயிலின் கரங்கள் மணியை இறுகப் பிடித்தன.

“ஒண்ணுமில்லைடா… பயப்படாதே!” என்று அவளைத் தட்டிக் கொடுத்துவிட்டு,

அவள் கதவைத் திறக்க, மயில் அவள் முதுகோடு ஒண்டினாள்.

கதவிற்கு அந்தப் பக்கம், தவிப்பின் தவப்புதல்வனாய் உள்ளம் உருக நின்றிருந்த அன்புவின் மணியைக் கண்ட பின்னரே நேரானது!

“என்ன மணிம்மா?” என அவன் ஆரம்பிக்க,

மயில், தன் முகத்தை மணியின் முதுகிலிருந்து பிரித்து, மெல்ல தலையை மட்டும் வெளியே நீட்டிப் பார்த்தாள்!

அதிகாலைப் பணி தூவிய செம்பருத்தி செடியிலிருந்து, அழகிய வெண் செம்பருத்தி ஒன்று மலர்வது போலிருந்தது, அன்புவுக்கு!

அவனைக் கண்டதும், மயிலின் முகத்திலிருந்த பயம் வடியத் தொடங்கியது.

தன் பின்னே நின்றிருந்தவளின் முகபாவனையைக் கவனிக்காத மணி “இங்க பாத்தியா….” என ஆரம்பிக்கும் போதே,

“நீ தானா?” எனக் கோபமாய் கேட்டபடி, மணியை விட்டு விலகி நின்றாள் வேலுமயில்.

“நான் தான்டா!” என அன்பு பணிவாய் சொல்ல,

“இப்படியா என்ன பயமுறுத்துறது? நா யாரோ காவாலி பசங்கன்னு நினைச்சுட்டேன்!” என்றாள் கோபம் குறையாமல்.

“அச்சோ! பயந்துட்டியாடா!?! சாரி! அன்பு…சாரி என்னடா?!” என அன்பு, மன்னிப்பு கேட்கவும்

மயில் “சரி பரவாயில்லை! இனிமே இப்படி செய்யாத! எனக்கு ரொம்ப கோபம் வரும்… சொல்லிட்டேன்!” என்றாள் சுட்டு விரல் நீட்டி.

“சரிடா!” என்றான் நமது சரி சாமியார்.

“ஹே என்ன நடக்குது இங்க? இது வரைக்கும்… இவ பயந்த பயம் என்ன? இப்ப…பேசுற பேச்சு என்ன?” என்று இடுப்பில் கை வைத்து, முறைத்த மணி,

“ஏய்…மயிலு! இங்க வா! அதென்ன… எங்க அண்ணனைப் பார்த்தா உனக்குப் பயமில்லையா? ஏன்?” என்றாள் அதிகாரமாய்.

“வராத பயத்தை…ஏன் வரல… ஏன் வரலன்னு கேட்டே வர வச்சுடுவா போலவே! சும்மா இரேன்…மணி!” என்று மனதிற்குள் பொருமிய அன்புவை சந்தோஷப்படுத்தவென, மயில் பேசினாள்.

“ஆமா… எனக்கும் அவருக்கும் கல்யாணம் ஆகப் போகுதில்ல! அதுனால… பயப்படக்கூடாது! சொல்லியிருக்காங்க!” என மயில் அழுத்தம் கொடுக்க,

“யாரு சொல்லியிருக்கா?” என்றாள் மணி, சுவாரஸ்யமாய்.

“இந்தா…இவரு தான்! கல்யாணம் ஆயிட்டா ஒரே வீட்டில இருக்கணும்ல… அதனால பயப்படக்கூடாது சொல்லியிருக்கான்… பயம் வந்தா பயப்படக்கூடாது…பயப்படக்கூடாது சொல்லிட்டே இருக்கணும் சொல்லியிருக்கான்! அப்ப…பயம் போயிடுமாம்!” என்று பதில் கூறியவள்,

“நீயும் பயப்படக்கூடாது பயப்படக்கூடாது சொல்லு…சரியா மணிக்கா?” என்றாள், மேலும் மணிக்கே ஆசிரியையாய் மாறி.

அவள் கூறிய தினுசில், வாய் விட்டுச் சிரித்த அன்புவை முறைத்தாள், மணிமேகலை!

“சரிங்க டீச்சர் அம்மா!” என மணி போலி பணிவு காட்ட,

“அச்சோ! நா தப்பா சொல்லிட்டேன்… அதை மறந்துடு என்ன?” என்றாள் மயில் வேகவேகமாய்.

“ஏன்?” என்று அன்பு கண்ணாலும், மணி வாயாலும் கேட்க

“யாரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறோமோ…அவங்களைப் பாத்தா தான் பயப்படக் கூடாது…பயப்படக் கூடாது சொல்லணும்! இவங்களை…நா தானே கல்யாணம் பண்ணிக்கப் போறேன்…அதனால நா தான் சொல்லணும்!” என்று அதிமேதாவி பதில் வந்தது மயிலிடமிருந்து.

மணியும் அன்புவும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரிக்கும் போதே, “நீ… யாரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறே?” என்றாள் மயில் அடுத்தக் கேள்வியாய்.

“ஹ்ம்ம்! ராஜாவை!”

“ஹோ! சரி! அப்ப… அவரைப் பாக்கும் போது மட்டும் பயப்படக்கூடாது…பயப்படக்கூடாது சொல்லு சரியா?” என்றாள் மயில், விவரமாய்.

“எனக்குத் தான் அவரைப் பாத்து பயமே இல்லையே! அப்புறம் எதுக்கு பயப்படக்கூடாது…பயப்படக்கூடாது சொல்லணும்?” என அமானி கேட்க,

“ஹோ! உனக்கு பயமே இல்லையா?!! நிஜமாவா?” என ஏகப்பட்ட அதிர்ச்சி மயிலுக்கு!

“ஆமா!” என மணி சிரிக்க,

“நீ ரொம்ப சூப்பர்!” என்று செர்டிபிக்கேட் கொடுத்தாள் மயில்.

மணியால், சிரிப்பை அடக்கவே முடியவில்லை! அன்புவாலும் தான்!

“நீ ரொம்ப சூப்பர்டா மணிம்மா!” என அன்புவும், மயிலின் குரலிலேயே மிளற்ற,

“புருஷனுக்கும் பொண்டாட்டிக்கும் என்னைப் பாத்தா நக்கலா இருக்கா? அடி பிச்சுடுவேன்!” என்று அண்ணனை அடித்தாள் மணி.

அடி வாங்கினாலும், அண்ணன் காரன் ஆனந்தமே பட்டான்! பின்னே, மயிலோடான தன் திருமணத்தை தங்கை ஆதரித்துப் பேசிவிட்டாளே!

சந்தோஷமாய் கிளம்பினர் அனைவரும்!

நண்பர்களே “சொந்தமாகிப் போனதால், திருமணத்திற்கு பெரிதாய் யாரும் வரவில்லை.

கல்யாணத்தம்பதியருடன் சேர்த்து, இருபது பேர் தான் இருந்தனர்! அன்புவின் அலுவலக நண்பர்கள் (உதயா உட்பட), ராஜாவின் அலுவலக சகாக்கள், மணியுடன் படிப்பவர்கள் மற்றும் அக்கம் பக்கத்தில் சிலர்.

முஹூரத்தத்தின் முதல் பாதியில், மணி ராஜாவின் ராணியாகிவிட,

அடுத்த பாதியில், மயில் அன்புவின் கழுத்தில் மாலையிட்டு, மனதினுள் காலையானாள் (உதயமானாள்)!

கல்யாணம் என்ற சடங்கை, அவள் எப்படி எதிர்க்கொள்வாளோ என்ற பயத்துடனே இருந்த அன்புவை ரொம்பப் பயப்படுத்தாமல், சமத்தாக சீர் கொஞ்சும் மாங்கல்யத்தை வாங்கிக் கொண்டாள்!

முகத்தில் தான் அவ்வளவாய் உணர்ச்சிகள் இல்லை!

நிறைய பேரைப் பார்த்ததும் ஏற்பட்ட பயத்தைத் தவிர, மயிலிடம் பெரிதாய் ஒன்றும் உணர்ச்சிக் கொந்தளிப்பு இல்லை! சாந்தமாகவே இருந்தாள்!

பயம் ஏற்படும் போது மட்டும், அன்புவின் கரங்களை இறுகப் பிடித்துக் கொண்டு, அவற்றைத் தன்னைக் காக்கும் அரணாய் மாற்றிக் கொண்டாள்!

சில சமயம், அவளது கைகளில் தென்படும் அதீத நடுக்கம் “இப்படி பயப்படுகிறாளே!” என்று வருத்தத்தை உண்டு பண்ணியபோதும், அதை சீர் செய்யத் தன்னை அரணாக்கிக்கொள்கிறாள் என்பதில் சந்தோஷமடைந்தான், அன்பு!

திருமணத்திற்கு வந்திருந்த பலருக்கு, சந்தோஷமே என்கையில், சிலருக்கு சன்னமாய் வருத்தம்! ஒருத்தருக்கு மட்டும், ஏகப்பட்ட கோபம்! அந்த ஒருவர் வேறு யாராய் இருக்க முடியும்? உதயாவே தான்!

திருமணம் முடிந்ததும், ஒரொருவராய் பரிசு கொடுக்க, உதயாவின் முறை வந்தது.

அவள் அருகே வந்ததும், “நீ வந்ததில எனக்கு ரொம்ப ரொம்ப சந்தோசம், உதய்!” என்றான் அன்பு, நிஜமான சந்தோஷத்துடன்.

“அதான்…ஏற்கனவே சொல்லிட்டியே! இப்ப என்ன?” என்று எரிந்து வழிந்தவளிடம், கோபம் கொள்ளாமல் லேசாய் புன்னகைத்தான் அன்பு.

“பெரிய புன்னகை மன்னன்! ரொம்ப சிரிக்காத… அப்புறம் பொக்கைவாயா தன் அலையணும் சொல்லிட்டேன்…அப்புறம் புன்னகையும் செய்ய முடியாது… பொக்கநகையும் செய்ய முடியாது சொல்லிட்டேன்!” – தன் எரிச்சல் முழுதையும் வெளியிட்டாள் உதயா.

“ஹஹா”என அவன் வாய் விட்டு சிரிக்க,

“ரொம்ப சிரிக்காத! என்னமோ… ஊரில இல்லாத அழகியைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட மாதிரி… ரொம்பத் தான் சீன் போடுறே! அவளைப் பாரேன்… ஆமை வடை மாதிரி கலரு… டொக்கு விழுந்த கன்னம்… ஆழமா தொண்டின குழி மாதிரி கண்ணு… சேலையே நிக்காத ஒரு இடுப்பு… பென்சில் மாதிரி உடம்பு… இவளைப் போய்! வெளி அப்பியரன்ஸ் எல்லாம் விடு… அவளைப் பார்த்தா ஒரு நார்மல் பொண்ணு மாதிரியா இருக்கு! பேக்கு மாதிரி… இங்கயும் அங்கயும் பார்த்துக்கிட்டு! ஒண்ணு ஒண்ணுக்கும்…உன்னைப் போட்டு படுத்தி எடுக்கப் போகுது பாரு! சரியான ஐந்து! என்னை மிஸ் பண்ணிட்டோமேன்னு நீ கண்டிப்பா ஃபீல் பண்ணுவே!” என்று மயிலைப் பற்றிய தன் அபிப்ராயத்தைக் கொட்டிவிட்டு, கோபத்தையும் கூடவே உமிழ்ந்தாள்!


“ஃபீல் பண்ணும் போது சொல்லி விடுறேன், நீ…உன் ஹஸ்பண்டோட வந்து ஃபீல் பண்ணிட்டுப் போ!” என்று அவளுக்குப் பதிலடி கொடுத்தவன், அதன் பின்னர் உதயாவை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

தன்னைப் பற்றி பேசுகிறார்கள் என்ற எண்ணமே இல்லாமல், சுற்றி சுற்றி கண்ணைச் சுழல விட்டுக் கொண்டு, ஆதரவிற்கு அன்புவைப் பற்றிக் கொண்டு நின்ற மயிலின் மீது அன்புவின் பார்வை படிந்தது.

கோதுமையில் செய்த குழல் போல் மேனி! துள்ளியாடும் மீன்களின் வடிவமாய் கண்கள்! மழுங்கிப் போன கத்தியாய் மூக்கு! தேன் குடிக்கும் வண்டு குடைந்த கன்னங்கள்! தேன் சுரக்கும் திவ்விய உதடுகள்! சிறு மலரென வளைந்து நின்ற காது! ஒலிம்பிக் வளையங்கள் போல்

சுருண்டிருந்த முடி! – கண்கள் மெல்ல மெல்ல முன்னேறி, அன்புவினுளிருந்த கவிஞனை உசுபேத்தி விட்டன!

இது தான் “கணவன்” பார்வை என்பது போலும்!



“அன்பிலார் எல்லாம்!” - என்.சீதாலெட்சுமி

திருமணம் என்னவோ முடிந்துவிட்டது!

அன்புவிற்கு, அன்றைய இரவை நினைத்தால் தான் திகில் பிடித்துப் போயிருந்தது!

இன்று இரவு, மணியை மயிலுடன் படுத்துக்கொள் என்று சொன்னால், உயிர்த்தோழனான ராஜா ஜென்ம எதிரியாய் மாறி விட வாய்ப்பு அதிகம் இருக்கிறது!

“என்ன செய்வது? என்ன செய்வது?” என்று அவன் தவித்துக் கொண்டிருக்கும் போதே,

“மச்சான்... நீ கவலைப்படாதேடா! நான்... அந்தக் கேள்வியப்பன் சுபாஷு... டால்லன்(பொம்மன்) எல்லாரும் செகண்ட் ஷோ சினிமாக்குப் போயிட்டு, அப்படியே என் ஃபிரண்டு வீட்டில தங்கிக்கிறோம்! நீ ஜமாய்!” என நிலைமை புரியாமல் வெறுப்பேற்றினான் கனியன்.

“டேய்... வேணாம்! மனுசனோட நிலைமை புரியாம... போடா!” என்று அவனை எச்சரித்த அன்புவின் யோசனை செய்யும் படலம் மட்டும் முடிவடையவே இல்லை.

ஆனால், அவனது மனம் உணர்ந்த தங்கையாய் “அண்ணா... நானும் அவரும் அவரோட ஃபிரண்டு வீட்டுக்குப் போறோம்! நீயும்...மயிலும்...கூடவே மத்தவங்களும் இங்கேயே இருங்க!” என்றபடியே வந்தாள் மணி.


முதலில் அன்புவிற்கு எதுவும் புரியவில்லை.

“ஏன் மணி?” என அவன் யோசனையாய் இழுக்க,

“உன் மண்டை... நாங்க போனதும் புரியும்...” என்று அவனது தலையில் தட்டிவிட்டுச் சென்றான் ராஜா, மனைவியுடன் தான்.

அப்போதும் விளங்காமல் அமர்ந்திருந்த அன்புவை மேலும் குழப்பவென, “நல்லவங்களுக்கு இங்க லைஃபே இல்லைடா மச்சான்! ஒரு பொது சேவை செய்றேன்னு

Copyrighted material. Can be read only at www.sitaramwrites.wordpress.com Page 1



“அன்பிலார் எல்லாம்!” - என்.சீதாலெட்சுமி

முன்னாடி வந்து சொன்னா... வேணாம்டா சாமி...நீ வீட்டிலேயே இருன்னு எங்களை வீட்டில உக்காத்தி வச்சுட்டுப் போய்ட்டான்! பாவி!” என்று ராஜாவை வைதபடியே வந்தான் கனியன்.

“என்னடா நடக்குது இங்க?” என்று அன்பு தலையைப் பிய்த்துக் கொள்ளும் போதே,

“எனக்கு... எனக்கு... பயமா இருக்குது! உன் கையைப் பிடிச்சுக்கவா?” என வந்து சேர்ந்தாள் வேலுமயில்.

“இவ்வளவு நேரம்... எங்க இருந்தா?” என்ற யோசனையை விட்டுவிட்டு, கையை அவள் புறமாய் நீட்டினான், கணவன்.

மெல்ல மெல்ல அவள் கையின் மேலான தனது அழுத்தத்தைக் கூட்டியவன், “என்ன பயம்?” என்றான் புன்னகையை முகத்தில் பூசி.

“இல்ல...... மணிக்கா இல்லையா... ஒரே ஆம்பிளைங்களா இருக்காங்களா... அதான்...” என்றபோது அவள் குரல் நடுங்கியதோடு இல்லாமல், அவள் கையும் சில்லிட ஆரம்பித்தது!

சட்டென விஷயம் விளங்கியது, அன்புவிற்கு! மயில் சார்ந்திருக்கும் இரு நபர்கள் – மணியும் அன்புவும். மணி கிளம்பிவிட்டால், மயில் அன்புவிடம் தானே வந்தாக வேண்டும்! நாலும் யோசிக்கும் சின்னத் தங்கை மீது, பாசம் பொங்கியது அண்ணனுக்கு!

“சரி... பயப்படாதே... நா பாத்துக்கிறேன்!” என்றபோது, அவனுக்கே சிரிப்பு வந்தது.

என்னவோ தமிழ் சினிமா ஹீரோ மாதிரி, பறந்து பறந்து அடித்து, அவளைக் காப்பற்றுவிடுவது போல், என்ன ஒரு பில்ட் அப்!

தன்னை மீறி சிரித்தவனை, “ஏன் சிரிக்கிறே?” என்று அதட்டினாள் மயில்.

Copyrighted material. Can be read only at www.sitaramwrites.wordpress.com Page 2

“அன்பிலார் எல்லாம்!” - என்.சீதாலெட்சுமி

“ஒண்ணுமில்லை...சும்மா!”

“சும்மா... சும்மா சிரிக்காதே! எல்லாரும் பைத்தியம் சொல்வாங்க...” என்று பட்டென கூறியவள்,

“லைட் அமத்திட்டு படு... எனக்குத் தூக்கம் வருது!” என்றதோடு படுத்தும் விட்டாள்.

அன்புவிற்கு, உதடு வரை வந்த சிரிப்பை அடக்குவது பெரும்பாடாய் இருந்தது! அவள் அதட்டிய அழகே கண்ணை நிரப்ப, சிரிப்பு தானாய் உதடு புகுந்து, உக்கிர தாண்டவமாட,

தலையை மட்டும் நிமிர்த்தி, “நீ தூங்கலையா?” என்று மீண்டும் ஓர் அதட்டல் போட்டாள், மனையாள்.

“இதோ படுத்துட்டேன்...”

“கதவை நல்லா சாத்திட்டுப் படு... இல்லைன்னா கதவு தட்டுவாங்க...” என்று அவனை ஏவி விட்டு, மயில் படுத்துக் கொண்டாள்.

அறைக்கதவைச் சாட்டிவிட்டு, விளக்கை அணைத்துவிட்டு வந்தவனின் கண்களில், ஜன்னல் வழியே வந்த வீதி விளக்கின் ஒளியில், அவளையே பார்த்திருந்தான்.

சோடியம் விளக்கு உற்பத்தி செய்த மஞ்சள் கதிரொளியில், மஞ்சள் வண்ணம் பூசிய நிலவென, சுருண்டு படுத்திருந்தவளுக்குப் போட்டியாய், அவளது முடியும் சுருண்டிருந்தது!

“இவள் குழந்தையா? குமரியா? குழந்தை உள்ளம் கொண்ட குமரியா?” என்று மனம் ஆராய,

Copyrighted material. Can be read only at www.sitaramwrites.wordpress.com Page 3

calaméo



"சரியா போச்சு போ! கல்யாணம் பண்ணிக்கிட்ட அப்புறம் யோசிக்கிற விஷயமாடா இது? லூசுப்பயலே!" என்று அவன் மனதே அவனைக் கேள்வி கேட்டது!

மெல்ல சிரிப்பு உதட்டில் உறைய, ஜன்னல் மீது சாய்ந்து, அவள் முகத்தை நன்றாக பார்க்கும் படி நின்று கொண்டான்.

அவளது நெற்றி... கண்... மூக்கு... கன்னம்... காது என்று வலம் வந்த பார்வை ரேகைகள், சட்டென அவளது உதட்டில் குழுமி நின்று, கும்மி அடித்தன!

சின்னத் தேனீ போல்... என்ன அழகு! தேனீ தேன் குடிக்கும்... இந்தத் தேனீ தேன் கொடுக்கும் போலவே! என்ற எண்ணம் எழ,

"ம்ஹூம்! இந்தத் தேனீ... என்னோட மனசைக் கொஞ்சம் கொஞ்சமா குடிச்சிட்டு இல்ல இருக்கு!" என்ற எதிர் எண்ணம் பிறந்து, அவனை இம்சித்தது!

முடிவில், "குடிக்கவும் செய்யுது! கொடுக்கவும் செய்யும் போல!" என்ற எண்ணம் எழுவதை, அவனது வயதால் தடுக்க முடியவில்லை போலும்! ஆசிரமத்தில் வளர்ந்தவனுக்கு, உணர்வுகள் இருக்காதா என்ன? அவனும் மனிதனே அல்லவோ! உணர்வும் உயிரும்...கூடவே காதலும் கொண்ட ஓர் மனிதன்!

கொஞ்சம் கொஞ்சமாய் முன்னேறிய பார்வை, அவளது கனுக்காலை அடைந்தது சுருங்கியது! தன் தாப உணர்வுகளைத் தொலைத்து, பாச உணர்வுகளைப் பார்வை மீட்டெடுக்க, அங்கே இருந்த அரை அடி நீளத்தழும்பில் அவன் பார்வை நிலைத்தது!

சூட்டுக்காயம்! உருண்டையாய் எதிலோ வைத்திருக்கிறார்கள்!

ச்சே! பாவம்... என்ன வயதில் வைத்ததோ! எப்படி துடித்தாளோ! என்னமாய் அழுதாளோ!

இப்போது தான் அவளுக்கு இக்காயம் பட்டது போல், அவன் நெஞ்சம் துடிக்கத் தொடங்க, அதற்கு எதிரொலி போல்,





"அம்மாம்மாம்மாம்மா!!!! ... வலிக்குதும்மாம்மாம்மாம்மா!!!" என்று அலறினாள் மயில்.

விதிர்விதிர்த்துப் போனான் அன்பு! பின்னே, ஊரே உறங்கிவிட்ட வேளையில், காற்றைக் கிழித்துக் கொண்டு அலறினால்?!

அவனது உடம்பு ஒரு முறை சிலிர்த்து அடங்கக் காத்திருந்தவள் போல், மயில் பேசினாள்! ம்ஹூம்! அலறினாள்!

"நா... நா... ஐயோ... எரியுதே... எரியுதே......."

"நா இனிமே சோறு கேக்க மாட்டேன்!"

"சோறு... சோறு... சோறு வேணாம்... அம்மா வேணாம்..."

அதற்கு மேல், அன்புவால் அவள் கதறுவதைப் பார்த்துக் கொண்டு, கையைக் கட்டிக் கொண்டு நிற்க முடியவில்லை!

"மயிலு..." என அழைத்தப்படியே அவளது நெற்றி முடி வருடியவன், சட்டென பிரிந்த அவளது இமைகளின் ஊடே வெளிப்பட்ட கலக்கத்தில் கரைந்து போனான்.

"ஒண்ணுமில்லைடா... கொஞ்சம் தண்ணி குடிச்சிட்டுப் படுத்துக்கிறியா?" என்று அவளை எழுப்பி அமர வைத்தான்.

ஒன்றும் புரியாத பார்வை ஒன்றைத் தாங்கியவளாய், அவன் கொடுத்த தண்ணீரைக் குடித்தவள், அவனையே பார்த்திருந்தாள்.

"படுத்துக்கோடா..." என அவன் மெல்ல நெற்றி வருடவும்,



calaméo

calaméo



வருடிய அவன் கையைப் பிடித்துக் கொண்டவள், "ஆயா...மாதிரியே செய்யுறே!" என்றாள் அழுகையுடன்.

அன்புவிற்கும் கண்ணைக் கரித்துக் கொண்டு வந்துவிட்டது.

அவன் ஆதுர்யமாய் பார்த்திருக்க, "ஆயா...வராதா?" என்றாள் ஏக்கமாய்.

இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல், அன்பு அவளது நெற்றியை அழுத்தமாய் வருடிவிட்டான்.

அவனது செய்கை புரிந்தவளாய், "வராதில்ல..." என்றாள் அழுகை அதிகரிக்க.

"அழக்கூடாது... மயிலு..." என அவன் சொல்லும்போதே,

"ஆயா இருக்கும் போது...ஆயா பக்கத்தில தான் நா படுத்துப்பேன்... அதோட சேலையைப் பிடிச்சா தான்...எனக்குத் தூக்கமே வரும்...இப்ப ஆயா இல்லையே!" எனத் தன் இழப்பின் சோகத்தை வெளியிட்டவள்,

"நீ எங்க படுத்துக்கிறியா? உன் கையைப் பிடிச்சா... எனக்கு நல்லா இருக்கு... ப்ளீஸ்...." என்றாள் கெஞ்சுதலாக.

மறுத்துப் பேச, அன்புக்கு என்ன பைத்தியமா என்ன?

துணை கிடைத்த திருப்தியில், இரு உள்ளங்களும் உடலை உறக்கத்திற்குக் அடிமையாக்கின,

என்ன தான் புது சூழ்நிலையில் உறங்கினாலும், அன்புவிற்கு நாலு மணிக்கே விழிப்புத் தட்டிவிட்டது! பின்னே, குப்பை பொறுக்கப் போக வேணாமோ?!





ஓசையின்றி எழுந்து, காலை கடன்களை முடித்தவன், நண்பர்களின் அறைக் கதவைத் தட்டி, அவர்களை எழுப்பினான்.

"ஆனாலும்... உன் கடமை உணர்ச்சிக்கு ஒரு பாரத ரத்னா விருது கொடுக்கணும்டா... அவனவன் கல்யாணம் முடிஞ்சுச்சா...ஹனிமூனுக்கு மூட்டையைக் கட்டினோமான்னு இருப்பான்...நீ இருக்கியே! குப்பையை மூட்டைக் கட்ட ரெடியாகி நிக்கிறான்!" என கனியன், பல்லைக் கடிக்கும் போதே

அவனது பல்லைத் துண்டு துண்டாக்கவென ராஜாவும் மணியும் வந்து சேர்ந்தனர்.

"டேய்... என்னங்கடா நடக்குது இங்க?" என சுபாஷ் டென்ஷன் ஆக,

"நீ கேள்வி கேட்கிற அளவுக்கு... இங்க எந்தப் பூகம்பமும் நடக்கல... நீ முதல குறளை எழுது! கிளம்புவோம்!" என்றான் அன்பு, அவன் முதுகில் தட்டி.

கணியனும் சுபாஷும் புலம்பியபடி, அன்றைய தினத்திற்கான குறளை எழுதுவதில் முனைய,

அன்பு ராஜாவை மெல்ல வெளியே அழைத்துச் சென்றான்.

"என்ன மாப்ள..." என அன்பு ஆரம்பிக்கும் போதே,

"மாப்ள...எதையாவது கேட்டு என்னைய வெறுப்பேத்தாத சொல்லிட்டேன்! நீயாவது பொண்டாட்டியோட ஒரே ரூம்ல தூங்கினே... நா தனியா பால்கனில கொசுக்கடில படுத்திருந்தேன் தெரியும்ல!" என்று ஏறக்குறைய அழுதான், ராஜா.

அவனது பாவனையில் சிரிப்பு வந்தாலும், தன் வாழ்க்கையை மனதில் வைத்துக் கொண்டு, தங்கை எதுவும் ஒத்திப் போடுகிறாளோ என்ற எண்ணம் எழ, அவனது பார்வை மணியைத் தேடியது!



calaméo

உடனே அவனுக்குக் காட்சி கொடுத்த மணியிடமும், அதையே "ஏன் மணிம்மா... பாவம்டா ராஜா... என்னையும் மயிலையும் மனசில வச்சுட்டு..." எனத் தன் ஆதங்கத்தை அன்பு வெளியிடத் தொடங்க,

"ஸ்டாப்... ஸ்டாப்!" எனக் கையமர்த்திய மணி,

அண்ணனின் குழப்பப் பார்வைக்குப் பதில் போலவும், கணவனின் புலம்பலுக்கு விடை போலவும், "சும்மா...அண்ணனைக் கிளப்பி விட்டு வேடிக்கை பார்க்கிறீங்களா?! நீங்க தானே... படிப்பு முடியட்டும்ன்னு சொன்னீங்க... இப்ப என்ன என் மேல தப்பு மாதிரி பேசுறீங்க?" என ராஜாவை அதட்டினாள் மணி.

"ஹி...ஹி...அது வந்து..." என ராஜா அசடு வழிய,

"எதுவும் வர வேணாம்... நீங்க போய் (மினரல் வாட்டர்) தண்ணி எடுத்திட்டு, கடைக்கு வந்திடுங்க... நாங்க முன்னே போறோம்!" என்று அவன் தோள் தட்டி விட்டு நகர்ந்தாள் மணி.

நண்பனை எண்ணிப் பெருமையாய் கூட இருந்தது அன்புவிற்கு!

அந்தப் பெருமையின் பூரிப்பு குறையாமல், கனியன் எழுதியிருந்த "கற்க கசடற கற்பவை கற்றபின்; நிற்க அதற்கு தக!" என்ற குறளுக்கு அர்த்தம் எழுதத் தொடங்கினான்.

"டேய் அன்பு... நாங்க கிளம்புறோம்... நீ மயிலைக் கூட்டிட்டு வா!" என ராஜா கிளம்பினான்.

"இல்லடா அவ தூங்குறா... எழுப்ப வேணாம்..." என அவன் சொல்லும் போதே, ராஜாவின் பார்வை அறைவாயிலை நோக்கிச் சென்றது.

அங்கே கண்ணைக் கசக்கியபடி, சிறு பிள்ளையின் சிணுங்கிய முகத்துடன் "எங்க போறே?" என்ற கேள்வியுடன் நின்றிருந்தாள், வேலுமயில்.





கசங்கிய உடையும், கலைந்த கேசமும், கண்ணில் தூக்கமுமாய் அவள் நின்றிருந்த விதம் நெஞ்சை அள்ள, "குட் மார்னிங்!" என்றான் அன்பு, புன்னகையுடன்.

அவனது குரலில், உதடு லேசாய் பிரிந்து புன்னகையை உதிர்க்க, "அப்படின்னா என்ன?" என்றாள் அவள்.

"காலை வணக்கம்ன்னு அர்த்தம்!"

"ஹோ!" என ஏதோ பெரிய விஷயத்தைக் கிரகிப்பவள் போல் கிரகித்தவள்,

"காலை வணக்கம்!" என்றாள், கை இரண்டையும் குவித்து.

அவன் லேசாய் தலையசைத்து அதை ஏற்கவும், "வணக்கம் சொல்லணும்ன்னா... கை ரெண்டையும் கும்புடுற மாதிரி வச்சு செய்யணும்! சரியா? இப்படி சும்மா...வெறுமனே சொல்லக் கூடாது!" என்று அவனுக்குச் சொல்லிக் கொடுத்தாள்.

அவன் "சரி" என ஒப்பவும்,

"உனக்கு ஆயாவே இல்லையில்ல...அதான் உனக்குத் தெரியல...எனக்கெல்லாம் ஆயா இருந்துச்சு. அதான் சொல்லித் தந்துச்சு!" என்று பெருமை வேறு.

சிரிப்பு வந்தாலும், "ப்ச்...நா பாவம்! என்ன செய்றது மயிலும்மா!?" என அவளையே விடை கேட்டான், கணவன்.

"கவலைப்படாதே! நா சொல்லித் தாரேன்...என்ன!" என்று அவனைத் தேற்றினாள், மனைவியும்.

"தேங்க் யூடா!"





"தேங்க்ஸ்ன்னா நன்றி தானே... தேங்க் யூன்னா என்ன?" என அவள் கேட்க,

"உனக்கு நன்றின்னு அர்த்தம்..." – பொறுமையாய் சொல்லிக் கொடுத்தான் அன்பு.

உடனேயே மயிலின் எண்ணம் "ஏய்...நீ எங்க போறே?" என முதல் கேள்விக்குத் தாவி விட்டது.

"பீச்க்கு..."

"ஹய்யா... தண்ணி இருக்குமே...அங்கயா? என்னையும் கூட்டிட்டுப் போறியா?"

தங்களது வேலையைப் பற்றி சொன்னால், மயிலுக்கு புரியுமோ புரியாதோ என்ற தயக்கத்துடன், அதைப் பற்றி எதுவும் பேசாமல், மயிலை அழைத்துக் கொண்டு கடற்கரைக்குச் சென்றான், அன்பு.

அங்கே மணியைக் கண்டதும், "மணிக்கா..." என மயில் ஓடிவிட, அன்பு தன் வேலையைப் பார்க்கத் துவங்கினான்.

ஒரு இருபது நிமிடம் ஆகியிருக்கும். அவன் ஒருபுறமும், ராஜா மற்றொரு புறமும், குப்பைகளை அள்ளியபடியே முன்னேற,

"அறிவில்லையா உங்களுக்கு? உங்க வீடா இருந்தா... இப்படி குப்பை போடுவீங்களா? ரோடுன்னா என்ன வேணும்னாலும் செய்யலாமா?"

"அவங்களும் மனுஷங்க தானே... இவ்வளவு கஷ்டப்பட்டு... இந்தக் குளிர்லயும் வேர்த்து வடிய, நீங்க போடுற குப்பையெல்லாம் பொறுக்கிட்டு வராங்க... அதைப் பார்த்துட்டும் குப்பை போடுறீங்களே?! ஹ்ம்ம் எடுங்க! ஹ்ம்ம் எடுங்க சார்!" என்ற குரல், பின்னிருந்து ஓங்கி ஒலிக்க,





அக்குரலை உணர்ந்தவனாய் "மயில்!!!!!!" என்று வியந்தபடி, திரும்பிப் பார்த்தான் அன்பு.



Bhuvana's

calaméo



"ஆஹா! யாருடா அது?" என்று ராஜா வியந்தபடியே திரும்ப, அன்பு மயில் நின்றிருந்த இடம் நோக்கிச் செல்ல ஆரம்பித்தான்.

அதற்குள், மயிலிடம் வசவு வாங்கிய அந்த அதிர்ஷ்டசாலி, தான் போட இருந்த பிஸ்கட் பாக்கெட் கவரை எடுத்து, அன்பு வைத்திருந்த சாக்குப் பைக்குள் போட்டுவிட்டு நகர்ந்தான்! முகத்தில் ஓர் தர்மசங்கடத்துடனும்! கூடவே, கண்ணில் ஓர் கலவரத்துடனும்! பின்னே, மயில் மங்காத்தா போலல்லவோ நின்றாள்!

அவாது முகபாவனையில் சிரிப்பு சிற்பியின் செதுக்கலாய் உதட்டை நிரப்ப, இடுப்பில் கை வைத்துக் கொண்டு, மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியபடி நின்ற மயிலைக் கண்டு, வாய் விட்டே நகைத்தான், அவள் கணவன்.

"எதுக்கு சிரிக்கிறே? சுப்! சும்மா இரு!" என அவள் ஓங்கி ஓர் அதட்டல் போட,

அன்பு வாய் மீது விரல் வைத்து, பவ்யமாய் குனியவும் "நீ எதுக்கு குப்பை பொறுக்கிக்கிட்டு இருக்கே?" என்றாள் அவள்.

என்னவென்று சொல்வது இவளிடம்?!

கொஞ்சம் யோசித்தவன், "அதுடா... இப்பப் பாரேன் எல்லாரும் குப்பை போட்டுட்டே போறாங்க... இப்படியே அவங்க குப்பை போட்டுட்டே இருந்தா... நம்ம பசங்க பெருசா வரும்போது, இந்த பீச்சே தெரியாது...வெறுமனே குப்பை மேடு தான் இருக்கும்! அதான்... நம்ம பசங்க பெரியாளா வரும்போது...நாம பார்த்து சந்தோஷப்பட்ட பீச்சை அவங்களும் பாக்கணும்ன்னு, நான் கிளீன் பண்றேன்!" என்றான், அவள் வழியிலேயே சென்று.

"ஹோ!!!" என அதை, அவளது ஆஸ்தான பாணியில் உள்வாங்கியவள்,

Bhuvana's



calaméo

calaméo



"நம்ம பசங்க மாதிரி தானே அவங்க பசங்களும்... அவங்க பசங்களுக்கும் பீச் தெரியாதில்ல! அப்புறம் ஏன்...நீ மட்டும் எடுக்கிறே!?" என்ற கேள்வியுடன், அவனை மீண்டும் தாக்க,

அக்கேள்வியின் சாரத்தில் சொக்கித் தான் போனான், அவளது கணவன்.

"சோ...ஸ்வீட்!" என்று கன்னம் பிடித்துக் கிள்ள வேண்டும் போல் தோன்றியது, அன்புவிற்கு.

ஆனால், இருக்கும் இடமும்...அதை விடக் கிள்ளப் போகும் இடமும் மிகவும் அபாயகரமாய் தென்பட, "அதுவாடா... அவங்க பண்ணுவாங்கன்னு நாமளும்... நாம பண்ணுவோம்ன்னு அவங்களும் பேசாமலே இருந்தா...யாரு தான் பண்றது!? இப்ப நாம பண்ணலாம்... கொஞ்சம் கொஞ்சமா அவங்களும் செய்வாங்க! இல்லைன்னா...செய்ய வைப்போம்!" என்றவன்,

"நீ செய்ய வச்சியே அப்படி!" என்றான் தலையை சுவாரஸ்யமாய் ஆட்டி.

ஆனால், அவன் குரல் மறைந்திருந்த சிறு கிண்டலை உணரும் மனநிலையில் மயில் இல்லை.

"ஆமா...செய்ய வைக்கணும்! ம்ம்ம்!" என்று தலையைத் தீவிரமாய் ஆட்டியபடி, மணி நின்ற இடம் நோக்கி நடந்தாள்.

அவள் முகத்தில் தென்பட்ட தீவிரம் ஏனோ அன்புவை மகிழ்விக்கவே செய்தது!

முகம் நிறைய பூரிப்புடன் அவன், விட்ட இடத்திலிருந்து குப்பை பொறுக்க வர, அந்த நேரம் பார்த்து வேறொருவர் தன் கையிலிருந்த பிளாஸ்டிக் பேப்பரை எடுத்து வந்து, அவர்கள் வைத்திருந்த சாக்குப்பையில் போட்டுவிட்டுச் சென்றார்.

Bhuvana's





ராஜா, கண்ணாலேயே ஜாடை காட்டி சிரிக்கவும், "சும்மா இருடா!" என்றான் அன்பு, செல்ல அதட்டலாய்.

ஆனால், வந்தவரோ "இவ்வளவு நாளா... நானும் நீங்க கிளீன் பண்றதைப் பார்த்திருக்கேன்... நிறைய பேர்கிட்ட போய் பெருமையா சொல்லியிருக்கேன்....ஆனா ஒரு நாள் கூட, நாம குப்பை போடலைன்னா....அவங்க இந்த வேலை பார்க்க வேண்டிய அவசியமே இல்லைன்னு நினைச்சதே இல்லை!!!!!! சாரி கய்ஸ்! இனிமேல்... நானும் குப்பையை கீழ போட மாட்டேன்! அது மட்டுமில்லாம, எனக்குத் தெரிஞ்சவங்க...நண்பர்கள்ன்னு எல்லார்க்கிட்டையும் முடிஞ்சளவுக்கு இந்தப் பழக்கத்தைப் புகுத்தப் பார்க்கிறேன்!" என்றுவிட்டுச் சென்றார்.

"தேங்க்ஸ்!" என அவரை வழியனுப்பி விட்டு நகர்ந்த ராஜா,

"விளையுற வினையைக் களைஞ்சு எறியரதை விடவும், விதிக்கப்படர விதையை நல்லா விதைச்சா... வினையே விளையாதுன்னு என்ன அழகா சொல்லிட்டா பாரேன், அன்பு! நா கூட....அவளை என்னமோன்னு நினைச்சேன்...பட் ஷீ இஸ் இன்னோசென்ட் அஸ் வெல் அஸ் இன்டல்லிஜன்ட்!!" என்றான் ராஜா, சிலாகிப்பாய்.

என்னவோ, தனக்கே நோபல் விருது கிடைத்தது போல் பூரித்துப் போனான் அன்பு!

அதே சந்தோஷத்துடன், வேலையை முடித்துக் கொண்டு, அவர்கள் வீடு செல்ல, அனைவரும் பரபரப்பாய் அலுவலகம் கிளம்பினர்.

அன்புவும் அவர்களுள் ஒருவனாய் மாறவும், பொறுமை இழந்தான் கனியன்.

"டேய்... கல்யாணம் பண்ணிட்டு குப்பை கொட்டுவான்...நீ ஒரு சேன்ஜ்க்கு குப்பை அள்ளினே! அது கூட ஓகே! ஆனா...இப்ப என்னடா ஆபீஸ்க்கு வேகுவேகுன்னு கிளம்பிட்டு இருக்கே?! அந்தப் பொண்ணு...பாவம்டா... உள்ளதே பேய் ஓட்டுற சாமியாரைப் பார்த்து பயந்த பச்சப்புள்ள மாதிரி இருக்கு...அதைத் தனியா விட்டுட்டு எதுக்கு இப்ப ஆபீஸ்?" என்றான் கோபமாய்.

Bhuvana's



calaméo

"இல்லடா... ஃப்ருட்! இயர் எண்டு வேலை ஜாஸ்தியா இருக்குடா... போகணும்!" என்றான் அன்பு, பிடிவாதமாய்.

"இல்லடா அன்பு..." என கனியன் ஏதோ சொல்ல வர,

"மச்சான்... என்னோட லைஃப்...நீ நினைக்கிற மாதிரி, மந்திரம் சொன்னதும் மாங்கா விழற வித்தையில்லை! தாலி கட்டினதுமே... மயில் என்னோட முழுசா வாழ்ந்துட்டானும் இல்ல... புரியுதா! அவ வளரணும்... மனசால வளரணும்... முக்கியமா பயத்தை விடணும்! அப்புறம் தான்... ஒரு யூசுவல் லைஃபை நாங்க வாழ முடியும்! அதுக்கு டைம் ஆகும்டா...!" என்றான் அன்பு, நண்பனின் ஆதங்கம் புரிந்தவனாய்.

"ஓகே மச்சான்! பார்த்துக்கோ!" – அதற்கு மேல், அவனை வற்புறுத்தாமல் கனியன் நகர்ந்துவிட, அன்பு மயிலை நாடிச் சென்றான்.

அவர்களது அறையில், கட்டிலில் அமர்ந்து, முழங்காலில் முகம் புதைத்து அவள் அமர்ந்திருக்க,

அவளது தலையை வருடியவன், "மயிலு!" என்றான் மயிலிறகாய் குரலை விரித்து.

நிமிர்ந்த அவள் முகத்தில், விலகல் தெரியவும், "என்னடா" என்றான்.

"நீ வேலைக்குப் போறியா?" என்றாள் அவள் பாவமாய்.

"ஆமா...குட்டி!"

"நா குட்டியா?" – சின்னதாய் ஓர் சிரிப்பு, அவள் இதழ் கடையை அலங்கரித்தது!





"குட்டி தான்...செல்லக் குட்டி! சிட்டுக் குட்டி! அம்முக் குட்டி!" என அவன் சிறு குழந்தையாய் அவளைக் கொஞ்ச,

அதில் லயித்தவள், உடனே சுதாரித்தாள். "என்னைய ஏமாத்த முடியாது, சொல்லிட்டேன்! நீ வேலைக்குப் போறியா?" என்றாள் கோபமாய்.

"ஆமாடா..."

"என்னைய தனியா விட்டுட்டுப் போகக் கூடாது! இங்கேயே இரு!"

"மணி இருப்பாடா..."

"இல்ல மணிக்கா... பள்ளிக்கூடம் போவுதாம்!"

"ஹோ!"

"நீயும் போய்ட்டா...நா என்ன செய்றது? எனக்குப் பயமா இருக்கும்! போவாத!" என்றாள் மெயில், பிடிவாதமாய்.

"வேலை இருக்குடா..."

"ம்ஹூம்! போகக் கூடாது!"

"என்னோட சின்னக் குட்டியில்ல..."

"இல்ல...நா சின்னக் குட்டி இல்லை! பெரிய மயிலு!" என்று வேகமாய் மறுத்தவள், "நீ வேலைக்குப் போவாத!" என்றாள் பிடிவாதமாய்.

"வேலைக்குப் போகலைன்னா... சம்பளம் வராதுடா..."





"பரவாயில்லை!"

"பரவாயில்லையா? அப்புறம் எப்படி சாப்புடுறது?"

"ஹோ!... ஹ்ம்ம்...இருக்கும் சாப்பாடு... சாப்பிட்டுக்கலாம்..."

"என்ன இருக்கும்?"

"நீ போகக் கூடாது!"

"மயிலும்மா... வேலைக்குப் போகலைன்னா...சம்பளம் வராது... சம்பளம் வரலைன்னா பசங்களுக்குப் பால் பவுடர் வாங்க முடியாது...அவங்களைப் படிக்க வைக்க முடியாது...எதுவும் செய்ய முடியாது! பரவாயில்லையா?" என அவன் கூர்மையாய் கேட்க, அதிர்ந்து போனாள், மயில்.

அவள் வாய் பிளந்த படியே இருக்க, அவள் அதிர்ந்த முகத்தை மெல்ல வருடி, "மயில் குட்டி...சமத்து தானே?! நா சொன்னா கேட்பா தானே? இப்ப...நா வேலைக்குப் போயிட்டு, சீக்கிரமே வந்துடுவேனாம்...சரியா?" என்றான், ஓரோர் வார்த்தைக்கும் போதிய இடைவெளி விட்டு.

அதைக் கிரகிக்க, மயிலிற்கு அரை நிமிடம் பிடித்தது!

"ஹான்!" என்று நிமிர்ந்தவள்,

"நா தனியா இருப்பேனே?! பயமா இருக்குமே!!" என்றாள் மயில் பீதியுடன்.

"பயம் எதுவும் இல்லைடா... யாரும் இங்க அத்துமீறி வர மாட்டாங்க!" என்றவன்,





அவளை அழைத்துச் சென்று, அந்த அடுக்குமாடி வளாகத்தில் இருக்கும் காவலாளியைக் கை காட்டினான்.

"அவரு... யாராவது தெரியாதவங்க வந்தா... என்ன வேணும்...யாரைப் பாக்கணும்ன்னு கேட்டுத் தான் அனுப்புவாரு! அதனால, வெளியாளுங்க வர முடியாதுடா! அப்படியே வந்தாலும், இதோ...இந்தக் கதவுல ஒரு ஓட்டை இருக்கில்ல... அந்த ஓட்டை வழியா பார்த்தா... யாரு வராங்கன்னு தெரியும்! உனக்குத் தெரிஞ்சவங்களா இருந்தா மட்டும்...தொற! என்னடா குட்டி? ஓகேவா?" என்றான் பள்ளி வாத்தியார் போல்.

புரிந்தும் புரியாமலும், மையமாய் தலையாட்டி வைத்தாள் மயில்.

அவனுக்குமே அவளது நிலை புரிந்தது! புது இடம்...புது மனிதர்கள்...அதை விடவும் மேலாய் பழைய பயம் – எல்லாமாய் அவள் தடுமாறுவது, அவனுக்குப் புரிந்தது! ஆனால், இதை இப்படியே விட்டுவிட முடியாதே! காலையில், ராஜா சொன்னது போல்...இல்லையில்லை அவனது மயில் சொன்னது போல், விளையும் பொருளை ஆராய்வதை விட்டுவிட்டு, விதை நெல்லைத் தரம் பார்ப்பது நல்லதல்லவோ! இந்த வாக்கியம், வெளியிருக்கும் குப்பைக்கு மட்டுமல்ல...பயமெனும் மாயக் குப்பைக்கும் பொருந்தும் இல்லையா?! அவள் உள் மனதில் உற்பத்தியாகும் பயத்தைக் கொஞ்சம்...கொஞ்சமாய் களைய வேண்டும் என்ற உறுதியுடன், தனது முதலடியை நம்பிக்கையோடு எடுத்து வைத்தான் அன்பு!

ஆனால், அந்த நம்பிக்கை அவன் கிளம்புகையில், கதவருகே வந்து நின்ற மயில், "நீ போவணுமா?" எனத் தலை சாய்த்துக் கேட்கையில், கொஞ்சமாய் ஆட்டம் கண்டது என்றால்

மாலை ஐந்தரை மணியளவில், "அன்பு... சீக்கிரம் கிளம்பி வீட்டுக்கு வாடா!" என்று பதட்டமாய் பேசிய பொம்மனின் குரலில் ஏகப்பட்ட ஆட்டம் கண்டது!

ஏற்கனவே ஊசலாடிக் கொண்டிருந்த நம்பிக்கை, "மயில்... உள்ள இருந்துட்டு கதவைத் திறக்க மாட்டேங்கிறாங்க! உள்ள இருந்து வேற... பயந்த அழுகை மாதிரி கேட்டுட்டே

calaméo



இருக்கு! நீ சீக்கிரம் வா!" என பொம்மன் கூறிய விஷயத்தில், முற்றிலுமாய் உடைந்து போனது!

தன்னைத் தானே சபித்துக் கொண்டு, வீட்டிற்கு விரைந்தவனை, பூட்டிய கதவும், வெளியே நின்ற பொம்மனும், உள்ளிருந்த மயிலின் மெல்லிய அழுகையுமே வரவேற்றது.

பொம்மன் கண்ணாலேயே கதவைக் காட்ட, "மயிலும்மா...மயிலு! அன்பு வந்திருக்கேன்டா... ப்ளீஸ் கதவைத் திற!" என்றான் அன்பு, சாவித் துவாரத்தில் வாய் பொருத்தி.

அடுத்த நிமிடம்...ம்ஹூம் அடுத்த வினாடி, கதவு எனும் மடை திறந்து, மங்கையெனும் உவகை ஊற்றென பொங்கி வந்தாள்!

"ம்ம்ம்ம்... ம்ம்ம்ம்....ம்ம்ம்ம்..." என மேலும் கீழும் தூக்கிப் போட்ட அவளது மேனி, வேர்வையில் குளித்திருந்தது!

ஒன்றும் சொல்லாமல், அவளது முதுகை மெல்ல வருடி விட்டான் அன்பு. அவனது கைகளின் இதத்தில், நடுக்கம் குறைந்த போதும், முழுதாய் அடங்கவில்லை அவளுக்கு!

கண்ணில் பீதியுடன், பொம்மனின் பக்கம் திரும்பியவள் "க...க...கக...ஹ...ஹ...ஹான்...க...கதவு த...த...ஷ்ஹ்ஹ்ஹஹ்ஹ்ம்ம் தட்டுன்னாங்க!" என்றாள் கலவரம் குடி கொண்ட குரலில்.

அன்புவின் பார்வை அழைப்பு மணியில் படிந்து மீளவும், "கரண்ட் இல்லடா... அதான் கதவைத் தட்டினேன்!" என்றான் பொம்மன், மெதுவான குரலில்.

அவனைத் தப்பு சொல்ல என்ன இருக்கிறது. தேற்ற வேண்டியது, இவள் அல்லவா?!

"இல்லடா குட்டி... அவன் என்னோட ஃபிரண்டுடா... அவனைப் பார்த்துப் பயப்படக் கூடாது!" என்று அன்பு சொல்ல, அதை ஏற்கும் மனநிலையில் அவள் இருக்கவில்லை.

Bhuvana's





முன்தினம், கதவைத் தட்டியது அன்பு என்பதில், தன் பயத்தை முழுதாய் விட்டவளுக்கு, அன்பு அல்லாத வேறோர் ஆண் மகனைக் கண்டதும், உடம்பு விதிர்விதிர்த்து விட்டது!

ஆயா இருக்கும் போது "ஏய் கிழவி... ஒரு நாள் இல்லாட்டி ஒரு நாள்... உந்தலையில கல்லைப் போட்டுட்டு...உம பேத்தியைத் தொழிலுக்கு இட்டுடுப் போவல...பாரு!" என்று பேசுபவனும்,

ஆயா இறந்த பின்னர் "ஏய்...நாதியத்த அநாதை கழுத! வாடி...வெளிய வாடி! எத்தினி நாளுடி... இப்படியே இருப்பே! உன்னைய தூக்குறேன்டி!" என்று வம்புக்கு இழுப்பவனுமே, அகத்தையும் முகத்தையும் ஆக்கிரமிக்க, அவளால் தன் பயத்தை விலக்க முடியவில்லை.

என்ன தான், அன்பு தன் நண்பர்களைப் பற்றி எடுத்துக் கூறியபோதும், மயிலின் மனது தன் பயத்தைத் தாரை வார்க்க மறுத்தது!

"ஆண் என்பவன் அரக்கன்!" என்ற எண்ணம் அவள் நெஞ்சில் ஆழ்ந்து பதிந்து போக, திருமணம் பற்றி அவளது ஆயா பேசிய பேச்சுக்கள், "புருஷன்" என்ற பட்டம் கொண்ட அன்புவை மட்டும், "ஆண்" வர்க்கத்திலிருந்து விலக்கி வைத்தன!

அரை மணி நேரம்... ஒரு மணி நேரம்... ஒன்றரை... ரெண்டு மணி நேரம் தாண்டிய பின்னரும், மயில் இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை!

அன்புவின் பின்னே பல்லி போல் ஒட்டிக்கொண்டவள், வேறு யாரது குரல் கேட்டாலும் நடுங்கிப் போனாள்!

"நேத்தெல்லாம்...இப்படி இல்லையே!" என மனதில் தோன்றியதை, மணியிடம் அன்பு வெளியிட,

Bhuvana's



calaméo

calaméo



"நேத்து...நானும் நீங்களும் அவ கண் பார்வையிலேயே இருந்தோம்! இன்னைக்கு...அவ மட்டுமா இருந்திருக்கா இல்லையா...அதுவும் அவ தனியா இருக்கும்போது, பொம்மன் வந்து கதவைத் தட்டி இருக்காங்க...அதான்!" என்று பதில் கூறிய மணிக்கும், மயிலைப் பார்க்கப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது!

தன்னைக் காக்க ஓர் அரண் கிடைக்காதா என ஏங்கி நின்ற அந்த முகத்தை, நெஞ்சுக் கூட்டோடு கட்டிக் கொள்ள வேண்டும் போலிருந்தது, மணிக்கு!

அவளுமே, மயிலை அழைத்துச் சென்று, விதவிதமாய் அவளைத் தேற்றிப் பார்த்தாள்! ம்ஹூம், இம்மி கூட மாறாது, "க...கதவு...தட்டுனாங்க, மணிக்கா! எனக்குப் பயமா இருக்கு!" என அவள் மடியில் முகத்தை மறைத்துக் கொண்டு கதறினாள் மயில்.

ஒரு வழியாக, ஒரு தூக்க மாத்திரையைக் கொடுத்து அவளை உறங்கச் செய்தவர்கள், "அடுத்து என்ன செய்வது?" என்று முடிவு செய்வதற்காக, வரவேற்பறையில் குழுமினர்.

"பேசாம...தங்கச்சியை ஒரு சைக்காடிஸ்ட்கிட்ட காட்டுவோமா?" என ராஜா தொடங்க,

"ஹ்ம்ம்..." என அன்பு இழுக்கும் போதே,

"காட்டலாம் தான்... ஆனா எனக்கு என்னமோ, அது உடனடி சொல்யூஷன் கொடுக்கும்ன்னு தோணலை!" என்றான் பொம்மன் தீவிரமாய்.

"எனக்குமே பொம்மன் சொல்றது சரின்னு படுது..." என ஒத்து ஊதிய கணியனைக் கேள்வியாய் பார்த்தான், அன்பு.

"நாங்க என்ன நினைக்கிறோம்ன்னா...தங்கச்சிக்கு சரியாகுற வரைக்கும், நாங்க வேற வீட்டில இருக்கோம்!" எனத் தங்கள் முடிவை பொம்மன் எடுத்து வைக்க, அன்பு அதிர்ந்து நிமிர்ந்தான்.

Bhuvana's





"என்னடா...எதுக்கு இப்படி ரியாக்ட் பண்றே?! வேற வீடுன்னா... வேற எங்கேயோ இல்ல... நம்ம பிளாட்லேயே...அடுத்த ப்ளாக்ல ஒரு வீடு காலியா இருக்குன்னு, கீழ நோட்டீஸ் போர்டுல பார்த்தேன்... நாங்க அங்க இருக்கோம்! நீயும் சிஸ்டரும்...இங்க இருங்க! அவங்க நார்மல் ஆனதும், பார்த்துக்கலாம்!" என்றான் கனியன், விளக்கமாய்.

ஒன்றாய் பிறக்கவில்லை என்றாலும், ஒன்றாய் வளர்ந்தவர்கள் அன்றோ!

சொந்தமென்று யாருமில்லாத ஏக்கத்தைப் போக்கும், அரும் பெரும் நட்பல்லவோ! அதை எப்படி இழப்பது?!

"உங்களை விட்டுட்டு..." என அன்பு மறுத்துப் பேசத் துவங்கும் முன்னரே,

"டேய்...நிறுத்து! நாங்க என்ன...உன்னோட சண்டை போட்டுட்டா போறோம்! ஜஸ்ட்.... கொஞ்ச நாள் தள்ளி இருக்கோம்... நீ உன்னோட அன்பால அவளை சரி பண்ற வரைக்கும் தான்... அப்புறம் எல்லாருமா ஒண்ணா இருப்போம் மச்சான்!" என்றான் பொம்மன், அன்புவின் தோளில் தட்டி.

"இல்லடா..." என அன்பு மீண்டும் ஆரம்பிக்க,

"எனக்குமே, அதாண்ணா சரின்னு படுது!" என்றாள் மணி, ஆமோதிப்பாய்.


"நீயும் போறியா, மணிம்மா?" என அன்பு, வருத்தமாய் கேட்கவும் "என்னவோ... அண்டார்டிகாவுக்குப் போற மாதிரி எதுக்குடா இந்த சீனைப் போடுறே? அய்யயோ...இவன் தொல்லை தாங்கலைடா சாமி!" என அவனை அடக்கினான், அவனது தங்கை புருஷன்.

மற்றவர்கள் முழு மனதாகவும், அன்பு அரை மனதாகவும், அன்பு-மயில் தனிக் குடித்தனத்தை உறுதி செய்தனர்!

Bhuvana's



calaméo



“அன்பிலார் எல்லாம்!” - என்.சீதாலெட்சுமி

ஆனால், அன்புவின் அரைகுறை சம்மதம், அறையில் சுருண்டு படுத்திருந்த மயிலின் “ஆயா…………….ஆயா…………………ம்ம்ம்மம்மம்ம்ம்ம்…… யென் ஆயா இப்படி செய்றானுங்க……………..கருமம்…கருமம்…ச்சை…ச்சை…கருமம்….. அசிங்கமா பேசாம இருக்கச் சொல்லு ஆயா…………………………..ஐயோ கதவ உடைக்கிறானுங்களே!” என்ற சன்னமான புலம்பலிலும், கண்ணீரின் சுவடு படிந்த கன்னங்களிலும், முழு வடிவம் பெற்றது!

Bhuvana's

Copyrighted material. Can be read only at www.sitaramwrites.wordpress.com 

ஒரே வாரத்தில், அன்பு-மயிலின் தனிக் குடித்தனத்திற்குத் தேவையான அத்தியாவசிய பொருட்கள் சேகரிக்கப்பட்டு, புது வீட்டிற்குக் குடியேறினர் புது மணமக்கள்.

அந்த ஒரு வாரமும், மயிலுக்குத் துணையாய் மணி வீட்டில் இருந்தாள்.

புது வீட்டிற்கு வந்த நாள், ஞாயிற்றுக்கிழமை என்பதால், அன்பு மயிலுடன் இருந்தான்.

வந்தது முதலே, அன்பு ஒருவித இறுக்கத்துடன் இருக்க, மெல்ல அவன் பக்கம் வந்த மயில் “என்னால தான்… வருத்தமா இருக்கியா?” என்றாள் அழுது விடும் குரலில்.

அவன் வருத்தமாய் தான் இருந்தான்! பல வருடங்களாய், ஒன்றாய் வாழ்ந்த நண்பர்களை விட்டுவிட்டு, தனக்கென்று ஒரு தனி கூட்டை அமைத்துக் கொண்டு வந்தது, மிகவும் சுயநலமாய் பட்டது, அவனுக்கு! அதுவும் குடும்ப அமைப்பில் வளராத அவனுக்கு, நண்பர்கள் சூழ வாழும் வாழ்க்கை பிடித்திருந்தது! இப்போது, அதை விட்டு பிரிந்து வந்தது, ஏனோ

மீண்டும் தனிமை வளையத்திற்குள் புகுந்தது போல் இறுக்கமாய் இருந்தது!

என்ன தான் மயிலுக்காக… மயிலின் மன நிலைக்காக என சமாதானம் செய்து கொண்டாலும், அவனால் இந்தத் தனிக் குடித்தனத்தை சந்தோஷமாய் எதிர்கொள்ள முடியவில்லை. மனம் இரு மருங்கிலும் சிக்கிக் கொண்ட நூற்கண்டாய் சிக்கித் தவித்தது!

சுணங்கி நின்ற மனதை முகத்தில் வெளிக்காட்டியபடியே, அவன் அமர்ந்திருக்க, “நா…அன்னைக்கு கதவு தொறக்கலைன்னு தானே…நாம தனியா வந்துட்டோம்?! நா தா…தப்பு! தப்பா பண்ணிட்டேன்!” என்று நாற்காலியில் அமர்ந்திருந்த அவன் முன்னே மண்டியிட்டு அமர்ந்தாள், மயில்.

சட்டென, தன் வருத்தத்தில் இருந்து மீண்டு வந்தவன், ஏந்தியபடியே நின்ற அவளது கைகளை பிடித்துக்கொண்டவன், “ச்சே அப்படி இல்லடா!” என்றான் சமாதானமாய்.

“இல்ல அப்படித் தான்! மணிக்கா சொன்னா… நா அவங்களைப் பார்த்துப் பயந்தேன்ல்ல…அதான் இங்க வந்துட்டோமாம்!”

“ஹோ! மணி சொன்னாளா?!”

“ஆமா…நா தான் எல்லாத்துக்கும் காரணம்…”

“ம்ஹூம்!!! சும்மா சும்மா… நீ தான்…நீ தான்னு புலம்பக் கூடாது!”

“அப்புறம் என்ன செய்றது?”

“இதை நினைச்சே கவலைப்பட்டுட்டு இருக்காம…இதில இருந்து எப்படி வெளியே வரதுன்னு யோசிக்கணும்! சரியா?”

“எப்படி வெளிய வரது? எனக்குத் தான்…யாரைப் பாத்தாலும் பயமா இருக்குதே!” – மயிலின் முகம் பயத்திலும் அழுகையிலும் பிதுங்கியது.

“அதெல்லாம் நா பாத்துக்கிறேன். நீ… நா சொல்றபடி நடந்தா மட்டும் போதும்! சரியா?” என்றான் அன்பு, அவளின் தாடை நிமிர்த்தி.

“ம்ம். சரி!” – வேகமாய் தலையை ஆட்டிய மயில், அன்பு சொல்வதை அச்சுப் பிசகாமல் கேட்கத் துவங்கினாள்.

அதில் முதற்படியாய், மயிலை மணி பயிலும் தற்காப்புக்கலை வகுப்பில் சேர்த்துவிட்டான், அன்பு.

காலையில், பீச்சில் கடை வேலையை முடித்துவிட்டு, மணியும் மயிலும் ஒன்றாய் டேக்வொண்டோ வகுர்ப்பிற்குச் செல்வதாய் முடிவு செய்யப்பட்டது!

முதல் நாள் வகுப்பிற்கு, மயில் செல்லும் போது, தனது மனநிலையை நினைத்து அன்புவிற்கே சிரிப்பாய் வந்தது.

“மயிலும்மா… இந்தாடா… தண்ணி பாட்டில் வச்சுக்கோ! ஆனா… குடிக்காதே! என்னடா?” என அவன் கூறவும்,

“ஏன் குடிக்கக் கூடாது?” எனத் தன் கேள்விகளை அடுக்கத் தொடங்கினாள் மயில்.

“இல்லடா… கிளாஸ்ல அவங்க சொல்லிக் கொடுக்கிறதை செய்யும் போது… பயங்கரமா மூச்சு வாங்கும்… ரொம்ப மூச்சு வாங்கும் போது, தண்ணி குடிக்கக் கூடாதுடா…நெஞ்சை அடைச்சுக்கும்!”

“அச்சச்சோ! நெஞ்சை அடைக்குமா? அப்ப…நா குடிக்கலைப்பா…” என்று தலையை மறுப்பாய் ஆட்டியவள்,

“தண்ணி குடிக்கலைன்னா…எதுக்கு தண்ணி பாட்டில்? நீயே வச்சுக்கோ!”

“இல்லடா… மூச்சு நார்மலா வர ஆரம்பிச்சதும், கொஞ்சமா குடிச்சுக்கோ! சரியா? இது…சீரகம் போட்டு…சூடு பண்ணின தண்ணி…அதான் இதை எடுத்திட்டுப் போன்னு சொல்றேன்!”

“ஹோ! சரி!”

“அப்புறம்… அவங்க சொல்றது புரியலைன்னா… அவங்களைக் கூப்பிட்டுக் கேளு! புரியாம எதையும் செய்யக் கூடாது…சரியா?”

“சரி!” – மயிலின் மண்டை வேகமாய் ஆடியது.

“கிளாஸ் முடிஞ்சதும்… மணிகிட்ட வந்துடணும் சரியா? மணியும் நீயும் வெளிய வெயிட் பண்ணுங்க, நானும் ராஜாவும் வந்து கூட்டிட்டுப் போறோம்!”

மண்டை இப்போது பலமாய் ஆடியது.

இன்னமும் அன்பு, ஏதேதோ சொல்லிக் கொண்டிருக்க, “டேய்…டேய் போதும்டா… மயில் என்ன +2 பரீட்சைக்கா போறா? பரீட்சைக்கு போற புள்ளைக்கு பேய் ஓட்டுற அம்மா மாதிரியே பேசுறியே! விடுடா… மணி பார்த்துப்பா…” என ராஜா வந்து நின்றான்.

“இல்லடா…அவளுக்கு இதெல்லாம் புதுசு…” என அன்பு இழுக்கும் போதே,

“நீங்க மாறவே இல்லைண்ணா… என்னை முதல் முதலா…கிளாஸ்க்கு அனுப்பும் போது, எப்படி பயப்பட்டீங்களோ…அதே மாதிரி தான் இப்பவும் பயப்படுறீங்க!” என்றபடியே வந்து சேர்ந்த மணி,

“உங்க பொண்டாட்டியை என்னை நம்பி அனுப்பி வைங்கண்ணா… நா பாத்துக்கிறேன்!” என்றாள் புன்னகையும், நம்பிக்கையுமாய்.

அதற்குமேல், அவர்களைப் பிடித்து வைக்கவில்லை அன்பு.

இரு பெண்களையும் டேக்வெண்டோ வகுப்பில் இறக்கிவிட்ட பின்னர், ராஜா வண்டியைக் கிளப்ப, அன்பு வாசலையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்.

“டேய்… வாடா!” என்ற ராஜாவிற்கு பதிலாய்,

“நீ போ…மச்சான்! நா கிளாஸ் முடியுற வரை…இங்கேயே இருக்கேன்!” என்றான் அன்பு.

“இந்த இன்ஸ்டிடியூட்க்கு…ஏற்கனவே ரெண்டு வாட்ச்மேன் இருக்காங்களாம்! மூணாவதா ஆள் தேவையில்லையாம்…படுத்தாம வந்து சேரு!” என ராஜா மிரட்ட,

“இல்ல…நா வரல! நீ போ!” என அவனை அனுப்பி வைத்தான், அன்பு.

உள்ளம் படபடவென அடித்துக் கொள்ள, கொடுத்த காதல் கடிதத்திற்கு பதில் எதிர்பார்த்துக் காத்திருக்கும் காதலனாய் தவித்துப் போனான், அன்பு!

“உனக்கே இது கொஞ்சம் ஓவரா தெரியல!” என்று மூளை கேள்வி கேட்டபோதும், காதல் கொண்ட மனம் அமைதி காத்து, மூளையை இம்சை செய்தது!

கண்கள் வாசலையே பார்த்திருக்க, காது இரண்டும் உள்ளே நடப்பவற்றையே ஊன்றி கவனித்திருக்க… முக்கியமாய் மயிலின் குரல் கேட்கிறதா என்பதிலேயே கவனமாய் இருக்க, என் கண்மணி என்ன செய்தாளோ… யாரைப் பார்த்து பயந்தாளோ… வகுப்பை ஒழுங்காக கவனித்தாளோ என்று ஏகத்திற்கும் அலைப்புற்று போனது, மனது!

அவன் தவிப்பிற்கெல்லாம் விடை போல், சரியாக ஐம்பைத்தியந்து நிமிடங்கள் கழித்து விடை கூறும் வண்ணம், மயிலும் மணியும் வந்து சேர்ந்தனர்.

மணி, சுடிதாரில் இருக்க, மயிலோ டேக்வெண்டோ உடையிலேயே இருந்தாள்.

முகம் முழுதும் வெட்க அரிதாரம் பூசியிருக்க, பெரும் சங்கோஜத்துடன் வெளியே நடந்து வந்தவள், அங்கே கணவனைக் கண்டதும், வெட்கம் பீறிட, கைகளால் முகத்தை மறைத்துக்கொண்டாள்.

தன் இறுக்கம் எல்லாம் தளர, முகம் மலர்ந்து சிரித்தான் அன்பு!

கூடச் சேர்ந்த சிரித்த மணி, “வீட்டுக்கே போகலையாண்ணா?” என்றாள் கிண்டலாய்.

“ம்ஹூம்!” என்று உதடு பிதுக்கி, தங்கைக்குப் பதில் சொன்னவன், மனைவியைப் பார்த்து “நீ ரொம்ப சூப்பர்டா, மயிலு!” என்றான் சந்தோஷமாய்.

முகத்தின் பாகங்களை சந்தோஷத்தின் பிள்ளைகளாய் மாற்றி,சின்னதாய் சிணுங்கி அவள் சிரிக்க, அன்பு சின்னாபின்னமாகிப் போனான்.

“சூப்பரா இருக்கா… உன்கிட்ட காட்டத் தான் போட்டுட்டே வந்தேன்… மணிக்கா எல்லாம் மாத்திட்டா…” என அவள் சிறு பிள்ளையாய் குதூகலிக்க,

“ஹோ! தேங்க்ஸ் டா… சூப்பரா இருக்கா சின்னக்குட்டி!” என்று அகமகிழ்ந்து போனான், அன்பு.

“அடடடா… உங்க ரொமான்ஸ் தாங்கலைடா சாமி!” என மணி இடைப்புக

“இது ரொமான்ஸாக்கும்!?” என்று அன்பு முறைக்க,

“ரொமான்ஸ்ன்னா என்ன?” என்று தன் கேள்விகளை எடுத்துவிட்டாள், மயில்.

“அதுவா…அது ஒரு சாக்லேட்!” என்று மணி, உள்ளடக்கிய சிரிப்புடன் கூறவும், “சும்மா இரு மணிம்மா…அவ உடனே அது வேணும்ன்னு கேட்பா…” என்று அன்பு பதறினான்.

அவன் கணிப்பைச் சரியாக்கும் வண்ணம் “எனக்கும் வேணும்…தா!” என்று அதிகாரமாய் அதட்டினாள், மயில் தோகை முகத்தாள்!

‘பாத்தியா?” என்று அன்பு, கண்ணாலேயே தங்கையை கண்டிக்க,

அதற்க்கெல்லாம் அசராமல், “அந்த சாக்லேட்… என்கிட்டே எல்லாம் கிடையாதுப்பா! உன் புருஷன்கிட்ட தான் இருக்கு!” என்று அண்ணனைக் கைகாட்டி விட்டாள் தங்கை.

கூடவே, “அவ கேட்கிறதை குடுங்கண்ணா!!” என்று அண்ணனை வேறு தூண்டி விட்டாள்.

“சும்மா இரு மணி…” என அன்புவை முடிக்கவிடாமல்,

“எனக்கு…அது வேணுமே!!!” என்று டிமாண்ட் செய்தாள் மனையாள்.

“அதானே… நா தரேன் வா…ஆனா…இப்போ இல்ல…நீ இந்த கிளாஸ் ஒழுங்கா முடிச்சா தான் வாங்கித் தருவேன்!” என அவளிடம் பேரம் பேசியபடியே, அன்பு மனைவியின் கையைப் பிடித்து அழைத்துச் செல்ல,

“அவளா கேட்டா கூட…நீங்க கொடுத்துறாதீங்க!” என்று தலையில் அடித்துக் கொண்டு நகர்ந்தாள், மணியும்.

அதற்குள் அங்கே வந்து சேர்ந்த ராஜாவிடம், “எங்க அண்ணனைப் பாத்து படிங்க…” என்று மணி கழுத்தை நொடிக்கவும்,

“என்ன படிக்கிறது? எப்படி…ஒரு கட்டிடத்தைக் காவக் காக்கிறதுன்னா… போங்கடி…நீங்களும் உங்க பாசமும்!” என்று அவள் தலையில் இரண்டு தட்டித் தட்டி, அழைத்துச் சென்றான், கணவன்.

வீட்டிற்குச் சென்றவுடன், அன்பு சமையலைக் கவனிக்க ஆயத்தமாக, “என்ன செய்றே?” என அவன் பின்னே வந்து நின்றாள், மயில்.

“சமைக்கிறேன்!”

“ஹோ! சோறாக்குறியா?”

“ஆமா…என்ன சோறு? புளி சோறா?”

“இல்ல…இட்லி – தக்காளி சட்னி! அப்புறம்… மத்தியானம் சாதம்-ரசம்-கத்திரிக்கா!” என மெனு வாசித்தான், கணவன்.

“இவ்வளோவா சமைக்கிறே? ஒரே ஒரு சோறு வைக்க வேண்டியது தானே? ஆயா எல்லாம்…ஒரு சோறு தான் வைக்கும்… அப்புறம் ஒரு சாம்பார் வைக்கும்… அதான் நாள் முச்சூடும் சாப்பிடணும்!”

அவள் வாழ்ந்த நிலைமை புரிய, கழிவிரக்கம் மேலோங்கியது அன்புவுக்கு.

ஆனால் , அதை வெளிக்காட்டி அவளைத் தாழ்த்திவிடாமல், “எனக்கு ஒரே ஒரு சோறு வைக்கத் தெரியாது… கொஞ்சம் கொஞ்சமா நிறைய தான் செய்யத் தெரியும்…அதான்!” என்றான் வேறு விதமாய்.

“ஹோ…சரி!” என ஆமோதித்தவள், “ஆமா…நீ புருஷன் தானே?” என்றாள் ஓர் அதிமேதாவித் தனத்துடன்.

“ஷப்ப…என்ன ஒரு கேள்வி, மயிலும்மா இது! நா உன்னோட புருஷன் தானே! உனக்குத் தெரியாதா?” என்றான் அவளையே திருப்பி.

“எனக்குத் தெரியும்!” என்று கோபமாய் கூறியவள்,

“உனக்குத் தெரியுமா? தெரியாதா?” என்றாள் வேகமாய்.

“தெரியுமே?!”

“அப்ப…ஏன் சமைக்கிறே? புருஷன் சமைக்கக் கூடாது… பொண்டாட்டி தான் சமைக்கணும்ன்னு ஆயா சொல்லியிருக்கு!”

“வேற என்னவெல்லாம் உன் ஆயா சொல்லியிருக்கு…”

“நெறைய….” என அவள் கைவிரித்துக் காட்டியதில் சிரிப்புப் பீறிட்டது அன்புவிற்கு.

சிரித்து முடித்த கையுடன், அவன் கத்திரிக்காயை வெட்டத் தொடங்க, “ஹே நா சொல்லிக்கிட்டே இருக்கேன்ல… ஏன் சமைக்கிறே?” என்று, அவன் கையிலிருந்த கத்தியைப் பிடுங்கினாள் மயில்.

“ஐயோ… அப்புறம் எப்படி சாப்புடுறது?” – அன்பு வினவும்,

“நா தான் சமைப்பேன்… நீ புருஷன்ல… சமைக்கக் கூடாது! போ!” என அவனை விரட்டினாள் மயில்.

அன்பு நிஜமாகவே பதறிப்போனான்!

“வேணாம் மயிலு!” என அவன் அதிர,

“ஏன் வேணாம்… நா தான் சமைப்பேன்… நீ போ!” என அவனைப் பிடித்து வெளியே தள்ளி விட்டாள், மலர்.

“உனக்கு… இட்லி சுடத் தெரியாதில்ல… அதான் நானே செய்யவா?” எனக் கெஞ்சியவன்,

“இன்னைக்கு மட்டும்! நாளையில இருந்து…நீயே பண்ணு!” என்றான் பவ்யமாய்.

“ஹ்ம்ம்…ஹ்ம்ம்…” எனச் சற்று நேரம் யோசித்த மயில், “சரி பண்ணு!” என்றாள் நகர்ந்தபடி.

“பண்ணித் தொலை!” என்பது போன்ற பாவனையில் அது இருக்க, “உனக்கு வேணும்டா…” என்று மனதிற்குள் எண்ணியவாறே, சமையலைத் தொடர்ந்தான்.

மயில் அங்கிருந்து நகராமல், அவனது ஓரோர் அடியையும் கவனித்தப்படியே, அவன் பின்னேயே சுற்றி சுற்றி வந்தாள்.

அவனது ஓரோர் செயலுக்கும், ஆயிரத்தெட்டு கேள்விகள் கேட்டுக் கொண்டு, அவனை பாதி சமைக்க விட்டு…பாதி புலம்ப விட்டு, ஒருவழியாய் அவன் சமையல் முடித்து வெளியே வரவும்,

“நா…இன்னைக்கு ராத்திரிக்கு சோறாக்கி வைக்கிறேன்…சரியா?” என்றாள் அவள்.

திகில் பிடித்துப் போனது, அவனுக்கு!

இந்தப் பச்சைக்குழந்தைக்கு என்ன தெரியும்? அய்யகோ! கடவுளே!

“வேணாம் மயிலு… நா சீக்கிரமே வந்துடுவேன்… ” என அவன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான்.

ம்ஹூம்! அவள் அசைவதாய் இல்லை!

“சோறாக்கி வைக்கிறேன்! சோறாக்கி வைக்கிறேன்!” என்று அவனை சேறாக்கிக் கொண்டிருந்தாள்.

ஒரு நிலைக்கு மேல் பொறுக்க முடியாமல், “சரி…பண்ணு!” என்று ஒத்துக் கொண்டு, வேலைக்குச் சென்றவனுக்கு, அன்று வேலையே ஓடவில்லை.

“என்ன செய்கிறாளோ! வீடு என்ன கோலமாய் இருக்கிறதோ! அரிசிக்கும் பருப்புக்கும் வித்தியாசம் தெரிந்ததோ இல்லையோ! என்ன தண்ணியை ஊற்றி சாதம் வடித்தாளோ! பைப் தண்ணியை ஊற்றியிருந்தால், சாதம் மஞ்சள் கலரில் அல்லவா வரும்! காய் நறுக்கிறேன் என்று கையை வெட்டிக்கொண்டாளோ! – மனம் கலங்கித் தான் போனது!

ஐந்து மணி அடித்ததோ இல்லையோ… எதிரே வந்த இளங்கோவைக் கூட கவனிக்காமல், அடித்துப் பிடித்து வீடு வந்து சேர்ந்தான், அன்பு.

அழைப்பு மணியை அழுத்திவிட்டு அவன் காத்திருக்க, லென்ஸ் வழியே அவளைப் பார்த்து “கணவன்” தான் என உறுதி செய்து கொண்டவள், கதவைத் திறக்கும் போதே, “நா சோறாக்கிட்டேனே!” என்றாள் குதூகலமாய்.

“அதுக்குள்ளையா?! அடக்கடவுளே! வெகு வெகுன்னு ஓடி வந்தது வீணா போச்சுதே!” என்று தலையை கை வைக்காத குறையாக, அன்பு அமர்ந்துவிட்டான்.

“ஏன் உக்காந்துட்டே? பசிக்குதா? தட்டில... சோறு போட்டுத் தரவா?” என அவள் கேட்க,

“வேணாம்...வேணாம்!” என வேகமாய் மறுத்தான், அன்பு.

ஆனால், எவ்வளவு நேரம் தான் மறுக்க முடியும். சாப்பிடும் நேரமும் வந்து சேர, அன்புவின் கையில் உணவுத் தட்டு கொடுக்கப்பட்டது!

அதற்கு முன்னரே, உணவை மோப்பம் பிடித்து “வாசனை ஒண்ணும் மோசமா இல்ல...” என்று நிம்மதி பெற்றிருந்தவனுக்கு, ஏனோ வாயில் அதை வைத்து சுவைத்துப் பார்க்க முடியவில்லை! ஏனா? பயமப்பா! பயம்!

ஆனால், இப்போது எங்கேயும் அசைய முடியாமல், கையில் தட்டிக் கொடுத்துவிட்டு, அவன் முகம் பார்த்து நின்றாள் மனையாள்.

அவன் தட்டை ஒரு பார்வையும், அவளை மறு பார்வையும் என மாறி மாறி பார்த்துக் கொண்டே இருக்க, “ம்ம்...சாப்பிடு!” என்ற அதட்டல் பிறந்தது.

“ம்ம்ம்ம்...” என முனங்கிவிட்டு,

ஒரு வாய் உணவை அள்ளி வாயில் வைத்தவனின் முகம், மாறியது!

மயில் சமைத்திருந்த உணவை வாயில் வைத்தவன், அதிர்ந்தே போனான்! இன்பமாய்!

என்ன ஒரு ருசி!! பசியைத் தூண்டும் ருசி! நாக்கு நரம்புகளை அபியணம் பிடிக்க வைக்கும் ருசி! பல் இடுக்குகளில் கூட உணவை சிக்க விடாமல், அனைத்தையும் சுவைக்கத் தூண்டும் ருசி! நாக்கின் அடி வரை... தொண்டையின் நுனி வரை இன்பமாய் விரவிய ருசி!

“சூப்பர்டா... மயிலு!!!” என இன்பமாய் கூவினான், அன்பு.

“ஐய்யா... நல்லா இருக்கா!!!” – மயிலுக்கு ஏகப்பட்ட சந்தோசம்.

“நிஜமாவே சூப்பர்! இப்படியொரு சாப்பாட்டை... நா இது நாள் வரைக்கும் சாப்பிட்டதே இல்லை! சூப்பர் டூப்பர் ஹிட்!” என்றான் கணவனும், அவளது சந்தோஷத்தைக் கூட்டி.

“சூப்பர்!!!!” என்று அகமகிழ்ந்து போனாள் மயில்!

“எப்படிடா இப்படி?” – நம்ப முடியா ஆச்சரியத்துடன் கேட்டான், அன்பு.

“நா தான்... ஆயா சமைக்கிறதை பாத்திருக்கேனே...” மிகவும் சாதாரணமாய் கூறினாள், மயில்.

“ஹ்ம்ம்! பாத்ததுக்கே இந்த சமையலா? சூப்பர் போ!” என அவன் பாராட்ட, அதைத் துளித் துளியாய் ரசித்தாள் மயில்.

தட்டில் போட்ட உணவு மாயமாய் காலியாக, அவள் அடுத்து கொஞ்சம் வைத்தாள்.

அதையும் காலி செய்தவன், “ஹப்பா... நல்லா சாப்பிட்டேன்! பண்ணதில மீதமிருந்தா... தரியா? அந்த வீட்டில கொண்டு போய் கொடுக்கிறேன்!” என்றான் காரியம் முடிந்தவுடன், கையைக் கழுவ வாஷ்பேசினுக்கு எழுந்து சென்றவாறே.

அதற்கு இரண்டு பதில்கள் வந்தது!





“துரோகி! நீயெல்லாம் ஒரு நண்பனாடா... நல்லா மொக்கிட்டு மிச்ச மீதியை எங்களுக்கு தள்ளி விடப் பாத்திருக்கே! என்னவொரு வில்லத்தனம்டா உனக்கு...” என்று கனியனின் கோபக் குரலில் ஓர் பதில் வர,

அடுத்த பதில் மயிலிடமிருந்து வந்தது - “நா சமைச்சதுமே... மணிக்கா வீட்டில கொடுத்திட்டு வந்துட்டேன்!” என்றாள் மனையாள்.

யாருக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல், அன்பு “ஹி...ஹி...ஹி!” என்று அசட்டுச் சிரிப்பு சிரித்தப்படி இருந்தான்.

“துரோகி! துரோகி!” என அவனை மீண்டும் வைத கனியன்,

“சாப்பாடு ஏதாவது மீதமிருக்கா மயிலு? அங்க...எல்லாத்தையும் அந்த டால்லன் தின்னுட்டான்! லேட்டா வந்த எனக்கு... அரை ஸ்பூன் குழம்பும், ரெண்டு பருக்கை சாதமும் தான் இருந்துச்சு! சரி... இங்க நம்ம நண்பன் இருக்கானே...எடுத்து வச்சிருப்பான்னு ஓடி வந்தா! இவன்... அவனுக்கு அப்பனா இருப்பான் போல! எனக்குன்னு வந்து வாச்சிருக்கீங்களே!” – கனியன் பேசிக் கொண்டே....ம்ஹூம் புலம்பிக்கொண்டே செல்ல, “இந்தாங்க சாப்பிடுங்க... பாவம் திட்டாதீங்க...” என்று அவன் முன்னே தட்டை நீட்டிப் பேச்சை நிறுத்தினாள்.

“அது...அது...அது என் தங்கச்சி!” என்று சிலாகித்தப்படியே உணவை உள்ளே தள்ளினான், கனியன்.

அங்கே சில நிமிடங்களுக்குப் பேச்சு சத்தமே இல்லை!
அன்பு அவனையே ஓர் விதமான சிரிப்புடன் பார்த்திருக்க, “என்னடா என்ன லுக்கு?” என்றான் கனியன், கையைத் துடைத்தவாறே.

“இல்ல... என்னை துரோகின்னு சொன்னியே? இப்ப நீ என்னன்னு யோசிச்சிட்டு இருந்தேன்!” என்றான் அன்பு, சிரிப்பினூடே.





“நா ஏன் டா துரோகி ஆகுறேன்?! என் நண்பைங்க எல்லாரும் என்னைய விட்டு மொக்குன அப்புறம்... பாவப்பட்ட ஒத்த ஆடா நின்னேனேடா... நா எப்படி துரோகி ஆவேன்!” என அவன் மேஜர் சுந்தர்ராஜன் குரலில் கேட்கவும்
“நண்பன் சரி! தங்கச்சி!??” என்றான் அன்பு, புருவம் உயர்த்தி.

“ஆஹா...தங்கச்சி நீ சாப்பிடலையா?” – ஏகப்பட்ட அதிர்ச்சியின் பின்னணியில் அவன் கேட்க,

“பரவாயில்லைண்ணே! நா இட்லி மாவு இருக்கு...தோசை ஊத்தி சாப்பிட்டுக்கிறேன்!” என்று சிரித்தாள் மயில். ஏனோ, தன்னை விடவும் சிறு பிள்ளைகளாய் சிலரைப் பார்த்ததில் அவளுக்கு ஓர் குதூகலம்!

“ஆனாலும்... ஒரு மொச்சை குழம்பும், பருப்பு துவையலும் இவ்வளவு டெஸ்ட்டா இருக்கும்ன்னு நா எதிர்பார்க்கவே இல்லை, மயிலு! அதுவும் உன்கிட்ட இருந்து!” என்று அன்பு மீண்டும் சிலாகிக்க,

“உண்டக்கட்டி சாதம் சாப்பிட்டு வளந்த நமக்கு...ஒரு காலத்தில சுடு சாதம் சாப்பிடறதே பெரிய விஷயமா இருந்துச்சு! நாம தனியா சம்பாதிக்க ஆரம்பிச்சு... முதல் முதலா சமைச்சு சாப்பிட்டோமே ஞாபகம் இருக்காடா அன்பு? அன்னைக்கு, எவ்வளவு ஆசையா சாப்பிட்டோம்!” என்று நினைவு கூர்ந்தான், கனியன்.

அன்புவின் கண்களும், அன்றைய தினத்திற்குப் பயணிக்க,

“அன்னையில இருந்து...இன்னைக்கு வரைக்கும்...நீ சமைக்கிற கொடுமையையே நாங்க சாப்பிட்டதில, நாக்கு அடக்கம் பண்ண வேண்டிய நிலமையில ஆஸ்பத்திரில இருந்துச்சு, இப்ப மயில் வந்து அதுக்கு ஆக்ஸிஜன் ஏத்திட்டா!” என்றான் கனியன் மீண்டும், அன்புவை நிகழ்காலத்துக்கு மீட்டு வந்தவனாய்.

“அடிங்க!!!” என்று அன்பு கை ஓங்க, கிண்கிணியாய் சிரித்தாள் மயில்!

அந்தச் சிரிப்பினூடே கிளம்பிச் சென்றான் கனியன்.

அவன் சென்றபின்னரும், மயிலின் மலர்ந்த அதரங்கள் இதழ் விரித்தே இருக்க, "என்னைக் கிண்டல் பண்ணா சிரிக்கிறே நீ?!!!!" என்று ஒரு விரல் நீட்டி, மிரட்டினான் அன்பு!

ஏனோ, அது மிரட்டலாய் தெரியவில்லை போலும், மயிலுக்கு!

மீண்டும், அவள் இதழ் மலர சிரிக்க, "உன்னை..." என்று அவள் கையைப் பிடித்து இழுத்தவன், தன்னருகே அவளைக் கொண்டு வந்து, கன்னத்தில்....................ஹ்ம்ம் நோ...லேசாய் கிள்ளிவிட்டான்!

"ஹா...வலிக்குது! போ!" எனத் தன் கன்னத்தைத் தேய்த்துவிட்டுக் கொண்டாள் மலர், கோபமாய்.

"வலிக்கட்டும்! வலிக்கட்டும்! நல்லா வலிக்கட்டும்!" என்றவன், மீண்டும் ஒரு முறை கிள்ள,

"போ! நா... சூப்பர் சமையல் செஞ்சேன் இல்ல...அதுக்கு மிட்டாய் கொடுப்பேன்னு பாத்தா...இப்பிடி கிள்ளுறியே!" என்று அலுத்துக் கொண்டாள், மயில்.

"இப்ப...என்ன குட்டிக்குச் சாக்லேட் வேணுமா? இரு..வாரேன்!" என்றவன், தன் அலுவலகப்பையிலிருந்த சாக்லேட் ஒன்றை எடுத்து, அவளிடம் நீட்டினான்.

அதை ஆசையுடன் வாங்கிக்கொண்டவள், "இது தா ரொமான்ஸ் சாக்லேட்டா?" எனக் கேட்கவும், அன்பு அயர்ந்து போனான்.

மணி சொன்னதை அவள் மறக்கவில்லை! கடவுளே!





என்ன சொல்வதென்று புரியாமல், அவன் நின்றிருக்க, சாக்லேட்டை வாய்க்குள் அடைத்துக்கொண்டபடியே அவனை நெருங்கி, அவனது கன்னத்தில் லேசாய் தட்டி, "இதா ரொமான்ஸ் சாக்லேட்? சொல்லு!" என்றாள் மயில், அதிகாரமாய்.

ரொமான்ஸ் என்ற வார்த்தையும், மணி அதைக் கூறிய நோக்கமும், எல்லாவற்றையும் விட செம்பருத்தி மலர் போல் அருகில் நின்று...செம்பருத்தி மலரின் நடுவிலிருந்து வெளிப்படும் சிறு இதழாய் கை நீட்டி, அவனை ஆக்கிரமிக்கும் மயிலின் அருகாமையும் நெஞ்சை கிறங்கடிக்க, கூடவே வயாகரா சாப்பிடாமலே முறுக்கேறும் வயதும் சேர்ந்துகொள்ள, சட்டென கை நீட்டி நின்ற மயிலின் கையைப் பிடித்து, தன்னருகே இழுத்தவன், அவள் இமைக்கும் முன்னர் கன்னத்தில் அழுத்தமாய் ஓர் முத்தம் வைத்து நிமிர்ந்தான்!

திகைத்து நின்றாள் மயில்! அன்புவுமே பதறிப் போனான்! ஆனால், அவள் கண்ணில் அதிர்ச்சி தென்படாமல், திகைப்பே தென்படவும், மனம் சற்றே நிம்மதியுற்றது!

அவளையும்...கூடவே தன்னையும் இயல்புநிலைக்கு மீட்டு வரும் வண்ணம், ":என்ன குட்டி? சாக்லேட் நல்லா இருந்துச்சா?" என்றான் சாதாரணமாய்.

அவள் 'எந்த' சாக்லேட்டை நினைத்து ஆம் என்றாலும், தலை வேகமாய் ஆடியது! "ஆம்" என்பது போல்!

"இனிமேல்... தினம் சாப்பிடலாமா?" என அவன் கேட்க,

அதற்கும் மையமாய் ஆடிய தலை, உடனேயே வேகமாய் மறுத்தது.

"ஆஹா! மாட்டினேடா மகனே!" என்று அன்பு உள்ளுக்குள் உதறலெடுக்கும்போதே, "நா மட்டும் தா சாக்லேட் சாப்பிடுவேன்! உனக்குக் கிடையாது!" என்றாள் மயில் சிறு பிள்ளையாய்.

"ஹப்பா!" என நிம்மதியுற்ற மனம், "ஏன்டா?" என்று சிணுக்கத்துடன் கேள்வி கேட்க வைக்க,





"சின்னப்பசங்க தான் சாக்லேட் சாப்பிடணும்! பெரிய பசங்கெல்லாம் சாப்பிடக் கூடாது!" என்றாள் அவளும் தீவிரமாய்.

அவளது பேச்சு, சட்டென சிரிப்பைத் தூண்டியபோதும், மனம் சிந்திக்கவும் செய்து, அவனைக் குற்றவாளியாக்கியது!

ஆனால், இளமை உணர்வெனும் வக்கீலோ "அதெப்படி....சிறு பெண் என்றாலும் அவள் உன் மனைவி தானே? எவ்வளவு நாள் தான்...நீயும் சிறு பெண்...சிறு பெண் என்றிருப்பது? இப்படியே விலகியே இருந்தால், அவளே ஆசைப்பட்ட "பிள்ளைகளை" எப்படி கொடுப்பது?" என்று வாதாட,

"அதானே? அவள் போக்கிலேயே போய்க் கொண்டிருந்தால்...அறுபது வயதில் கூட பிள்ளை பிறக்காது! அப்புறம்.. நிஜமாவே வயாக்ரா சாப்புடுற நிலைமை வரலாம்!" - உச்ச நீதிமன்ற நீதிபதியான மூளையே, உணர்வுக்கு வக்காளத்து வாங்க, ஏற்கனவே உணர்வுகளுக்கு அடிமையாகிப் போன மனதும், ஆட்டம் கண்டு, "ஹ்ம்ம்...கொஞ்சம்...கொஞ்சமாய் அடி எடுத்து வைப்போம்!" என்று முடிவுக்கு வந்தது.

அதன் முடிவில், "சரி...ஓகே! இந்தச் சின்னக்குட்டி....தினம் இந்தச் சாக்லேட் தரவா வேணாமா?" என்று கொக்கிப் போட்டவன், இந்தச் சாக்லேட் என்பதை எந்தச் சாக்லேட் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

அவளுமே, "ம்ம்ம்மம்ம்ம்மம்ம்ம்ம்" என்று ஆமோதித்தாளே ஒழிய, அவளும் எந்த சாக்லேட் என்று கேட்கவில்லை. அந்தக் 'குழந்தைக்கு', 'அந்த' சாக்லேட் பிடித்திருந்தது போலும்!

சற்று நேரம், அங்கே அமைதி நிலவ, அதிலிருந்து அவளை மீட்கும் பொருட்டு...சொல்லப் போனால் தன்னையே மீட்டுக் கொள்ளும் பொருட்டு, "ஹே குட்டி.... உனக்கு காஸ் அடுப்பு பத்த வைக்கத் தெரியுமா? உங்க ஆயா வீட்டில காஸ் இருந்துச்சா?" என்று தன் நீண்ட நேர சந்தேகத்தை முன் வைத்தான், அன்பு.





இதென்ன கேள்வி என்பது போல் பார்த்த மயில், "நீ தா...காலையில பண்ணியே...அதே மாதிரி பண்ணே!" என்றாள் வெகு சாதாரணமாக.

ஆனால், அன்புவிற்கு அது சாதாரணமாய் படவில்லை!

அவளது கூர்ந்து கவனிக்கும் திறனும், அதை மனதில் பதிய வைத்துக் கொள்ளும் திறனும், சில பல கணக்குகளை உள்ளுக்குள் போட வைத்தன!

முன்னர் கூட, இளங்கோ சாப்பாட்டு டப்பா எடுத்து வராததை வைத்து, அவன் மனைவி ஊரில் இல்லை என்று கணித்தவள் அல்லவோ! படிப்பறிவு இல்லாவிடும், கவனிக்கும் திறனும், அதைச் சரியாய் பயன்படுத்திக்கொள்ளும் அறிவுக்கூர்மையும், பிறப்பிலேயே அதிகம் பெற்றவள் போலும்! இவளை மட்டும் படிக்க வைத்திருந்தால்...!?!!

படிப்பின் வாசத்தையே காட்டாத அவள் குடும்பத்தின் மீது பழி போட ஆரம்பித்த மனதை, "படிப்புக்கு என்னடா வயது? அவங்க செய்யலை...அதையே சொல்லிட்டு இருக்கிறதால, அவ படிச்சிடுவாளா என்ன? சும்மா... புலம்புறதை விட்டுட்டு...வேற வழி பாரு!" என்று அதட்டியது மூளை.

அதே யோசனையிலேயே, படுக்கச் சென்றான் அன்பு, மனைவியுடன்!

அன்றும், நடுநிசியில் மயில் கனவு கண்டு உளறினாள்! ஆனால், அது முன்னர் போல் அழுகையாகவோ..... இல்லை... புலம்பலாகவோ இல்லை... ஓர் சந்தோஷ தருணத்தின் பிரதிபலிப்பாய் வெளிப்பட்டது!

உறக்கம் படிந்த முகத்தில் சிரிப்பு விரவ, தன் போக்கில் புலம்பத் துவங்கினாள் மயில்.

"ஏய்... கணேஸு... என்னைய பிடி பாப்போம்..."

calaméo



"பாப்பா குட்டி... அக்காட்ட வந்துரு! நா இடுப்பில தூக்கிறேன்! அப்ப தான் கணேஸ் பிடிக்க மாட்டான்..."

"அவன் வரதுக்குள்ள... நாம ஓடிடலாம்!"

"ஏய்...வாடா...வாடா..." – கும்மாளமிட்ட மயிலின் குரல், சட்டென நின்றது.

சில வினாடி இடைவேளை விட்டு, "அய்யயோ...கணேஸு விழுந்திட்டியாடா..." என்று பதறியது.

பின்னர் சிறு இடைவேளை!

"பாப்பா...இறங்கிக்கோடா! கணேசுக்கு அடி பட்டுடுச்சு... அக்கா பாக்குறேன்..."

அடுத்து, சிறுது மௌனம்!

"ஐயோ...ரத்தம் வருதே! வலிக்குதாடா!" என்று கவலை விரவிய குரலில் புலம்பிய மயில், லேசாய் புரண்டு படுத்தாள்.

அவளையே பார்த்திருந்த அன்பு, அவள் உறக்கம் களைந்து விடாதபடி சற்றே தள்ளி அமர்ந்து கொண்டான். அவனுக்கு, அவளது புலம்பலை இடையிலேயே நிறுத்த மனதில்லை.

கொஞ்சமாய் தன்னை ஆசுவாசப்படுத்திய மயில், "எச்சியை கொஞ்சம் தொட்டு வச்சுக்கோ...கணேசு! சரியா போய்டும்! அம்மாட்ட போனா...வையும்!" என்ற மயிலின் குரலில் ஓர் மூத்த சகோதரிக்கான அக்கறை.

"அழுவாதடா... சரியா போய்டும்! அழுவாத!" என்று சற்று நேரம் தேற்றும் குரலில் உளறியவள்,





பின்னர் தன் தம்பி மற்றும் தங்கையுடன் மீண்டும் விளையாடக் கிளம்பிவிட்டாள்! கனவில்!

அவளது உணர்வுகளை விரட்டிப் பிடிக்கச் சென்று தோற்று கொண்டிருந்தான் அன்பு! நனவில்!

அடுத்து வந்த ஒரு வாரமும், முந்தைய நாளைப் போலவே கழிந்து போனது!

ஓர் நாள் மாலை, இன்று என்ன சமைத்திருப்பாள் என்று எதிர்பார்ப்புடன் வந்தான் அன்பு.

"அவளுக்குத் தெரிஞ்சதே... மூனு குழம்பும்...ரெண்டு துவையலும் இதில என்னடா எதிர்ப்பார்ப்பு?" என்று மனம் கேள்வி கேட்க,

"ஆனாலும்..அந்த தெரிஞ்ச மூணையும் எப்படி ருசியா சமைக்கிறா! போடா லூசு!" என்று அதற்கும் பதில் இருந்தது.

"ஹ்ம்ம்...இப்படி புலம்புறதை விட்டுட்டு... டி.வில வர சமையல் நிகழ்ச்சி எதையாவது பாக்கச் சொல்லு! அதைப் பாத்து, அவளும் விதம்விதமா செய்வா இல்ல!" என்று அடுத்த கேள்வி வர,

"அட ஆமாம்! என்னோட செல்லக் குட்டி தான்...ஒரு தடவை சொல்லிக் கொடுத்தா கப்புன்னு படிச்சுக்குவாளே! டி.வி எப்படி ஆப்ரேட் பண்றதுன்னு சொல்லிக் கொடுத்தா... புகுந்து விளையாடிடுவா! இன்னைக்கு சொல்லிக் கொடுத்திடணும்!" என்ற முடிவுடன், அவன் வீட்டில் நுழைந்தான் அவன்.

ஆனால், அவனது உற்சாகத்திற்கு எதிர்மாறாய், பெரும் சோகத்துடன் பதுமையென அமர்ந்திருந்தாள், மயில்.

எப்போதும் கதவு திறந்து விடும் போதே, "வந்துட்டியா... ஜாலி!" என்று உற்சாகமாய் வரவேற்கும் மலர், இப்போது சோர்ந்து அமர்ந்திருக்கவே



Bhuvana's

calaméo



"என்னடா குட்டி! என்னாச்சு?" என்றான் அன்பு, பதற்றமாய்.

மயிலின் முகம் தாழ்ந்து, தரை பார்த்தது!

வலுக்கட்டாயமாய் அவள் முகம் நிமிர்த்திப் பார்த்தான், அன்பு! முன்னர் போல், அதில் ஏகப்பட்ட பயமில்லை! பீதியில்லை! அலைப்புறுதல் இல்லை! வெறும் வருத்தம் மட்டுமே! கொஞ்சம் சோர்வு!

"என்னடா..." என அவன் உருக,

"மணிக்கா... திட்டிட்டா!" என்றாள் மயில், அழுகையை வெளிப்படுத்திய குமுறலுடன்.

"ஏன்டா?" – அவனுமே குழந்தையைத் தேற்றும் விதத்தில், களைந்திருந்த அவளது கூந்தலை சரி செய்தபடியே கேட்டான்.

"ஹ்ம்ம்...ஹ்ம்ம்...கஹு...........ஹுக்கும்..." என விக்கியது மயிலுக்கு.

"என்ன பூதமோ!?" என்ற பதைப்பு இருந்தபோதும், தங்கை தேவையில்லாத கோபத்தைக் காட்டியிருக்க மாட்டாள் என்று நம்பிக்கை மிகவுற,

"சொல்லுடா குட்டி... நீ என்ன பண்ணே?" என்றான் அவன், "மயில்" செய்த எந்த விஷயம் மணியின் கோபத்தைத் தூண்டியதோ என்ற எண்ணத்தில்.

"நா...நா...உன்ன மரியாதை இல்லாம கூப்பிடுறேனாம்! புருஷனை...நீ வா...போ சொல்லக் கூடாதாம்!"

"அடக்கடவுளே! இந்த மணியின் அண்ணன் பாசத்துக்கு ஒரு அளவில்லாம போச்சு! இவளே ஒரு குழந்தை... இவட்டப் போய்!" என்று சற்றே கோபம் வந்த போதும்,





"ஹ்ம்ம்... அப்புறம் எப்படி கூப்பிடணுமாம்?" என்று கதை கேட்டான், அன்பு.

"நீங்க... வாங்க... போங்கன்னு மரியாதையா சொல்லணுமாம்! உங்க ஆயா இதெல்லாம் சொல்லித் தரலையா கேட்டா!" என்று விசும்பினாள் மயில்.

"ஹோ! சரி... அவ சொல்லிட்டா இல்ல...அப்படியே கூப்பிட வேண்டியது தானே? எதுக்கு அழணும்!?" என மனைவியின் கண்ணைத் துடைத்து விட்டான், அவளது அன்புக் கணவன், அன்பு!

"இதுக்கு மட்டும் அழல!" என அவள் மீண்டும் விசும்ப,

"வேற என்னடா?" என உருகினான், அவனோ!

"நீ ...ம்ஹூம் நீங்க எப்ப வருவேன்னு...மணிக்கா கேட்டாளா... நா அன்பு சாயந்திரம் தா வருவான்...ம்ம்ம்ம்...வருவாங்க சொன்னேன்... அதுக்கும் திட்டு விழுந்துச்சு!"

"அச்சச்சோ! ஏன்டா... நா சாயங்காலம் வரதுக்கா?" என அன்பு தெரியாத குரலில் வினவ,

"இல்ல...உன்னை அன்புன்னு சொன்னதுக்கு!"

"அப்புறம்...எப்படி சொல்றதாம்?"


"அதா... உன்கிட்டே...இல்ல உங்ககிட்டே கேட்க சொல்லிட்டா..." என்ற மயில், "ம்ம்...சொல்லு...ம்ம்...ங்க...எப்படி கூப்பிடணும்?" என்றாள் கேள்வியாக.

பரவாயில்லை! தங்கை நல்ல வேலை தான் செய்திருக்கிறாள் என்ற எண்ணம் தோன்ற, தனக்கான அழைப்பைத் தானே யோசித்தான் அன்பு!

"என்ன கூப்பிடலாம்?" என அவன் சத்தமாகவே யோசிக்க,



Bhuvana's



“அன்பிலார் எல்லாம்!” - என்.சீதாலெட்சுமி

“புருஷன்...கூப்பிடவா?” என்றாள் அவள்.

“ச்சே...ம்ஹூம்!” என மறுத்தான் அவன், வேகமாய்.

“ம்ம்...அப்புறம்...”

“ஹான்...மாமா கூப்பிடுறியா?” என அவன் கேட்க,

“மாமா வேணாம்... மாமா கெட்ட வார்த்தை...எனக்குப் பிடிக்காது! மாமா வேணாம்...மாமா வேணாம்...மாமா கெட்டவன்...மாமா வேணாம்!” – கிட்டத்தட்ட கதற ஆரம்பித்து விட்டாள் மயில்.

பதறிய அன்பு, “சரி...சரி வேணாம்! வேணாம்டா! வேற யோசிப்போம்! நீ... டென்ஷன் ஆகாத!” என்று அவளைச் சமாதானம் செய்தபடியே,

“அத்தான்... என்னங்க...” என்று யோசனையை ஓட்டி, சட்டென உதயாவின் அம்மா அவளது அப்பாவை அழைத்த “பாவா”வில் நிறுத்தினான்.

“ஹே பாவா-ன்னு கூப்பிடுறியா குட்டி?” என அவன் உற்சாகமாய் வினவ,

“ஹையா சூப்பர்! பாவா!! பாவா!! பாவாஆஆஆஆஆஆ!!!” – உற்சாகமாய் கூவினாள் மயிலும்!

Copyrighted material. Can be read only at www.sitaramwrites.wordpress.com Page 12

அதன் பின்னர், பாவாவும் மயிலும் ஓர் அன்னியோமான வாழ்க்கை வாழ்ந்தனர் என்று சொல்ல இயலாது! ஆனால், வாழ்க்கையை சந்தோஷமான தருணங்களாய் மாற்றிக் கொண்டிருந்தனர்!

தொலைக்காட்சியை இயக்கவும், அதில் வரும் சமையல் நிகழ்ச்சிகளைப் பார்க்கவும் மயிலுக்குப் பயிற்றுவித்தான் அன்பு.

அதைப் பார்த்துவிட்டு, மயில் செய்து வைக்கும் சமையலுக்கு, அன்புவும் கனியனும் அடிமை என்றால், அதற்கு விசிறிகளாயினர் மற்றவர்கள்!

மணியே, ஓரோர் சமயம் “நேத்து…நீ செஞ்ச முருங்கைக்காய்-கத்திரிக்காய் பச்சடி தான் நானும் செஞ்சேன்…ஆனா…நா செஞ்சது மட்டும் ஒரு மாதிரியா இருக்கே?” என்று மயிலிடம் சந்தேகம் கேட்கும் அளவிற்கு வந்து நின்றது.

“அது…ஒண்ணுமில்ல, மணிக்கா! நீ…புளி கரைச்சு ஊத்தினதும் ரொம்ப நேரம் கொதிக்க விட்டிருப்பே… அதான்… புளி ஊத்தி, ஒரு கொதி வந்ததும் இறக்கிடணும்!” என்பாள் மயில், தேர்ந்த நிபுணி போல்.

அப்போதெல்லாம் சுவாரஸ்யத்துடன், மனைவியையே பார்த்திருக்கும் அன்பு, மணி கிளம்பிச் சென்றதும்.

“என்னோட சின்னக்குட்டி… என்னமா விளக்கம் சொல்லுது!” என்றுவிட்டு, அவளுக்கு ஓர் சாக்லேட் கொடுப்பான்.

அதைக் கன்னத்தில் அதுக்கிக் கொண்டு, உப்பிய கன்னத்தை அவன் பக்கமாய் சாய்த்து, “ரொமான்ஸ் சாக்லேட்!” என்று கேட்டு வாங்கிக் கொள்ளும், அக்குழந்தை.

அவனும், குண்டாக்கப்பட்ட கன்னத்தில் குழி விழும்படி ஓர் முத்தத்தைப் பதித்து, “சூப்பர் சாக்லேட், மயிலு!” என்பான் ரசனையுடன்.

“அய்யே… உனக்கு அறிவே இல்ல…பாவா! நா தானே சாக்லேட் சாப்பிடுறேன்…நா தான் சூப்பர் சொல்லணும்!” என்றுவிட்டு,

சாக்லேட்டை சுவைத்து முழுங்கிவிட்டு, “சூப்பர் பாவா!”என்பாள் கண்களை இறுக மூடி, கைகளை “சூப்பர்’ என்பது போல் பாவனை செய்து!

அதில் சொக்கியவனாய், அவன் மீண்டும் ஓர் “சாக்லேட்” கொடுப்பான்! அங்கே, சாக்லேட்கள் அளவின்றி பரிமாறப்பட்டு, அவளுக்கு பல் சொத்தையையும், அவனுக்கு பற்பல சொத்தையும் சேகரித்துக் கொண்டிருந்தனர்.

அன்றும் அப்படித் தான், ஏதோ ஒரு சமையல் நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டு, மயில் “கொழுக்கட்டை” என ஒன்றை செய்து வைத்துக் கொண்டு, அன்புக்காக காத்திருந்தாள்.

உருண்டை…உருண்டையாய் பரப்பப்பட்ட கொழுக்கட்டைகளைத் தட்டில் ஏந்தியபடியே, அவள் கதவைத் திறக்க, “ஆஹா! இன்னைக்கு…என்னடா புதுசா பண்ணீங்க?” என்று ஆவலுடன் உள்ளே வந்தான் அன்பு,

“கொழுக்கட்டை பாவா!!” – சந்தோஷமாய் கூவினாள் மயிலும்.

“அடேங்கப்பா! சூப்பர்டா!” என்று பாராட்டிய படியே, ஒன்றை எடுத்து வாயில் போட்டவன்,

“அய்….ச்சே… தூ…” என்று அடுத்த நிமிடமே துப்பவும் செய்தான்.

“என்னாச்சு பாவா?!!!” – முகம் பீதியில் மிரண்டது மயிலுக்கு.

“நல்லாவே இல்ல… மயிலு! எதைப் போட்டு பண்ணே?” என்று அவன் வாயில் இருந்த துண்டு துணுக்குகளைக் கூட வெளியே எடுத்துப் போட்டான், அன்பு.

முகம் அஷ்டகோணலாக, “அவங்க சொன்ன மாதிரியே தான் செஞ்சேன்…” என்று பரிதாபமாய் முழித்த மயிலைப் பார்க்கவும் பாவமாய் தான் இருந்தது.

அதற்காக, கசக்கும் கொழுக்கட்டையை… அதுவும் பிசுக்…பிசுக்கென்று நாக்கில் ஒட்டும் கொழுக்கட்டையை எப்படி உண்பது?

“இந்தக் கொடுமையை… அந்த வீட்டுக்கு வேற கொடுத்தாளா?” என்ற பீதியில்,

“எவ்வளவுடா செஞ்சே? அங்கயும் கொடுத்து விட்டியா?” என்று அவசரமாய் வினவினான், அன்பு.

“நெறைய செஞ்சுட்டேன் பாவா! ஐயோ…எல்லாம் வீணா போச்சு!” – அழவே ஆரம்பித்துவிட்டாள், மயில்.

அவள் வளர்ந்த சூழலில், ஓர் பொருளை வீணாக்குவது என்பது கொலைக்குற்றத்திற்கு சமம்!

அது – ஒருவேளை உணவிற்காக, அல்லும் பகலும் அயராது உழைக்கும் கீழ்தட்டு மக்கள் வாழும் வாழ்க்கையின் நிதர்சனம்!

விற்கும் விலைவாசியில், பல நாட்களுக்கு உணவாகி இருக்கக் கூடிய பொருட்களை, ஒரே நாளில் செலவழித்து, அதுவும் வீணாய் போனதில் உண்டான வருத்தம்!

இதுவே, அவள் வாழ்ந்த முந்தைய வாழ்க்கையாய் இருந்தால், அவள் உடம்பில் பட்டு பட்டு, பிரம்பு உடைந்திருக்கும்!

ஒரு முறை, அவள் தட்டில் வைத்த சோறை “தண்ணி விட்டுருச்சு போல…நொசு நொசுன்னு இருக்கு…” என்று தள்ளி வைத்ததற்கே, அவளது அன்னை அடி பியித்து விட்டார்.

“இந்தப் புழுத்து போன சோறு கூட கிடைக்காம…எம்புட்டு பேரு எச்சி இலையை பொறுக்கிட்டு திரியுறாங்க தெரியுமா? உனக்கு சுடு சோறு கேட்குதோ!” என்று அவர் அடித்த அடியும், அதற்கும் மேலாய் இரண்டு நாட்களுக்கு பட்டினி போட்டதுமே அவள் நெஞ்சில் நிழலாடின.

முற்று முதலாய் அழுதே கரைந்தாள், மயில்! பெருங்குற்றம் செய்துவிட்டவள் போல், அவள் தேம்பித் தேம்பி அழ, கூடவே பயத்தில் முகம் வெளிறி நிற்க, அன்புவின் நிலை தான் அந்தோ பரிதாபமாய் போனது!

கொடுமை கொழுக்கட்டையை உண்பதை விடவும், அவளை சமாதானம் செய்வது தான் அன்புவிற்கு பெரும்பாடாய் போனது!

ஒரு நிலைக்கு மேல் பொறுக்க முடியாமல், அருகே அமர்ந்து அழுது கொண்டிருந்த மயலின் தோளில் கை போட்டு இறுக்கி, “மயிலு, அழக்கூடாது!” என்றான் அழுத்தமாய்.

அவன் பிடியில் இருக்கிறோம் என்பதை உணராத மயில், சட்டென தலை திருப்பி அவனை அண்ணாந்து பார்த்தாள்.

அவள் முகம், அன்புவின் உதட்டருகே உரசி நிற்க, அவளோ அந்த ஸ்பரிசத்தை உணராமல், “எவ்வளோ மாவு… எவ்வளோ தேங்கா…நெறைய வெல்லம் எல்லாம் வீணா போச்சு! நா சும்மாவே இருந்திருக்கணும்! நெறைய காசு வீணா போச்சில்ல, பாவா! நா…மக்கு பாவா! சரியான மக்கு!” என்றாள் மிகுந்த வருத்தத்துடன்.

அவள் உணராத நெருக்கத்தை அவன் உணர்ந்து விட்டான்! உள்ளமும், உடலும் புது ரத்தம் பாய்ந்தது போல், சிலிர்த்துக் கொண்டு நின்றது!

அவள் சொன்ன பொருட்கள் வீணாகிப் போயிருக்கலாம்! ஆனால், எதுவுமே வீணாகாமல், அவள் அருகாமை எனும் அமிர்தத்தால், அன்புவின் உடலை இன்புறச்செய்து கொண்டிருந்தன!

உள்ளே பாய்ந்த தாப ரத்தம், குரலில் கிறக்கத்தை உண்டு பண்ண, “மக்கு பொண்ணுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?” என்று அவள் முடி கற்றைகளின் உள்ளே சென்று, மீண்டு வந்தன அவன் விரல்கள்.

தனது தவறிலேயே உழன்று கொண்டிருந்த மயிலோ, “ம்ம்… அடிப்பீங்களா பாவா!?” என்றாள் பயத்துடன்.

“ம்ஹூம்!!!” என்றவனின் உதடுகள் அவள் நெற்றியில் அழுந்தி மீண்டன.

“பாவா!!!” – மயிலுக்கோ இன்ப அதிர்ச்சி!

கோபப்படுவான்…திட்டுவான்…அடிப்பான்…பிரம்பை எடுத்து விளாசுவான் என்று எண்ணியிருந்த பாவா, முத்தம் வைக்கிறானே!

அகமகிழ்ந்து போன அக்குழந்தை, அவனை நெருங்கிக் கொண்டு “பாவா!” என்றது மீண்டும்.

ஏற்கனவே உண்டாகியிருந்த உரசல், இப்போது நெருக்கமாகிப் போனது! ஹ்ம்ம் இறுக்கமாகிப் போனது!

அதுவே ஓர் அழைப்பாக, அன்புவின் உதடுகள் அவள் கண்ணில் ஓர் முத்தம் வைத்தன.

“பாவா! என்ன பண்றீங்க…” என மயிலின் குரல் உள்ளே சென்று, அவனது இளமையின் நாணங்களை வெளியே இழுத்து வந்தன.

அவனோ, அவன் சுயத்தில் இருந்தால் அல்லவோ!

தன்னுளிருக்கும் தீயை அணைப்பதற்காய், நெருங்கித் தெரிந்த அவள் முகத்தில், ஈரம் பதித்து மீண்டான். மிஞ்சி மிஞ்சிப் போனால், அவனும் மனிதன் தானே?! புத்தன் அல்லவே!

அவளுமே, அந்த ஈரத்தில் வேர் விட்டு, அவன் தாபத்தில் பூ பூத்தவளாய், “பாவா!” என்ற அழைப்புடன் அவனது இடுப்பில் கையிட்டாள்!

இது நாள் வரை எப்படியோ, “பாவா!” என்ற அழைப்பு, அவனை சும்மா இருக்க விடவில்லை!

அவள் உதிர்த்த ஓரோர் “பாவா”விற்கும், அவள் உன் மனைவி…அவள் உன் மனைவி என்று உரக்க யாரோ கூவுவது போல் தலை தெறிக்க,

அவனது கரங்கள், மயிலின் முடியிலிருந்து இறங்கி முதுகு படர்ந்தன.

மயிலின் வதனங்கள், கன்னித்தன்மையின் காரணமாய் நெகிழ்ந்து கொடுத்தன.

மனைவியின் உடல் நெகிழ நெகிழ, ஆணின் ரத்த நாளங்கள் முறுக்கேறின! இளமையெனும் தீ ஊற்றி!

முதுகு படர்ந்த கரங்கள், மெல்ல மெல்ல... தாபத்தின் தேடலுக்கு வழிவகுக்க, அன்புவின் கரங்கள், தனக்கு இஷ்டமான இடங்களுக்கு எல்லாம் மேலும் முன்னேறின.

குழந்தை என்றாலும், அவளுமே குமரியே அல்லவோ! இயற்கையிலேயே, பெண்மையின் உடமையாய் கருதப்படும் நாணம், உடல் முழுதும் தன் ஆக்கிரமிப்பை நிலைநாட்ட, அதை வெளிப்படுத்தும் வகை தெரியாமல், அவனுடனே ஒன்றினாள்.

அவளுள்ளிருந்த ஏதோ ஒன்று, அவளது இளமையைத் தூண்டிவிட்டது! அவளுள்ளிருந்த ‘பயங்களையும்’ மீறி!

ஆண்களைக் கண்டாலே பயப்படும் அவள், அன்புவை ஏன் திருமணம் செய்து கொண்டாள் என்பதற்கு எப்படி பதில் இல்லையோ, அதைப் போலவே அன்புவின் தீண்டல்களுக்கு அவளது உடல் கட்டுப்படுவதற்கும் எந்த பதிலும் இருக்கவில்லை.

பார்த்துப் பழகிய ஆண்கள் என்றாலும், அவர்கள் கதவு தட்டும் போது, உதறலெடுக்கும் உடம்பு, எப்படி அன்புவின் ஸ்பரிசத்தில் உறங்குகிறது என்பதற்கு எப்படி விடை தெரியவில்லையோ, அதைப் போலவே அன்புவின் ‘கணவன்’ ஆளுமைக்குள் மயில் வருவதற்கும் எந்த விடையும் தெரியவில்லை.

ஆண் வர்க்கத்தின் மீது ஓர் வெறுப்பை...ஹ்ம்ம் பயத்தை வளர்த்திருந்த அவளது பிள்ளை நெஞ்சம், குமரி உள்ளமாய் மாறி, அன்புவின் காதலையும்... தாபத்தையும் ஏன் சுமக்க ஆரம்பித்தது என்பதற்கும் அங்கே விடையில்லை!

அர்த்தம் பெற்று தான்...எந்த வாழ்வும் அழகாக வேண்டும் என்றில்லையே! அழகாகி, பின் அர்த்தம் பெற தயாரானது அத்தம்பதியரின் வாழ்வு!

அணைத்து கேள்விக்கும் விடை தெரிந்து கொண்டு தான், பரீட்சைக்கு செல்ல வேண்டும் என்பதில்லையே! அப்படி இருப்பின், உலகத்தின் எந்த மூலையில் இருக்கும் தேர்வரையிலும் ஓர் மாணவன் கூட இருக்க மாட்டானே!

இது நாள் வரை, கட்டிக் காக்கப்பட்ட அன்புவின் ஆண்மை, தன் எல்லைக்கோட்டை எப்போதோ மிதித்திருக்க, மயிலும் அவனுடன் பயணித்தாள்!

“சின்னு……………………..” என்று தாபமாய் வெளிவந்த அவனது குரல், மயிலின் இளமையையும் இனிய சங்கீத சங்கமத்துள் இட்டு வந்தது!

“பாவா….” – இப்போது அவளும், ஓர் இசைக்கருவிக்கு இசையமைப்பாளினி ஆனாள்.

பகலவனின் உதயத்தில் தன் இதழ் மலர்த்தும் தாமரையை போல், அன்பு கொண்டவனின் ஆசைத் தீண்டலில் பிள்ளை உள்ளம் பேதை உள்ளமாய் உருமாறிக் கொண்டிருந்தது.

அவளுள்ளே ஓர் பயம் ஓடி மறைந்தது என்னவோ உண்மை தான்! ஆனால், அது ஆழ் கடலின் அடி அலையாய் ஓடி மறைய, நாணமும் தாபமும் நெஞ்சமெனும் அலையில் மேலெழும்பி “ஹோ”வென ஆர்ப்பரித்தன! அந்த இரைச்சலில், பயத்தின் மெல்லிய முனங்கல்…வெளியே கேட்காமலே போக, அது முனங்கலாகவே நின்று போனது!

“சின்னு…. எனக்கு நீ வேணும்டா…” என்று கிறக்கத்தின் தாக்கம் அதிகமுற, அன்புவின் கரங்கள் மயிலைக் கையில் ஏந்திக் கொண்டன.

அவள் குழந்தை! வளர்ந்த குழந்தை! அதுவும், பாதிக்கப்பட்ட குழந்தை! உள்ளம் முதிராத குழந்தை! – என்பதெல்லாம் தாபத்தின் தீயில் பஸ்பமாகிவிட, “இவள் என் மனைவி!” என்ற எண்ணத்துடன் மட்டுமே முன்னேறினான், அன்புவும்.

என்னவென்று பகுத்தறியா முடியாவிட்டாலும், மயிலும் அவனிடம் மயங்கியே நின்றாள்.

அது, அவளுள்ளிருந்த… அவளே அறியாத காதலின் விளைவா!?

இல்லை…அவன் மேல் வைத்த நம்பிக்கையா?!

இல்லை…இருபது வயதில் எந்தவொரு பெண்ணிற்கும் ஏற்படும் ஹார்மோன் கோளாறுகளா?

எதுவென்று புரியாவிட்டாலும், அவனது இழுப்பிற்கு ஆட்பட்டு, அவன் கையில் அடங்கியிருந்தாள் மயில்! அடங்கியிருந்தது மட்டுமல்ல, அவளது கரங்களும் அவனது கழுத்திற்கு மாலையாகிப் போயின!

பூமாலை போடும் போது பயந்து நடுங்கிய அதே கரங்கள், தன் கரங்களையே மாலையாக்கும் போது, சற்றும் தடுமாற்றமில்லாமல் அழுத்தமாய் அவனை அணைத்தன.

அச்சமும் கவலையும் நிரம்பிய முகத்திலேயே அழகைக் கண்டு, தன்னைத் தொலைத்திருந்த அன்பு,

இப்போது பயம் தொலைந்து… கவலை மறைந்து, தனக்கே உரிதான இயல்பை மீட்டெடுத்து, புத்தொளி பெற்று மிளிரும் முகத்தைக் கண்டு சொக்கித் தான் போனான்!

“என்னோட சின்னு……..” என்று அழுத்தமாய் வெளி வந்த வார்த்தைகளின் முடிவில், அவன் உதடுகள் அழுத்தமாய் அவள் உதடு பிடித்தன!

லாலிபாப்பை ஒரு முறை சுவைத்த குழந்தையால், எப்படி அதை விட முடியாதோ! அதே போல், அன்புவாலும் அவளை விட முடியவில்லை!

மீண்டும்! மீண்டும்! மீண்டும்! மீண்டும் அவளைத் தீண்டி…தீண்டி, தன்னைத் தொலைத்தான்!

அவளுமே, அவனது தீண்டலில் புதிதாய் பிறந்தவளாய், தன் பெண்மையை உயிர்ப்பித்தாள்!

படுக்கையில் அவளை விட்டவன், சிறிதும் தாமதிக்காமல் அவள் மீது படர, மயிலும் அவனது தேடலுக்கு வழி வகுத்துக் கொடுத்தாள்.

கொஞ்சம்… கொஞ்சமாய் முன்னேறி, அவன் தாம்பத்தியத்தின் உச்சத்தை எட்டப் போகையில், மயிலிடமிருந்து ஓர் எதிர்ப்பு கிளம்பியது!

“வேணாம்………………” என அவள் சன்னமாய் முனங்க,

இவனோ “ப்ளீஸ்…………” என்றான் வேகமாய்.

இதுவரை அனுபவித்தே இராத இன்பம், அவனை கட்டிப் போட்டிருக்க, அவள் மீதான அவனது பிடி இறுகியது.

உலகத்தின் சுகங்களை எல்லாம் ஒன்றாய் சுவைத்த சந்தோசம் வேறு, அவனை திசை மாற விடாமல் தடுத்தது!

இதை விடவும் இன்பம் வேறொன்று உண்டோ!? என்று குரலெடுத்து பாடும் அளவிற்கு, அவன் திளைத்திருந்தான்.

பிறந்தது முதல்… வறுமை…தனிமை…வெறுப்பு…கோபம்..ஒதுக்கம் என்று எதிர்மறை உணர்வுகளின் மத்தியிலேயே வாழ்ந்தவனுக்கு, அவளது நெருக்கம் புது அர்த்தத்தை வாழ்வினுள் கொண்டு வந்தது!

தன் சந்ததியே எதுவென்று தெரியாமல் வாழ்ந்தவன், தனக்கொரு சந்ததி உருவாக்குவதில் தன்னையே பிரம்மனாய் உருவகப்படுத்திக் கொண்டான்!

ஆதலால், அவனால் அவளது மறுப்பையோ… எதிர்ப்பையோ உணர முடியவில்லை. அதற்கு, அவனைக் குற்றம் சொல்லியும் ஆகப்போவதில்லை! சில நேரங்களில், ஞானிகள் கூட தம் வசம் இருப்பதில்லையே!

தன் பலம் காட்டி அவளை அடக்காமல், “சின்னு……………..” என்ற தாப அழைப்பிலேயே அவளது எதிர்ப்பை ஒன்றுமில்லாமல் ஆக்கியவன், அவளை ஆட்கொண்டு, அவளது அடிமையாகிப் போனான்!

மயிலுமே, அவனுள் ஐயக்கியமாகிப் போனாள்!

விடியற்காலை நான்கு மணி!

மொகமெல்லாம் வடிந்த தேகம், தூக்கத்தை நாடிச் சென்ற வேளை அது!

என்ன தான் களைத்திருந்த போதும், பல வருடங்களாய் நாலரை மணிக்கே எழுந்து பழகிய உடம்பு, சட்டென விழிப்பு பெற்றது!

அவன் விழித்த நொடி, நேற்று நடந்தவற்றை யெல்லாம் அவன் கண் முன்னே படமாய் ஓட்டிவிட, “கடவுளே! எவ்வளவு பெரிய தப்பு பண்ணிட்டேன்!” என்று தவித்துப் போனான், அன்பு.

“ச்சே! அறிவே இல்லாம…!! ச்சே! ச்சே! ஒரு குழந்தையைப் போய்…ஹய்யோ!” – மனம் குற்ற உணர்ச்சியில் தவித்துப் போனது!

தாம்பத்திய உறவை ஏற்றுக் கொள்ளும் சக்தி, அந்த உடலுக்கும் மனதிற்கும் இருக்கிறதா என்று தெரியாமலேயே, அவள் மீது அந்த உறவைத் திணித்துவிட்டோமே என்று தன்னைத் தானே நொந்து கொண்டான் அவன்.

குற்ற உணர்ச்சி ஒருபுறமென்றால், மயில் இதை எப்படி எடுத்துக் கொள்வாளோ என்ற பயம் மறுபுறம்!

ஆம், அன்பு பயந்து தான் போனாள்.

ஒரு சின்னக் கதவு தட்டலுக்கே, அவள் நடுங்கிய நடுக்கமும்…உடம்பு உதறிய உதறலும் கண் முன்னே படமாய் ஓட, “ஹய்யோ… என்ன மாதிரி ரியாக்ட் பண்ணப் போறாளோ!” என்று நெஞ்சம் பதறிப் போனான், அன்பு.

தனது சுயநலத்தால், அவள் உடம்புக்கு ஏதும் பாதிப்பு ஏற்பட்டு விடுமோ என்று மனசு தவித்தது.

விழித்ததும் தன்னைக் கண்டு அஞ்சி நடுங்குவாளோ? பயத்தில் தன்னை விலக்கி நிறுத்திவிடுவாளோ? பாவா என்ற அழைப்பைத் துறந்து விடுவாளோ? தன்னை விட்டுப் போய் விடுவாளோ? மீண்டும் தன்னை அநாதை ஆக்கிவிடுவாளோ – தனிமையை எண்ணி அந்தத் தலைவனின் நெஞ்சம் திணறிப்போனது!
அவனது வருத்தம்…கழிவிரக்கம்…பயம்…திணறல் என எல்லாவற்றுக்கும் முற்று புள்ளி வைப்பது போல், மயில் புரண்டு படுத்தாள்.

அவளது அந்தச் சின்ன அசைவு, அன்பினுள் ஓர் பெரும் பிரளயத்தை உண்டு பண்ணியது!

“என்ன செய்யப் போகிறாளோ? என்ன? என்ன?” என்று விடை தெரியாது திகில் பிடித்திருந்த மனம்,

“பா………..வா……………ம்ம்ம்” என்ற அழைப்புடன், அவள் அவனது இடுப்பை இறுக்கிக் கொள்ளவும், திகைப்பாய் மாறிப் போனது.

ஒருவேளை தூக்கக்கலக்கத்தில் பிதற்றுகிறாளோ என்ற எண்ணத்தில், “சின்னு…” என அவன் மெல்ல அழைக்க,

“ம்ம்…பாவா…போதும்…போங்க…” என செல்லமாய் சிணுங்கிவிட்டு, அந்த சிணுங்கலுக்கு நேர் மாறாய், தன் முகத்தை அவனோடு நன்றாக உரசிக் கொண்டாள்.

இன்பமாய் அதிர்ந்து போனான், அன்பு!

தன்னுள் புதைந்திருந்த அவளது முகம் வருடி, அதை மெல்ல நிமிர்த்தி, உச்சியில் முத்தம் வைத்து, “சின்னு……………..” என தன் உணர்வுகள் மொத்தத்தையும் ஒன்றாய் கொட்டி அவன் அழைக்க,

“ம்ம்ம்!!!” என்ற சிணுங்கி அவனைச் சில்சில்லாய் உடைத்தவள், லேசாய் எம்பி அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

ஜென்ம சாம்பல்யம் அடைந்தது போல் உணர்ந்தான், அன்பு! அத்தனை சந்தோசம்! ஏகப்பட்ட நிறைவு! அளவிடா முடியா ஆனந்தம்!

தான் இத்தனை நாள் வாழ்ந்த வாழ்க்கை அர்த்தம் கிடைத்துவிட்டது போல், மனம் பூரிப்படைந்து போனது.

என்னதான் பூரிப்படைந்தாலும், தன் கடமையை அன்பு மறக்கவில்லை. அதற்காக, தன் கடமையை மனைவி மேலும் அவன் திணிக்கவில்லை.

“குட்டிம்மா… பாவா கிளம்பி பீச்க்குப் போயிட்டு வாரேன்…நீ வீட்டிலேயே படுத்துக்கிறியா?” என அவன் கேட்க, அவள் தானும் வருவேன் என்று அவனுடன் கிளம்பி வந்தாள்.

“வேணாம்டா… ரொம்ப டையர்ட்டா இருக்கும்…” அவனும் கெஞ்சிப் பார்த்தான்.

ம்ஹூம்! அவள் அசைவதாய் இல்லை.

சரியென்று இருவரும், கடற்கரைக்கு கிளம்பிச் சென்றனர்.

வழக்கம் போல், அன்புவும் ராஜாவும் குப்பை பொறுக்கச் சென்று விட, மயில் மணியுடன் ஜூஸ் கடையில் நின்றாள்.

தன்னுடன் குப்பை பொறுக்கிக் கொண்டிருந்த அன்புவின் கையைப் பிடித்து நிறுத்தி, அவன் கையிலிருந்த கோணிப்பையைத் தூக்கி வீசிவிட்டு, "டேய்... நீ...ம்ம்ம்... என்னமோ வித்தியாசமா இருக்கியேடா...என்ன மச்சி?" என்றான் ராஜா குறுகுறுவென் அவனையே பார்த்தபடி.

சட்டென வேர்த்துவிட்டது அன்புவிற்கு! பின்னே, முன்னே பின்னே அனுபவம் இருந்தால் அல்லவோ!

"அதெல்லாம் ஒண்ணுமில்லையே...ஒண்ணுமில்லையே..." என அவன் பம்மிய விதத்திலேயே, "ஏதோ இருக்கிறது" என்று ராஜாவிற்கு புலப்பட்டுப் போனது.

"இல்லையே...ஏதோ இருக்கே..." என்றவாறே, அன்புவின் கன்னத்தை இப்படியும் அப்படியுமாய் திருப்பிப் பார்த்தான் ராஜா.

"இல்லையே...ஒண்ணுமில்லைடா...ஒண்ணுமில்லைடா...நீ வேலைய பாரு..." என்றவன், அந்த அதிகாலை வேளையிலும், குற்றால அருவி போல் வேர்வையை வடித்துக் கொண்டிருந்த கன்னத்தைத் துடைத்துக் கொண்டு, கோணிப்பையை எடுத்துக் கொண்டு குப்பை பொறுக்க ஆரம்பித்தான்.

":ம்ம்ம்ம்..." என அவனை நோட்டம் விட்டபடியே, வேலையை செய்து முடித்த ராஜா, அத்தோடு விட்டுவிடவில்லை.

டேக்வேண்டோ வகுப்பில் மணியை இறக்கிவிட்டவன், கூடவே தன் மனைவியை இறக்கிவிட வந்த அன்புவையும், அவன் மனையாளையும் மாறி மாறி பார்த்துவிட்டு,

"ஹே... பெல்மேடம்... உங்கண்ணன் காலையில இருந்தே சரியில்லாத மாதிரியே இருக்கானே? என்ன மேட்டர்?" என மணியிடம் வினவினான்.

அவள் பதில் சொல்வதற்குள், "ஒரு மார்க்கமாவே திரியுறானே? என்ன மேட்டரா இருக்கும்?" என்று தானும் யோசனை செய்தான்.

அவன் மனைவியோ அவனுக்கும் மேலாய், “ஆமாங்க…என்னன்னு தெரியல…இந்த மயிலும் சரியே இல்ல! அருகம்புல் ஜூஸ் போடுன்னா…பிரண்டையை மிக்சில போடுது! காசை வாங்கி குப்பையில போடுது! அரைச்ச சக்கையை எடுத்து கல்லாவில போடுது! கழுவாத கிளாஸ்ல ஜூஸ் ஊத்துது! கழுவின கிளாஸ்யே திரும்பத் திரும்பக் கழுவுது! என்னமோ…சரியில்லை!” என்றாள் குறுகுறுவென.

சட்டென பேச்சை நிறுத்தி, கணவன் மனைவி (ராஜா-மணி) இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

அந்தப் பார்வையில், ஓராயிரம் அர்த்தங்கள்! ஏகப்பட்ட கண்டுபிடிப்புகள்!

உள்ளுக்குள் ஆலய மணி ஓங்கி அடிக்க, “அடப்பாவிங்களா! ஒண்ணும் தெரியாத பச்சப்புள்ளைங்க மாதிரி இருந்துட்டு… முழு மேட்டரையும் முடிச்சுட்டீங்களா?” என்று வாய் விட்டே வியந்தான், ராஜா.

அன்பு நண்பன் காட்டிய பாவனையில் வாய் விட்டே சிரிக்க, “அச்சோ!!!!” என்று வெட்கம் கொண்டு, வகுப்பினுள் ஓடினாள் மயில்.

“ஆஹா!!!” என்று மணியும் இன்பமாய் அவளைப் பின் தொடர, அங்கே கடிகார முட்கள் பியானோவின் முற்களாய் இன்னிசையை வெளியிட்டபடியே நகர்ந்தான்.

மயில் சாதாரணமாய் இருந்தபோதும்…அதற்கும் மேலாய் வெட்கப்பட்ட போதும்…அவன் முகம் பார்க்கத் தயங்கியபோதும், அன்புவால் இன்னமும் அவள் “தாம்பத்திய உறவை” நல்ல முறையில் ஏற்றுக் கொண்டாள் என்பதை ஒத்துக்கொள்ள முடியவில்லை.

அவளிடமே நேரடியாய் கேட்டுவிட வேண்டும் என்ற எண்ணத்தில், அலுவலகத்திற்கு விடுமுறை சொல்லிவிட்டு, அவளை டேக்வேண்டோ வகுப்பிலிருந்து அழைத்துச் செல்லக் காத்திருந்தான்.

எப்போதும் போல், வகுப்பு முடிந்ததும் “பாவா…” என்று ஆசையாய் வந்து அவன் கை பிடிக்கும் குழந்தை, இன்று வெட்கமெனும் முள்ளில் சிக்கிக் கொண்ட சேலையாய், கால்கள் பின்ன…மெல்ல அவன் புறம் வந்து நின்றது.

அவளையே சுவாரஸ்யமாய் பார்த்திருந்த அன்பு, அவள் கரங்களை ஓர் அழுத்தத்துடன் பிடித்துக் கொண்டு, வீட்டிற்குக் கூட்டிச் சென்றான்.

போனதும், “சின்னு… நீ போய் குளிச்சிட்டு வா! கொஞ்சம் பேசணும்!” என்றான்.

“நீ…நீங்க வேலைக்குப் போணும்ல்ல… சமைக்க வேணாவா? நா சமைச்சிட்டு அப்புறம் குளிக்கிறேன்….” என்று மயில், தரையைப் பார்த்துக் கொண்டே சொல்ல,

மெல்ல அவள் முகம் நிமிர்த்தியவன், “இன்னைக்கு நா ஆபீஸ் லீவ்!” என்றான் அவள் கண்ணுக்குள் தன் பார்வையைப் புகுத்தி.

ஏற்கனவே பன்னீர் ரோஜா வண்ண நிறம் கொண்டிருந்தவள், ஒரே ரத்தச் சிவப்பானாள்.

கணவனின் கண்களுக்கு அந்தச் சிவப்பு, ஓர் புது பளபளப்பைக் கொடுக்க, அவனது உதடுகள் அந்தச் சிவப்புக்குள் புதைய முற்பட்டன.

சட்டென அவனைத் தள்ளிவிட்டுவிட்டு, மின்னலென குளியலறைக்குள் மறைந்தவள், புது வெள்ளை ரோஜாவாய் வெளியே வரவும்,

அவள் கைப்பிடித்து, தன் மடியில் அமர வைத்துக் கொண்ட அன்பு, “எம் மேல கோபமாடா?” என்றான் மெல்ல அவள் கன்னம் வருடி.

இப்படி கேட்டால்…கோபமென்று சொல்லத் தான் முடியுமா என்ன?!

மயிலின் தலை “இல்லை” என்று வேகமாய் அசைந்தது.

“நிஜமாவே கோபமில்லையா?!!” என அவன் மீண்டும் துருவ,

“கோபமில்லை…” என அவள் இழுத்ததிலேயே, வேறு ஏதோ ஒன்று இருப்பது புரிந்தது.

“அப்புறம்? வேற என்ன?” என அவன் தூண்டி விட,

“பயமா…பயமா இருந்துச்சு!” என்றாள் மனைவி, சற்றே திக்கிய குரலில்.

அன்புவிற்கு, நெஞ்சில் யாரோ குத்தியது போல் இருந்தது.

“சாரிடா சின்னு…இனிமேல் அப்படி நடக்காம பாத்துக்கிறேன்…” என அவன் தனது குற்றவுணர்வை வெளியிடவும்,

“இல்ல…இல்ல…சாரிக்கு…இல்ல…அது…அது வந்து…பயம் இருந்துச்சு…ஆனா…ரொம்ப பயம் இல்ல…பயம்…போச்சு! இப்ப இல்ல…நீங்க சாரி வேணாம்…” – வார்த்தைகளில் கோர்வையில்லை என்றாலும், அவை ஓர் அழகிய மாலையென அன்புவின் மனதை ரம்மியமாக்கின.

“அப்ப…சாரி வேணாமா?” என அவன் மயிலின் மதி முகம் வருட,

“ம்ஹூம்! வேணவே வேணாம்!” என்று வேகமாய் தலையசைத்த மயில், மெல்ல தன் தோகை விரித்து, அவனது கழுத்தில் கை கோர்த்தாள்!

அதன் பின்னே, மயில் மீண்டும் ஒருமுறை குளித்து வந்தாள் என்பதை குறிப்பிடவும் வேண்டுமா? இல்ல… காலை வேளை உணவை அவர்கள் மதியம் தாண்டி கூட உண்ணவில்லை என்பதையும் சொல்ல வேண்டுமா என்ன?

மயில், அந்தத் தாம்பத்திய உறவை ஏற்றுக் கொண்டது மட்டுமல்ல, அதனால் மாற்றமும் அடைந்தாள்.

குமரி உடம்பில் குழந்தை உள்ளம் கொண்டிருந்த அவளுள், அந்தத் திருமணம் ஏகப்பட்ட மாறுதல்களை கொண்டு வந்தது.

இரு உடல்களும் சங்கமித்ததில் உண்டான ஹார்மோன் மாற்றங்களா? இல்லை…அன்புவின் முழு கவனிப்பும் அவளுக்குக் கிடைத்ததாளா? இல்லை…மஞ்சள் கயிறு மேஜிக்கா? – ஏதோ ஒன்று, அவளுளிருந்த கன்னித் தன்மையைத் தூண்டி விட்டது.

முன்னர் போல் இல்லாமல், அவள் பார்வையில் புதிதாய் ஓர் தெளிவு குடி வந்திருந்தது.

அங்குமிங்கும் அலைபாயும் கண்கள் காணாமல் போய், எதையும் ஓர் தீர்க்கத்துடன் பார்க்கும் பார்வையாய் மாறியது அவளது பார்வை!

ஏற்கனவே, கவனிக்கும் திறன் அதிகம் கொண்ட மயிலின் அந்த நேர் கொண்ட பார்வை, அவளது புற அழகை மட்டுமல்ல, அக அழகையும் மாற்றியது!

தாம் பார்க்கும் பார்வையில் தான் உலகம் அழகாவதும், அசிங்கமாவதும் இல்லையா!?

பயம் என்ற திரையுடனே உலகத்தைப் பார்த்துப் பழகிய மயிலுக்கு, அன்புவின் உறவு உலகை ரம்மியமாய் மாற்றிக் காட்ட, அவளுக்கு வாழ்க்கை பூஞ்சோலையாய் காட்சி யளித்தது.

அன்புவின் மனைவி என்ற ஸ்தானத்தை "பாதுகாப்பான இடமாய்" கருதி வந்தவளுக்கு, அவனுடன் ஒருயிராய் கலந்த நாள் தொட்டு, அவனது அரவணைப்பு "தனக்கான இடமாய்" தோன்றியது.

விடுதியும் பாதுகாப்பான இடம் தான்! வீடும் பாதுகாப்பான இடம் தான்! ஆனால், இரண்டுக்கும் "உரிமை" என்ற விதத்தில் வேறுபாடு உண்டல்லவா!? அதைத் தான், மயிலும் உணரத் தொடங்கினாள்.

முதலில், அன்புவின் அருகாமையை ஓர் விடுதி பொறுப்பாளனின் கடமையாய் எண்ணியவள், இப்போது 'தனக்கானவன்! எனக்கே உரியவன்! அன்பானவன்! அழகானவன்!' என்ற உரிமையில் அவனுடன் ஒன்று கலந்தாள்!

இப்படியாய், அன்புனுள்ளும் மயிலுக்குள்ளும் ஏகப்பட்ட மாறுதல்களை, அவர்களது அன்னியோன்யம் கொண்டு வந்தது!

வாழ்க்கை மிக ரம்மியமாய் மாறத் துவங்கியது!

நேரம் இறக்கையின்றி பறந்தது!

நாட்கள் கால்களைத் தரையில் பதிக்காமல் ஓடின!

"ஏனடா ஆபீஸ் போகிறோம்!?" என்று நோகும் அளவிற்கு, அன்புவை வீடும்…வீட்டிலிருக்கும் மனைவியும்…மனைவியின் வெட்கப் புன்னகையும் கட்டி இழுத்தன.

“என்னவன்!” என்ற உரிமை, ஓர் பெருமிதத்தை உண்டு பண்ண, மயிலும் அவனுடன் கழிக்கும் நேரங்களைக் களிப்புடன் எதிர்நோக்க ஆரம்பித்தாள்.

இருவரது கூடலிலும், பற்பல நன்மைகள் உண்டான போதும், ஓர் மிக பெரிய நன்மையாய், மயிலுக்கு இப்போதெல்லாம் கனவே வருவதில்லை! பின்னே, தூங்கினால் அல்லவோ! தூங்க விட்டால் அல்லவோ…கனவு வருவதற்கு?!

நள்ளிரவு தாண்டிய பின்னரே கண் அயரும் மயிலுக்கு, தூக்கத்திற்கே நேரம் போதவில்லை எனும்போது, எங்கிருந்து கனவு காண்பது! அப்படியே கண்டாலும், கணவன் சில்க் சட்டை போட்டுக் கொண்டு, சிங்காரமாய் சிரிக்கவல்லவோ செய்தான்!

ஏற்கனவே, மனைவியின் அருகாமையில் அகமகிழ்ந்து போயிருந்த அன்பு, அவளது கனவுகள் கண் காணாமல் தொலைந்து போகவும், வானத்தில் பறந்தான் என்றே சொல்ல வேண்டும்.

அன்று அப்படித் தான், ஏதோ சமையல் நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டு, இனிப்பு புட்டு செய்து வைத்திருந்தாள் மயில்.

அவளையும் கூடவே தட்டையும் தூக்கிக் கொண்டு, பால்கனிக்குச் சென்றவன், அவளை மடியிலும், புட்டை வாயிலும் வைத்துக் கொண்டான்.

“சூப்பர்டா குட்டி…” எனக் கூறி, ஓர் சாக்லேட் பரிசு கொடுத்தவன்,

“இருந்தாலும்… கொழுக்கட்ட மாதிரி வராதில்ல சின்னு…” என்றான் சில்மிஷம் துள்ளி விளையாடிய குரலில்.

“ச்சு… போங்க பாவா! எப்பப் பாரு… அதே சொல்றீங்க…” என்று அவனிடமிருந்து விலக முற்பட்ட மயிலுக்கு, செல்லக் கோபம்!

அவளது சின்னக் கன்னத்தில், செல்ல முத்தம் ஒன்றை பதித்து, “ஓகே…ஓகே… என்ன தான் கொடுமையா இருந்தாலும்…எனக்கு வாழ்க்கை கொடுத்த கொழுக்கட்டை மா! அதுக்கு…கோவில் கட்டினா கூட பத்தாது!” என்று அவளிடம் விளையாடியவன்,

“இன்னொரு வாட்டி…அதே கொழுக்கட்டையை பண்றியா?” என்றான் கண்ணில் ஆசையுடன்.

சன்னமாய் அவன் தோளில் அடித்தவள், “அய்யே… போங்க! கொழுக்கட்டை இல்லாமலே… சாக்லேட் சாப்புடுறீங்க…அப்புறம் என்ன?” என்றாள் வெட்கம் பூத்த முல்லைச் செடியாய்.

“அடேங்கப்பா…என்னோட சின்னுவா இது? இப்படியெல்லாம் பேசத் தெரியுதே…என்னோட சின்னுக்கு!” என்று அவன் செல்லம் கொஞ்சிக் கொண்டிருக்கும் போதே,

“மயிலு…மயிலு…” என்ற அழைப்புடன், வீட்டுக்கதவு தட்டப்பட்டது.

மயிலை விடவும், அன்பு விதிர்த்துப் போனான்! இது நாள் வரையிலும், என்ன தான் அவன் கூட இருந்தாலும், யார் கதவுத் தட்டினாலும், மயிலின் உடம்பு ஒரு முறையாவது தூக்கிப் போடும்! அவன் இல்லையென்றால், எத்தனை முறையோ…அது அவனுக்குத் தெரியாது! ஆனால், அவன் உடனிருக்கையில், ஓரோர் முறை கதவு தட்டப்படும் போதும், அவள் மேனி ஓர் முறை அதிரும்! அவன் கையை அழுத்திக் கொடுத்தால், சமாதானமாகி விடுவாள் தான்! இருப்பினும், அந்த நடுக்கம் இருக்கவே செய்யும்!

ஆனால், இப்போது கதவின் ஒலியை அவள் உணர்ந்தது போலவே தெரியவில்லை!

சாதாரணமாய் அவன் மடியிலிருந்து எழுந்தாள்.

கட்டியிருந்த சேலையை லேசாய் சரி செய்து கொண்டாள்.

அவனைப் பார்த்து ஓர் சின்னப் புன்னகை உதிர்த்தாள்.

மெல்ல பால்கனியை விட்டு நகர்ந்து, “இதோ வரேன்!” என்று குரல் கொடுத்தாள்.

சிறு புன்னகையுடன் கதவைத் திறந்தவள், “வாங்க… கனியண்ணா!” என்றாள் உற்சாகத்துடன்.

“இன்னைக்கு என்னம்மா ஸ்பெஷல்?” என்றபடியே வந்த கனியனிடம்,

புட்டிருந்த தட்டை நீட்டி, “புட்டு அண்ணா! நல்லா இருக்கா?” என்றாள் சிநேகமாய்.

அவன் அரை மணி நேரம் மொக்கை போட்டுவிட்டுச் சென்றதும், மீண்டும் கணவனின் மடியில் அமர்ந்து கொண்டு, அவன் கையை எடுத்து தன் இடுப்பில் போட்டுக் கொண்டாள்.

அவளையே குறுகுறுவென பார்த்துக் கொண்டிருந்த கணவனின் கன்னம் தட்டியவள், “என்ன?” என்றாள் கண்ணாலேயே.

“ம்ஹூம்!” என அவன் தலையசைக்கவும்,

“என்னது?” என்றாள் மீண்டும், அவனது தலை கோதி.

“இல்ல… நீ இப்ப எல்லாம் பயப்படுறது இல்லையே! அதான்…ஏன்னு யோசிச்சிட்டு இருந்தேன்…” என்றான் கேள்வியாக.

“ஹ்ம்ம்…ஆமா…இல்ல…” என்று தானும் ஆச்சரியமாய் நினைவு கூர்ந்தவள்,

“இப்ப கூட…கனி அண்ணா கதவு தட்டும் போது, எனக்கு பயமே வரலையே!” என்றாள் சிறு பிள்ளையாய்.

“ம்ம்…அதான் ஏன்னு கேட்கிறேன்…” என்று அன்பு துருவ,

“ம்ம்ம்…”

“ஹ்ம்ம்…”

“…………………” – பலமான யோசனைக்குப் பின்னே,

“தெரியல பாவா! ஆனா… போச்சு… பயம் போயே போச்சு!” என்றாள் தன் ‘பாவா”வின் கழுத்தைக் கட்டிக் கொண்டு! சந்தோஷமாய்!
நாட்கள் ரம்மியமாய் கழிந்து கொண்டிருக்க, ஒரு நாள் மாலை அன்பு வீடு திரும்பியதும், “பாவா… என்னைய கடைக்குக் கூட்டிப் போறீங்களா?” என்றாள் மயில், அவனை ஆசுவாசப்படுத்தக் கூட விடாமல்.

“கை-கால் கழுவிட்டு வரேன்டா… பசிக்குது வேற…ஏதாவது சாப்பிடக் குடு! அப்புறம் போலாம்!” என அவன் மனைவியை நகர்த்திவிட்டு, உள்ளே நகர,

“இல்ல…இப்பவே போணும்! நா…எதுவுமே சமைக்கலை…கடைக்குப் போய் சாமான் வாங்கிட்டு வந்து தான், சமைக்கவே செய்யணும்! நீங்க வாங்க!” என்று பிடிவாதமாய் இழுத்தாள்.

“ஸ்நாக்ஸ் தானே சமைக்கலை! பரவாயில்லை…சின்னு! நைட் சீக்கிரம் சாப்பிட்டுக்கலாம்!” எனக் கூறி, அவளை நிறுத்த முயன்றான்.

“ம்ஹூம்! இல்ல… கனி அண்ணா ஃபோன் பண்ணி, எனக்கு ரொம்ப பசிக்குது மயிலு…ஏதாவது ஸ்நாக்ஸ் செஞ்சு வைக்கிறியா கேட்டாங்க! அதான்…செய்யணும்! வாங்க!” என்றாள் ஒரே பிடியாக.

“எனக்கு வில்லனே…நீ தான்டா! மவனே, வா…வச்சுக்கிறேன்!” என்று கறுவிய அன்பு,

“கொஞ்சம் காப்பியாவது கொடு…மயிலும்மா!” என்று ஏறக்குறைய கெஞ்சினான்.

“ம்ம்ம்…பாவா! ப்ச்!!!” என்று காலை உதைத்துக் கொண்டு, சிறு பிள்ளையாய் அலுத்துக் கொண்டவள், வேண்டா வெறுப்பாய் ஒரு காப்பியைக் கலந்து வந்து கொடுத்தாள்.

“நீயும் சூப்பர்! உன்னோட கோபக்காப்பியும் சூப்பர்!” – ரசித்து, ருசித்துக் குடித்து முடித்தான், அன்பு.

மூக்கைச் சுருக்கி, அவனுக்கு அழகு காம்பித்து விட்டு, உம்மென உட்கார்ந்து இருந்தாள் மனையாள்.

“சரி…சரி…வா! உன்னோட பாசக்கார அண்ணனுக்கு, திங்க வாங்கிட்டு வரலாம்!” என்று அவன் எழ,

“அப்ப… நீங்க அதில ஒரு வாய் கூட சாப்பிடக் கூடாது, சொல்லிட்டேன்!” – ஒரு விரல் நீட்டி, எச்சரிக்கை செய்தாள்.

“ஆஹா! இதென்ன சின்னு வம்பா இருக்கு? உன்னைக் கடைக்குக் கூட்டிட்டு போறவன் நான்… வாங்கப் பொருளுக்கு காசு கொடுக்கப் போறவன் நான்… அதுக்கும் மேலா உன்னோட புருஷன் காரன்

நான்…ஆனா, நான் சாப்பிடக் கூடாது!??!! ஹ்ம்ம்ம்! கலி முத்தி போச்சு!” என்று அவன் உதடு பிதுக்க,

அவனது பாவனையில் வாய் விட்டுச் சிரித்த மயில், “போலாமா?” என்று மீண்டும் அவசரப்பட்டாள்.

ஒருவழியாக, அருகிருக்கும் சூப்பர் மார்க்கெட்க்கு அவளை அழைத்துச் சென்றான் அன்பு.

கிட்டத்தட்ட அரை மணி நேரம், அந்த கடையையே சுற்றி வளைத்து, பொருட்களை வாங்கிக் குவித்தாள் மனையாள்.

அதுவும் எப்படி?!

“ஹ்ம்ம்…ஐஸ்கிரீம் பண்றதுக்கு…ஏதோ சொன்னாங்களே…ஹான்…கஸ்…ட்டர்ட்! அது எங்க இருக்கு? பாவா எடுத்துக் கொடுங்க!”

“அப்புறம்… பன்னீர் வேணும்… வெள்ளை வெள்ளையா கட்டி கட்டியா இருந்துச்சு…வெண்ணை இல்லை பாவா! வேற!”

“ஹான்…கஸ்தூரி மீதி…ச்சே…மேத்தி! அது எங்க இருக்கு!” என்று ஒவ்வொன்றாய் நினைவு கூர்ந்து, அவனை இங்கும் அங்கும் ஓடி, ஒவ்வொன்றையும் எடுக்க வைத்தாள்.

ஒரு கட்டத்தில், “இது எல்லாம் ஒரே டிஷ்க்கா? வேற வேற டிஷ்க்கா?” என அதி முக்கியமான சந்தேகத்தை அவன் கேட்க,

“அய்யோ…ஐயோ! வேற வேறதுக்கு! இது எல்லாத்தையும் ஒண்ணா போட்டு…எந்த பதார்த்தமும் பண்ண முடியாது!” என்று தலையில் அடித்துக் கொண்டாள், மனையாள்.

கூடவே, “தினமும் கடைக்கு வந்து…வாங்க முடியாதில்ல! அதான்…இன்னைக்கே எல்லாம் வாங்கிக்கிறேன்!” என்றாள் விளக்கம் போல்.

இதுவே, அடுத்த அரை மணி நேரமும் தொடர, “பாவா…இதில சோள மாவு எது பாவா?” என்று அங்கு அடுக்கியிருந்த விதவிதமான மாவுகளுக்கு மத்தியில் நின்று அவள் கேட்க,

“ஏதோ…உன் கண்ணு முன்னாடி இருக்கே இதான்! கார்ன்ஃப்ளவர் மாவுன்னு எழுதி இருக்கே!” – சிறு எரிச்சலுடன் சுட்டிக் காட்டினான், கணவன்.

“எனக்கு படிக்கத் தெரியாதில்ல பாவா…அதான் கேட்கிறேன்! ஏன் கோபப்படுறீங்க?” என்று அவனைச் சாடினாள் மயில்.

“சரி…சரி சாரி! இதோ இருக்கே… கார்ன்ஃப்ளவர் மாவு! இந்தா!” என அவன் எடுத்துக் கொடுக்கவும்,

“இல்ல… சோள மாவு தான் வேணும்! கார்ன்ஃப்ளவர் மாவு வேணாம்!” என்றாள் மயில் அப்பாவியாக.

“சோளத்துக்கு…இங்கிலீஷ்ல கார்ன்ஃப்ளவர் சின்னு!” என்று அவன் விளக்கம் கொடுக்கவும்,

“ம்ம்… நெஜமாவா? இல்ல… சீக்கிரம் போணும்ங்கிறதுக்காக வேணும்னே சொல்றீங்களா?” – சிறு பிள்ளையின் சந்தேகத்துடனே அவள் கேட்க,

அவனது அலைச்சலையும் மீறி, அன்புக்கு வருத்தமாய் இருந்தது! படிப்பறிவில்லாமல் போனதால், எவ்வளவு துன்பம்! வீட்டுக்குச் சாமான் வாங்கும் சின்ன விஷயத்தைக் கூட, தன் இயல்பாய் வாங்க முடியாமல், ஒவ்வொன்றுக்கும் கணவனை எதிர்பார்த்து நிற்பது என்பது எவ்வளவு கஷ்டம்!

அவன் வருத்தத்தை அறியாத மயிலோ, “என்ன பாவா? சோள மாவு எது?” என்று அவனது சட்டை பிடித்து இழுக்க ஆரம்பித்தாள்.

ஒருவழியாய், கார்ன்ஃப்ளவரும் சோளமும் ஒன்றே என்பதை உணர வைத்து, அந்த மாவை எடுத்துக் கொண்டு, நகர்ந்தனர்.

வீட்டிற்கு வரும் வழியாவும், “இதற்கு ஒரு முடிவு கட்டியே ஆக வேண்டும்!” என்ற தீவிர சிந்தனையுடனே பயணித்தான், அன்பு.

வீட்டிற்குள் நுழைந்த மறுநொடி, “நா போய்…கட்லட் பண்றேன்…” என சிட்டாய் பறந்துவிட்டாள் மயில்.

சற்று நேரம், சோபாவில் அமர்ந்து விட்டத்தையே வெறித்திருந்த அன்புவை வெறுப்பேற்றவென, கனியன் வந்து சேர்ந்தான்.

“என்னடா… சீலிங் ஃபேன்ல எந்தங்கச்சியோட ஃபோட்டோவை சீல் பண்ணி வச்சிருக்காங்களா? ஓவரா முறைச்சு…முறைச்சுப் பாக்குறே?” என்றபடியே அவன் அமர,

“வாப்பா! பாசமலர்! ச்சே பாசக்கனி! உன்னைத் தான் தேடிட்டு இருந்தேன்…” என்று நிமிர்ந்து அமர்ந்தான் அன்பு.

அதில் போலியாய் அதிர்ந்தவனாய், “டேய்…என்னடா செய்யப் போறே?” என்று இரண்டடி பின்னே நகர்ந்த கனியின் கை பிடித்து, அருகே அமர வைத்த அன்பு
“இல்ல மச்சான்…சின்னுக்கு…ம்ம் மயிலுக்கு…ஹ்ம்ம் அவளைப் படிக்க வைக்கணும்டா…அதான் எப்படின்னு யோசிக்கிறேன்!” என்று தன் கவலையைப் பகிரவும்,

“நல்ல முடிவு! இதை நீ முன்னாடியே செஞ்சிருக்கணும்…அதை விட்டுட்டு…அந்தப் பச்சப்புள்ளய கொண்டு போய் கராத்தே கிளாஸ்ல விட்டிருக்கே!” என்று நொந்து கொண்டான், கனியன்.

“டேய்… அவளுக்கு தைரியம் வரணும்…பயம் போகணும்ன்னு தான் கராத்தே கிளாஸ்ல சேர்த்து விட்டேன்!”

“சரி…சரி விடு! எப்ப என்ன செய்யணும்ங்கிற? அவளுக்கு…அ..ஆ…இ…ஈ சொல்லிக் கொடுக்கப் போறியா?”

“அப்புறம்… அதில இருந்து தானே ஆரம்பிக்கணும்?!” – அன்பு கேள்வியாய் பார்க்க,

“அதில இருந்து தான்…ஆரம்பிக்கணும்! ஆனா…நீயேவா சொல்லிக் கொடுக்கப் போறே?” என்றான் கனியன்.

“லூசாடா நீ? அப்புறம்…இந்த வயசில…அவளைக் கொண்டு போய் எல்.கே.ஜில சேர்த்து விடச் சொல்றியா?”

“அய்யயோ! உன்னால, இரண்டு இடத்தில வாட்ச்மேன் வேலை பாக்க முடியாதில்லை! ரொம்பக் கஷ்டமோ!” என கனியன் தீவிரமாய் யோசிக்கவும்,

“வேணாம்! என்னைக் கொலைகாரன் ஆக்காத!” என்று ஒரு விரல் நீட்டி எச்சரித்தான், அன்பு.

தூசு தட்டுவது போல் பாவனை செய்த கையுடன், “போடா…போடா!” என்று அலட்சியமாய் கூறிய கனி,

“நா…மயிலை ஸ்கூல்ல சேர்க்கச் சொல்லலை! அதே சமயம்…நீயே அவளுக்குப் பாடம் சொல்லித் தரதும் சரியா வராது!” என்றான் அலட்சியம் மறைந்த உண்மை குரலில்.

“அப்புறம்?” என்ற கேள்வியை அன்புவின் முகம் தாங்கி நிற்கவும்,

“நீ சொல்லிக் கொடுத்தேன்னு வையேன்… உன் பிள்ளை ஸ்கூலுக்குப் போகுமே ஒழிய, தங்கச்சி எதுவுமே படிக்காது!” என்றான் கனி, உறுதியாக.

முகம் சிவந்தபோதும், அதில் கோபத்தைக் கலந்து அன்பு முறைக்க, “சும்மா முறைக்காதடா…வர வர…காதல் இளவரசன் ரேஞ்சுல ரொமான்ஸ் பண்றே! தாங்க முடியல!” என்று அங்கலாய்த்துவிட்டு,

“நாங்க…அதாவது நா…சுபாஷ்…பொம்மன்…ராஜா…மணி எல்லாரும் அவளுக்குப் பாடம் சொல்லித் தரோம்! அப்ப தான்…அவளும் படிப்பா…நீயும் கொஞ்சம் வாலைச் சுருட்டி இருப்பே!” என்றான் முடிவாக.

அதன் படி, அடுத்த நாளே, ஒரு டைம்டேபிளை எடுத்து வந்து, அன்புவின் வீட்டில் மாட்டினான்.

திங்கட்கிழமை – கனியன். செவ்வாய்க்கிழமை – மணி என்று ஓரோர் நாளுக்கும் ஒரோருத்தர் என்று, மாலை ஆறு மணி முதல் எட்டு மணி வரை, பாடம் கற்பிக்கும் படலம் பகிரப்பட்டிருந்தது.

“டேய்…டேய்…இதென்னடா… சண்டே கூட போட்டிருக்கே! மச்சான்…நான் பாவம்டா… அன்னைக்கு மட்டும் வேணாம்டா…” என்று கெஞ்சிப் பார்த்த அன்புவை, யாரும் மதிப்பதாக கூட இல்லை.

“சரி..இல்லைன்னா நானே சண்டே கிளாஸ் எடுத்துக்கிறேன்டா… ப்ளீஸ்டா” என்று வேறு வழியில் கூட முயன்று பார்த்தான், அன்பு.

“ம்ஹூம்!” – யாருமே அசைவதாய் இல்லை.

“ஆப்பு வச்சுட்டீங்களே!” என்று தலையில் கை வைத்துக் கொண்டு அமர்ந்த அன்புவைப் பார்த்து, மயிலும் சிரிக்க,

“சின்னு…இதெல்லாம் நல்லதில்ல சொல்லிட்டேன்! இதுக்கெல்லாம்…உனக்கு இருக்கு!” என்று ஒரு விரல் நீட்டி எச்சரித்தவன்,

முதல் நாள் வகுப்பு முடிந்து அவள் வரவும், அந்த எச்சரிக்கையை அமல் படுத்தினான்.

“என்ன பாவா…இது? போதும்…எனக்குத் தூக்கம் வருது!” என அவள் சிணுங்கச் சிணுங்க…

“சாயந்திரத்தில கொஞ்ச நேரம் தான்…உன்னோட இருக்கவே முடியுது! அதுக்கு…இப்ப ஆப்பு வச்சுட்டு…நைட்டும் தூங்குன்னா என்னால முடியாது!” என்று மனைவியின் சிறு பிள்ளை அவதாரத்தைத் தான் எடுத்துக் கொண்டு, பிடிவாதம் பிடித்தான் கணவன்.

“நானா…ஆப்பு வச்சேன்! நீங்க தானே…படிக்கணும் படிக்கணும்ன்னு என்னைய அனுப்புனீங்க!” என்று சிறு குரலில் சலித்துக் கொண்ட மயில், அவன் மார்பில் தன் முகத்தை ஆழப் புதைத்துக் கொண்டாள்.

“ம்ம்ம்ம்ம்ம்….” என்று கணவனும் ஏக்கப் பெருமூச்சு விட,

“பாவா…நா படிக்கல பாவா…நல்லாவே இல்ல! வேணாம்…பாவா…ப்ளீஸ்!” என்று கெஞ்சியது, குழந்தை.

“இல்லடா குட்டி…உன்னோட நல்லதுக்கு தானே! எழுத படிக்கத் தெரிஞ்சா… நீயே எல்லா இடத்துக்கு தனியா போகலாம்…வரலாம்… இல்லையா? அதான்!”

“ம்ம்ம்… நா இனிமேல் உங்களைக் கடைக்குக் கூட்டிட்டுப் போங்க…இது வேணும்…அது வேணும்ன்னே கேட்க மாட்டேன்…நா படிக்கல பாவா!” – பிதுக்கிய உதட்டால், அவனது வெற்று மார்பில் குருகுறுப்பூட்டி விளையாடினாள் மனையாள்.

“ஸ்ஸ்…. சும்மா இரு குட்டி! கூசுது!” என்று அவளை விலக்கி,

மலர்ந்த செவ்வரளி பூவாய் காட்சி தந்த உதடுகளை, விரல்கால் அளந்து, பின்னர் உதடுகளால் மூடினான்.

பல நிமிடங்கள், வார்த்தைகள் வெளிவர முடியா அமைதியுடன் கழிந்து போக,

அந்த நிமிடத்தின் மோகத்தை சாதகமாய் எடுத்துக் கொண்டு, “அப்ப…நாளையில இருந்து படிக்க வேணாம்! இல்ல…பாவா!” என்றாள் மயில், குதூகலமாய்.

“ஆஹா! நா எப்ப சொன்னேன்…அப்படி?” என்று அன்பு, அவள் மூக்கைப் பிடித்து ஆட்டவும்,

தன் மூக்கிலிருந்த அவனது கைகளை விலக்கி, “இப்ப தான்!” என்று கண் சிமிட்டினாள் மயில்.

“வர…வர…நீ ரொம்ப முன்னேறிட்டே!” என்று சிரித்த அன்பு,

“கடைக்கு வரதுக்காக சொல்லலை…சின்னு! படிப்புங்கிறது… ரொம்பப் பெரிய அஸட்! சின்னச் சின்ன சந்தோஷத்துக்காக… அதை இழக்கக் கூடாது! இந்த சந்தோசம்…நமக்கு காலம் முழுசும் கிடைக்கும்! ஒரு வயசுக்கு மேல போய்டுச்சுன்னா…இனி என்ன படிக்கிறோம்…வேணாம்ன்னு சலிப்பு வந்திடும்! அந்த மாதிரி ஆகுறதுக்கு முன்னாடி… படிச்சிடு!” என்றான் தீவிரமாய்.

அவன் மிகத் தீவிரமாய் பேசிக் கொண்டே போக, “படிப்பு எப்படி அசடாக முடியும்?” என்று புரியாது ஒரு கேள்வி கேட்டாள், மயில்.

“அசடா?!!!!!!!!!!” – அன்பு விழிக்க,

“நீங்க தானே சொன்னீங்க… படிப்புங்கிறது… பெரிய அஸட்ன்னு…அதான் கேட்டேன்!” என்று வீராப்பு காட்டினாள், மயில்.

“ஹய்யோ கடவுளே! அது…அஸட்!!! சொத்து!” என்று அன்பு அழுத்தம் கொடுக்க,

“ரொம்பத் தான்… நானும் படிப்பேன்…படிச்சு…உங்களுக்கு சொத்து வாங்கித் தருவேன்…” என்று அவன் அழுத்தத்தில் கோபம் கொண்டாள்.

“ஹஹஹா!” என்று சிரித்த அன்பு,

“லட்டு மாதிரி நீயே ஒரு சொத்து! இதில வேற சொத்து என்ன வேண்டியிருக்கு!” என்று கன்னம் கிள்ளவும்,

“லட்டு மாதிரி இல்ல…கொழுக்கட்ட மாதிரி!” என்று கண் சிமிட்டிச் சிரித்த மயில், தூக்கம் தழுவிய அவன் கண்களுக்குள் தாபத்தைப் புகுத்தி, அன்றைய இரவை விடிய விடாமலேயே செய்தாள்!!

நாட்கள் வேகமாய் நகர்ந்தன! காலையில் கடற்கரை…பின்னர் டேக்வேண்டோ…பின்னர் சரசம் கலந்த சமையல்…அன்பு கிளம்பிச் சென்றதும் தொலைகாட்சி…அவன் வீடு திரும்பும் நேரத்தில் டியூஷன்…பின்னர் இரவு உணவு…அடுத்து விடியா இரவு என்று நேரமும் நாளும் போட்டிப் போட்டுக் கொண்டு நகர்ந்தன.

இதனிடையே, தமிழ்நாட்டில் பிரசுரமாகும் ஓர் பிரபல நாளிதழிலும், வெற்றிகரமாய் ஓடிக் கொண்டிருக்கும் ஓர் தொலைக்காட்சி நிறுவனமும், “சமையல் ராணி!” என்ற போட்டியுடன் மக்களை அணுகி இருந்தனர்.

அதற்கு ஓர் விண்ணப்பமும், கை நிறைய சமையல் புத்தகமுமாய் வந்து சேர்ந்தவன், அன்பு அல்ல! சுபாஷ்!

“வேலும்மா! இந்தப் போட்டில நீ கலந்துக்குறே…ஓகே!” என்ற கட்டளையுடனே அவன் ஆரம்பிக்க,

“நானா… வேணாம்ண்ணா!” என்று பின்வாங்கினாள் மயில்.

“என்ன வேணாம்? எங்க ஆபீஸ்ல ஒரு லேடி இருக்காங்க…ஷ்…அப்பா…கொடுமைன்னா கொடுமை…அவங்க

இல்ல…அவங்க சாப்பாடு…அதுவும், இன்னைக்கு பொங்கல் பண்ணினேன் ஒரு பாக்கெட் புளியோதரையை எல்லாருக்கும் டிஸ்டரிபியூட் பண்ணுவாங்க! பாயசம்ன்னு ஒரு சீனி தண்ணியை கொண்டு வந்து…குடி குடின்னு கொடுமை பண்ணுவாங்க! அந்தம்மாவே..இதில போய் கலந்துக்க போகுதாம்! உனக்கென்ன வந்துச்சு??! வேணாம்…நோனாம் எல்லாம் இல்ல…போறே…அவ்வளவு தான்!" என்றான் உறுதியாக.

சுபாஷை இவ்வளவு தீவிரமாய் பார்த்திராத அன்புவே, "என்னடா ஆச்சு உனக்கு? தருமி மாதிரி… வெறுமனே கேள்வி தானே கேட்டுட்டு இருப்பே? இப்ப என்ன… வீரபாண்டிய கட்டபொம்மன் மாதிரி வீர வசனம் பேசுறே?" என்றான் சுவாரஸ்யமாய்.
"சும்மா இருடா… அந்தம்மா பண்ற கொடுமையை இந்த உலகமே சாப்பிட்டுட கூடாதேங்கிற நல்லெண்ணம் தான்!" என்று அவனை அடக்கியவன்,

"வேலு…போவியா? மாட்டியா?" என்றான் வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்பது போல்.

"அது…அண்ணா!…இல்ல… என்னால…"

"அதெல்லாம் முடியும்! இந்த அண்ணனுக்காக போவியா? மாட்டியா?" என அவன் கேள்வியை மாற்றி கேட்க,

"எனக்கு அங்கெல்லாம் போகத் தெரியாதேண்ணா! பாவா…ஆபீஸ் போய்டுவாங்க இல்ல…நானா போகணுமே!" – உண்மையான கலக்கம் தெரிந்தது மயிலிடம்.

"அவன் போனா போறான்! நா கூட்டிட்டுப் போறேன்…எனக்கு வெகேஷன் லீவ் இருக்கு! நீ கலந்துக்கிறேன்ன்னு மட்டும் சொல்லு…நான் கூட்டிட்டு போறேன்!" என்றான் உறுதியாக.

மயில் அப்போதும் தயங்கவே, "சின்னு…சுபாஷ் யார்கிட்டயும் இவ்வளவு உரிமையா பேசி…நா பாத்ததே இல்லடா! உன்கிட்ட தான்…அவன் உரிமையா கேட்கிறான்! அவனுக்காக போடா!" என்று அன்பு உந்தவும், ஓர் பாசமிகு அண்ணன் கிடைத்த சந்தோஷத்தில் "சரிண்ணா!" என்றாள் மயில் சந்தோஷமாய்.

வாழ்க்கையே பூங்காவனமாய் இருக்கிறதே என்று அன்புவே கை வைத்து விட்டானோ என்னவோ, உதயா அன்புவின் வீட்டிற்கு வந்தாள்! “சமையல் ராணி!” போட்டி தொடங்க, இரண்டு நாட்களே இருந்த சமயம்.

அன்பு மாலை வீட்டிற்குள் நுழையும் போது, அங்கே அவன் நண்பர்கள் அனைவரும் கூடியிருந்தனர்.

“கனிக்கு ப்ரோமோஷன் வந்த அன்னைக்கு செஞ்சியே… குக்கர் சாக்லேட் கேக்! அதை செய்! சூப்பரா இருக்கும்!” என்று பொம்மனும்,

“ச்சே! அதெல்லாம் ஜுஜுபி ரெசிபி…நல்லா டேஸ்ட்டியா ஏதாவது செஞ்சு…முதல் ரவுண்டுலேயே ஜட்ஜ்ஸை அசத்திடணும்! பேசாம…பால் பணியாரம் பண்ணிடு!” – இது சுபாஷ்!

“ம்ஹூம்! செட்டிநாடு சைடுல இருந்து, வரவங்க எல்லாம் அதான் செய்வாங்க! ஹான்! முள்ளங்கி-மட்டன் குழம்பு செஞ்சிடு!” – இது ராஜா.

“ஆமா! உன் மூளையைக் கொண்டு போய்…முள்ளங்கி தோட்டத்தில தான் நட்டு வைக்கணும்! குழம்பை என்ன டம்பளர்ல ஊத்தி குடிச்சா மார்க் போடுவாங்க! அதெல்லாம் வேண்டாம்…பீக்காக்! நீ என்ன பண்ணு… அன்னைக்கு செஞ்சியே சேமியா சமோசா…அதை செஞ்சிடு! இப்ப தான்..இன்னவேஷன்…இன்னவேஷன்னு பினாத்துறானுங்களே… இதைப் பார்த்ததும், அசந்து போய் செலக்ட் பண்ணிடுவாங்க!” என்று விஞ்ஞானியாய் மாறி, யோசனை சொன்னான் கனியன்.

“ஹ்ம்ம்…எனக்குமே சேமியா சமோசா தான் பெட்டெர்ன்னு தோணுது! அதே செய்யேன்…மயிலும்மா!” என்று மணியும் கனியனுக்கு உதவிக் கரம் நீட்ட,

“எனக்கு என்னமோ…முள்ளங்கி-மட்டன் குழம்பு தான் சரியா வரும்ன்னு தோணுது!” என்று பொம்மன், தன் கரத்தை ராஜாவுடன் கோர்த்தான்.

“ஆஹா…இங்க ரெண்டு…அங்க ரெண்டு! டேய்…கேள்விக்குப் பொறந்தவனே…நீ யாரு கட்சிடா?” என்று கனியன், சுபாஷின் ஆதரவைப் பேணவும்,

“சமோசாவை எண்ணையில தானே பொரிச்சு எடுப்பாங்க?” என்று இடைச் சொருகலாய் ஒரு கேள்வி கேட்டு,

“வேணாம்…வெறி ஆகிடுவேன்! கேள்வி கேட்கணும்ன்னு கேட்காதடா!” என்று பொம்மனை பல்லைக் கடிக்க வைத்தான், சுபாஷ்.

கனியனோ “எண்ணையில இல்ல…தண்ணில பொரிச்சு எடுப்பாங்க! கேட்கிறான் பாரு…கேள்வி!” என்று அவனை அடிக்கவே செய்து விட்டான்.

“இல்ல மச்சி…எண்ணையில பொரிச்சு எடுக்கிறது…உடம்புக்கு நல்லதில்லைன்னு சொல்லிட்டா என்ன மச்சி செய்றது? எண்ணையில கொலஸ்ட்ரால் இருக்கு…”

“மட்டன்ல மட்டும் இல்லையாக்கும்!” – ஏறக்குறைய கைகலப்பு அளவிற்கு சண்டை சென்று கொண்டிருந்த சமயம் தான், அன்பு நுழைந்தான்.

அவன் வந்ததும், மேலே நடந்தது எல்லாவற்றையும் கூறி, அவனது ஒட்டு எதற்கு என்று கனியன் வினவ,

“என்னோட ஒட்டு…கொழுக்கட்டைக்குபா! அதுவும், தேங்காய்…வெல்லம்…பச்சரிசி மாவு எல்லாம் போட்டு செய்யற கொழுக்கட்டைக்கு!” என்ற அன்புவின் பார்வை, மயிலையே வட்டமிட்டுக் கொண்டிருக்க,

மயிலோ, தன் நாணமெனும் தோகை விரித்து, தன் காதலனின் தேகத்தைத் தென்றலால் தீண்டினாள்!

கணவனும்-மனைவியும் தங்களது உலகத்திற்குள், பிரேக் பிடிக்காத காராய் வேகமெடுத்து ஓடி விட, எதிரே இருந்த நண்பர்களின் பேச்சு அவர்களை கயிறு கொண்டு இழுத்து வந்தது.

“இவன் ஒரு லூசு! கொழுக்கட்டையாம்…! கொழுக்கட்டையா தின்னு…தின்னு தான் இப்படி பிள்ளையார் மாதிரி ஆகிட்டான்!” என்று அழுத்துக் கொண்ட கனியன், சிரிப்பு போலீஸ் போல் தெரிந்தான் அவர்களது கண்களுக்கு!

“நாம சண்டை போடறதை விட...மயிலையே கேட்போம்! மயிலு...சேமியா சமோசாவா...இல்ல முள்ளங்கி-மட்டன் குழம்பா?” என்று மயிலிடமே வந்தது கேள்வி.

“ஹ்ம்ம்...மட்டன் குழம்புக்கு மட்டன் நல்லா...இளசா இல்லைன்னா, என்ன தான் ருசியா பண்ணாலும், சரியா வராதுண்ணே! சமோசாவே பண்ணலாமா?” என்று மயில் கூறவும், ஏக மனதாய் “சேமியா சமோசா” அதிக வாக்குகளைப் பெற்று, போட்டிக்குத் தயாரானது.

சுபாஷின் அலுவலகத்தில் வேலை செய்யும் லேடி கிக்...ச்சே...குக்கே முதல் சுற்றில் தேர்வாகி, இரண்டாம் சுற்றுக்கு சென்று விட்டார் என்கையில், மயில் போவதற்கு என்ன?!

அடுத்த இரண்டு நிலைகளையும், அசாதாரணமாய் கடந்தாள் மயில்.

மூன்றாவது நிலையில், இத்தாலியன் உணவு வகைகளை சமைக்கும் போட்டி என்று கூறியிருந்தனர் நடுவர்கள்.

ஓர் நிலைக்கு மேல், அன்புவே “டேய்... என்ன கொடுமைடா இது? இருபது புக்-க்கு மேல இத்தாலியன் ரெசிபின்னு வாங்கிட்டு வந்திருக்கீங்க! அதுவும், சிலது...ஒரே புக்ல ரெண்டு! கடவுளே, இதெல்லாத்தையும் செஞ்சு...அதில ஒண்ணை செலக்ட் பண்றதுக்குள்ள, என்னோட மாச சம்பளம் முழுசும் காலியாகிடும் போலவே!” என்று அலுத்துக் கொள்ளும் அளவிற்கு, ஆகிற்று கனியன்-சுபாஷ்-பொம்மனின் அலம்பல்கள்.

“இவன் ஒரு கஞ்சப்பிசுனாரி, பீக்காக்! நா வாங்கித் தரேன்டா... நீ பண்ணு!” என்று ஏற்றிவிட்ட கனியன், பொருட்கள் மட்டும் வாங்கிக் குவிக்கவில்லை! மயில் செய்த ஒவ்வொன்றையும், சுவை பார்த்து, திருத்தும் சொன்னான் சளைக்காமல்.

எந்தளவிற்கு என்றால். சுபாஷே ஒரு முறை “டேய்...வேலு நல்லா சமைக்குதோ இல்லையோ... நீ அவ சமைக்கிறதை எல்லாம் சாப்பிட்டு...சாப்பிட்டு இத்தாலி-ல இருக்க பிள்ளையார் மாதிரி ஆகிட்டு வரே!” என்றான் கோபமாக.

“சொல்றது தான் சொல்றே…ஒரு கிருஷ்ணர்…ராமர்…முருகர்ன்னு கல்யாணம் ஆனவங்களா சொல்றியா? பிள்ளையாராம்! ஒரு கல்யாணமாகாத வயசு பையன்கிட்ட பேசுற பேச்சா இது?” என்று கனியன் கடிந்து கொண்ட விதத்தில், இது வரை சமைத்தே இராத இத்தாலியன் உணவு வகைகளை எப்படி சமைக்கப் போகிறோம் என்று பயந்து போயிருந்த மயில், தன் பயம் மறந்து, சந்தோஷமாய் சிரித்தாள்.

இப்படி, சிரிப்பும் கேலியும், ஊக்கமும் உற்சாகமுமாகவே, மயிலுக்குள் இருந்த தயக்கத்தை வேரோடு விரட்டினர், அன்புவின் நண்பர்கள்! அன்புவின் நண்பர்கள் என்று சொல்வதை விடவும், மயிலின் சகோதரர்கள்!

ஒருவழியாக, அவள் “பன்னீர் பட்டர் மசாலா பிட்ஸா” செய்து, அன்றைய சுற்றின் “சுவையான ரெசிபி”க்கான அந்த வார விருதை மயில் தட்டிச் சென்றாள்.

“ஹுர்ரே!!!!!!!!!!!!!!!!!!” என்று ஆனந்தக் கூத்தாடினர், அனைவருமே!

“ஒரு வாரமா…இந்த பிட்ஸாவும் பாஸ்தாவுமா சாப்பிட்டு, வயிறே கனத்துப் போச்சு! நல்லா…சூடா சாதம் வடிச்சு, வத்தக்குழம்பு வச்சு, அப்பளம் பொரிச்சு சாப்பிடணும்!” என்று கனியன் சொல்லும் போதே,

“சீக்கிரம் செஞ்சு தரேன் அண்ணே!” என்று வேகமாய் அடுக்களைக்குள் நுழைந்தாள் மயில்.

“ஏய்…நில்லு! எல்லாரும் என்ன நினைச்சிட்டு இருக்கீங்க? வரவர…எனக்கு வீட்டில அடுப்படி மட்டும் தான் இருக்கோன்னு டவுட்டே வந்துடுச்சு! போங்கடா… இன்னைக்கு வெறுமனே காஞ்சி தான்…அதுவும் நீங்க அந்த வீட்டில வச்சு, இங்க எடுத்திட்டு வாங்க! மயிலு…சமைக்கப் போகாத சொல்லிட்டேன்!” – அன்புவிற்கு ஏகப்பட்ட கோபம்.

“அவரு…இப்படித் தான் ஏதாவது சொல்லிட்டே இருப்பாரு! நீங்க இருங்க…நான் அரை மணி நேரத்தில சமைச்சுடுறேன்!” என்று மயில் உள்ளே போக,

“ப்ப்ப்பப்ப்ப்ப்பூ ப்ப்பப்ப்ப்பூ!” என்று அவனைப் பார்த்துக் கிண்டல் செய்தது நண்பர் கூட்டம்.

சுள்ளென்று கோபமேற, அதை நேரடியாய் வெளிக்காட்டி, மனைவிக்கும் தனக்கும் சண்டை என்பதை அறிவிக்காமல், தான் ரசித்து உண்ணும் உணவை “இல்ல போதும்” என்று இரண்டு கரண்டியோடு முடித்துக் கொண்டான், அன்பு.

அவன் முகத்தில் தெரிந்த இறுக்கமும், தன்னை நேராய் பார்க்காத பார்வையும், உதட்டில் தென்படாத சிரிப்பும், கேலியும் கிண்டலுமாய் வெளிவராத பேசும், மயிலை இம்சித்தன.

இது நாள் வரையிலும், அன்பு அவளிடம் இப்படி நடந்து கொண்டதே இல்லை!

“சின்னு…” “மயிலு…” “குட்டி…” என்று எப்போதுமே கொஞ்சல் தான்! சின்னதாய் கூட, ஒரு சுடு சொல் வராது!

இப்போதும் சுடு சொல் வரவில்லை, ஆனால் சுடு சோறு உள்ளே இறங்கவில்லையே!

அவன் காட்டிய இறுக்கத்தில், அவள் தன் முகம் வாடிப் போனாள்!

“இன்னும் கொஞ்சம் வச்சுக்கோங்க…பாவா!” என அவள் சாதத்தை எடுக்கவும்,

“இல்ல வேணாம்! பசிக்கலை!” என்று முணுமுணுத்துவிட்டு, எழுந்து கொண்டான் அன்பு.

மயிலுக்கு உணவே இறங்கவில்லை!

ஒரு சின்ன விஷயத்துக்குப் போய் இவ்வளவு கோபமா என்று கோபமெல்லாம் வரவில்லை! அவன் கோபமாய் இருக்கிறான் என்பதிலேயே, மனம் துவண்டு போயிற்று!

சின்னதோ…பெரிதோ…அவன் கோபத்தை அவளால் தாங்க முடியவில்லை.

மணியும் அவளுமாய் சாப்பிட அமர்ந்ததும், தட்டிலிருந்த ஒரு பருக்கை உணவு கூட மயிலின் வயிற்றுக்குள் இறங்கவில்லை.

பின்னே, அவன் உண்ணவில்லையே!?

கண்ணும் முகமும் கார்கால மேகமாய் வாடிவிட, சோற்றை அலையத் தொடங்கியது மயிலின் கரங்கள்.

மயிலின் முகத்தில் உற்சாகம் வடிந்ததுமே, “அண்ணன் சாப்பிடலைன்னு…சோகமா இருக்கியா மயிலு?” என்று அவள் கன்னம் வருடிக் கேட்டாள் மணி.

அவ்வளவு தான்! மயிலுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்து விட்டது!

“நா…நா…சும்மா…வெளாட்டுக்குத் தான்! மணிக்கா… பாவா சரியாவே சாப்பிடல…நா சாரி…எனக்கு அழுவையா வருது!” என்று மயில் தேம்பித் தேம்பி அழவும்,

அன்பு உருகிவிட்டான் என்றால், சுபாஷும் கனியனும் பொங்கிவிட்டனர்.

“டேய்…நீ என்னடா நினைச்சிட்டு இருக்கே? இனி…ஒரு வாட்டி பீக்காக் அழுதுச்சு…அப்புறம் நீ ஹாஸ்டல்ல தான் இருக்கணும் சொல்லிட்டேன்! அவளை…நாங்க பிறந்த வீட்டுக்குக் கூட்டிட்டுப் போய்டுவோம்!” என்று கனியன், எகிறிக் கொண்டு வர,

சுபாஷோ “தங்கச்சி…பாவம் மச்சி!” என்று வக்காளத்து வாங்க,

பொம்மனோ “அவ உன் மேல ரொம்ப எமோஷனலி டிபன்டன்ட்டா இருக்கா…மச்சான்! உன்னோட…கோபமோ சந்தோஷமோ…அது சின்னதோ பெருசோ… அவளை அளவுக்கு அதிகமா பாதிக்குது! அவளை சந்தோஷமா வச்சுக்கடா…” என்றான் மயிலின் படித்த மனோதத்துவ ஞானியாய்.

மணியோ, மனோதத்துவ நிபுணராகவே மாறி, “நா கூட ஒரு மேகஸின்ல படிச்சேன் அண்ணா! கணவன்-மனைவி உறவு கூட…ஒரு வகையான சைக்காட்டிரிஸ்ட் ட்ரீட்மெண்ட் தானாம்…முன்னாடி காலத்தில கூட, ஒரு கல்யாணம் பண்ணினா சரியாகிடும்…குழந்தை பிறந்தா சரியாகிடும்ன்னு சொல்லுவாங்க இல்ல…அது இதனால தானாம்! கல்யாணமும்…தாம்பத்தியமும் ஒரு ஆணுக்குள்ளேயும், பெண்ணுக்குள்ளேயும் பல விதமான மாற்றங்களை கொண்டு வருமாம்!

உங்க விஷயத்தில, அது நல்ல விதமா வேலை செஞ்சிருக்குண்ணா! மயில்…உங்களால தன்னோட கூட்டில இருந்து வெளி வந்திருக்கா…அது நீங்க தெரிஞ்சு செஞ்சீங்களா இல்லையான்னு தெரியல…ஆனா…உங்களோட அருகாமை தான், அவளுக்கு நீங்க கொடுத்த மிகப் பெரிய ட்ரீட்மெண்ட்! நம்பிக்கை! ஆறுதல் எல்லாமே! அதை…நீங்க கொஞ்சமா குறைச்சாலும், அவளால தாங்க முடியலண்ணா! உங்களுக்குப் புரியும்ன்னு நினைக்கிறேன்! நீங்க…தான் அவளோட மருந்து! அவளோட லைம் லைட்! அவளோட பலம்! அவளோட பலவீனம்! எல்லாமே! சோ…பார்த்துக்கோங்க!" என்று மூச்சு விடாமல் பேசி முடிக்க,

சடசடவென விழும் மழையென, வீட்டை நிறைத்த மற்றவர்களின் கைதட்டல்

அன்பு தன் கரங்களால் மயிலின் தோளை இறுக்கி, "சாரிடா சின்னு!" என்று தன் தலையால் அவளைச் செல்லமாய் முட்டவும், வானைப் பிளந்தது!

அவர்கள் அனைவரும் கிளம்பிச் செல்லக் காத்திருந்தவள் போல், கதவை அடைத்துவிட்டு, மின்னலென பாய்ந்து வந்து, தன் "பாவா"வை இறுக அணைத்துக்கொண்டாள்.

முதன் முதலாய், அவள் பக்கத்திலிருந்து வரும் ஓர் அணைப்பு!

எப்போதுமே, முதலடி அன்புவிடமிருந்து தான் வரும்! முத்தமாகட்டும்… அணைப்பாகட்டும்… எதுவென்றாலும், அன்பு முதலில் அடி வைக்க, மனையாள் அவனைப் பின்பற்றுவாள்!

ஆனால், இன்றோ! இறுக வந்து அணைத்தவளின் உதட்டு வழியே அவனது உயிர் கொஞ்சம் கொஞ்சமாய் அவனது உயிர் மோட்சம் பெற்றுக் கொண்டிருந்தது!

அடைத்து வைத்திருந்த கிளியென, அவள் இறக்கை விரித்து, அவனை அணைத்துக் கொள்ள, அங்கே ஓர் அர்த்தமுள்ள சங்கமம் அரங்கேறியது!

அன்றைய இரவில், அவள் உதிர்த்த ஓரோர் "பாவா"விலும், அன்புவின் நெஞ்சத்தில் ஓர் பள்ளம் ஆழமாய் விழுந்து, அதில் மயில் அழுத்தமாய் அமர்ந்து கொண்டாள்!

அன்பு-மயில் இருவருமே, அன்று மிகவும் நிறைவாய் உணர்ந்தனர்!

அந்த நிறைவு கொடுத்த திடமோ என்னவோ, அடுத்த சுற்றான கிராமிய சமையல் சுற்றிலும் மயில் தேறி வந்தாள்.

அதுவும் நடுவர்கள், "எப்பவுமே…உங்க சமையல் டேஸ்ட்டா தான் இருக்கும்…ஆனா இன்னைக்கு எதுவோ ஸ்பெஷலா இருக்கே…" என்று சுவாரஸ்யமாய் இழுத்தவர்கள்,

செய்து வைத்த கேப்பை அல்வாவை விடவும் தித்திப்பாய் மாறிப் போன மயில், "அது…என்…எங்க…பாவா…" என்று தடுமாறவும்,

"ஆஹா…உங்க பாவாவை இதில கொஞ்சூண்டு கலந்தீங்களா! அதான்…இவ்வளவு ருசியா?" என்று கண்ணடித்து, அவளை மென்மேலும் சிவப்புற செய்தனர்.

முடிவில், "சிறந்த பதார்த்தம் என்ற விருதை விட, சிறந்த வெட்கப்புன்னகைங்கிற பரிசு தான்…வேலுமயிலுக்கு உகந்ததா இருக்கும் போலவே!" என்று அவர்கள் அறிவிக்கவும்,

உடன் வந்திருந்த சுபாஷின் கண்களில் ஓர் நிறைவான கண்ணீர்! கண்ணீர், கூடத் தித்திக்கும் என்று அவனுக்கு அன்று தான் புலப்பட்டது!

அடுத்தது கால்இறுதி போட்டி என்ற நிலையில், கனியும் மயிலும் அடுத்த பதார்த்தை, வலைதளத்தில் தேடிக் கொண்டிருந்த ஞாயிற்றுக்கிழமை, பதினோரு மணி வேளையில், உதயா அன்புவின் வீட்டுக் கதவைத் தட்டினாள்.

வரவேற்பறையில் அமர்ந்திருந்த மயில், "பாவா…கதவு தட்டுறாங்க பாருங்க! திறங்களேன்!" என்று அறையில் ஏதோ வேலையாய் இருந்த கணவனை ஏவினாள்.

"இப்படித் தான் பீக்காக் இருக்கணும்…அவனை நல்லா வேலை வாங்கணும் சரியா?" என்று கனியன் மயிலைப் பாராட்ட,

"வர…வர…உங்க அலும்பல் தாங்கல!!" என்று இருவரையும் முறைத்துக் கொண்டே, கதவைத் திறந்த அன்பு திகைத்தான்.

“ஹே…உதய்! நீ…எங்க இங்க!” என அவன் வியக்க,

“ஏன்…நா வரக்கூடாதா?” என்றபடியே, அவனைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்த உதயா, அதிர்ந்தே போனாள்.

பின்னே, அரைப்பைத்தியம் போலிருந்த பெண், தங்கமுலாம் பூசிய ஆரஞ்சு பழம் போல் மின்னினால், அதிர்ந்து போகாமல் என்ன செய்வாள்!

அதுவும், “வாங்க!” என்று பாந்தமாய் மயில் வரவேற்கவும்,

“இவள் வேற ஒருத்தியோ…” என்ற சந்தேகம் கூட உதயாவிற்கு வந்து விட்டது.

“நீங்க…நீங்க…மயில் தானே?” என அவள் திக்க,

“ஆமா! மயில் தான்! வேலுமயில்!” என்ற மயிலின் நேர் பார்வையை, உதயாவால் சந்திக்க முடியவில்லை.

அங்கும் இங்கும் அலைபாயும் கண்களும், பயம் கலந்த விழிகளும், வெளுத்துப் போன முகமுமாய் நின்ற பேதையா இவள்!?

கோதுமை நிறத்தில் வடித்து வைத்த சிலையென, லேசாய் வண்ணம் வைத்து, பயம் துறந்து, ஆர்ப்பாட்டமில்லாத சுடர் தீபம் போல் இருப்பவளைக் காணக் காண, மனம் திகைத்தது.

அதை அன்புவே களைத்தான்.

“என்ன விஷயம் உதயா? ஆபீஸ்ல எதுவுமே சொல்லலையே…” என அவன் இழுக்கவும்,

“நீ தான்…ஆபீஸ்ல என்னோட பேசுறதே இல்லையே! அப்புறம் எங்க சொல்றது!” என்று பட்டென கேட்டாள் உதயா.

“ஹே…இதெல்லாம் அபாண்டம்! நா…எத்தனை வாட்டி உன்கிட்ட வந்து பேச முயற்சி பண்ணினேன்…நீ தான் பேசல! அது மட்டுமில்லாம, வேற டிபார்ட்மெண்ட்க்கு மாறி வேற போயிட்டே…அப்புறம் எப்படி பேசுறது!” என்று உண்மையை பயமின்றி உரைத்தான் அன்பு.

“ஹான்!!” என்று அதை அரை மனதாய் உள்வாங்கியவள்,

“எனக்கு கல்யாணம் நிச்சயமாகி இருக்கு…அதான் பத்திரிக்கை கொடுத்திட்டுப் போலாம்ன்னு வந்தேன்!” என்று தன் திருமணப் பத்திரிக்கையை எடுத்து நீட்டினாள், உதயா.

“ஹே! சூப்பர்! கன்க்ராட்ஸ் உதய்!” என்று அவள் கை பிடித்து குலுக்கிய அன்பு,

“சின்னு… உதயாவுக்கு ஏதாவது குடிக்கக் கொடுடா” என்றான் மனைவியிடம்.

“என்ன சாப்பிடுறீங்க? காப்பியா…ஜூஸா?” என்றவள்,

“இல்ல…எதுவும் வேணாம்…” என்று உதயா மறுத்ததை மதிக்காமல், பழரசம் கலந்து வந்து கொடுத்தாள்.

சிறுது நேரத்தில், “நீங்களும் வந்துடுங்க!” என்று மயிலிடமும் சொல்லிவிட்டு, உதயா கிளம்ப,

“கொஞ்சம் இருங்க… குங்குமம் வாங்கிட்டுப் போங்க!” என்ற மயில், குங்குமமும் அதனுடன் ஒரு சேலையும் வைத்துக் கொடுத்தாள்.

அதை வாங்கிக் கொண்ட உதயாவிற்கு, தான் நினைத்து வந்ததற்கு எதிர் மாறாய் நடப்பதை நம்பவே முடியவில்லை!

மயிலுடனான அன்புவின் வாழ்க்கையை எள்ளி நகையாடி விட்டு, என்னை இழந்து விட்டாயே என அவனைக் குத்திவிட்டு, “இப்பப் பாரு…எனக்கு உன்னை விட நல்ல மாப்பிள்ளை கிடைச்சிருக்காரு” என்று பெருமை பீத்திவிட்டு போகலாம் என்று எண்ணி வந்தவளுக்கு, மயிலின் மாறுதலைக் கண்டதுமே வாய் அடைத்துப் போயிற்று!

அதிக அலும்பல் இல்லாமல், உதயா கிளம்பிச் சென்றுவிட, கனியும் ஏதோ ஒரு காரணத்தைக் கூறிக் கொண்டு, வீட்டு விட்டு வெளியேற,

“இப்ப வந்தவங்க யாரு? நீங்க…ஏன் அவங்களை உதய்ன்னு கூப்பிடுறீங்க! எனக்குப் பிடிக்கலை!” என்று அன்புவை நேருக்கு நேராய் கேள்வி கேட்டாள், மயில்! கண்ணில் கோபத்துடன்!

மயில் கேட்ட விதத்தில், அன்பு “ஹஹஹா!” என்று வாய் விட்டே சிரித்தான்.

“இப்ப எதுக்கு சிரிக்கிறீங்க?” – மயிலுக்குத் தான் எவ்வளவு கோபம்!

“அடேங்கப்பா! என்னோட சின்னுக்கு என்னமா கோபம் வருது!” என்று அன்பு அவள் கை பிடித்து இழுக்க,

“ம்ஹூம்! வர மாட்டேன்! சொல்லுங்க... அவங்களை ஏன் உதய்ன்னு கூப்பிட்டீங்க!” எனக்குத் தெரிந்தே ஆக வேண்டும் போல், பிடிவாதமாய் நின்றாள் மயில்.

“இல்லடா...அவ என்னோட ஃபிரண்டு!”

“ஹ்ம்ம். ஆனா...எனக்குப் பிடிக்கலை! இனிமேல்...அப்படி கூப்பிடாதீங்க!” என்றாள் கறாராய்!

“ஹே...குட்டி! பொறாமையா?” என்றான் அன்பு, சுவாரஸ்ய சிரிப்புடன்.

“எனக்கு ஒண்ணும் பொறாமை இல்ல... அவங்களுக்குத் தான் பொறாமை போல!” என்று மயில் அலட்சியமாய் சொல்லவும்,

“வரவர...நீ ஜெட் ஸ்பீட்ல முன்னேறிட்டு வர சொல்லிட்டேன்! அவளுக்கு பொறாமைன்னு எப்படி சொல்றே?” என்றான் கணவன், அவள் மூக்கை நிமிண்டியவனுக்கு,

“அதெல்லாம் கண்ணுலேயே தெரியும்!!” என கர்வமாய் பதில் கூறினாள் மயில்.

“இதோ பாருடா! இந்தப் புள்ள...கண்ணைப் பார்த்து மனசைப் படிக்குது! என்னைப் பாக்கும் போது, என் கண்ணு என்ன சொல்லிச்சாம்!” என்று அவன் வேண்டுமென்றே சீண்ட,

“நா உதயாவைப் பத்திப் பேசுறேன்!!”

“ஆஹா! என்னமா கட் கொடுக்கிறாங்க...என்னோட சின்னு!” என்று இதற்கும், அகமகிழ்ந்தே போனான், அன்பு.

“ம்ம்!!!!” என அவள் உந்த,

“என்ன ம்ம்? அவளை நான் உதய்ன்னு கூப்பிடக்கூடாது அவ்வளவு தானே? கூப்பிடலை! விடு!’ என்றான் சமாதானமாய்.

ஆனால், அதில் சமாதானம் அடையாமல், மயில் அவனை ஒரு மார்க்கமாய் பார்க்க,

“ஏய்…என்ன லுக்கு! வேணாம் மயிலு…நா கரை படாத வெள்ளை சட்டையாக்கும்! இருபத்தியஞ்சு வருஷமா நா கட்டிக் காத்துட்டு வந்த பிரம்மச்சரியம், நீ பண்ணின கொழுக்கட்டைல தான் முடிஞ்சுபோச்சு! தெரிஞ்சுக்கோ! அதைத் தவிர, நா வேற எந்த டிஷ்லையும் தொபக்கடீர்ன்னு விழுந்ததே இல்லை!” என்று அன்பு கை விரிக்க,

“ஐயோ உங்களை! எவ்வளவு நாள் ஆனாலும்…இந்தக் கொழுக்கட்டையை விட மாட்டுறீங்க! என் மானமே போகுது!” என்று தலையில் அடித்துக் கொண்ட மயில், அடுக்களை பக்கமாய் நகரவும்

“ஆகா! எனக்கு கொழுக்கட்டை ஞாபகம் வந்துடுச்சுடா…வா இந்தப் பக்கம் போலாம்…” என்று படுக்கையறை பக்கம் அவளை இழுத்தான் அன்பு.

“அச்சோ…போங்க பாவா! நாளைக்கு… போட்டி இருக்கு… விடுங்க!” என்று ஒரே ஓட்டமாய் ஓடியே போனாள் மயில்.

என்ன தான் அவள், அவனிடமிருந்து தப்பித்திருந்தாலும் அது அந்த நேரத்திற்குத் தான்! இரவில், அவனது பிடியில் இறுக்கமாய் சிக்கிக் கொண்டாள்!

“ஹே சின்னு! எனக்கு இப்ப ஒரு உண்மை தெரிஞ்சாகணும்!” என்று அவள் கழுத்தில் முகத்தைப் பதித்தப்படியே அவன் கேட்க,

“சொல்ல முடியாது…போ!” என அவனைத் தள்ளிவிட்டாள் அவள், சிறு பிள்ளையின் சிணுங்கலுடன்.

“அடிங்க! வர வர…ரொம்ப செல்லமா போச்சு! வா இங்க!” என்று போலி மிரட்டலுடன் அவன் இழுக்கவும்,

கையை உருவிக் கொண்டு, “ஹஹ்ஹா!” என்று அவனைப் போலவே, இடுப்பில் கை வைத்து, வீரச் சிரிப்பு சிரித்து, அவள் வெறுப்பேற்ற,

“வேணாம்…வா!” என்று கோபம் காட்டி அழைத்தவன், அவள் வேண்டுமென்றே அழகு காட்டவும், சட்டென உதடு பற்றி, உயிர் நுழைந்து, ஊண் சிவக்கச் செய்தான்!

அவ்வளவு தான், மயில் மறுவார்த்தையின்றி அவனுள் அடங்கிப் போனாள்!

மயங்கி நின்றவளின் மன்மத உதடுகளை காகிகதமாக்கி, அதில் தன் விரல்களில் வண்ணம் கொண்டு அவன் வருட, அதுவோ வெறும் இளஞ்சிவப்பு வண்ணத்தை மட்டும், அவளிடம் இட்டுச் சென்றது.

அதில் தானே கரைந்து போகும் முன்னர், தான் கேட்க வந்ததை கேட்கத் தொடங்கினான் அன்பு.

“ஏன் சின்னு…அதென்ன உதயா கண்ணைப் பார்த்ததும், பொறாமை தெரிஞ்சதுன்னு சொன்னே? எப்படி?” என்று அவன் வினவவும்,

“எப்படின்னா…என்ன சொல்றது? தெரிஞ்சுச்சு…” என்றாள் மயில் விட்டேறியாய்.

“அதான்…எப்படி?” என அவன் மீண்டும் துருவவும்,

“சுபாஷ் அண்ணா சொல்லிக் கொடுத்தாங்க!!” என்றாள் மயில் பெருமையாக.

“ஆஹா!! சுபாஷா!???” என்று அன்பு முழிக்கவும்,

“இந்த சமையல் போட்டிக்கு நெறைய பேர் வருவாங்க இல்ல…அதில ஒரொருத்தரும் என்ன நினைக்கிறாங்கன்னு…அண்ணா கண்ணை வச்சே சொல்லுவாங்க! எனக்கும் சொல்லிக் கொடுத்தாங்க! அப்புறம்…அவங்க பேசுறதை வச்சு…இந்தம்மாக்கு நீ செஞ்சதைப் பாத்து…ஒரே பொறாமை மயிலு…பாரு எப்படி பாக்குதுன்னு சொல்லுவாங்க…அதே மாதிரி, அவங்களும்…அதான் அந்தம்மாவும் வந்து, நா செஞ்சதைப் பத்தி ஆயிரம் கேள்வி கேட்டு, பூ இவ்வளவு தானான்னு சொல்லிட்டுப் போவாங்க! இன்னும் ஒரு சில பேரு… கண்ணைப் பாத்தே பேச மாட்டாங்க…அலட்சியமா இருப்பாங்க! நானா போய்…கேட்டாலும், சரியாவே பதில் சொல்ல மாட்டாங்க! அவங்களுக்கு என்னைப் பிடிக்கலை போல அண்ணான்னு சொன்னா… நீ நல்லா பண்றேன்னு… அவங்களுக்கு

பொறாமை வேலுன்னு அண்ணா சொன்னாங்க!” என்று விளக்கம் கொடுத்தாள் மயில்.

“ஹ்ம்ம்…இதெல்லாம் எப்படி சொல்லிக் கொடுத்து வரும்?” என அன்பு வாய் விட்டே குழம்ப,

“சொல்லிக் கொடுத்தா மட்டும் வராது! அவங்க சொல்றதை கவனிச்சு…கேட்டு…நாமளும் ஒண்ணு ரெண்டு தப்பு செஞ்சா தான்…ஒழுங்கா வரும்!” என விளக்கம் கொடுத்த மயிலின் குரலில் சிறு கிண்டல் இருந்தது.

“உன்னை…இந்த கனியனோட சேர விட்டதே தப்பா போச்சு! பேச்சு…ஓவரா போச்சு!” என்று மூக்கை லேசாய் கடித்து வைத்தான், கணவன்.

“நல்லா பேசுறீங்க…பாவா! பேச்சு…போச்சுன்னு…” என்று மயில் சிரிக்க, அங்கே பேச்சு ஒரேடியாக காணாமலேயே போயிற்று!!

கால் இறுதி, அரையிறுதி என்று வேகமாய் கடந்த மயிலின் சமையல் திறமை, இறுதி சுற்றுக்குள் அடியெடுத்து வைக்க, இரண்டு நாட்களே இருந்த நிலையில், உதயாவின் திருமண வரவேற்பு வந்தது.

காலையில் வேலைக்குச் செல்லும் போதே, “சின்னு…இன்னைக்கு உதய்…” என ஆரம்பித்து,

மயில் முறைக்கவும், “நீ உதை படாம போகப் போறதில்லைடா! கொழுக்கட்டை இல்ல…பூரிக்கட்டை தான் பார்சல் பண்ணப் போறா!?” என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு,

“உத…………..யாஆஆஆஆஆவுக்கு இன்னைக்கு ரிசப்ஷன்! சாயந்திரம்…உங்க அண்ணன்களோட சேர்ந்துக்கிட்டு, அடுப்படியை ரணகளப்படுத்திட்டு இருக்காம…சீக்கிரமா ரெடியாகிடு! நா வந்ததும் போலாம்!” எனக் கூறிச் சென்றான், அன்பு.

மயிலும், அவன் சொல்படி தயாராக இருந்தாள்.

மயில் கழுத்து வண்ணத்தில், ஜர்தோசி வேலை செய்த சேலையில், நிஜ மயில் போலவே காட்சி அளித்தவளை, “இவள் என் மனைவி!” என்ற கர்வம் மிகவுற, வரவேற்ப்பிற்கு அழைத்துச் சென்றான் அன்பு.

அவர்களைக் கண்டதும், முகம் மலர வரவேற்றது உதயாவின் குடும்பம்! உதயாவின் தான்! ஆனால், அவள் பால் சிறு பொறாமை இருந்தது!

மெருகேறிய தங்கத்தில், சிறு வைரக் கற்கள் பதித்தது போல் ஜகஜோதியாய் மின்னியவளை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தவளின் எரிச்சலை மேலும் கிளப்பவென,

“ஹே…நீங்க…நீங்க…சமையல் ராணி போட்டில ஃபைனல் வரைக்கும் வந்திருக்க வேலுமயில்…தானே!” என்று மயிலிடம் ஆர்வம் மிகவுற கேட்டுக் கொண்டிருந்தார், அவளது மாமியார்!

மயில், சிறு வெட்கத்துடன் “ஆமா…” எனவும்,

“ஹய்யோ! சூப்பர்மா நீ…இந்தச் சின்ன வயசில…எத்தனை டிஷ் தெரிஞ்சு வச்சிருக்கே!” என ஆரம்பித்து,

“அன்னைக்கு…பண்ணியிருந்தியே காலிஃப்ளவர் பாயசம்! ச்சே…சூப்பர்மா! என்னமா இருந்துச்சு தெரியுமா? நா காலிஃப்ளவர் வச்சு…பக்கோடா பண்ணியிருக்கேன்…புலாவ் பண்ணியிருக்கேன்…மஞ்சூரியன் பண்ணியிருக்கேன்…ஆனா…இது! செம டேஸ்ட்மா!!” என்று அவளை ஏகத்திற்கும் புகழத் தொடங்கினார்.

“ஹோ! உங்களுக்குப் பிடிச்சதா?! பொம்மன் அண்ணா தான்…இப்படி முயற்சி பண்ணுன்னு சொல்லிக் கொடுத்தாங்க!” என்று மகிழ்ந்தாள் மயில்.

அதோடு நிறுத்தாமல், “அப்புறம்…அந்த நெய் மீன் குழம்பு! சூப்பர்மா!!” என்று ஒவ்வொன்றாய் அடுக்கிக் கொண்டே போனார்.

அரை மணி நேரத்திற்கு மேலும் தொடர்ந்த இந்த சம்பாஷணை, “நீ…இப்படிம்மா இங்க? உதயாவுக்கு ஃபிரண்டா?” என அவர் வினவ,

“இல்ல…எங்க பாவாவும், உதயாவும் ஒண்ணா வேலை செய்றாங்க!” எனக் கூறிய மயிலின் கண்கள், உதயாவை நோக்கின!

“ஹோ…அப்படியா? எப்படி இருந்தாலும் சரி… நீ எங்க உதயாவுக்கு இந்த சமையல் எல்லாம் கத்துக் கொடும்மா!” என்று கோரிக்கை வைத்தார், உதயாவின் மாமியார்.

“ஐயோ…நானா?” என்று மயில் பின் வாங்க,

“ஹ்ம்ம்…ஆமா!” என்றவர், உடனேயே “ஹய்யோ…அவங்க இந்த வாரமே அமெரிக்கா போறாங்களே! ஹ்ம்ம்…பேசாம ஒரு புக்கா போட்டுடு!” என்றார் யோசனையுடன்.

“புக்கா? அவ்வளவு பெரிய ஆளெல்லாம் இல்லங்க…வேணாம்…” என மயில் பின்வாங்கவும்,

“பெரிய ஆள் ஆன பின்னாடி தான்…புக் போடணுமா என்ன? புக் போட்டு…பெரிய ஆள் ஆகிக்கலாம்!” என்றார் அவர் ஒரே பிடியாக.

கூடவே, “ஆறு முகனோட வாகனத்தையும்… ஆயுதத்தையும் பேர்ல வச்சிருக்க உனக்கு, அப்பனுக்கே பாடம் சொல்லிக் கொடுத்த குமரனோட தைரியத்தில பாதியாவது இருக்க வேண்டாமோ?” என்றார் கேலி போல்.

வெறும் பேச்சோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல், அன்புவிடமும் பேசி, தனக்குத் தெரிந்த பதிப்பகத்தின் முகவரி கொடுத்து, தன் கைப்பேசி எண்ணையும் கொடுத்து, “கண்டிப்பா போடணும்!” என்ற வேண்டுகோளுடன் விடை கொடுத்தார்.

முதலில், “சமையலுக்குன்னு ஏகப்பட்ட வெப்சைட் இருக்கே மேடம்…இப்ப எல்லாம் நெட்ல பார்த்து சமைச்சிட்டு போய்டுறாங்க…யாரு புக் எல்லாம் படிக்கிறா?” என்று தயங்கிய அன்பு,

“புக் படிக்கிறவங்களும் இருக்காங்க…அன்பு! எப்பயுமே, கையில காகிதத்தைப் புரட்டி படிக்கிறதும்…அதைப் பார்த்து சமைக்கிறதும் ஒரு தனி அனுபவம் தான்!” என்ற அவரது தூண்டுதலில் லேசாய் தலையசைத்தான்.

ஆனால், அவனது தயக்கம் முழுதாய் மறையவில்லை என்பதை அறிந்து கொண்டு, “உங்களுக்கு அவ்வளவு டவுட்டா இருந்தா…நெட்லயும் போடுங்க…புக்காவும் போடுங்க! யாருக்கு…எது பிடிச்சிருக்கோ…அதை வாசிப்பாங்க!” என்றார் வற்புறுத்தலாய்.

“நீங்க இவ்வளவு தூரம் சொல்றதுக்காகவே…கண்டிப்பா முயற்சி பண்றேன் மேடம்!” என்று அன்பு, புன்னகைக்கவும்,

“உங்க முயற்சியை…விட எனக்கு வேலுமயிலோட சமையல் மேல எனக்கு நம்பிக்கை இருக்கு!” என மயிலின் கன்னம் வருடியவர்,

“இப்போ…என்ன மாதிரி அந்த சேனல் பாக்கிற ஒரு சில பேருக்குத் தான்…வேலுமயிலைத் தெரியும்! அவங்களை…ஒரு பிக்கர் ஆடியன்ஸ்க்கு (bigger audience) கொண்டு போங்க…அன்பு!” என்று வலியுறுத்தி விட்டு நகர்ந்தார்.

அவர் கூறியதை வீட்டில் வந்து அன்பு பகிர, “ச்சே…நமக்கு இந்த ஐடியா வராம போச்சே!” என்று அனைவருமே வருத்தம் கொண்டு, உடனேயே அதை மறந்து, சந்தோஷிக்கவும் செய்தனர்.

“ஆனா…எனக்கு எழுத வராதே…இப்ப தான்…அ…அணில்…ஆ…ஆடுன்னே படிக்கிறேன்…வேணாம் பாவா!” என்று ஒரேடியாக மறுத்தாள் மயில்.

“நாங்கெல்லாம் எதுக்கு இருக்கோம்? நீ சொல்ல…சொல்ல நாங்க எழுதுறோம்” என்று பொம்மன் முன் வரவும்,

“ஆமா…அவ சோம்புன்னு சொன்னா…நீ சொம்புன்னு எழுதுவே! உன்னோட தமிழ் திறமையப் பத்தி தெரிஞ்சு தானே…மக்கா…நான் உனக்கு மாத்ஸ் கிளாஸ் கொடுத்தேன்!” என்று காலை வாரினான், கனியன்.

“ச்சே…லூசாடா நீ? சொம்பை எப்படிடா…எண்ணையில தாளிக்கிறது?!” என்று சுபாஷ் அதிலும் ஓர் கேள்வி கேட்க,

அவனை ஓர் முறைப்பில் அடக்கி விட்டு, “எல்லாருமா எழுதலாம்…அப்புறம் மயில்கிட்ட படிச்சு காட்டி,..திருத்திக்கலாம்!” என்று ஒரு மனதாய் முடிவு செய்யப்பட்டது!

இவை எல்லாவற்றுக்கும் நடுவிலும், “சமையல் ராணி” போட்டியின் இறுதி கட்டம் வந்து சேர்ந்தது.

அன்புவைப் போகச் சொல்லி, சுபாஷ் வலியுறுத்த, “உன்னால தான்டா…அவ ஃபைனல்ஸ் வரைக்கும் வந்திருக்கா! நீயே போ!” என்று அவனை அனுப்பி வைத்தான், அன்பு.

முந்தைய சுற்றுக்களை போல், இறுதிப் போட்டியில் முன் அறிவிக்கப்பட்ட “தலைப்பு” இல்லை. அவர்கள் கொடுக்கும் மூலப் பொருட்களை வைத்து, சமயோசிதமாக யோசித்து இரண்டு பதார்த்தங்கள் செய்ய வேண்டும்! இது நேரடி ஒளிபரப்பு வேறு!

மயிலை விடவும், உடன் சென்றிருந்த சுபாஷை விடவும், வீட்டிலிருந்து நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த மற்றவர்கள், தவித்துப் போயினர்!

“என்ன இன்கிரிடியன்ட்ஸ் கொடுக்கப் போறாங்களோ!?”

“மயில் டென்ஷன் ஆகிடுவாளோ?”

“டக்குன்னு யோசிச்சு செய்யணுமே…செஞ்சிடுவாளா?” என்று ஏகப்பட்ட கேள்விகளும், கவலைகளும் புடைசூழ, அனைவரும் தொலைக்காட்சி முன்னர் குழுமி இருந்தனர்.

அதுவும், அன்புவின் நிலை மிகவும் கவலைக்கிடமாய் இருந்தது!

“ஐயோ…அவளோட போயிருக்கலாமோ? சின்னு…நா இல்லாம ரொம்ப பயந்திருப்பாளோ!? என்ன செய்றான்னு தெரியலையே! நா போயிருந்தா…பாவான்னு என் கையைப் பிடிச்சிட்டாவது இருந்திருப்பா…அச்சோ! லூசு மாதிரி பண்ணிட்டேனே! அவன் போனா என்ன? நானும் கூடப் போயிருக்கலாம்…ஹய்யோ!” என்று ஏகத்திற்கும் தவித்துப் போனான்.

ஒரு வழியாக, நிகழ்ச்சி ஆரம்பித்தது.

மயிலுக்கு கொடுக்கப் பட்ட பொருட்கள் – பழங்கள்! ஆம்…பழங்கள் மட்டுமே! ஆப்பிள் – ஆரஞ்சு – பைன்ஆப்பிள் – கிரேப்ஸ் – மாம்பழம் என்று தட்டு நிறைய பழங்கள்!

அவற்றை வைத்து, ஒரு இனிப்பும்…ஒரு காரமும் செய்ய வேண்டும்!

அங்கிருந்த மயிலின் முகம் யோசனையில் சுருங்க, இங்கிருந்த அனைவரின் முகமும் “ஹய்யோ!” என்று பயத்தில் சுருங்கிப் போனது!

அதுவும், அன்புவின் முகமோ “பழத்தை வச்சு…காரமா? கடவுளே!” என்று மனைவியை எண்ணி, வாடிப் போனது!

எதிர்மறை உணர்வுகள் தலை தூக்கி நின்றபோதும், “எதை எப்படி எதிர்கொள்ளப் போகிறாளோ!” என்று சிறு ஆர்வமும் அதில் கலந்திருந்தது.

ஆனால், பயம்…வாட்டம்…எதிர்பார்ப்பு…ஆர்வம்…கேள்வி என்று அனைவரது உணர்ச்சிகளுக்கும் பதில் போல் “பழ அல்வா”வை இனிப்பிற்கு என்றும், “ஃப்ரூட் கோப்தா” என்பதை காரத்திற்கும் எனக் கூறி, வீட்டினரின் ஆர்வத்தை மட்டுமல்ல…நடுவர்களின் ஆர்வத்தையும் தூண்டி விட்டு, கொடுத்த நாற்பது நிமிடங்களுக்குள் அதை சமைக்கத் துவங்கினாள் மயில்.

அந்த நாற்பது நிமிடங்களும், நாற்பது வருடங்கள் போல் நகர்ந்தது, அன்புவிற்கு!

அதுவும், திரையில் மயிலைக் காணும் போது, அவள் என்ன செய்கிறாள் என்பதை விடவும், அவள் முகம் எப்படி இருக்கிறது…பயந்து போயிருக்கிறாளா…இல்லை பதட்டமாய் இருக்கிறாளா…இல்லை நம்பிக்கையுடன் இருக்கிறாளா என்பதையே வட்டமிட்டுக் கொண்டிருந்தது அன்புவின் பார்வை.

மணி, ராஜா, கனியன், பொம்மன் என அனைவருமே ஓர் எதிர்பார்ப்புடன் அவள் செய்வதையே பார்த்திருந்தனர்.

“பழத்தை எல்லாம்…இவ்வளோ குட்டியா கட் பண்ணி இருக்காளே! என்ன செய்யப் போறாளோ!”

“ஆஹா…எல்லாத்தையும் நல்ல ஸ்மாஷ் பண்றா…”

“க்ரேவிக்கு ரெடி பண்றா போல…மிக்சி ஏதோ அரைக்கிறாளே!”

“ஹ்ம்ம்…பேஸ் கிரேவி தான் செயரா இப்போ! இன்னொரு அடுப்பில…என்னமோ கொதிக்குதே…என்னது?” என்று ஏகப்பட்ட கேள்விகளும், அதற்கு மேலான எதிர்பார்ப்புமாய் அவர்கள் காத்திருக்க,

“உங்களுக்கான நேரம் முடிவடையப் போகிறது…” என்ற அறிவிப்புடன்,

“ஃபைவ் மினிட்ஸ் மோர்…” என நடுவர்கள் கூறும் போதே,

கடைசி கட்ட அலங்காரங்களை முடித்துவிட்டு, சமையல் இடத்தை விட்டு வெளியே வந்தாள்.

“ஹூ!! வேலுமயில் முடிச்சுட்டாங்க! சூப்பர்!” என்று குரல் குதூகலமாய் வெளி வரவும், மயிலின் முகத்தில் சிறு புன்னகை.

இங்கே வீட்டிலும் தான்!

“டைம்க்கு முடிக்கிறதுக்கே…தனி பாயிண்ட்ஸ் உண்டு! சூப்பர்!” என்று கருத்துக்கள் சந்தோஷமாய் பரிமாறப்பட,

நேரமும் முடிவடைந்து, நடுவர்கள் பதார்த்தங்களை சுவை பார்க்கும் படலம் ஆரம்பித்தது!

மயிலின் முறை முதலாவதாக வரவும், தன் பதார்த்தங்களை எடுத்துக் கொண்டு, நடுவர்கள் முன்னே சென்றாள் அவள்.

நடுவர்கள், ஒரு ஸ்பூன் எடுத்து வாய்க்கு கொண்டு போகும் நேரம், அன்புவின் நிலை ஓர் படம் வெளியிட்ட இயக்குனரின் நிலையை ஒத்து இருந்தது!

இதயம் வந்து வெளியே விழுந்தது போல், “தடக்! தடக்!” என்ற சத்தம் வெளியே கேட்க,

அனைவரும் நகத்தை மட்டுமில்லாமல் விரலையும் கடித்தபடி அமர்ந்திருந்தனர்!!

மயில் செய்திருந்த பழ அல்வாவை ஒரு நடுவரும், பழ கோஃப்தாவை ஒரு நடுவரும், கரண்டியால் எடுக்க,

அன்பு சட்டென வரவேற்பறையை விட்டெழுந்து, உள்ளறைக்குள் புகுந்து கொண்டான்.

"டேய்....டேய்...வா..." என்று கனியன் கூவும் போதே,

“ஷ்...சும்மா இரு. ஒப்பினியன் சொல்லப் போறாங்க!" என்று ராஜா, அவன் தலையில் தட்டி, தொலைகாட்சிக்கு அவனது கவனத்தை இட்டு வந்தான்.

சந்தோஷமோ...துக்கமோ...எதிர்ப்பார்ப்போ ஏமாற்றமோ...ஆவலோ சொதப்பலோ எந்தவொரு உணர்வானாலும், அதை தன்னுள்ளேயே புதைத்துக் கொண்டு வாழும் அநாதை வாழ்க்கையை வாழ்ந்தவர்களுக்கு, இப்போதைய உணர்வு, புத்தம் புதிதாய் இருந்தது!

தங்களது உணர்வையே பகிர்ந்து கொள்ள ஆளில்லாமல் வளர்ந்தவர்கள், தங்களுடன் ஒரு உணர்வு பகிர்ந்து கொள்ளப்படும் போது, அதை அனுபவித்து...அனுபவித்து, திக்குமுக்காடிப் போயினர்.

உணவு...தண்ணீர்...புகலிடம்...துணி...அணிகலன் என எல்லாவற்றையும் போல், உணர்வும் ஓர் பகிரப்படுவதே!

பிள்ளைப்பருவத்தில் தனிமை எனும் கூட்டுக்குள் அடைந்திருந்தவர்களுக்கு, நட்பு எனும் உணர்வு - பகிரும் உலகத்திற்குள் நிலைப்படி நட்டு வைக்க, இப்போது புதிதாய் வந்த “தங்கை”, “அண்ணி”, “மனைவி” என்ற உறவோ, உணர்வு உலகத்திற்குள் உவகை பொங்க இட்டு வந்தது!

“உறவின்றி வாழ்ந்து விடலாம்!”

“என்ன பெரிய உறவு?”





“என்ன பெரிய தங்கை பாசம்?”

“அண்ணன்-தம்பிக்குள் எத்தனை சண்டை சச்சரவு! நாம்...தான் அந்த தொல்லைகளே இல்லாமல் சந்தோஷமாய் இருக்கிறோமே!”

“மாமியார்-மருமகள் பிரச்சனையே இல்லப்பா! ஷப்பா! நிம்மதி!”

“நாத்தனார்- கொழுந்தனார் உறவே இல்லை! பொறாமையும் இல்லை...பகைமையும் இல்லை...சண்டையும் இல்லை!”

இப்படி ஏகப்பட்ட காரணங்களால், தங்கள் தனிமையை நியாயப்படுத்திக் கொண்டவர்கள், இப்போது அதையெல்லாம் மறந்து, “என் தங்கை!”, “என் அண்ணி!” என்று மயிலின் ஓரோர் அடிக்கும் சந்தோசக் கூத்தாடினர்.

அதுவும், அன்பு!!

நெஞ்சம் படபடப்புற, படுக்கையறை மெத்தையில் அமர்ந்திருந்தபோதும், காதுகள் இரண்டும் வரவேற்பறையில் இருந்த தொலைக்காட்சி மீதே இருந்தன.

“மயில் செய்த உணவு வகைகள் நன்றாக இல்லை!” என்று நடுவர்கள் சொல்லி விடுவார்களோ என்று மிகவும் பயமாக இருந்தது அவனுக்கு!

அதை அவன் சின்னு எப்படி தாங்குவாளோ?! அதைத் தன்னால் கண் கொண்டு காண முடியுமோ என்று ஏகப்பட்ட சந்தேகங்கள் வேறு!

தனக்கென்று வருவதை விடவும், தனக்கு நெருக்கமானவர்களுக்கு வரும் ஓர் சோதனை, ஒரு மனிதனை இவ்வளவு பாதிக்கும் என்று அனைவருமே உணர்வு பூர்வமாக உணர்ந்த தருணம் அது!





தன் துன்பம்...தன் கவலை...தன் வருத்தம் என்பதை விடவும், ஓர் நெருங்கிய உறவின் இன்பமும் துன்பமும் தங்களை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதைக் கண்கூடாக கண்ட தருணம் அது!

அன்புக்காவது, மணி என்ற உறவு வந்து சில பல உணர்வுகளை அவனிடம் காட்டியிருக்கிறாள்!

ஆனால், கனியனுக்கோ...சுபாஷுக்கோ...பொம்மனுக்கோ இந்த உணர்வு புதிது!

மணி வந்த நேரத்தில், அன்புவுடன் அவர்கள் இணையவில்லை. வேறு பல ஊர்களில் வேலையாய் இருந்தவர்கள், மணி கல்லூரி சேர்ந்த வருடம் தான் ஒன்றாய் வாழ ஆரம்பித்தனர்.

அன்புக்கு தங்கை என்ற ஸ்தானத்தில் வந்தவள் மீது, அவர்களுக்கும் பாசமுண்டு! ஆனால், எந்த உறவு முறையிலும் பின்னாது நின்றவளிடம், சற்று தள்ளியே இருக்க வேண்டிய சூழல் அவர்கட்கு! அதற்குக் காரணம் - இளம் வயது...தேவையில்லாத பேச்சுக்கு வழிவகுத்து விடக் கூடாதே என்ற பயம்!

ஆனால், மயில் வந்தது அன்புவின் “மனைவியாக”!

அப்படியிருக்கையில், எந்த வித தயக்கமுமின்றி, சுற்றியிருக்கும் உலகத்தை எண்ணி பயமுமின்றி அவளுடன் பாசத்தைப் பகிர்ந்து கொண்டனர், அவர்கள்!

‘தங்கள் தங்கை’ என்ற உரிமை உணர்வுடன், அவளது முன்னேற்றங்களைக் காண்பது அவர்களுள் ஓர் பாசப் பிரளயத்தை உண்டு பண்ணியிருந்தது!

எந்தளவிற்கு என்றால், நடுவர்கள் தங்கள் அபிப்ராயத்தை பகிர்ந்து கொள்வதற்கு எடுத்துக் கொண்ட அரை நிமிடத்திற்குள், பொம்மனுக்கு அவனது கைப்பேசியில் ஓர் அழைப்பு வந்தது.

பேசியது அவனது மேலாளர் என்பது அவனது பேச்சிலேயே தெரிந்தது!

"சாரி சார்! தப்பா எடுத்துக்காதீங்க! என்னோட தங்கச்சி...ஒரு முக்கியமான ரிசல்ட்க்காக வெயிட் பண்றா...சோ...ப்ளீஸ்! நா...கொஞ்ச நேரம் கழிச்சு கூப்பிடுறேனே!" என்று விட்டு, கைப்பேசியை அணைத்தவன்,

"ச்சே...ரொம்ப டென்ஷன் பண்றானுங்கடா!" என்று மடியில் கிடந்த தலையணையை இரு கை முட்டிகளாலும் இறுக்கிக் கொண்டு, தொலைக்காட்சியை உற்று நோக்கினான்.

இவர்களையெல்லாம் தவிக்க விடுவதற்கு என்றே, மயிலின் பழ அல்வாவை உண்ட நடுவர்களுள் ஒருவர், "உங்களை சமைக்க சொன்னா...என்ன பண்ணி வச்சிருக்கீங்க, வேலுமயில்?!!" என்று கோபமாய் கேள்வி கேட்கவும்,

மயிலின் முகம் ஒரு முறை சுருங்க,

படுக்கையறைக்குள் இருந்த அன்பு சட்டென எழுந்து, அறைக்கதவருகே வர,

"பீக்காக் மோசமா சமைக்க மாட்டாளே! ஒரு வேளை...இந்தாளு பழ அல்வாக்கு பதிலா பழ கோஃப்தாவை சாப்பிட்டுட்டு, அல்வான்னு நினைச்சுப் பேசுறானோ?" என்று கனியன் வினவ,

மணியும் பொம்மனும் ஒன்றும் சொல்லாமல், கண்ணில் வருத்தத்துடன் தொலைக்காட்சியையே பார்த்திருக்க,

ராஜாவோ "இவனுக்கு...நாக்கில இனிப்பு நரம்பே இல்ல போல! லூசுப் பய!" என்று கோபம் கொள்ள,

அங்கே தொலைக்காட்சி நிறுவனத்தில், உறவினர்கள் இருக்கையில் அமர்ந்திருந்த சுபாஷ், தன் நெற்றியில் வடிந்த வேர்வையை, கர்சீப்பால் துடைத்துக் கொண்டான்.





மயிலோ பிளஸ் டூ தேர்வு முடிவை எதிர்நோக்கும் மாணவி நிலையில் இருக்க, அன்புவோ பிளஸ் டூ தேர்வெழுதிய மாணவனின் தாய் போல் தவித்திருந்தான்! மாணவனை விடவும், தாயின் நிலை தான் கவலைக்கிடமாய் இருக்கும்! பிளஸ் டூ தேர்வில் மட்டுமல்ல! இங்கேயும் தான்!

அனைவரது இதயத்துடிப்பை எகிற வைத்துவிட்டு, "இதெல்லாம்...ரொம்ப அநியாயம், திருமதி.வேலுமயில்! சமைக்க சொன்னா...இவ்வளவு சூப்பராவா சமைக்கிறது!" என்று அந்த நடுவர், கிடுகிடுவென கை தட்டவும், அரங்கமே அதிர, வீட்டினர் அனைவரும் இன்பமாய் அதிர்ந்தனர்!

அனைவருமே, கைகள் சிவந்து போகும் அளவிற்கு பலத்த கரகோஷம் எழுப்ப,

"டேய்...அழக்கூடாதுடா! லூசு மாதிரி அழக் கூடாது!" என்று சொல்லிக் கொண்டே, கண்களில் கண்ணீர் சுரக்க, அறைவாயிலில் நின்றபடியே, தொலைக்காட்சியை உற்று நோக்கினான்.

மயிலோ, எந்தவிதமான அலட்டலோ... ஆர்ப்பாட்டமோ... ஆர்ப்பரிப்போ... கூச்சலோ... கும்மாளமோ இல்லாமல் அமைதி பொங்கும் மலையுச்சி முல்லைச் சரமாய் சிறு புன்னகையுடன், அந்தப் பாராட்டை எதிர்கொண்டாள்.

அந்த அழகிய புன்னகையை அள்ளி அள்ளிப் பருக வேண்டும் போல்...அவளை இந்தப் புன்னகை வாடாமலேயே பார்த்துக் கொள்ள வேண்டும் போல் நெஞ்சம் பரபரத்தது அன்புவிற்கு!!

உள்ளம் ஆனந்தக் கூத்தாட, அவன் கண்ணில் ஆவலுடன் பார்த்திருக்கும் போதே,

மற்றவர்களது பதார்த்தங்களும் சுவைக்கப்பட்டு, மயிலையும் மற்றொரு பெண்மணியும் முன்னே அழைத்து "உங்க ரெண்டு பேருக்கும் நடுல தான் பலத்த போட்டி!" என்று யோசனையுடன் நிறுத்தினர்.





"அடக்கண்றாவியே! இந்தம்மா வேறயா?!" என்று கனியன் தலையில் கை வைக்க,

எல்லா போட்டி நிகழ்ச்சிகளைப் போலவும், "உங்க ரெண்டு பேரில் யார் ஜெயிப்பீங்கன்னு நினைக்கிறீங்க?" என்ற மொக்கைத் தனமான கேள்வியை முன் வைத்தார், நிகழ்ச்சித் தொகுப்பாளர்.

"இவளை!!!" என்று "பொறுமையப்பன்" என்றழைக்கப்படும் பொம்மனே பல்லைக் கடிக்கும் அளவிற்கு, அவர்களது பொறுமை சோதிக்கப்பட்டது.

மயிலுக்குப் போட்டியாய் நின்ற மற்றொரு பெண்மணியிடம் மைக் நீட்டப்பட, "என்னோட முழு உழைப்பையும்...திறமையும் கொடுத்து தான், இந்த ரெண்டு டிஷ்ஷும் பண்ணியிருக்கேன். அதுவும் நல்லா வந்திருக்குன்னு தான் நினைக்கிறேன். பார்ப்போம்!' என்று தனது நிலையை மட்டுமே பேசிவிட்டு நிறுத்திக் கொண்டார் அவர். எல்லா போட்டியிலும், பெரும்பான்மையானவர்கள் சொல்லும் பதில் தானே!

தொகுப்பாளர் "ஆல் தி பெஸ்ட், மேடம்!" என்றதோடு மயிலிடம் மைக்கை நீட்டினார்.

"என் சின்னு...என்ன சொல்லப் போகிறாளோ?! அவளால் தோல்வியை ஏற்றுக் கொள்ள முடியுமா?" என நகத்தைக் கடித்தப்படியே அறைக்கதவை விட்டு மெல்ல வெளியேறி, வரவேற்பறைக்குள் நுழைந்தவன், சோபாவை பிடித்தபடி நின்று கொண்டான்.

அவனது செல்ல சின்னுவோ "ம்ம்ம்...ஹ்ஹ்ஹ..." என சற்றே யோசித்து விட்டு,

"நா இப்போ சமைச்சதை பத்தியோ...அவங்க இப்ப சமைச்சதைப் பத்தியோ பேசல..."

"ரெண்டுமே நல்லா இருக்கலாம்! இல்ல...ஒருத்தர் பண்ணினது ஏதோ ஒரு சின்ன விஷயத்தில சறுக்கி இருக்கலாம்!"





"ஆனா...நா இப்போ தான்...சொல்லப்போனா ஒரு...அஞ்சு...ஹ்ம்ம்...ஆறு மாசமா தான் சமைக்கிறேன். அதுக்கு முன்னாடி, எனக்கு ஒரு சோறும்...ஒரு குழம்பும் தான் வைக்கத் தெரியும்! அதுவும்...ரெண்டே ரெண்டு விதமான குழம்பு தான் வைக்கத் தெரியும்! ஏன்...காஸ் கூடப் பத்த வைக்கத் தெரியாது!"

"ஆனா...இவங்க! எத்தனையோ வருஷமா...எத்தனையோ விதமா சமைச்சிருப்பாங்க! அவங்க செஞ்சதை...நெட்ல போட்டு...பல பேருக்கு பிரபலப்படுத்தி இருக்காங்க! சமைய தெரியாத பல பேருக்கு...வழிகாட்டியா இருந்திருக்காங்க! ஏன்... அவங்களோட ரெசிபியை நெட்ல தேடி, நானே கூட நிறைய செஞ்சிருக்கேன்!"

"அவங்களோட....அனுபவத்துக்கு முன்னாடி நானெல்லாம் ஒண்ணுமே இல்லை!"

"அதனால, இந்தப் பரிசு...எனக்கு கிடைக்காம, அவங்களுக்குக் கிடைச்சா, அவங்களை விடவும் நான் சந்தோஷப்படுவேன்!" என அவள் கூறி முடிக்க,


மயிலின் பதார்த்தங்களின் சுவையில் எழும்பிய கரகோஷத்தை விடவும், இப்போது எழும்பிய கரகோஷம் அந்த தளத்தையே அதிரச் செய்தது!

அதிலும், அந்தப் பெண்மணி வந்து மயிலை இறுக அணைத்துக் கொண்டு, "உன்னோட மனசுக்கு முன்னாடி...என்னோட அனுபவம் எல்லாம் ஒண்ணுமே இல்லைம்மா!" என்று நா தழுதழுக்கவும், அந்த அரங்கம் கரகோஷத்தில் கிடுகிடுத்தது!

இங்கே வீட்டிலோ, தங்களது செல்லக் குழந்தை தங்கள் முன்னே ஓர் வாழ்க்கைப் பாட ஆசிரியராய் உருமாறி நிற்பதைக் கண்டு, அங்கிருந்தோர் அனைவருக்குமே பெருமையில், தொண்டையை அடைத்தது!

அன்புவின் நிலையைப் பற்றி சொல்லவுமா வேண்டும்?!!

அவனுக்கு சக்தி உண்டாயின், இந்நேரம் வானில் பறந்து...மேகத்தில் மிதந்து...விண்மீன்களில் ஒன்றிரண்டை விலை பேசி... நிலவுக்குத் தூதுவிட்டு...



“அன்பிலார் எல்லாம்!” - என்.சீதாலெட்சுமி

சூரியனின் ஒளி கிரகங்களில் கொஞ்சத்தைக் கடன் கேட்டு...தன் சின்னுவிடம் பறந்து சென்றிருப்பான்!

அது முடியாததால், பெருமை பொங்க “எவ்வளவு புத்திசாலியா வளந்துட்டாங்க, என்னோட சின்னு!” என்ற தாயின் பெருமிதத்துடன், அவளையே பார்த்திருந்தான், அந்தத் தாயுமானவன்!

அனைவரையும் தத்தம் உணர்வுகளுடன் விளையாட விட்டுவிட்டு, “ஆச்சுவலி, ரெண்டு பேருமே ஒரே மார்க்ஸ் தான் வாங்கியிருந்தீங்க! பட்...நோவ்! நாங்க முடிவு பண்ணிட்டோம்...யார் வின்னர்ன்னு!” எனக் கூறி, சிறு இடைவெளி விட்டனர் நடுவர்கள்.

எந்தவித அதீத உணர்ச்சியையும் காட்டாமல், மயில் அமைதியாகவே அவர்களை நோக்க,

“வாழ்க்கை முழுகம் சமைக்கிறவங்க சமையல் ராணி ஆகுறது பெரிய விஷயமில்லை. ஆறே மாசத்தில, அறநூறு போட்டியாளர்களைப் பின்னாடி தள்ளிட்டு, இறுதி சுற்று வரைக்கும் வரது தான் பெரிய விஷயம்! அதுவும், ஒரு சூப்பர்...டூப்பர் டிஷ்ஷோட!” என்று தங்களது முடிவை மறைமுகமாய் அறிவித்தவர்கள்,

“இரண்டாயிரத்தி பதின்மூன்றாம் வருடத்தின் சமையல் ராணி...திருமதி.வேலுமயில் அன்பு!!” என்றனர் அடிவயிற்றிலிருந்து வெளிப்பட்ட இன்பக் கூவலாய்!

“ஹுர்ர்ர்ர்ரர்ரர்ர்ர்ர்ரே!!!!!!!!!!!!!!!!!!!!!” – வீடே சந்தோஷத்தில் மிதந்தது!

அனைவரும் ஒருவருக்கு ஒருவர் கை கொடுத்து கொண்டும், “கலக்கிட்டாடா...!!” என்று சிலாகித்துக் கொண்டும் இருக்க,

“டேய்...ஒரு ஐடியா!” என்று அனைவரையும் கொக்கிப் போட்டு நிறுத்தினான், கனியன்.

Copyrighted material. Can be read only at www.sitaramwrites.wordpress.com Page 8

“அன்பிலார் எல்லாம்!” - என்.சீதாலெட்சுமி

அனைவரது கவனமும் அவன் பால் வந்ததும், “மயில் வீட்டுக்கு வரதுக்குள்ள...அவளுக்கு ஒரு சர்ப்ரைஸ் பார்ட்டிக்கு ஏற்பாடு பண்ணலாமா?” என்று ஆவலே உருவாய் கேட்டவனை,

“வாழ்க்கையிலேயே...நீ சொன்ன உருப்படியான ஐடியா இது தான்டா!” என்று ஆரத் தழுவிக்கொண்டான் ராஜா! அதுவும் போலியாய் ஒரு கண்ணீருடன்!

மின்னல் வேகமாய், திட்டம் தீட்டப்பட்டு, அவரவர்க்கு என்று வேலைகள் பிரிக்கப்பட்டு, பறக்கும் படையினராய் பறந்து பறந்து வேலைகள் செய்தனர்.

அதநடுவே, பரிசு வாங்குகையில், “என்னோட அண்ணாவையும் கூட்டிக்கவா?” என்று மயில் அழைத்ததையோ,


முகம் முழுதும் பெருமை தத்தளிக்க, அதில் மிதக்க முடியாதவனாய், சிறு தயக்கத்துடன் சுபாஷ் மேடைக்கு வந்ததையோ,

“இவங்க மட்டுமில்லைன்னா...நா இங்க நின்றிருக்கவே முடியாது!” என அவனை மயில் அறிமுகம் செய்து வைத்ததையோ,

“நா ஒண்ணுமே பண்ணலை சார். அவளோட சமையலை...நாங்க மட்டுமில்ல நிறைய பேர் சுவைச்சு சந்தோஷப்படணும்ன்னு நினைச்சேன்!” என்று சுபாஷ், தன்னடக்கமாய் பேசியதையோ,

“சுபாஷ் அண்ணா மட்டுமில்ல...கனி அண்ணா...பொம்மன் அண்ணா...மணிக்கா...ராஜா அண்ணா...அப்புறம் எங்க...என்னோட பாவா, எல்லாருமே தான் எனக்கு நம்பிக்கை கொடுத்து இங்க அனுப்பி வச்சாங்க!” என்று மயில் அனைவரைக்கும் நன்றி சொன்னதையோ,

Copyrighted material. Can be read only at www.sitaramwrites.wordpress.com Page 9



“அன்பிலார் எல்லாம்!” - என்.சீதாலெட்சுமி

“ஹோ...உங்க பாவா வரலையா?” என்று நடுவர் ஒருவர் கேலி இழையோட கேட்டதையோ,

அதற்கு, “ம்ஹூம்...” என்று மயில் வெட்கம் கொண்டதையோ,

“ஹே...என்ன அழகா வெட்கப்படறாங்க பாருங்களேன்! ஹ்ம்ம்...உங்க பாவாவுக்கு...நீங்க செய்றதிலேயே என்ன டிஷ் ரொம்பப் பிடிக்கும்?” என அவர் சிரிப்புடன் வினவியதையோ, மயிலின் “பாவா” கேட்காமல் இல்லை.

கொண்டாட்டத்துக்கான வேலையை செய்து கொண்டே, தொலைக்காட்சியில் ஒரு கண்ணையும் இரண்டு காதையும் வைத்திருந்தவன், நடுவரின் மேற்கூறிய கேள்வியில், கையிலிருந்ததை வைத்துவிட்டு, உச்சி முதல் பாதம் வரை ரத்தத்திற்குப் பதிலாய் ஆவல் என்ற உணர்வே ஓடப்பெற்றவனாய் தொலைக்காட்சியை...ம்ஹூம்..அதனுள் தெரிந்த மயிலையே பார்த்திருந்தான்.

அவனது ஆவலுக்குப் பதிலாய் “எங்க பாவாவுக்கு...கொழுக்கட்டை தான் ரொம்பப்பிடிக்கும்!!!” என்று கண்ணை உருட்டி, கவிதை படித்தாள் வேலுமயில்!

அவனோ, அவளது காதலெனும் காய்ந்த எண்ணையில் போட்ட கடுகாய் சிதறிப் போனான்! இன்பமாய்!

Copyrighted material. Can be read only at www.sitaramwrites.wordpress.com Page 10

ஒருவழியாக சுபாஷும் மயிலும் வீடு வந்து சேர, ஒரு மணி நேரத்திற்கும் மேல் பிடித்தது!

வீடு வந்தவர்கள், வீடே இருட்டடித்து போயிருக்கவும், ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு, முழித்தனர்.

“என்ன அண்ணா? வீடு பூட்டியிருக்கு? பாவா எங்க போயிட்டாங்க?” என்ற மயிலுக்கு ஏகப்பட்ட ஏமாற்றம்!

பரிசு வாங்கி வந்த தன்னை…பட்டம் சூடி வந்த தன்னை…வரவேற்க அவளது பாவா எப்படி இல்லாமல் போகலாம்!

பெரிய மனுஷியாய் மாறி, பலருக்கு வாழ்க்கை பாடம் கற்பித்துவிட்டு வந்தவள், இப்போது சின்னஞ்சிறு குழந்தையென மாறி, “சரியான லூசு பாவா! ச்சே…காணோம்!” என்று உள்ளுக்குள் சலித்துக் கொண்டாள்.

சலிப்பை விடவும், கோபம்…கோபமாய் வந்தது அன்புவின் சின்னுவுக்கு!

அவள் எதிர்பார்த்தது என்னவோ முற்றிலும் வேறு!

வீடு வருபவளை, ஆசையாய் “சின்னு…………” என்று அழைப்பான்!

ஏகப்பட்ட ரொமான்ஸ் சாக்லேட் கொடுத்துத் திக்குமுக்காடச் செய்வான்!

பின்னர், “கொழுக்கட்டை” பற்றி தான் பேசியதைச் சுட்டிக்காட்டி, கிண்டல் செய்வான்.

கன்னத்தைக் கிள்ளுவான்!

உதட்டை விரல்களால் அளப்பான்!

முகத்தை வருடி விடுவான்!

நெஞ்சில் சாய்த்துக் கொள்வான்!

இறுக அணைப்பான்! முத்தமிடுவான்! இன்னும் என்ன என்னவோ!!!

ஆனால், இங்கே! ஆளையே காணோம்!

கோபம்! கோபம்! கோபம்! – மயில் ஏகக்கடுப்பில் இருக்க,

“எங்க போனானுங்கன்னு தெரியலயே…ஒருத்தன் ஃபோன் கூட ஆன்ல இல்லை…ப்ச்!” என்று சுபாஷும் கடுப்பின் உச்சிக்கு சென்று வந்தான்.

சற்று நேரம் இந்த வீட்டுக்கும்…அந்த வீட்டுக்குமாய் நடந்தவர்கள், “சரி…வா வேலு! இங்க உட்காரலாம்!” என்று வாசலில் அமரப் போக, அவர்கள் அமர்ந்த விதத்தில் கதவு உள்பக்கமாய் திறந்தது.

“அடக்கடவுளே…கதவு திறந்தே இருந்திருக்கு! இந்த லூசுங்க எங்க போச்சுங்கன்னு தெரியலையே!” என்றபடியே சுபாஷ் எழுந்து உள்ளே செல்ல,

ஒன்றும் பேசாது அவனைப் பின் தொடர்ந்தாள், மயில்.

அங்கிருந்த இருட்டு, மயிலை என்னவோ செய்தது!

உள்ளே ஒரே படபடப்பாய்! போட்டியில் வென்ற சந்தோஷத்தை அமுக்குவது போல்…ஓர் வெறுமையாய்! பற்பல நியாபகங்களை இட்டு வந்து, அவளை இம்சித்தது!

“அண்ணா…எனக்கு பயமா இருக்கு…” என அவள் குரல் நடுங்கச் சொல்லும் போதே,

அந்த வீட்டிலிருந்த அனைத்து விளக்குகளும் ஒளி பெற, படபடவென்ற கை தட்டல் மயிலின் செவி நிரப்பியது!

“ஹே…மயில் கன்க்ராட்ஸ்!”

“பீக்காக், கலக்கிட்டே போ!”

“நாங்க எல்லாரும்…செம டென்ஷன்ல இருந்தோம்! சூப்பர்! சூப்பர்!”

“அதுவும்…அந்தக் கடைசி ஸ்பீச்சு…சான்ஸ்லெஸ்! என்னமா வளந்துட்டே…” என்று ஏகப்பட்ட பாராட்டுகள் வந்து குவிய,

அதை உள்வாங்கும் மனநிலையில் மயில் இருக்கவில்லை.

நாள் முழுதும் அனுபவித்த பதட்டமும், புத்தம் புதிதாய் அனுபவித்த வெற்றியும், அதைத் தொடர்ந்து தன் எதிர்ப்பார்ப்பு பூர்த்தியாகாத ஏமாற்றமும், இருள் சூழ்ந்து இருந்த இடமும், தன் “பாவா”வைக் காணாத கலக்கமும், சட்டென கேட்ட சத்தமும், வேகமாய் ஒளி பெற்ற விளக்குகளும், மயிலை நிலை தடுமாறச் செய்திருந்தன!

என்னவோ செய்தது! கண்ணை இருட்டிக் கொண்டு! நெஞ்சை அடைத்துக் கொண்டு!

நாள் முழுதும், அடுப்பின் முன்னே நின்றதோ என்னவோ, வயிற்றை வேறு புரட்டிக் கொண்டு வந்தது!

வாந்தி வரப் பார்த்தது! ஆனால், வரவில்லை!

உடம்பே ஒரு மாதிரி படுத்தியது! தலையில் பாரமாய்! கண்ணைத் திறக்கவிடாமல்…புருவத்தில் ஏதோ ஏறி உட்கார்ந்தது போல்!

ஏமாற்றமும் கலக்கமும்…கூடவே இந்த உடல் உபாதையும் சேர்ந்து கொள்ள, அவளைக் கண்டதும் ஓடி வந்து "சின்னு…" என்று கை பற்றியவனை,

வேகமாய் தள்ளிவிட்டு, "போங்க…இங்க இருந்து போங்க…எனக்கு…அப்படியே கோபமா வருது!!! நா எவ்வளோ பயந்துட்டேன் தெரியுமா? லூசு மாதிரி… ஏன் லைட்டை அணைச்சீங்க…கதவை வேற சாத்தி வச்சு…எனக்கு…ஒரே பயமா ஆகிடுச்சு! போங்க…போங்க!!!" என்று அவனை அடிக்கத் தொடங்கி விட்டாள்.

அன்பு, உட்பட அனைவருமே அதிர்ந்து போயினர்!

"ஹே…சின்னு! இல்லடா…சும்மா உனக்கு ஒரு சர்ப்ரைஸ்!"

"என்ன சும்மா…சுமந்துக்கிட்டு!!! எனக்கு வர கோபத்துக்கு…" என ஆரம்பித்தவள், சட்டென உடைந்து அழ ஆரம்பித்து விட்டாள்.

உடம்பின் பலவீனமும், மனதின் ஏமாற்றமும் சேர்ந்து அவளை அவளது நிலையிலேயே இருத்தி வைக்கவில்லை.

"ஹே…என்ன மயிலும்மா இது!" – அன்பு மட்டுமல்ல அனைவருமே பதறிப் போயினர்!

அன்பு அடி வாங்கும் வரை பேசாது, கை கட்டிப் பார்த்திருந்தவர்களால், மயில் அழுவதைக் காண முடியவில்லை.

அனைவரும், விதவிதமாய் சமாதானப்படுத்த, முடிவில் “இந்தா…இவனால தான்…சர்ப்ரைஸ் கொடுக்கலாம்…மண்ணாங்கட்டி கொடுக்கலாம்ன்னு புள்ளையை அழ வச்சுட்டு இருக்கான்!” என்று கோபம் கொண்ட ராஜாவுடன் சேர்ந்து, அனைவருமே கனியனை இரண்டடி வைக்க,

மயிலின் முகத்தில் மெலிதாய் ஓர் புன்னகை!

“அடப்பாவிங்களா! என்னைய பார்த்தா…சார்லி சாப்ளின் மாதிரியா இருக்கு?! அடிச்சு…அடிச்சு சிரிக்கிறீங்க!” என்று கனியன் அழுவது போல் பாவனை செய்யவும்,

மயில் முகம் புன்னகையிலிருந்து சிரிப்பிற்குத் தாவியது!

“ஹே…என்னோட சின்னு சிரிச்சுட்டா! இன்னொரு அடி வாங்கிக்கோடா…” என்று அன்பு மீண்டும் அவனை அடிக்க முற்பட,

மயிலே முன் வந்து, “அச்சோ…பாவம் கனி அண்ணா! விடுங்க…பாவா!” எனக் கூறி, தன் கணவனின் கை பிடித்து நிறுத்தினாள்.

“நீனா கருணை வச்சா தான்மா உண்டு!” என்று கனியன் உதடு பிதுக்கிய அழகில், அனைவருமே சிரித்தனர்!

அதன் பின்னர், “என்ன மயிலு? எதுக்கு இவ்வளவு கோபம்? உனக்காக தான்…எல்லாமே அரேன்ஜ் பண்ணியிருக்கு!” என்று மணி, மென்மையாய் வினவவும்,

“தெரியல மணிக்கா! நா…அங்க இருந்து வந்ததும்…ஒரே இருட்டா இருந்துச்சா…யாரையும் காணோம்…பாவாவும் காணோம்! எனக்கு ஒரு மாதிரி ஆகிடுச்சு!” என்று சிறு குரலில், ஒத்துக்கொண்டவள், ஓரக்கண்ணால் கணவனை முறைத்தாள்.

வெளியே காட்டிக் கொள்ளவில்லை என்றாலும், அவளுக்குத் தன் மீது கோபம் போகவில்லை என்பது அன்புவிற்குப் புரிந்தது!

“ஹ்ம்ம்…நைட் பாத்துக்கலாம்! நம்ம கை வசம் தான்…ஏகப்பட்ட சாக்லேட் இருக்கே!” என்று இறுமாப்புடன், அந்த எண்ணத்தை ஒதுக்கி வைத்தான் அன்பு.

அதற்கு ஏற்றார் போல், பொம்மனும் “சரி..சரி…வந்து கேக் கட் பண்ணு, மயிலு!” என்று அழைக்க, மயிலின் கவனம் அங்கே சிதறியது.

“ஹய்யா! கேக்! எனக்கு ரொம்பப் பிடிக்கும்ண்ணா!” என்று ஆசையாய் சொல்லியவள்,

“அச்சச்சோ!” என்று ஏமாற்றத்துடன் நிறுத்தவும்,

அனைவருமே “என்ன?”வென்று நிமிர்ந்து பார்த்தனர்.

“இன்னைக்கு எனக்கு ஹாப்பி பர்த்டே இல்லையே!” என்றாள் அவளோ வருத்தமாய்.

“என்னது? புரியல?” என்று கனியன், முகம் சுளித்து யோசிக்கவும்,

“கேக் எல்லாம்… பர்த்டேக்குத் தான் வெட்டுவாங்க! எனக்கு இன்னைக்கு இல்ல…என்னைக்குமே பர்த்டேயே இல்லையே! கேக் வீணா போச்சா?” – மயில் ஏகத்திற்கும் கவலை கொண்டாள்.

வெளிப்பூச்சில் பார்க்கையில், ஓர் சிறு குழந்தையின் மிளற்றலாய் தெரிந்த அப்பேச்சை, சற்று அலசி ஆராய்ந்தால், அதில் மறைந்திருக்கும் வலி புரியும்!

“பிறந்தநாளே தெரியாத அநாதை, நான்!” என்று சொல்லாமல் சொன்ன அந்த வலி புரிந்தவர்களாய்,

கண்ணில் வலியைக் கொண்டு வந்தவர்கள், “பர்த்டேக்குத் தான் கேக் வெட்டணும்ன்னு இல்லைம்மா… எந்தவொரு சந்தோஷமான விஷயத்தைக் கொண்டாடவும் கேக் வெட்டலாம்!” என்றனர் ஒரே குரலில்.

மயிலின் முகம் ஏமாற்றத்தைத் துறந்து, சந்தோஷத்திற்கு அடி எடுத்து வைத்தது!

“அப்ப…எனக்கு பரிசெல்லாம் தருவீங்களா?” – அப்படியொரு எதிர்பார்ப்பும் ஆவலும் அக்குரலில்!

நெஞ்சம் நெகிழ்ந்து போனது அனைவருக்குமே!!

“கண்டிப்பா உண்டு! நீ முதல கட் பண்ணு!” என்று ராஜா உந்த,

மயில் கேக்கை வெட்டினாள். முதல் துண்டை அவள் கையில் எடுத்ததும், அன்பு சற்றே முன்னே வரவும்,

“டேய்…டேய்…அலையாதடா…” என்று கனியன் அன்புவையும்,

“ஹ்ம்ம்… உங்க பாவாவுக்கு கொடுங்க மேடம்!” என்று சுபாஷ் மயிலையும் உந்த,

“போங்க பாவா! எனக்கு தான் முதல் கேக்…நான் தானே பரிசு வாங்கினேன்…எனக்குத் தான்!” என்று சொல்லி, அந்தத் துண்டை தனக்குத் தானே ஊட்டிக் கொண்டாள்.

அசடு வழிய நின்ற அன்புவைப் பார்த்து, அனைவரும் “தொப்பி…தொப்பி” என்று கை கொட்டிச் சிரித்ததன் மத்தியில், மயிலுக்கான பரிசுகள் அணிவகுத்து வந்தன.

“ஹே…பீக்காக்! இந்தா…ஃபிரஸ்ட் கிஃபிட்டா இந்த அண்ணனோடதை வாங்கிக்கோ!” என்றவன், ஒரு கிட்சன் செட்டை பரிசளித்தான்.

மணியும் ராஜாவும், சந்தன வண்ணப் புடவையைப் பரிசாய் கொடுக்க

பொம்மனோ, அவள் படிப்பிற்கு (எழுத – படிக்க) உதவியாய் சில புத்தகங்களைக் கொடுத்தான்.

கடைசியாய், அன்பு!

மயில் மட்டுமில்லாமல், அனைவருமே பெரும் ஆவலுடன் காத்திருக்க,

அன்புவின் அன்புப் பரிசாய் ஓர் கைப்பேசி, மயிலின் கைகளில் திணிக்கப்பட்டது!

“ஹையா ஃபோனா? எனக்கா…பாவா?” என அவள் வியக்க,

“உனக்குத் தான்டா…சொல்லப் போனா…எனக்குத் தான்!” என்றான் அன்பு, சிரிப்புடன்.

“என்னது உங்களுக்கு? கொடுக்கிற மாதிரி கொடுத்திட்டு…புடுங்கிக்கிடுவீங்களா?” – மயில் முறைக்க, அன்பு விளக்கம் கொடுக்க ஆரம்பித்தான்.

“ச்சீ…லூசு! எனக்குன்னா…எனக்கு உன்னோட பேசுறதுக்குன்னு அர்த்தம்! இனிமேல்…மேடம் பயங்கர பிசி ஆகிடுவீங்க! பறந்து…பறந்து சமையல் செய்வீங்க! அதான்…ஃபோன்லயாவது…” எனத் தொடங்கிய அவனது விளக்கத்தை முழுதாய் முடிக்க விடாமல்,

“ஃபோன்லயாவது கொழுக்கட்டை ரெசிபி கேட்கலாம்ன்னு இருக்கியாக்கும்! ஃபோன்லயாவது ஒழுங்கா கேளுடா………………ரெசிபியைத் தான்!” என்று கனியனின் குரல் கேலியாய் இடைப்புகவும், அன்பு மற்றும் மயிலைத் தவிர அனைவருமே வெடித்து சிரிக்க,

அன்புவும் மயிலும் தங்களது “கொழுக்கட்டை” உலகத்திற்குள், தடகள வீரர்களாய் ஓடிப் போயிருந்தனர்!

அந்த உலகத்தில் தான் எத்தனை எத்தனை தடைகள்! முதலில் வெட்கம், அடுத்து தயக்கம், அடுத்ததாய் உடை! இவையனைத்தையும் களைந்து விட்டு ஓடினால், முத்தம் ஓர் தடை…அதையும் மீறிக் கொண்டு அடுத்தக் கட்டத்திற்கு ஓடினால், அணைப்பு அடுத்தது! அதையும் மீறி, அவர்கள் இறுதி நிலையை அடையும் முன்னர், கனவு கலைக்கப்பட்டது!

நேரம் இன்பமாய் கழிய, சுபாஷ் தான் “டேய்…இவ்வளவு செஞ்சீங்களே…சாப்பாடு செஞ்சீங்களா? மனுஷனுக்கு பசி உயிரு போகுது!” என்று இரவு உணவை நினைவு படுத்த,

“ஆஹா! மறந்து போச்சே!” என்று தலையில் கை வைத்தான், கனியன்.

“இதோ…அரை மணி நேரத்தில சமைச்சிடுறேன்!” என்று மயில் உள்ளே செல்லத் திரும்பவும்,

“ஹே…இன்னைக்கு முழுசும் சமையல்…சமையல்ன்னு ஒரே டயர்ட்டா இருக்கும்! இரு…நா செய்றேன்!” என்று மணி, அவளை நிறுத்திவிட்டு, சமையற்கட்டிற்குள் செல்ல எத்தனித்தாள்.

“ஹோ காட்! பெல்மேடம்… எங்க மனசோட சேர்த்து வயிறும் சந்தோஷமா இருக்கட்டும்! ப்ளீஸ்…நீ சமைக்காதே!” என்று இரு கால்களிலும் மண்டியிட்டு, இரு கைகளையும் அகல விரித்து ராஜா, அவளைத் தடுத்தான்.

“உங்களை……………..” என மணி பல்லைக் கடிக்க,

“உங்க சண்டையை விடுங்கப்பா… இப்ப சாப்பாட்டுக்கு என்ன செய்றது? அன்பு…வாடா நாம சமைப்போம்!” என்று கனியன் முன்னே செல்ல,

“டேய்…இன்னைக்கு ஹோட்டல் போலாமா?” என்று கேட்டான் பொம்மன்.

ஒரு நிமிடம், அனைவரது பார்வையும் (மயில் தவிர), அன்புவிடம் சென்று வந்தது.

அவனோ, அதை உணராதவனாய் கைப்பேசியின் செயல்பாடுகளை மனைவிக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

“அன்பு என்ன சொல்றானோ?” என்று கனி தயங்க,

“நா என்னடா சொல்றேன்? என்ன விஷயம்?” என்றான் அன்பு, அப்போது தான் நினைவுக்கு மீண்டவன் போல்.

“இல்ல…நைட் டின்னர்க்கு ஹோட்டல் போலாமான்னு…” என்று கனியன் இழுக்க,

“ஹோ போலாமே!” என்று கிளம்பி விட்டான்.

அதில் திகைத்து “இல்ல…நீ…” என்று கனியன் ஏதோ சொல்லத் துவங்க, பொம்மன் அவன் கைப்பிடித்து அடக்கிவிட்டு, உணவகம் செல்வதற்கான ஏற்பாடுகளில் முனைந்தான்.

அவர்கள் வீட்டிற்கு அருகே இருக்கும், மாலில் உள்ள ஃபூட்கோர்ட்க்கு செல்லலாம் என்று முடிவு செய்யப்பட்டது. பலதரப்பட்ட உணவுகளையும்

சுவைக்கலாம் என்ற எண்ணத்துடன். வெளியே சொல்லப்படாத வேறொரு எண்ணமும் உள்ளே பொதிந்து இருந்தது!

அப்போதே, மணி ஒன்பதாகிவிட, அவரவர் விருப்பப்படி உணவை ருசித்துவிட்டு, அவர்கள் வெளியேறிய போது, அந்த மாலில் இருக்கும் ஓர் குறிப்பிட்ட உணவகத்தின் பின்பகுதியில் இருந்து (அவர்கள் இறங்கிய படிகட்டிற்கு அருகே இருந்தது, அதன் பின்பகுதி), ஓர் சிறுவனின் அலறல் சத்தம் கேட்டது!

“அடிக்காதீங்க…!!!!” என்ற அவனது அலறலைத் தொடர்ந்து,

இரு தடியர்கள், அவனைத் தூக்கி வெளியே வீசி, அந்த ஏழு வயது சிறுவன் குப்பை போல் வெளியே வந்து விழுந்தான்.

சத்தம் வரத் துவங்கியதுமே, தங்களது நடையை நிறுத்திவிட்டு, அங்கேயே கவனத்தை வைத்திருந்தவர்கள், அந்தச் சிறுவன் வெளியே விழுந்த வினாடி, அங்கே விரைந்தனர்.

ஆனால், அந்த நண்பர்கள் கூட்டத்தில் இருவர் மட்டும், இருந்த இடத்திலேயே சமைந்து நின்றிருந்தனர்!

அந்த இருவருள் ஒருவர் – அன்பு! மற்றொருவர் – மயில்!!

உடம்பு இறுக, கைகள் முறுக்கேற, மனம் படபடக்க, கண்களை இறுக மூடித் திறந்த அன்பு, தன் கையை மிக மிக இறுக்கமாய் யாரோ பற்றியிருப்பதை உணர்ந்து, பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தான்!

அங்கே, உடம்பு முழுதும் நடுங்க, கண்களில் கண்ணீர் அருவியாய் பொழிய, இதயம் துடிக்கும் ஒலி வெளியே கேட்க, அந்தச் சிறுவனையே பார்த்திருந்தாள் மயில்.

சட்டென, இதயம் நின்று போனது அன்புவுக்கு!

தன் அருகே நின்றிருந்தவளை, முன்னே அழைத்து வந்து,
“சின்னு…நீயுமா?” என அவன் அதிர்ச்சியுடன் வினவ,

“பாவா…நீங்களுமா?” என்றாள் அவள், விக்கலும் வேதனையுமாய்!!

"சின்னு...நீயுமா???" என்று அவன் வினவவுமே,

"நீயுமான்னா...ஐயோ...பாவாவும் இப்படி கஷ்டப்பட்டாங்களா!?" என்று உள்ளம் உருகிப் போன மயிலுக்குத் தான் பட்ட துன்பமெல்லாம், மறைந்தே போனது!

"என் கணவனுமா? அவனுக்கு இப்படியொரு நிலையா? உணவுக்காக அடி வாங்கியிருக்கிறானா?!!" – நெஞ்சில்; யாரோ ஏறி மிதிப்பது போலிருந்தது.

"பாவா!!!." – உள்ளிருந்து ஓர் அழுத்தம் ஏற்பட்டு, வயிறு...நெஞ்சு...தொண்டை என்று பயணித்து, அதற்கு மேல் நகர முடியாமல், அவளை இம்சை செய்தது!

அன்புவுமே, விவரிக்க முடியாத மனநிலையில் இருந்தான்!

சிறு வயதில், ஓர் வேளை உணவிற்காக, நாள் முழுதும் பாத்திரம் தேய்த்ததும், எச்சில் இலை எடுத்ததும், டேபிள் துடைத்ததும் நெஞ்சில் அலைமோதியது என்றால், அதை அடித்துச் செல்லும் வெள்ளமாய் "என்னோட குட்டியும்...இந்த வேதனையை அனுபவிச்க வந்தவளா? என்று தன் மனையாளின் மீது, இரக்கம் சுரந்தது.

எப்போதுமே, வீட்டை விட்டு வெளியேறும்...ம்ஹூம் வெளியேற்றப்படும் குழந்தைகளுக்கு, சாலையோர டீக்கடைகளும், ஹோட்டல்களும் தான் புகலிடங்கள்! பசிக்கும் வயிற்றுக்கு, உணவு கிடைக்கும் இடங்கள் அல்லவோ!!

பசிக்கு விலையாய், அவர்களது அடிக்குத் தங்களது உடம்பைக் கொடுத்துவிட்டு, துண்டு ரொட்டியும்...அரை வயிறு சோறும் என வாழும் அவல வாழ்க்கையின் உறைவிடங்கள் அல்லவோ!

காலை முதல் இரவு வரை, மாடாய் உழைப்பவர்களுக்கு மண்ணுக்குப் போகும் கெட்டுப் போன உணவுகளைக் கொடுக்கும், அன்னப்பாத்திரங்கள் அல்லவோ!





"அங்கேயா? அங்கேயா? என் கண்மணி அங்கேயா இருந்தாள்?!!" – அன்புவால் அந்த உண்மையை ஒத்துக் கொள்ள முடியவில்லை.

ஏனென்றால், அங்கு நடக்கும் கொடுமைகளை...நேரடியாய் அனுபவித்தவன் அன்றோ!! நெஞ்சம்...தடதடவென் அடித்துக் கொண்டது!

முதுகை ஒடிக்கும் வேலை மட்டுமல்ல! அங்கே நடக்கும் கொடுமைகள் எண்ணில் அடங்காதவை! ஆண் குழந்தைகளையே, தங்களது கொடூர காம இச்சைக்கு இரையாக்கும் இடங்களில், பெண்ணான...தன் மனைவியா?!! என்ற எண்ணமே அன்புவின் சகலத்தையும் ஒடுக்கியது!

"சின்னு...என்ன சொல்றேடா? ஹோட்டல்ல வேலை செஞ்சியா?" என அவன் உலுக்க,

"ஹான்...ஹஹ்ஹ...இல்ல...நா...வீட்டில...அம்மா...காசு...அப்புறமா போலீஸ்..." என்று ஏதேதோ சம்பந்தமில்லாமல் அவள் உளறத்தொடங்கியதுமே, அவள் தன் சுயத்தில் இல்லை என்பதை உணர்ந்து கொண்டான் அன்பு.

சட்டென அவளை இழுத்துத் தன் மீது போட்டுக் கொண்டவன், "சின்னு.... ஒண்ணுமில்லைடா! விட்டுடு! நாம அப்புறமா பேசிக்கலாம்!" என்றான் உள்ளார்ந்த குரலில்.

உயிர் வரை பாய்ந்த அக்குரலில் உடல் சிலிர்த்து, தன்னை நிமிர்ந்து பார்த்தவளின், நெற்றியில் ஓர் முத்தம் வைத்து,

"அதெல்லாம் முடிஞ்சு போச்சு! நீ பாவாகிட்ட வந்துட்டே...சரியா? அதை நினைக்கக் கூடாது! விட்டுடு!" என்றான் அழுத்தமாய்.

அவன் குரலில் தென்பட்ட அழுத்தம், உள்ளே இருந்து வண்டாய் குடைந்து கொண்டிருக்கும் மனஅழுத்தத்தை மறையச் செய்ய, அப்படியே அவனோடு ஒன்டினாள் வேலுமயில்.





அவனது ஸ்பரிசம், அரணாய் காட்சி தர, அந்த பொன்மகளும் அவனது மார்பை புகலிடம் ஆக்கிக் கொண்டாள்.

சுற்று புறம் மறந்து, ஒருவரை ஒருவர் அணைத்தபடி நின்ற இருவருக்குமே, மற்றவரது ஆறுதலும்...அருகாமையும் அவசியமாய் பட்டது.

ஆனால், வெளியிடம்...அதுவும் அதிகம் பேர் வந்து போகுமிடம்...அது போக அந்த சிறுவன் வெளியே தூக்கியெறிய பட்டதால் உண்டான பதட்டம் என எல்லாமுமாய் சேர்ந்து மயிலை விலக்கி நிறுத்திவிட்டு, அன்புவை அந்த இடத்திற்கு விரையச் செய்தது.

விலக்கி நிறுத்திய போதும், மயில் நின்று விடவில்லை.

"பாவா...என்னோடவே இருங்க..." என அவள் அழ முற்பட,

"சின்னு...கொஞ்ச நேரம் மணியோட இருடா! ப்ளீஸ்!" என்ற கெஞ்சலோடு, மணியிடம் அவளை விட்டவன், "நீங்க ரெண்டு பேரும்...வீட்டுக்குப் போய்டுங்க, மணி!" என்றான் அவசரமாய்.

"சரிண்ணா!" என்று மணி ஆமோதிக்கும் போதே,

"இல்ல...நீங்களும் வாங்க!" என்று மறுத்தாள் மயில்.

"சொன்னா கேளு, மயில்! நாம போகலாம்!" என்று மணி முன்னே நடக்க,

"இல்ல நா வரமாட்டேன்! நாமளும், இங்க இருப்போம்...பாவாவோட போலாம்!" என்று பிடிவாதமாய் நின்றாள் மயில்.

அவளுடன் வாதாடிக் கொண்டிருக்க இது நேரமில்லை என்று தோன்றிவிட, "சரி பார்த்துக்கோ! நா இதோ வந்துடுறேன்!" என்று தன் நண்பர்கள் இருந்த இடத்திற்கு விரைந்தான் அன்பு.

அவன் போகும் போதே, அங்கே பெரும் பிரளயமா இருந்தது!

அன்புவின் நண்பர்கள் மட்டுமல்ல, சில இளைஞர்களும் அங்கே குழுமி இருந்தனர்.

ஹோட்டல்தரப்பினர், பையனைத் தன் புறம் இழுத்துக் கொண்டு, பொதுமக்களிடம் ஏதோ வாக்குவாதம் செய்து கொண்டிருந்தனர்.

"ஏன்ய்யா...நீங்கெல்லாம் மனுஷங்க தானே? ஒரு சின்னப் பையனை இப்படியா அடிக்கிறது?"

"குழந்தைங்களை வேலைக்கு வச்சுக்கக் கூடாதுன்னு சட்டமே இருக்கு!"

"உங்களையெல்லாம் போலீஸ்ல பிடிச்சுக் கொடுக்கணும்!"

"பெரிய ஹோட்டல்ன்னு வெளிய உங்களுக்கு இருக்க பெத்த பேரு! ச்சை...இப்படி...ஒரு சின்னப் பையனோட வேதனையில, நாங்க சாப்பிட்டிருக்கோம்ன்னு நினைச்சாலே அருவெறுப்பா இருக்கு!"

ஏகப்பட்ட பேச்சுக்கள்! அதற்கு எதிர் வாதங்கள்!

இவையெல்லாம் காதில் விழுந்தபோதும், அன்புவின் கருத்தில் பதியவில்லை.

அவனுக்கு, அந்தப் பையனின் பயந்த விழிகளும்...ஹய்யோ இவங்க பேசினதுக்கு எல்லாம் என்னைத் தானே அடிப்பாங்க என்ற பீதி படிந்த முகமுமே நெஞ்சில் நிறைந்திருந்தன.





சின்ன வயதில் தன்னைப் பார்த்தது போலவே இருந்தது, அவனுக்கு!

பசி! பசி! பசி! ஆளாய் பறக்கும் பசி! – இதைத் தவிர எந்தவித உணர்ச்சியுமே இல்லாமல், இரவு கிடைக்கப் போகும் உணவை மட்டுமே மனதில் எண்ணிக் கொண்டு மாடு மாதிரி வேலை செய்ய வைக்கும் பசி!

அவனைப் போலவே, பசி என்ற ஒன்றைச் சுற்றியே சுழன்ற அச்சிறுவனின் மனநிலையை அன்புவால் படிக்க முடிந்தது.

அனைவரும், தத்தம் நியாயங்களைப் பேசிக் கொண்டிருக்க, அன்பு மெல்ல நகர்ந்து, அப்பையனைத் தன் பக்கம் அழைத்தான்.

"ஏய்...நீ ஏன்யா அவனைக் கூப்பிடுறே!" என்று ஒரு தடியன் எகிற,

"மரியாதையா பேசுடா, பொறுக்கி நாயே! நா ஒரு இன்கம்டாக்ஸ் ஆபீசர்! மவனே...உங்க ஹோட்டலையே மூட வச்சுடுவேன்!" – வாழ்க்கையிலேயே முதல்முறையாக, தன் பதவியை இப்படியொரு காரியத்திற்குப் பயன்படுத்தி, அவனது வாயை அடைத்தான், அன்பு!

அப்பையனை கூட்டத்தை விட்டு விலக்கிக்கூட்டி வந்தவன், மெல்ல பேச்சுக் கொடுத்தான்.

பார்வையிலேயே அவன் வடமாநிலப் பையன் என்று தெரிந்துவிட, அவனுக்குப் பழக்கமான ஹிந்தியிலேயே அன்பு பேசவும், அந்தச் சிறுவன் உடைந்தான்.

அன்பு கணித்தது போலவே...அப்பன் குடிகாரன்! தாயோ "பெத்துப்போடறது மட்டும் தான் என்னோட வேலை!" என்ற ரீதியில், அவனைத் துரத்திவிட்டாள்! கடைசியில், அவன் தஞ்சம் புகுந்த இடம் ஓர் பஞ்சாபி தாபா! அங்கு வந்த லாரி டிரைவர், இங்கே ஒரு நல்ல ஹோட்டலில் மூணு வேளை உணவுடன், ஆயிரம் ரூபாய் சம்பளம் தரும் வேலையில் சேர்த்துவிடுவதாய் கூறி, இந்த நரகத்தில் தள்ளிவிட்டான். இங்கேயோ,





வேலை... வேலை... வேலை... அடி... அடி... அடி... வேலை... அடி...! அவர்களுக்கு, யார் மீதும் கோபமென்றாலோ...இல்லை மேலாளர் திட்டினாலோ...வாடிக்கையாளர்கள் குறை கூறினாலோ...அதற்கு இவன் தான் வடிகால்! அடித்து...அடித்து, அவன் முதுகே சிவந்து போயிருந்தது!

நெஞ்சத்தில் இரத்தம் வடிந்தது அன்புவிற்கு!

அவனை வயிற்றோடு அணைத்துக் கொண்டவன், "பசிக்குதா?" என்றான் முடியை மெல்ல வருடி.

அதற்கு பதில் சொல்லாமல், வேகமாய் நிமிர்ந்து, அவனை ஆசையும் ஏக்கமுமாய் பார்த்தான் சிறுவன்!

அன்புவுக்கு, தன் ரணத்தைத் தானே கீறி விட்டுக் கொண்டது போல் நெஞ்சம் வலித்தது.

இறுக கண் மூடித் திறந்தவன், அவனை அழைத்துக் கொண்டு, அவன் வேலை செய்த அதே உணவகத்திற்குச் சென்றான்.

ஆனால், அந்த உணவக மேலாளரோ "சார்...அந்தப் பையன் இங்க வேலைக்கு இருக்கான்!" என்று அதிகாரமாய் வந்து சொல்ல,

"நீயெல்லாம் படிச்சவனா? ஒரே ஒரு ஃபோன் கால்... குழந்தை தொழிலாளர்களை வேலைக்கு வச்சிருக்கீங்கன்னு கம்ப்ளைன்ட் கொடுத்தேன்னு வைங்க...வந்து உன்னை மட்டுமில்லை...வீட்டில உல்லாசமா தூங்கிட்டு இருக்கானே, உன்னோட முதலாளி அவனும் உள்ள போய்டுவான்!" என்றான் அன்பு காட்டமாய்.

அதில், அந்த மேலாளருமே கொஞ்சம் பின்னடைந்தான்.

போலீஸ்...கேஸ் என்று போனால், ஹோட்டலின் உள் விவகாரங்கள் வெளியே வந்துவிடுமோ என்ற பயம் அவருக்கு!





ஆனாலும், சும்மா கிடைத்த ஒரு அடிமையை எப்படி விடுவது?

"என்ன சார் பயமுறுத்துறீங்க? உங்களை விட....எங்களுக்கு போலீஸ் செல்வாக்கு அதிகம்?" என அவன் தெனாவட்டு காட்ட,

"ஹோ அப்படியா? சரி...போலீஸ்க்குப் போகலாம்ன்னு நினைச்சேன்...இப்போ சி.எம்மோட குழந்தைகள் நல செல்லுக்கே நேரடியா போய்டலாம் போலவே!" என்று அன்பு யோசிக்கவும், அந்த மேலாளர் பத்தடி பின்னே நகர்ந்தான்! தூரத்திலும் சரி... எகிறலிலும் சரி!

அதன் பின்னர், அப்பையனுக்கு வேண்டிய அனைத்து உணவுப் பொருட்களையும், அந்த மேலாளரையே ஏவி வரவழைத்தான் அன்பு.

ஆசையாய் உண்ட போதும், அச்சிறுவனின் மனதில் பயமே பிரதானமாய் இருப்பது அன்புவிற்குப் புரிந்தது.

"கவலைப்படாதே! உன்னை இங்க விட்டுட்டு போக மாட்டேன்...என்னோடவே கூட்டிட்டுப் போறேன்!" என்று தைரியம் சொன்னான், அன்பு.

அப்போதும், அவன் முகம் பயம் தெளியாமலே இருக்கவும், "நானும்...உன்னை இந்த மாதிரி ஏதாவது ஒரு இடத்தில விட்டுடுவேன்னு பயமா இருக்கா?" என்றான் அன்பு, அவன் கையைப் பிடித்துக் கொண்டு.

அழுதுவிட்டான், அச்சிறுவன்!

"பயப்படாதே! நானும் உன்னை மாதிரி தான்... இப்படி அவலப்பட்டு வந்தவன் தான்! என்னை ஒரு பெரியவர் காப்பாத்தி...ஒரு ஆசிரமத்தில விட்டார். உன்னை நான் காப்பாத்தி...அதே ஆசிரமத்தில விடுறேன்!" என்றான் ஆதரவாய்.



Bhuvana's

எதில் தெளிந்தானோ இல்லையோ... “நானும் உன்னைப் போல தான்!” என்று அன்புவின் வார்த்தையில், பயம் தெளிய, உணவை அள்ளி உண்டான் அச்சிறுவன்.

கூட்டத்தின் மையப்புள்ளியாய் இருந்த அச்சிறுவனைக் காணாமல், கூட்டம் மெல்ல களையத் துவங்க, எஞ்சியிருந்தவர்கள் அன்புவிடம் வந்தனர்.

அவர்களை முந்திக் கொண்டு, மயில் தன் பாவாவின் அருகே வந்து நின்று கொண்டாள்.

அன்புவையும்...அச்சிறுவனையும் மாறி மாறி பார்த்துக் கொண்டு, என்ன நடக்கப் போகிறதோ என்ற எதிர்ப்பார்ப்புடன் நின்றிருந்தாள்.

அன்புவின் நண்பர்களும் அங்கே வந்துவிட, “சார்...இந்தப் பையனை போலீஸ்ல ஒப்படைச்சிடலாம், சார்!” என்றார் ஒருவர்.

அடுத்தவரோ “ஆமா சார்...உடனே போலீஸ்க்கு ஃபோன் போடலாம்! போலீஸ் வந்தா தான்...இவனுங்க அடங்குவாங்க!” என்றார் கோபமாய்.

அதற்கு அன்பு பதில் சொல்வதற்குள், பொம்மன் முந்திக் கொண்டான்.

“எதுக்கு சார்...போலீஸ்க்கு? அவங்க வந்து...என்ன செய்வாங்க?” என்ற கேட்டவன், மற்றவர் பேசும் முன்னர் தானே தன் ஆதங்கத்தைக் கொட்டித் தீர்த்தான்.

“ஒண்ணு...காசை வாங்கிட்டு, இவனை இங்கேயே விட்டுட்டுப் போவாங்க!”

“இல்ல...நல்ல நேர்மையான அதிகாரிகளா இருந்தா...அவனைக் கொண்டு போய் சீர்த்திருத்த பள்ளியில விடுவாங்க!”

“ரெண்டுமே அவனுக்குக் கெடுதல் தான் சார்!”

Bhuvana's





“முதலாவது...அவனோட நிகழ்காலத்தைப் பாதிக்கும்ன்னா...”

“அடுத்தது...அவனோட எதிர்க்காலத்தைப் பாதிக்கும்...”

“எப்படின்னு யோசிக்கிறீங்களா? சீர்த்திருத்த பள்ளியில இருந்து வந்தவன்னு சொன்னாலே...எல்லாரும் அவனைக் கொலைகாரனா இல்ல பார்க்கிறீங்க! நா...அனுபவப்பட்டவன் சார்! சீர்த்திருத்த பள்ளில படிச்சேன்ங்கிற ஒரே காரணத்துக்காக...என்னை ஒரு மனுசனா கூடப் பார்க்காத ஆளுங்க எல்லாம் இருக்காங்க...” என்று சொல்லிக் கொண்டே சென்றவன்,

அந்தக் கூட்டத்தில் இருந்த சிலரின் பார்வை மாறவும், அதைச் சரியாய் படித்து,

“இப்பக் கூடப் பாருங்க...உங்கள்ல சில பேருக்கு...என்னைப் பார்த்து ஒரு எச்சரிக்கை உணர்வு வந்துடுச்சு! இதான் சார்...இதான் சார் இந்த உலகம்...!” என்றான் கனத்த மனதுடன்.

“நான் அனுபவிச்ச வேதனையை இந்தப் பையனும்...அனுபவிக்க வேணாம்! நாங்க...எல்லாரும் வளர்ந்த ஆசிரமத்திலேயே அவனை விட்டுடுறோம்!” என்றான் அவனே முடிவாக.

சிலரிடம் பரிதாபமும், வேறு சிலரிடம் ஒரு வித தயக்கமும் தொக்கி நிற்க,

“ஹ்ம்ம்...எங்க மேல நம்பிக்கையில்லைன்னா...இதோ என்னோட கார்ட்! அன்பு...உன்னோடது தாடா! டேய்...கனி...சுபாஷ்...ராஜா...எல்லாரும் தாங்க! எங்களைப் பத்தி...உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தா, இதான் எங்க பேரு...இது நாங்க வேலை பார்க்கிற இடம்...அங்க வந்து விசாரிங்க!” என்று தங்களது விசிட்டிங் கார்டை, சந்தேகமாய் பார்த்த ஒரு சிலரிடம் கொடுத்தான்.

அதன் பின்னர், கூட்டம் மெல்ல குறைந்து, அன்புவின் நண்பர்கள் மட்டுமே இருந்தனர்.

Bhuvana's





“என்னடா அன்பு...நம்ம ஆசிரமத்தில தானே?” என்று கனி கேட்க,

“ஹ்ம்ம்...ஆனா...கோயம்புத்தூர் வரைக்கும் இப்போ போக முடியாதேடா! வீக்-எண்டுல யாராவது கொண்டு போய் விட்டுட்டு வரலாம்...நாமளுமே, இந்த மாசத்துக்கான நம்மளோட ஷேரை கொடுக்கணும் இல்லையா? எப்பவும் போல, பேங்க்ல போடாம... இந்த வாட்டி நேரில கொடுத்துட்டு, அய்யாவைப் பார்த்துட்டு, இவனையும் அங்க விட்டுட்டு வரலாம்!” என்று முடிவு சொன்னான், அன்பு.

“அப்போ...இந்தப் பையன், சனிக்கிழமை வரைக்கும் நம்ம வீட்டிலையா பாவா இருப்பான்?” – மயிலுக்கு ஏகப்பட்ட குதூகலம்!

“ஆமா...” என்று அன்பு புன்னகைக்க,

கனி “ஏன் பீக்காக்! உன்னோட சமையலுக்குப் புத்தம் புது எலி தான் வேணுமா? நாங்கெல்லாம்...தின்னு தின்னு பெருச்சாளி ஆகிட்டோம்ன்னு எங்களை வேணாம்ன்னு சொல்றியா?” என்றான் சிரிப்புடன்.

“ச்சு...போங்கண்ணா!” என்று மயில் சிணுங்க, சூழ்நிலை இலகுவானது.

என்ன தான் இலகுவானபோதும், வீட்டிற்கு வந்து, படுக்கையறைக்குள் தஞ்சம் புகுந்த பின்னர் கூட, அன்பு மற்றும் மயிலின் முகம் முற்றிலும் சரியாக வில்லை.

“எப்படி ஆரம்பிப்பது? எங்கு தொடங்குவது?” என்பதிலேயே அன்பு உழன்று கொண்டிருக்க,

“நீங்க ஹோட்டல்ல வேலை செஞ்சீங்களா, பாவா?” என்று மயிலே ஆரம்பித்தாள்.

“ஹ்ம்ம்...” என மெல்ல ஆமோதித்தவன், சுருக்கமாய் தன் கதையை சொல்லி முடித்தான்.

Bhuvana's





அதைக் கேட்ட மயில், கண்ணில் நீர் வடிய நின்றிருக்க, அவளை இழுத்துத் தன் மார்பில் போட்டுக் கொண்டவன், “நா சின்ன வயசில ஏகப்பட்ட கஷ்டத்தை அனுபவிச்சுட்டேன் சின்னு...அதான் கடவுள், போதும்டா நீ பட்ட கஷ்டமெல்லாம்...இந்தா இந்த லட்டு குட்டியை வச்சுக்கிட்டு...சந்தோஷமா இருன்னு...உன்னை என் கிட்ட கொடுத்துட்டார்!” என்றான் நிறைவாய்.

“சின்ன வயசில நான் இந்தக் கஷ்டம் படலைன்னா...நீ எனக்குக் கிடைச்சிருக்க மாட்டேன்னு தான் தோணுது! சோ...அதை மறந்துடலாம்டா!” என அவளது கண்களைத் துடைத்தபடியே சமாதானம் சொன்னவன்,

“நீ ஹோட்டல்லயா குட்டி இருந்தே? உங்கப்பா-அம்மா இறந்துட்டாங்க...அதனால உங்க ஆயாவோட இருந்தேன்னு நினைச்சேன்!” எனக் கேட்டான்.

“ஹோட்டல் இல்ல பாவா...வீடு!” என்ற மயிலின் உதடு அழுகையில் பிதுங்கியது.

“அப்பாக்கு ஏதோ வியாதி பாவா...அம்மாவுக்கு எனக்கும் தம்பி தங்கச்சிக்கும் சோறு போட முடியல...அப்பத்தேன் எங்க மாமா வந்தாரு...வீட்டு வேலைக்குப் போனா, வருசத்துக்கு இருபதாயிரம் கிடைக்கும்ன்னு சொன்னாரா...அம்மா என்னைய அனுப்பிடுச்சு!”

அவளுக்கு “மாமா” என்ற வார்த்தை ஏன் பிடிக்கவில்லை என்பது அவனுக்கு இப்போது புரிந்தது!

“போவ மாட்டேன்னு அழுதேன் பாவா...சூடு போட்டு அனுப்பிடுச்சு” என்றவள், தன் சேலையை விலக்கி, கணுக்காலில் இருந்த தழும்பை அவனுக்குக் காட்டினாள்.

யாரோ, கடப்பாரையால் வெட்டுவது போல் உணர்ந்தான் அன்பு.

“சின்னும்மா...” என்றவனின் குரல், கதறலாய் வெளிப்பட, மயிலும் அவனது கதறலில் இணைந்தாள்.

Bhuvana's

calaméo



சற்று நேரத்திற்குப் பின்னர், மயிலே தொடர்ந்தாள்.

"இங்க தேன்...மதராஸ்ல கொண்டு வந்து விட்டாரு...ஒரு பெரிய வீடு! ரெண்டு புள்ளைங்க...ஒரு சாரு...ஒரு அம்மா! அந்த அம்மா நல்லவங்க தான்... வேலை செஞ்சா ஒழுங்கா சோறு தருவாங்க...அப்ப தான்...பர்த்டே எல்லாம் பார்த்தேன்...நெறைய கேக்...ஜூஸ் எல்லாம்..." – அந்த வேதனையிலும், மயிலின் முகத்தில் ஓர் பிரகாசம்.

"அப்புறம் எப்படிடா, ஆயாட்ட வந்தே?" என்று அன்பு இடைப்புக,

"அந்த அம்மா வீட்டுக்கு...ஒரு ஆள் வந்தான் பாவா! அந்த அம்மாவோட தம்பியோ...அண்ணனோ...அவன்...அவன்...அந்தாளு...என்னைய...என்னைய...ஒரு நாலு ராத்திரி...என்னைய...டிரஸ் எல்லாம்..." – மயிலால் அதற்கு மேல் சொல்ல முடியவில்லை. அன்புவால் அதற்கு மேல் கேட்க முடியவில்லை.

"ஹய்யோ!!!!!!!!!!!!!!!!!!" என்று அன்புவின் நெஞ்சம் ஓலமிட,

"ஆனா...அதுக்குள்ளே அந்த அம்மா வந்துட்டாங்க! வந்து...கட்டின பொண்டாட்டியோட ஒழுங்கா வாழத் துப்பில்லை...அவட்ட செய்ய வேண்டியது எல்லாம்...இந்தச் சின்னப் பொண்ணுட்ட செய்ற...பாவின்னு அந்தாளை அடிச்சாங்க..." என்று தனக்கு நடந்ததை விவரித்தாள், மயில்.

தன்னுடனான தாம்பத்திய உறவை அவள் ஏற்றுக் கொண்டதன் ரகசியம், அன்புவிற்கு இப்போது புரிந்தது! "கட்டின பொண்டாட்டிட்ட செய்ய வேண்டியது எல்லாம்...இந்தச் சின்னப் பொண்ணுட்ட செய்றே" – என்ற அந்த வாக்கியம் அவளுள், ஆழப் பதிந்ததன் மூலம், தன் வாழ்வு விடிந்திருக்கிறது என்பதை உணர்ந்தான் அன்பு!

ஆனால், அந்த உணர்வின் பாதிப்பு சிறிதுமில்லாமல், கணவனின் கைகளை அவளோடு இறுக்கிக் கொண்டு, அவனோடு மேலும் ஒன்றி நின்று,
"ஆனா...அந்தம்மா..அவ...அவங்க..." என அழுகையாய் இழுத்தாள்.





"என்னடா? என்னாச்சு? அதான்...அந்தாளை அடிச்சுட்டாங்களே!? ஹ்ம்ம்...ஆனா...அங்க இருந்து எப்படி ஆயாட்ட வந்தே?"

"எனக்கு ஒரே பயமாகிடுச்சு... அந்த வீட்டு சாரு வர சத்தம் கேட்டுச்சா... நா அவர்ட்ட போய் சொல்லப் போனேனா..." என்று நிறுத்தியவள்,

கண்ணில் பெரும் பயத்தை இட்டு வந்து, "அந்தம்மா என்ன செஞ்சுச்சு தெரியுமா? நா அது பர்ஸ்ல வச்சிருந்த ரூபாயைத் திருடிட்டேன்னு சொல்லிடுச்சு!" என்றாள்.

படிக்காமலேயே ஏழைகள் வாங்கும் முதல் பட்டம், "திருடன்" அல்லவோ!!!

படைத்தவனைப் பார்பதற்கே, பணக்கார வரிசை...பொது வரிசை என்று பிரிக்கப்பட்டிருக்கையில், இந்த அநியாயத்தை இறைவனிடம் முறையிடுவதில் புண்ணியம் இருக்கிறதா என்ன? இரு வரிசையையே ஒன்றாக்க முடியாதவன், பல மனசாட்சியே இல்லாத மனங்களை மாற்றியா அமைக்கப் போகிறான்! அமைப்பானாய் இருக்கும்! காத்திருப்போம்! விடிவு வரும் வரை!

மனிதன் தொடங்கி இறைவன் வரை அன்புவிடம் வசவு வாங்கி முடித்திருக்க, மயிலோ தன் முந்தைய வாழ்க்கையின் அவலங்களைத் தொடர்ந்தாள்.

"அப்புறம்...அந்தம்மா என்னம்மா செஞ்சுச்சு...கையில அம்பது ரூபாவைக் கொடுத்து, என்னைய கொண்டாந்து விட்டாரு இல்ல...அந்த மாமா வீட்டு அட்ரசை கொடுத்து, விரட்டி விட்டுருச்சு!"

எளியவர்கள் என்றால் எலி கூட எமதர்மன் அவதாரம் எடுக்கும் போல!

"அங்க போனியாடா?"



calaméo

calaméo



"போனேன்...அங்க அந்த மாமா இல்ல...நெறைய பேரு என்னோட வா..என்னோட வான்னு கையைப் பிடிச்சு இழுத்தாங்க...ஒரே பயமா இருந்துச்சு! இருட்டா வேற ஆகிடுச்சு! எல்லா வீட்டுக் கத்தவும் சாத்திட்டாங்க...ஒரே இருட்டு...பயம்...! அப்புறம்...நாயி...நெறைய நாய் வேற இருந்துச்சு...பாவா! எனக்கு ரொம்ப ரொம்ப பயம் வந்துடுச்சு! வயிறு பசிச்சு...ஊ...ஊ...ன்னு சத்தம் போட்டுட்டே இருந்துச்சா... எனக்கு என்ன பண்றதுன்னே தெரியல! தூக்கம் வேற வந்துச்சு...கால் வேற வலிச்சுது...என்ன செய்றதுன்னே தெரியல பாவா...அப்ப தான் ஆயா வந்து, நீங்க இன்னைக்கு அந்தப் பையனைக் கேட்டீங்களே அப்படியே கேட்டாங்க...அப்புறம், உங்களை மாதிரியே என்னையும் அவங்க கூட கூட்டிட்டுப் போய்ட்டாங்க!" என்று தன் கதையை சொல்லி முடித்தாள்.

அன்று, அவள் நின்ற நிலையே மனதில் வேறு வேறு வடிவங்கள் எடுத்து ஓட, நெஞ்சம் பச்சை மிளகாயை அரைத்துப் பூசியது போல் காந்தியது!

"ஏன்? ஏன்? ஒன்றும் அறியாத சிறு வயதில்...ஒரு குழந்தைக்குப் போய் ஏன் இந்த வேதனை? ச்சை!" என்று தன்னைப் போலவும்...மயிலைப் போலவும் கைவிடப்படும் குழந்தைகளை எண்ணி, நெஞ்சம் கனப்பதைத் தவிர, அவனால் எதுவுமே செய்ய முடியவில்லை.

ஆனால், வெறுமனே வேதனை படாமல்...வேறு ஒரு காரியமும் செய்ய முடியும் என்று அவனது சின்னு கூறினாள்!

"பாவா...நா ஒண்ணு சொல்லவா?" என அவள் அன்புவின் முகம் பார்க்க,

அந்த அழகு முகம் கண்ட அழுக்குகளை எல்லாம் களைபவன் போல், அந்த மதி முகத்தைக் கையிலேந்தி, அழுத்தமான முத்தமொன்றை பதித்தான்!

மங்கிப் போய் மண்ணோடு மண்ணாய் மாறியிருக்க வேண்டியவள், உயர் ஜாதி மாணிக்கமாய் ஜொலிப்பதைக் கண்டு, அவனது முத்தங்கள்...அவளது மாணிக்க முகத்திற்கு அலங்கார ஆராதனை செய்தது!





அதில் குளிர்ந்தவளாய், "பாவா..." எனக் கூறி, அவனோடு ஒன்றியவள், தான் சொல்ல வந்த காரியம் தனக்கே மறந்து போய் விடுமோ என்றெண்ணி, அவனைத் தள்ளினாள்.

"என்ன சின்னு...ப்ளீஸ்...ஒரே ஒரு ரொமான்ஸ் சாக்கிடா..." என அன்பு, தன் "கொழுக்கட்டை" மூடுக்கு செல்லத் தொடங்கவும்,

"நா சொல்றதை முதல கேளுங்க...அப்புறம் நானே ரொமான்ஸ் சாக்கி தரேன்! ஒரு சாக்கி இல்ல...பத்து தருவேன்!" என்று ஆசை காட்டியவள்,

அவன் "ச்சே...நீ ஒரு கஞ்சூஸ் பா...நானெல்லாம் பத்து இல்லை...நூறு தருவேன்!" என்று பெருமை பீத்திக் கொண்டதில்,

"இப்ப கேட்கிறீங்களா இல்லையா?" எனக் கோபம் கொண்டாள்.

"ஓகே! ஓகே! அன்பு...உன்னோட சின்னு கோபமா இருக்கா...ஸ்டடி! ஸ்டடியா இரு! அவ சொல்றதைக் கேளு!" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு, மயிலைப் பார்த்துக் கண்ணடித்தான். அவனுக்கு, அவள் தன் துன்பத்திலேயே உழன்று விடக் கூடாதே என்று கவலையாய் இருந்தது! வேறு வகையில், அவள் கவனத்தைத் திருப்பிவிட வேண்டும் என்ற குறியுடன், அவன் முன்னேற, அவள் விடுவதாய் இல்லை!


"ஷ்...என்ன பாவா?" என்று வெட்கம் கொண்ட போதும், மயில் தான் சொல்ல வந்ததைக் கூறினாள்.

"எனக்கு...ஆயா கிடைச்சாங்க! நா இப்போ நல்லா இருக்கேன்! உங்களை...ஒரு பெரியவர் பார்த்தாரு...நீங்க ஆசிரமத்தில வளந்தீங்க! மணிக்காக்கு...நீங்க கிடைச்சீங்க...அவங்க நல்லா இருக்காங்க! இப்போ...இந்தப் பையனுக்கு நீங்க கிடைச்சிருக்கீங்க...அவன் நல்லா இருப்பான்! ஆனா...இவனை மாதிரி...என்னை மாதிரி...உங்களை மாதிரி எத்தனை பேர் இருப்பாங்க இல்லையா? அவங்களை எல்லாம் யார் காப்பாத்துவா?" என அவள் கேட்க,

அன்பு திகைத்தான்!



calaméo



“அன்பிலார் எல்லாம்!” - என்.சீதாலெட்சுமி

இது நாள் வரை, இப்படியொரு கோணத்தில் அவன் யோசித்ததில்லை!

அவர்கள் சம்பாதிக்கும் பணத்தில் ஒரு பகுதியை, ஆசிரமத்திற்குக் கொடுப்பார்கள்! அந்தப் பணம், அங்குள்ள குழந்தைகளின் படிப்புக்கும் பராமரிப்புக்கும் செல்லும்! ஆனால், அந்தக் குழந்தைகள்...எங்கிருந்து எப்படி வருகிறார்கள் என்று அவன் யோசித்ததில்லை!

தன்னைக் கொண்டு வந்து சேர்த்த பெரியவர் போல், யாரோ கொண்டு வந்து விட்டிருப்பார்கள் என்ற எண்ணத்தோடு, அதை அவன் ஒதுக்கி வைத்திருந்தான்.

ஆனால், அப்படிப்பட்ட ஒரு “பெரியவராய்”, பற்பல குழந்தைகளுக்குத் தான் இருக்க முடியும் என அவன் எண்ணியதே இல்லை!

உலகமறியாத வெகுளிப் பெண்...பயந்தாங்கோலி...கள்ளமற்றவள் என்று எண்ணிய மயிலுக்குத் தோன்றியது அவனுக்குத் தோன்றவில்லையே!

பிரம்மிப்புடன் மனைவியைப் பார்த்தவன், அவள் தன்னிடம் எதையோ எதிர்பார்த்துக் காத்திருப்பது புரிய, “அவங்களை எல்லாம் நாம காப்பாத்தலாம்டா!” என்றான் உறுதியுடன்.

“நிஜமாவா பாவா?”என அவள் உற்சாகமாய் கூவவும்,

“சத்தியம்!” என்றவன், தயிரின் மீது திரண்டு நிற்கும் வெண்ணையாய் அவள் பளபளக்கவும், அவளை அப்படியே அள்ளி, “ஆஹா! என்னோட சின்னு...சூப்பர்...டூப்பர்பா! அவங்களை அடிச்சுக்க ஆளே இல்லை!” என்றான் உற்சாகம் கரைபுரண்டோட!

அதன் பின்னர், அங்கே வெறுமனே சாக்லேட்களும், கொழுக்கட்டைகளும் மட்டுமே பரிமாறிக்கொள்ளப்பட்டன என்பதைச் சொல்லவும் வேண்டுமா!

Copyrighted material. Can be read only at www.sitaramwrites.wordpress.com Page 16

“அன்பிலார் எல்லாம்!” - என்.சீதாலெட்சுமி

அதுவும், ஒருவரது வேதனையை மற்றவர் புரிந்து கொண்டதன் விளைவாக, கொழுக்கட்டை பரிமாற்றம் ஏக ஒன்றுதலுடன் நடந்தது என்பதையும் சொல்லவும் வேண்டுமா?!

அடுத்த நாள் காலை, மயில் தன் மண்டையில் ஓங்கி அடித்துச் சொன்ன விஷயத்தை, நண்பர்களிடம் பகிர்ந்தான், அன்பு!

“ச்சே! பீக்காக் புத்திசாலின்னு எனக்குத் தெரியும்! ஆனா...இவ்வளவு புத்திசாலின்னு எனக்குத் தெரியாம போச்சே!” என்று கனியன், வருத்தப்படுவது போல் பாராட்ட,

“உன்னோட தங்கச்சியா இருந்துட்டு...எப்படி புத்திசாலியா இருக்க முடியும்? என்னோட தங்கச்சிங்கிறதால தான்...அவ புத்திசாலியா இருக்கா!” என்று அவன் தலையில் தட்டினான், பொம்மன்.

“டேய்...என்னடா சொல்றீங்க? இப்ப...மயில் புத்திசாலியா இல்லையா?” என்று சுபாஷ் தன் கேள்வி கேட்கும் படலத்தைத் துவக்க,


“அவ புத்திசாலியோ இல்லையோ...நீ ஒரு கேள்வியாலி! போடா!” என அவனை அடக்கினான் கனியன்.

“கேள்வியாலியா...அப்படினா?” என்று சிந்தித்தவனை அப்படியே விட்டுவிட்டு,

“மயில் சொல்றது சூப்பர் ஐடியா...அன்பு! நாம ஒரு குழுவா...வாரம் ஒரு இடத்துக்குப் போய்...இப்படி கைவிடப்பட்ட பசங்களை கண்டுபிடிச்சு, உரிய இடத்தில விடலாம்!” என அதற்கான முதல்படியை விவரித்தான், ராஜா.

“ஹ்ம்ம்!!!” என்று அன்பு ஆமோதிக்கும் போதே,

Copyrighted material. Can be read only at www.sitaramwrites.wordpress.com Page 17



“அன்பிலார் எல்லாம்!” - என்.சீதாலெட்சுமி

“நம்ம குழுக்கு ஒரு பேர் வைச்சு...நாம பண்ற விஷயங்களை, காலையில ஜூஸ் கொடுக்குறோமே அப்போ...நோட்டீஸா கொடுக்கலாம். பப்ளிக்கும் தெரியும்! அவங்களும், அந்த மாதிரி குழந்தைங்க இருக்க இடங்களை...நமக்கு சுட்டிக் காட்டுவாங்க! நாம மட்டுமே...செய்றதை விட, பொதுமக்களோட ஒத்துழைப்பு இருந்துச்சுன்னா... நம்மளோட இந்த முயற்சி சக்ஸஸ் ஆகும்!” என்று தன் பக்க யோசனைகளை முன் வைத்தாள், மணிமேகலை!

“ஹான்...என்ன பேர் வைக்கலாம்...” என்று கனி யோசிக்கும் போதே,

“அன்பிலார் எல்லாம்-ன்னு வைக்கலாம் பாவா” என்று குறிக்கிட்டாள் மயில்.

“ஹே...என்ன வேலு இது? நாம எல்லாரும் அன்பு இல்லாதவங்கன்னு சொல்ற மாதிரி இல்ல இருக்கு...” என்று சுபாஷ் ஆட்சேபிக்க,

“இல்லடா...மயில் எதை வச்சு சொல்றான்னு எனக்குப் புரிஞ்சிடுச்சு!” என்று தன் மனைவியின் எண்ணம் புரிந்தவனாய் இடை வெட்டினான், அன்பு.

“என்ன?” என்பது போல் அனைவருமே பார்த்திருக்க,

“இன்னைக்கு என்ன குரல் எழுதினோம்?” என அவர்களைத் திருப்பிக் கேட்டான் அவனோ!

“அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் உரியர் பிறர்க்கு!” என்று கனியன் சொல்ல,

“மயிலும்மா...என்கிட்ட அர்த்தம் கேட்டே இல்ல...என்ன சொன்னேன் பாவா?” என்று மனைவியையே கேட்டான்.

Copyrighted material. Can be read only at www.sitaramwrites.wordpress.com Page 18

“அன்பிலார் எல்லாம்!” - என்.சீதாலெட்சுமி

“அன்பு இல்லாதவங்க எல்லாரும் தன்னைப் பத்தி மட்டுமே நினைப்பாங்க...அன்புடையவங்க தான் எல்லாரைப் பத்தியும் நினைப்பாங்க...”

“ஹ்ம்ம்...அதான் அன்பிலார் எல்லாம்! இங்க அன்பிலார்ங்கிறது...அன்பு இல்லாதவங்க இல்லை...அன்பு இல்லாததால கைவிடப்பட்டவங்க! அன்பில்லாது புறக்கணிக்கப்பட்டவங்க எல்லாருக்கும், அன்புடையவர்கள் நீட்டும் கரம்!!” என்று அன்பு கூற,

மற்ற அனைவருமே, கண்களில் சிறிதாய் நீர் துளிர்க்க, சந்தோஷமாய் கை தட்டி அதை ஆமோதித்தனர்!

மயிலோ, தன் மனதறிந்த கணவன் கிடைத்ததை எண்ணி, தனக்குத் தானே கை தட்டிக் கொண்டாள்! சந்தோஷமாய்!

“அன்பிலார் எல்லாம்” – அன்பானவர்களின் கூடு, அன்று நிறுவப்பட்டது!! என்றென்றும் இயக்கப்பட்டது!!

Copyrighted material. Can be read only at www.sitaramwrites.wordpress.com Page 19

நான்கு வருடங்களுக்குப் பின்னர் ***

“பாவா!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!” – அன்புவின் வீட்டையே அதிரச் செய்யும்படி, ஓங்கி ஒலித்தது ஓர் அதட்டல்!

“என்னடா குட்டி?” என்று படுக்கையறையில், மனைவியின் சேலை மதிப்பை சரியாய் எடுத்துவிட்டுக் கொண்டிருந்த அன்பு, தலை தெறிக்க ஓடினான்.

என்னடா இது? மயில் இங்கே இருக்க, யார் அன்புவை “பாவா” என்று அழைப்பது? அடுத்த பூக்காரியோ!? அப்படி மட்டும் இருக்கட்டும், மயில் அவனை நார்…நாராய் கிழித்திருப்பாள்!

இப்போதே, “அச்சோ…நில்லுங்க பாவா…சேலையை ஒழுங்கா எடுத்து விட்டுட்டுப் போங்க…” என்று இங்கே மயில் சிணுங்கிக் கொண்டிருக்க, அன்போ ஆள் அரவமே இல்லை.

“அதானே பார்த்தேன்… சின்னுவாவது மண்ணுவாவது… உங்க பொண்ணு கூப்பிட்டா உலகமே உங்களுக்கு ஊறுகாயா போய்டுமே!” என்று அலுத்துக் கொண்டே வெளியே வந்தவள்,

அங்கே கண்ட காட்சியில், கொதித்துப் போனாள்! செல்லமாய்!

பின்னே, அவர்களது செல்ல சீமாட்டி “குறிஞ்சிமலர்”, “அப்பா…இத எடுத்து விடுங்க…” என்று தன் பட்டு பாவாடையை சுட்டிக் காட்டி, தந்தையை ஏவிக் கொண்டிருந்தாள்.
மயிலும் அன்புவும் உண்ட கொழுக்கட்டைகளின் விளைவால் பிறந்த கொழுக்…மொழுக் குலாப்ஜாமூன் தான், குறிஞ்சிமலர்!

தந்தை…தாயின் சேலையைச் சரி செய்துவிடுவதைப் பார்த்துவிட்டு, சோபாவின் மேலே ஏறி நின்று கொண்டு, தனக்கும் அது போல செய்யச் சொல்லி, அப்பாவை ஏவிக் கொண்டிருந்தது அந்தச் சின்ன வாண்டு!

இடுப்பில் கை வைத்து முறைத்துக் கொண்டு நின்ற தாயை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே, “அப்பா…ம்ஹூம்…பாவா…எடுத்து விடுங்க!” என வலக்காலை மட்டும் லேசாய் தூக்கி, அன்புவின் புது சட்டையின் தோள் பக்கத்தில் இடித்தாள், மலர்.

“அடி பிச்சுடுவேன்! புது சட்டை மேல கால் வைக்கிறே…” என்று ஒரே அடியில், அதைத் தட்டி விட்ட மயில்,

“இனிமேல்…அப்பாவை அப்பான்னு கூப்பிடு. பாவான்னு கூப்பிட்டே அடிச்சிடுவேன்!” என்று அதட்டினாள், கோபமாய்.

“நீயும்…அப்பாவை அப்பான்னு கூப்பிடு! ஏன் பாவான்னு கூப்பிடுறே? நீ…கூப்பிட்டா நானும் கூப்புவேன்! போ!” என்று அதற்கு பதிலடி கொடுத்தாள் குழந்தை.

“அவரு உனக்குத் தான் அப்பா…எனக்கு புருஷன்…” என்று மயில், அழுத்தமாய் சொல்ல

“ஹ்ம்ம்… அப்பியா? பொய் சொல்லாதே…நா ஒரு நாளு உனக்கு அப்பா-அம்மா இல்லையா கேட்டேன்ல…அப்ப, நீ அப்பா தான் உனக்கும் அப்பா சொன்னே இல்ல… இப்ப பொய் சொல்றே? பொய் சொன்னா… பிள்ளையார் உம்மாச்சி கொழுக்கட்டை தர மாட்டாரு! அச்சுவாரு!” என்று அம்மாவை மிரட்டிவிட்டு,

“நா ஸ்கூபி அத்தைகிட்ட போதேன்…” என ஓடியே போனாள், மலர்.

மணி அத்தை தான்…ஸ்கூபி அத்தை! எப்படியா? மணியின் மறு பெயர்…பெல் இல்லையா? பள்ளிக்குச் செல்லும் மலருக்கு, பள்ளியில் அடிக்கும் பெல் தான் மணி! ஆதலால் ஸ்கூல் பெல் அத்தை…ஸ்கூபி அத்தையாய் சுருங்கிப் போனாள்!

பெற்றவர்களால் அநாதைகளாக்கப்பட்டவர்கள், ஓர் அநாதை குழந்தையைத் தத்தெடுத்து வளர்க்காமல், தங்களுக்கென்று ஓர் குழந்தையைப் பெற்றதற்கு, காரணமும் மயில் தான்!

“இல்ல பாவா… நாம இந்த அன்பிலார் எல்லாம் சொசைட்டியை நடத்தாம, வெளிய இருந்து குழந்தையைத் தத்தெடுத்தா அது வேற மாதிரி…ஆனா…இப்படியொரு சொஸைட்டியை நடத்தும் போது, ஒரு குழந்தையை தத்தெடுத்தோம்ன்னு வைங்க…இன்னொரு குழந்தையோட மனசில ஏக்கம் வந்திடும்! வேணாம் பாவா!” என்று அவள் விளக்கம் கூறியதற்குப் பின்னே, அங்கே மறுப்பேது!?

புள்ளி மானாய், தன் மனதில் வண்ண வண்ண புள்ளிகளை இட்டுவிட்டு ஓடும் அந்தச் சிறு மலரின் துள்ளல் ஓட்டத்தையே பார்த்திருந்தவனின் தோளில் அடி வைத்த மயில்,

“போதும் உங்க பொண்ணை ரசிச்சது… என்னோட சேலையை எடுத்து விடுங்க பாவா!” என்றாள் செல்லமாய்.

சிறு சிரிப்புடன், அவள் சொன்னதை செய்தவன், மண்டியிட்டு அமர்ந்த நிலையிலிருந்து எழும்போதே, மயிலின் இடுப்பைப் பிடித்துக் கொண்டே எழுந்தான்! உல்லாசமாய்!

“ச்சு விடுங்க…பாவா! நீங்க எடுத்துவிட்ட சேலையை நீங்களே கலைச்சிடுவீங்க போல… ஏற்கனவே லேட் ஆகிடுச்சு. மண்டபத்தில வேற நிறைய வேலையிருக்கு. பொண்ணு வீட்டுக்காரங்க வரதுக்குள்ள…நா தாம்பூலம் எல்லாம் ரெடி பண்ணனும்!” என்று பரபரத்தாள் மயில்.

“சும்மா இரு சின்னு! பொய் சொன்னா… பிள்ளையார் உம்மாச்சி கொழுக்கட்டை தர மாட்டாராமே! அப்படியா சின்னு? அதுக்கு மட்டும்… பதில் சொல்லிட்டுப் போ!” என்று அவன் அவளைப் பிடித்து வைக்க,

அதற்கு பதிலாய் “பிள்ளையார் உம்மாச்சி தர மாட்டாரு…ஆனா…இந்த வேலு அம்மாச்சி தருவேன்!” என்று கண்ணடித்த மயில், சட்டென அன்புவின் கன்னத்தில் தன் அன்பு முத்திரையை பதித்துவிட்டு ஓடியே போனாள்!

“ஏய்…நில்லு! ரொமான்ஸ் சாக்லேட் எல்லாம்… ஒண்ணோட நிறுத்தக் கூடாதுன்னு சொல்லியிருக்கேன்ல… மினிமம் மூணு வேணும்!” என்று அன்பு துரத்த, அவனது பேச்சையும் ஓட்டத்தையும் தடுக்கும் வண்ணம் கனியன் வந்தான்.

“டேய்… ஒரு இள வயசுப் பையன் இருக்க இடத்தில, கிழவன்…கிழவி எல்லாம் துள்ளி விளையாடக் கூடாதுடா! ஒரு நாள்…இல்லாட்டி ஒரு நாள்…அந்த ஃப்ளவர் பக்கோடாவே வந்து “உங்க ரொமான்ஸ் தாங்கலைடா சாமின்னு” தலையில கை வச்சு அலுத்துக்கப் போவுது! பாரு!” என்று அவன் அங்கலாய்க்க,

“என்னைய பக்கோடா சொல்லாத… மாம்பி மாமா! அடிச்சுவேன்!!!!” என்று கம்பெடுத்துக் கொண்டு, அவனைத் துரத்தினாள், மணியிடம் வம்பளந்து விட்டு வீட்டிற்கு ஓடி வந்திருந்த மலர்.

“அப்படித் தான்டி சொல்லுவேன்… நீ ஒரு ஃப்ளவர்… காலியா போன ஒரு காலிஃப்ளவர்… பக்கோடாவா மாறின குட்டி காலிஃப்ளவர்!” என்று வேண்டுமென்றே கனியன் வம்பிழுக்க,

“டேய்…ஏன்டா அவளையே வம்பு செய்றே?” என்று கோபித்துக் கொண்டான் அன்பு.

“ஆமா…உன் பொண்ணு அப்படியே உறைய வச்ச தயிர் மாதிரி சமத்தா இருக்காளாக்கும்! கொதிக்க போட்ட பாலு மாதிரி… குதிச்சிட்டு திரியிற அவளை அடக்குடா…நான் அடங்குறேன்!” என்று மீண்டும் வம்பு செய்தான், கனியன்.

“வேணாம்…மாம்பி மாமா…அப்புறம் நான் சித்து அத்தைட்ட நீங்க என்னை அடிச்சீங்கன்னு சொல்லிக் கொடுத்துடுவேன்!” என்று மலர் ஒரு விரல் நீட்டி மிரட்ட,

“இந்த வாண்டுக்கு கூட…என் மேல கருணை இல்லைடா! கல்யாணத்துக்கு முன்னாடியே…எனக்கு அரை டெசன் அடியைப் பார்சல் பண்ணிடும் போல!” என்று தலையில் கை வைத்து உட்கார்ந்துவிட்டான், மாம்பி மாமா.

மாம்பழ மாமா…மாம்பி மாமா ஆனதற்கு, அரிய பெரிய விளக்கங்கள் வேண்டாம் இல்லையா? மலருக்குப் பிடித்த கனி / ஃப்ரூட்… மாம்பழம் என்பதைத் தவிர!

அன்பு அடக்கமாட்டாமல் சிரிக்க, “சும்மா இருங்க பாவா…” என அவனை அடக்கிவிட்டு, “என்னண்ணா…இங்க உட்காந்து இந்த சில்வண்டோட வெட்டிப் பேச்சு பேசிட்டு இருக்கீங்க? கல்யாண மாப்பிள்ளை நீங்க… இப்படியா பொறுப்பில்லாம இருக்கிறது? சீக்கிரம் ரெடியாகுங்க…ஆறு மணிக்கு மேடையில இருக்கணும்! ரிசப்ஷன் இருக்குன்னு கொஞ்சம் கூட பதட்டமே இல்லை… உங்களை எல்லாம் கல்யாணம் பண்ணிட்டு, சித்ரா என்ன பாடு படப்போறாளோ! ஹ்ம்ம் போங்க!” என்று கனியனை விரட்டிவிட்டாள், மயில்.

ஆம், கனியனுக்கு நாளை திருமணம்! இன்று வரவேற்பு!

அதற்குத் தான், அனைவரும் பரபரப்பாய் தயாராகிக்கொண்டிருக்கின்றனர்.

இந்த காமெடி பீசுக்கு பெண் கொடுத்த புண்ணியவான் – அன்றைக்கு, மயில் “இங்கே குப்பை போடாதீர்கள்” என்று சொன்னதும், கடற்கரையில் வந்து அன்புவையும் ராஜாவையும் பாராட்டிவிட்டு, குப்பையை அதற்குரிய தொட்டியில் போட்டாரே, அவரே தான்! அவரது மகள் தான், சித்ரா!

ஏற்கனவே அவர்களிடம் நல்ல அபிப்ராயம் கொண்டிருந்தவர், அவர்களது “அன்பிலார் எல்லாம்” அமைப்பைப் பற்றிய பிரசுரத்தைப் பார்த்ததுமே, முடிவு செய்து விட்டார்.

அதன் பின்னர், அக்குழுவில் கனியனின் மனநிலை தன் பெண்ணின் மனநிலைக்கு ஏற்றதாய் இருக்கும் என எண்ணியவராய், தன் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்லி, கனியனிடம் நேரடியாகவே கேட்டார்!

பிறகென்ன, ஜகஜோதியாய் திருமண ஏற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டன! இதோ திருமணமும் வந்து விட்டது!

திருமண மண்டபத்தில் பெண் வீட்டார் குழுமி இருக்க, அவர்கட்கு நிகராய் மாப்பிள்ளை வீட்டாரும் குழுமி இருந்தனர்!

மாப்பிள்ளை வீட்டார்!?!! “அன்பிலார் எல்லாம்” என்ற அமைப்பின் மூலமாக, தங்களது அவல வாழ்க்கையைத் துறந்துவிட்டு, ஓர் நல்ல வாழ்க்கைக்குள் அடி எடுத்து வைத்த பொக்கிஷங்கள் தான், மாப்பிள்ளை வீட்டார்!!

“மயிலும்மா… தாம்பூலப்பையில போடுற மஞ்சள்-குங்குமம் எங்க வந்து இறங்கிஇருக்குன்னு பிரியாம்மா கேட்டுட்டு வரச் சொன்னாங்க!” என்று ஓடி வந்தான், குணால் (அன்பிலார் எல்லாம் என்ற அமைப்பிற்கு விதையாய் இருந்த வடநாட்டுச்சிறுவன்)

“ஹான்…அது…கனி அண்ணாவோட ரூம்…அதான்டா மணமகன் ரூம் இருக்கில்ல, அங்க மேல் ஷெல்ப்ல இருக்கு! ப்ரியாட்ட (பொம்மனின் முன் நாள் காதலி, இந்நாள் மனைவி) சொல்லிட்டு, சீக்கிரமா இங்க வா!

தாம்பூலப் பையில, புக்கும் போடணும்…அதை எடுத்திட்டு போலாம்!" என்று அவனை அனுப்பி வைத்தாள்.

புக்!?! ஆம், மயிலின் சமையல் புத்தகம் தான்!

"சைவ உணவு வகைகள் – பகுதி 1", "சைவ உணவு வகைகள் – பகுதி 2", "அசைவ உணவுகள்!", "செட்டிநாட்டு சமையல்!", "நூறு வகை இனிப்பு!" – என்று ஏகப்பட்ட புத்தகங்களில் எழுத்தளார் வேலுமயில்.

புத்தகம் விற்கும் பணம் முழுதும், "அன்பிலார் எல்லாம்" குழுவின் செயல்பாட்டிற்கு எனக் கொடுத்து விடுவாள், நம் தேசியப்பறவை!

அவளது அடுத்த முயற்சியான, "இந்திய சுவையில் சைனீஸ் உணவுகள்!" என்ற புத்தகம் இப்போது தான் வெளி வந்திருக்கிறது! அதை விளம்பரப்படுத்தும் விதமாகவும், கனியனின் திருமணத்திற்குத் தனது பரிசாகவும், தாம்பூலத்துடன் அதையும் சேர்த்துக் கொடுக்க முடிவு செய்திருந்தனர் மயிலும் பாவாவும்.

அதன்படி, அவளும் குணாலும் புத்தகங்களை எடுத்துச் செல்ல, அங்கே சித்ராவின் தகப்பனார் வந்தார்.

"என்னம்மா… உங்கண்ணன் கல்யாணத்துக்கு பரிசா?"என்றபடியே அவளிடம் பேச்சுக் கொடுத்தவர்,

"மாப்பிள்ளை…புக் வித்த பணத்தை, உங்களோட சர்வீஸ்க்கு கொடுக்கிறதா சொன்னாரே? நீ என்னடான்னா…புக்கை ஃப்ரீயா கொடுத்துட்டு இருக்கே?"

"இல்லப்பா… சும்மா ஒரு விளம்பரத்துக்காக…"

"விளம்பரமா? உனக்கா? அன்பு தம்பியை விட…நீ தான் பயங்கர பிஸியா, இந்த சேனல்…அந்த சேனல்ன்னு சமையல் நிகழ்ச்சியா செய்றியாமே!"

"அப்படியெல்லாம் இல்லப்பா… உங்கட்ட யாரோ சும்மா சொல்லியிருக்காங்க…"

"யாரோ சொல்லலைம்மா! உன் பொண்ணு தான் சொன்னா! எங்கம்மா செம பிசி… அதனால, நானும் எங்கப்பாவும் தினம் பசியோட இருப்போம்ன்னு!" என அவர் சிரிக்க,

“சரியான கழுதை! இதில எதுகை மோனை வேற…!” என்று உள்ளுக்குள் மகளை வைதவள்,

“இல்லப்பா…அவ சும்மா விளையாட்டுக்கு…”

“விளையாட்டோ… விவரமோ… இந்த புக்கை நீ ஃப்ரீயா கொடுக்கிறதில எனக்கு இஷ்டமில்லை. இதோ…இந்த முந்நூறு புஸ்தகத்துக்கான பணம்! வாங்கிக்கோ!” என்று வற்புறுத்தி, அவளிடம் கொடுத்துவிட்டுச் சென்றார்.

அதை எடுத்துக் கொண்டு மணியிடம் சென்றவள், (மணி தான் அவர்கள் குழுவின் கணக்கர்), “மணிக்கா… இந்தா சொஸைட்டிக்கான பணம்… நா எங்கேயாவது வச்சுடுவேன்! அதான்… சித்ராப்பா கொடுத்ததுமே கொண்டு வந்தேன்!” என்று அவளிடம் ஒப்படைத்தாள்.

ஆயிரம் கொழுக்கட்டைகளை ஒன்றாய் அடுக்கி வைத்தது போல் உப்பியிருந்த வயிற்றை, பிடித்துக் கொண்டே எழுந்தாள் மணி.

பின்னே, கட்டுக்கடங்காமல் கொழுக்கட்டை சாப்பிட்டால், வீங்கத்தானே செய்யும்!
ஆனால், ராஜா உண்ட கொழுக்கட்டைகள் மணியின் வயிற்றில் விடிந்தது தான், இயற்கையின் நியதி என்பதோ!

அந்த ஆராய்ச்சியை முன்னரே செய்து முடித்திருந்த மணி, மயில் கொடுத்த பணத்தை “தேங்க்ஸ் மயிலு…” என்றபடியே வாங்கிக் கொள்ள,

“இப்ப எதுக்கு எழுந்துக்கிட்ட! ராஜா அண்ணா வந்தா…என்னைய வைவாங்க! முதல உட்காரு…” எனக் கூறி, அவளை அமர வைத்தவள்,

“பாவாகிட்ட உனக்கு சாப்பிட ஏதாவது கொடுத்துவிடுறேன்…ரொம்ப டயர்ட்டா இருக்க மாதிரி இருக்கு!” என்று விட்டு நகரவும்,

“ஹே நில்லு மயிலு! ரொம்ப நாளா சொல்லணும்ன்னு நினைச்சுட்டேன் இருந்தேன்…ஆனா…சொல்ல மறந்து போச்சு…இன்னைக்கு சொல்லியே ஆகணும்!” என்று மயிலை நிறுத்தினாள் மணி.

“என்ன மணிக்கா? எங்கனா வலிக்குதா? அண்ணன்ட்ட சொல்ல பயந்துட்டு…என்னைய கூப்பிடுறியா?” என மயில் பதறவும்,

“ஆமா…அவரைப் பாத்து பயந்துட்டாலும்! இவ ஒருத்தி…சும்மா இரு!” என அடக்கிவிட்டு,

“இல்ல…உனக்கு ஞாபகம் இருக்கா…முதல் நாள்…அண்ணா உன்னை கல்யாணம் பண்ணிக்கச் சொல்லிக் கேட்டாங்களே…” என்று மயிலுக்கு, அன்புவின் திருமணப்பேச்சு வார்த்தையை நினைவூட்டினாள் மணி.

“ஹ்ம்ம் இருக்கே!! நா கூட… பாவா எவ்ளோ சம்பாதிக்கிறாங்கன்னு கேட்டுட்டு, அவங்க இருபதாயிரம்ன்னு சொன்னதும் சரின்னு சொன்னேனே… எவ்வளவு சின்னப் பொண்ணா இருந்திருக்கேன் இல்ல…மணிக்கா! நீயும்…பாவாவும் சிரிச்சீங்களா?” என அவள் வெட்கமும், வருத்தமுமாய் கேட்க,

“இல்லடா… சிரிக்கலை! உங்க பாவாவுக்கு ஒரே குதூகலம்…ஏன்னு தெரியல…ஆனா…அய்யா ஒரே குஷி மூடில மண்டையை மண்டைய ஆட்டிட்டு இருந்தார்! எனக்கு ஒரே கோபம்! எனக்கு மட்டுமில்லை…ராஜாக்கும் தான்!” என்றவள்,

மயில் கேள்வியாய் பார்க்கவும், “இல்ல பணத்து மேல மட்டுமே குறியா இருக்க மாதிரி நீ பேசினதும், எங்களுக்கு ஒரு மாதிரி ஆகிடுச்சு! ஆக்ச்சுவலி, எனக்கு அண்ணா உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதில இஷ்டமே இல்லை…” என்றாள் உண்மையை உரைக்கும் குரலில்.

“ஆமா…இல்ல…பணம்…பணம்ன்னு பறக்கிற ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிக்கிறாரேன்னு இருக்கும்ல…” என்று மயில் சிரிக்க,

அந்த சிரிப்பை ரசித்தவளாய், “அப்புறம்…கொஞ்சம் கொஞ்சமா உன்னோட வெகுளித் தனமும், வெள்ளைச் சிரிப்பும் எங்களோட மனசை மாத்திடுச்சு! இவளையா வேணாம்ன்னு சொன்னோம்ன்னு நானே எண்ணித் திட்டிக்கிற அளவுக்கு…நீ ரொம்ப சூப்பர்டா மயில்!” என்று மயில் முன்னர் சொல்வது போலவே சொல்லிக் காட்டினாள் மணி.

“ச்சீ…போ மணிக்கா!” என்று வெட்கம் கொண்ட மயில்,

“இப்ப…என்னக்கா திடீர்ன்னு சொல்றே?” என்றாள் கேள்வியாய்.

“இல்ல… சித்ராப்பா ரூபா கொடுத்தாங்கல…அதை என்ன ஏது எவ்வளவு கொடுத்தார்ன்னு கூடப் பார்க்காம, அப்படியே கொண்டு வந்து என் கையில கொடுத்த பாரு… இவளையா பணத்துக்காக அலையுறான்னு நினைச்சோம்ன்னு திரும்பவும் மனசு குறுகுறுக்க ஆரம்பிச்சிடுச்சு…அதான் சொல்லிட்டேன்!” என்றாள் மணி, அவள் கன்னம் வருடி.

“செல்ல மணிக்கா!” என்று தானும் செல்லம் கொஞ்சிவிட்டு, ஓடியே போனாள் மயில்.

அதன் பின், கல்யாண வேலைகள் மளமளவென நடந்தேற, நல்லபடியாய் ரிசப்ஷன் நடந்து முடிந்தது!

விடிந்ததும் கல்யாணம் என்ற நிலை!

கிண்டலும் கேலியுமாய் கழிந்த இரவின் முடிவில், அனைவரும் குளித்து கிளம்ப மட்டுமே நேரமிருந்தது.

தன் கல்யாணத்திற்கு என கனியன் எடுத்துக் கொடுத்திருந்த, பன்னீர் ரோஜா வண்ணச் சேலையை உடுத்திக் கொண்டு, மயில் வரவும்,

“சின்னு… நா வேணும்ன்னா சேலை எடுத்துவிடவா?” என்று கண்ணடித்தபடியே வந்தான் அன்பு.

“ஒண்ணும் தேவையில்லை! உங்க பொண்ணோட பாவாடையையே எடுத்து விடுங்க…” என்று நொடித்துக் கொண்டு, நகர்ந்தாள் மனையாள்.

“ச்சே…என்னடி பிகு பண்ணிக்கிறே!?” என்றபடியே இழைந்த அன்புவின் இதழ்கள், தன் காதலைத் தொகையென விரித்திருந்த மயிலின் முகத்தில் பதியும் முன்னே, தொலைப்பேசி அழைத்தது.

அதன் அழைப்பு மணியிலேயே “பாவா…அன்பிலார் எல்லாம் செல்ஃபோன் அடிக்குது!” என்ற மயிலின் உடல் விறைத்தது.

என்ன தான் வாழ்க்கை சந்தோஷமாய் சென்றாலும், தங்களைப் போல் பாதிக்கப்பட்ட ஒரு குழந்தையைப் பற்றிய தகவல் என்கையில், மயிலிற்கு கஷ்டமாய் இருந்தது!

“ஹய்யோ…என்ன நிலையில் இருக்கிறார்களோ?” என்று மனம் பதற,

கைப்பேசியை எடுத்துப் பேசிய அன்புவின் முகத்தையே பார்த்திருந்தாள், மயில்.

அவனோ “ம்ம்..”, “எத்தனை பேரு?”, “எங்க?”, “சரி…நா வரேன்” என்று தந்தி மொழியிலேயே பேசிவிட்டு வைத்துவிட,

“என்ன பாவா?” என்றாள் பதட்டமாய்.

“ஹ்ம்ம்… திருநெல்வேலி பக்கத்தில ஒரு மில்லில, பசங்க நாலைஞ்சு பேரை கொத்தடிமை மாதிரி நடத்துறாங்களாம். அந்த மில்லிலேயே வேலை செய்ற ஒருத்தர்…தகவல் கொடுத்திருக்கார்! உடனே போகணும்!” என்றான் அவனோ, தீவிரமாய்.

“அப்போ கல்யாணம்!” என மயில் யோசிக்கவே தேவையில்லை என்பது போல்,

விஷயத்தைக் கேள்வி பட்டதும், “உடனே கிளம்புடா மாப்பிள்ளை! அங்க அந்தப் பசங்க படர கஷ்டம்…நாளைக்கு வரைக்கும் நீடிக்க வேணாம்!” என்று உடனேயே அனுப்பி வைத்தான் கனியன்.

மணியும் ப்ரியாவும் கர்ப்பமாய் இருப்பதால், ராஜாவையும் பொம்மனையும் நிறுத்திவிட்டு, சுபாஷும் அன்புவும் கிளம்பிச் சென்றனர்.

“கல்யாணம் ஆகலைங்கிற ஒரே காரணத்துக்காக…என்னைய ஒரு ஃபிகரை கூடப் பாக்க விட மாட்டறீங்கல்ல” என்று சுபாஷ், பொய்யாய் அலுத்துக் கொள்ள,

“கவலைப்படாதீங்க சுபாஷ்ண்ணா! நானும் என் பொண்ணும்…உங்களுக்குப் பொண்ணு பார்த்து வைக்கிறோம்!” என்றாள் மயில் சமாதானமாய்.

ஆனால், அவனோ அலறினாள்! “உன் பொண்ணா? ஏன் வேலும்மா…ஏன்? உனக்கு இந்த அண்ணன் மேல எந்தக் கோபம்னாலும்…நேரடியா தீர்த்துக்கோ! நோ…குட்டிச் சாத்தான் ஏவிங்! சொல்லிட்டேன்!” என்று அவன் பின்னடைய,

“டேய்…வேணாம்…” என்று மகளுடன் சேர்ந்து, அவனை மொத்தி எடுத்தான் அன்பு.

அன்புவும் சுபாஷும் கிளம்பிச் சென்றுவிட, மலரைக் கட்டி மேய்க்கும் வேலை மயிலிடம் வந்து சேர்ந்தது.

“அங்க ஏறாதடி!”

“அச்சோ…குதிக்காதே!”

“கருமம்… ஜூஸ் எல்லாத்தையும் சட்டையில ஊத்துனியா?”

“ஏய்…இங்க…சட்டை மாத்தி விடுறேன்!” என்று மகளை ஏவிக் கொண்டே, அவள் பின்னே சென்ற மயிலின் மீது ஒரு கரம் படிந்தது.

“ப்ச்…இங்க வா…” என மகளை இழுத்தபடியே, யாரென்று பார்ப்பதற்கு பின்னே திரும்பிய மயில், அதிர்ந்து போனாள்.

“வேலு…நீயா?” என்று ஓர் முதிய பெண்மணி நிற்க,

அவளை “அம்மா” என்று அடையாளம் கண்டு கொண்ட மனம், அழைக்க எண்ணவில்லை.

மகளின் கோபப் பார்வையை அறிந்து கொள்ளாமல், “எப்படி வேலு இருக்கே? பார்த்து எம்புட்டு நாளாச்சு?” என்று ஆரம்பித்தவர்,

பாசமாய் சில வார்த்தைகளைப் பேசியிருந்தால் கூட, மயிலின் கோபம் குறைந்திருக்கும்.

ஆனால், அவரோ “ஏன் வேலு…அந்த வீட்டில திருடுனே…அந்த அண்ணன் வந்து, உன் பொண்ணு திருடிட்டு, வீட்டை விட்டு ஓடிட்டான்னு சொன்னதும், எவ்வளவு அவமானமா போச்சு தெரியுமா? உன்னோட சம்பளமும் இல்லாம…நானும் தம்பி தங்கச்சியும்…” எனத் தங்கள் கஷ்டத்தை மட்டுமே பேச,

“ச்சே நிறுத்து! நீயெல்லாம் ஒரு அம்மா!?” என்று ஓங்கி அதட்டியவள்,

“பெத்தவங்க உங்களோட…தப்புக்கு, பொண்ணு நான் பட்ட கஷ்டம் கொஞ்சமா நஞ்சமா?”

“எந்த சாமி புண்ணியமோ… பாவா எனக்குப் புருஷனா வந்தாரு! பாசமா இருக்கிற அண்ணன்களும், அக்காவும் கிடைச்சாங்க! ஆனா… இதெல்லாம் கிடைக்காம எத்தனையோ பசங்க எப்படி சீரழிஞ்சு போறாங்க தெரியுமா? பிச்சை எடுத்துக்கிட்டு… சின்ன வயசிலேயே கற்பழிக்கப்பட்டு… ஒரு வேளை சோத்துக்காக அடி வாங்கிட்டு! உங்களை மாதிரி… சில பெத்தவங்க இருக்கப் போய் தான்… அந்தப் பிஞ்சுங்க நசுங்கிப் போறாங்க!” என்று தன் கோபம் முழுதையும் கொட்டிவிட்டு,

அதிர்ந்து பார்த்திருந்தவரின் கண் முன்னே கை நீட்டி, “வளக்க துப்பில்லைன்னா…நீயெல்லாம் எதுக்கு புள்ளை பெத்துக்கிறே!?” என்று கேள்வியால் தன்னைப் பெற்றவளை அறைந்துவிட்டு, “வாடா குட்டி!” என்று தன் குழந்தையை அழைத்துக் கொண்டு, நிமிர்ந்த தலையுடன், வீறு கொண்டு நடந்தாள்!!!